# திருக்கோணேசர் ஆலய
# கும்பாபிஷேக மலர்

University of Ja
235.1
TIR
183618(AR; Main)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருக்கோணேசர் ஆலய
# கும்பாபிஷேக மலர்



ஆழிபுடை சூழ்ந்தொலிக்கும் கோணேஸ்வரம்

TIR

வெளியீடு:
திருக்கோணேசர் ஆலய
புனருத்தாரண கும்பாபிஷேக சபையார்
திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

225.
TIR
AR

திருக்கோணேசர் ஆலயம்

# கும்பாபிஷேக மலர்

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
RECEIVED
18-7-1981
PERIODICALS
SECTION

□

ரௌத்திரி வருடம் தைத்திங்கள் 12ம் நாள்

(25-1-1981)

□

இணையாசிரியர்கள்:

சைவப்புலவர்: பண்டிதர் இ. வடிவேலு

புலவர் வை. சோமாஸ்கந்தர்

University of Jaffna
183618
Library

ARCHIVES

விலை ரூபா 20/-

133618 183618


UNIVERSITY OF JAFFNA LIBRARY

வெளியீடு:
திருக்கோணேசர் ஆலய புனருத்தாரண கும்பாபிஷேக சபை,
திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுப்பதிவு:
**சாந்தி அச்சகம்,**
575, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7002

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



முதல்வன் ஐங்கரமூர்த்தி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேஸ்வரர் ஆலய
# பரிபாலன சபை

| | |
|---|---|
| தலைவர்: | திரு. எம். கே. செல்வராசா |
| உப - தலைவர்: | திரு. சி. முத்துக்குமாரு |
| காரியதரிசி: | திரு. இ. வடிவேல் |
| உப - காரியதரிசி | சிவபதமடைந்த<br>திரு. பொ. ரு. சித்திரவேல்<br>*(13-10-80 வரை)* |
| உப - காரியதரிசி: | திரு. இ. மகாலிங்கம்<br>*(6-12-80 தொடக்கம்)* |
| தனாதிகாரி: | திரு. சி. ஆறுமுகம் |

நிர்வாகசபை அங்கத்தவர்கள்:

திரு. ச. கோபாலகிருஷ்ணன்
,, க. வல்லிபுரம்
,, ஆ. வைரமுத்து
,, வ. இ. நவரெட்னராசா
,, சிவா. இராஜரெட்ணம்
,, மு. குமாரசாமி
,, மா. கதிர்காமத்தம்பி
,, எஸ். சிவானந்தம்
,, வீ. பூபாலபிள்ளை
,, கு. பாலச்சந்திர ஐயர்
,, மு. சண்முகலிங்கம்
,, எஸ். சிவஞானம்

| | |
|---|---|
| கணக்காய்வாளர்: | திரு. எம். கே. சங்கரதாஸ்<br>திரு. எஸ். சின்னத்துரை |

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேஸ்வர புனருத்தாரண
# கும்பாபிஷேக சபை

தலைவர்: திரு. எம். கே. செல்வராசா
காரியதரிசி: திரு. இ. வடிவேல்
தனாதிகாரி: திரு. சி. ஆறுமுகம்

நிதிக்குழு: தலைவர் - செயலாளர் - பொருளாளர் உட்பட
திரு. பொ. ரெங்கநாதன் (தலைவர்)
திரு. இரா. சம்பந்தன் (எம். பி.)
திரு. சிவா. ராஜரெட்னம்
திரு. கே. துரைராஜா
திரு. வே. கிருஷ்ணசாமி
திரு. வி. பஞ்சாட்சரவேல்
திரு. எஸ். தியாகராசா
திரு. மு. அரசரெத்தினம்
திரு. சி. கணபதிப்பிள்ளை (செயலாளர்)

கும்பாபிஷேகம், பாலஸ்தாபனம், மண்டலாபிஷேகம்: பரிபாலனசபைத் தலைவர் - செயலாளர் - பொருளாளர் உட்பட
சிவஸ்ரீ. அ. சுப்பிரமணியக் குருக்கள்
சிவஸ்ரீ. எஸ். எஸ். சர்மா ஐயர்
சிவஸ்ரீ. கு. பாலச்சந்திர ஐயர்
டாக்டர். சி. சிவானந்தம்
திரு. அ. கணேசலிங்கம்
திரு. ச. கோபாலகிருஷ்ணன்
திரு. பெ. தியாகராஜா
திரு. சி. சுப்பிரமணியம்
திரு. கோ. கிருஷ்ணபிள்ளை
திரு. கோ. தங்கவடிவேல்
திரு. எஸ். சிவானந்தம்
திரு. இ. மகாலிங்கம் (செயலாளர்)

வரவேற்புக் குழு: பரிபாலனசபைத் தலைவர் - செயலாளர் - பொருளாளர் உட்பட
திரு. மு. கோ. செல்வராசா (தலைவர்)
செல்வி. சரஸ்வதி ஸ்வாமிநாதன்
திரு. மு. கோ. சங்கரதாஸ்
திரு. சி. முத்துக்குமாரு
திரு. பா. நேமிநாதன்
திரு. வ. இ. நவரெட்ணராஜா
திரு. க. வல்லிபுரம்
திரு. மு. குமாரசாமி
திரு. ப. பரமேஸ்வரன்
திரு. ஆ. வைரமுத்து
திரு. மா. கதிர்காமத்தம்பி
திரு. வீ. பூபாலப்பிள்ளை (செயலாளர்)

கட்டிடம் சிற்பக்குழு: பரிபாலனசபைத் தலைவர் - செயலாளர் - பொருளாளர் உட்பட
திரு. க. கனகரெட்டினம் (தலைவர்)
திரு. அ. சுவாமிநாதன்
திரு. வே. முத்துக்குமாரசாமி
திரு. வி. ரகுநாதன்
திரு. கா. தங்கராசா
திரு. வ. இ. லோகானந்தன்
திரு. கா. சிவசுப்பிரமணியம்
திரு. சி. ஆறுமுகநாதன்
திரு. சி. தம்பிராசா
திரு. து. தவசிலிங்கம் (செயலாளர்)

மலர் வெளியீட்டுக் குழு: பரிபாலனசபைத் தலைவர் - செயலாளர் - பொருளாளர் உட்பட
திரு. இ. வடிவேல் (தலைவர்)
புலவர். வை. சோமாஸ்கந்தர்
திரு. பெ. பொ. சிவசேகரம்
திரு. அ. சண்முகதாசன்
திரு. கா. இந்திரபாலன்
திரு. செ. குணசிங்கம்
திரு. பொ. கந்தையா
திரு. ச. ஜெயச்சந்திரன்
திரு. இ. சண்முகராசா
திரு. த. சாம்பசிவம் (செயலாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேன் சிந்தும் மலரில் . . . . .


திருக்கோணாசலத் திருப்பதிகம்

முகவுரை

ஆசிச்செய்திகள், வாழ்த்துரைகள்

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | திருக்கோணேஸ்வரம் | 1 |
| 2. | கும்பாபிஷேகக் கிரியைகள் | 3 |
| 3. | தென்முகக் கடவுளின் சிறப்பு | 9 |
| 4. | கும்பாபிஷேக தத்துவம் | 13 |
| 5. | குளமும் கோட்டமும் கொண்ட கோணமாமலை | 16 |
| 6. | சம்பந்தரது சமயப்பணியில் திருக்கோணேஸ்வரம் | 23 |
| 7. | பண்டைப் பெருவரலாறுகளில் திருக்கோணேஸ்வரம் | 29 |
| 8. | தக்ஷிண கைலாச மகாத்மியத்தில் திருக்கோணேஸ்வரம் | 33 |
| 9. | திரிக்கோணசல புராணத்தில் திருக்கோணேஸ்வரம் | 36 |
| 10. | ஸ்ரீ தட்சணகைலாச புராணத்தில் திருக்கோணேஸ்வரம் | 39 |
| 11. | கோணேசர் கல்வெட்டில் திருக்கோணேஸ்வரம் - புலவர் - வே. [illegible] | 42 |
| 12. | திருமுறைகளில் திருக்கோணேஸ்வரம் | 44 |
| 13. | ஆங்கிலேயர் ஆட்சியில் திருக்கோணேஸ்வரம் | 47 |
| 14. | கோணேஸ்வரர் ஆலயம்பற்றிய சில வரலாற்றுக் குறிப்புகள் - Dr. K. Indrapala - | 49 |
| 15. | கோணமாமலையும் கோணேசர் கோயிலும் | 52 |
| 16. | சிவபக்த இராவணனும் திருக்கோணேஸ்வரமும் | 56 |
| 17. | தக்ஷிண கைலாச மகாத்மியத்தில் அகஸ்தியர் துதி | 59 |
| 18. | திருக்கோணநாதருக்குப் புனராவர்த்தன கும்பாபிஷேகம் | 62 |
| 19. | திருக்கோணமலை அந்தாதி | 63 |
| 20. | திருநெறிய தமிழ்மறை | 66 |
| 21. | பிறந்த மண் | 68 |
| 22. | திருக்கோணமலை | 69 |
| 23. | திருக்கோணேசர் திருவூஞ்சற்பதிகம் | 70 |
| 24. | நன்றியுரை | 72 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருஞானசம்பந்தர் தேவாரம்
# திருக்கோணமலை

பண் - புறநீர்மை ] [ மூன்றாந் திருமுறை

திருச்சிற்றம்பலம்

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பு
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே.

கடிதென வந்த கரிதனை உரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுதல் அவளொடும் உடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமுன் நித்திலஞ் சுமந்து
குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமா மலையமர்ந் தாரே.

பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாக
மாகமுன் கலந்தவர் மதில்மேல்
தனித்தபே ருருவ விழித்தழல் நாகந்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த
விமலனார் கமலமார் பாகர்
தெழித்துமுன் அரற்றும் செழுங்கடற் றரளம்
செம்பொனும் இப்பியும் சுமந்து
கொழித்துவன் திரைகள் கரையிடைச் சேர்க்கும்
கோணமா மலையமர்ந் தாரே.

தாயினு நல்ல தலைவரென் (று) அடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினு மனத்து மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றை
திரிந்திடா வண்ணம் உதைத்தவர்க் கருளுஞ்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே.

எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால்
ஏத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பும்
இறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புக ழாளர்
கோணமா மலையமர்ந் தாரே.

அருவரா தொருகை வெண்டலை யேந்தி
அகந்தொறும் பலியுடன் புக்க
பெருவராய் உறையும் நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரும் அறியா வண்ணமொள் ளெரியாய்
உயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே.

நின்றுணுஞ் சமணும் இருந்துணுந் தேரும்
நெறியலா தனபுறங் கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசினர் ஒருபால்
மெல்லிய லொடுமுட னாகித்
துன்றுமொண் பௌவ மவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்றுமொண் கானல் வாசம்வந் துலவுங்
கோணமா மலையமர்ந் தாரே.

குற்றமிலாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம் பந்தன்
உற்றசெந் தமிழார் மாலையீ ரைந்தும்
உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்றமு மாகித் தொல்வினை யடையார்
தோன்றுவார் வானிடைப் பொலிந்தே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணாசலத் திருப்பதிகம்

விலைக்கு மேனியிலணிக் கோவை மேகலை
தரித்த ஆடையு மணிப்பூணு மாகவே
மினுக்கு மாதர்களிடைக் காம மூழ்கியே — மயலூறி

மிகுத்த காமியனெனப் பாருளோ ரெதிர்
நகைக்க வேயுட லெடுத்தே வியாகுல
வெறுப்ப தாகியே உழைத்தே விடாய்படு — கொடியேனை

கலக்கமாகவே மலக்கூடிலே மிகு
பிணிக்கு ளாகியே தவிக்காம லேயுனை
கவிக்குளாய் சொலி கடைத்தேறவே செயும் — ஒரு வாழ்வே

கதிக்கு நாயக உனைத்தேடியே புக
ழுரைக்கு நாயெனை அருட்பார்வை யாகவே
கழற் குளாகவெ சிறப்பானதா யருள் — தரவேணும்

மலைக்கு நாயக சிவக்காமி நாயகர்
திருக்கு மாரனே முகத்தாறு தேசிக,
வடிப்ப மாதொரு குறப்பாவை யாள்மகிழ் — தருவேளே

வசிட்டர் காசிபர் தவத்தான யோகியர்
அகத்திய மாமுனி இடைக்காடர் கீரனும்
வகுத்த பாவுறு பொருட்கோல மாய்வரு — முருகோனே

நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்
திருக் கொணாமலை தலத்தாரு கோபுர
நிலைக்குள் வாயினில் கிளிப்பாடு பூதியில் — வருவோனே

நிகழ்த்து மேழ்பவ கடற்சூறை யாகவே
எடுத்த வேல்கொடு பொடித்தூள தாவெறி
நினைத்த காரிய மநுக்கூல மேபுரி — பெருமாளே

## திருக்கொணாமலை

தொடுத்த வாளென விழித்து மார்முலை
அசைத்து மேகலை மறைத்து மூடிகள்
துடித்து நேர்கலை நெகிழ்த்து மாவியில் — கொளுமாதர்

சகித்த ஹாவென நகைத்து மேல்விழி
முடித்த வார்குழல் விரித்து மேவிதழ்
துவர்த்த வாய்சுரு ளடக்கி மால்கொடு — விழியேபோய்ப்

படுத்த பாயிலி லணைத்து மாமுலை
பிடித்து மார்பொடு மழுத்தி வாயிதழ்
கடித்து நாணம தழித்த பாவிகள் — வலையாலே

படுத்து நோயொடு கிடத்து பாய்மிசை
வெளுத்து வாய்களு மலத்தி ஞயென
பசித்து தாகமு மெடுத்தி டாவுயிர் — உழல்வேனோ


வெடுத்த தாடகை சினத்தை ஓர்கணை
விடுத்து யாகமும் நடத்தி யேயொரு
மிகுத்த வார்சிலை முறித்த மாயவன் — மருகோனே

விதித்து ஞாலம தளித்த வேதனை
அதிர்த்து மோர்முடி கரத்தி லாயனல்
விழித்து மாரனை எரித்த தாதையர் — குருநாதா

அடுத்த ஆயிர விடப்பணா முடி
நடுக்க மாமலை பிளக்க வேகவ
டரக்கர் மாமுடி பதைக்க வேயொரு — மயில் வீரா

அறத்தில் வாழுமை சிறக்க வேயறு
முகத்தி னோடணி குறத்தி யானையொ
டருக்கொ ணாமலை தருக்கு லாவிய — பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன்னு திருக்கோணமலை கோணேசர் புராதனநெறி மாதுமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

ஈழநாட்டுக்கு இரண்டு கண்கள் போல் விளங்குவது திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் என்னும் இரண்டு சிவஸ்தலங்கள் திருக்கோணேஸ்வரம் தெட்சணகைலாசம் என்று போற்றப்படுகின்றது. திருஞான சம்பந்தர் தேவாரத் திருப்பதிகத்திஞலும், அருணகிரிநாதர் திருப்புகழிஞலும் பாடி அருள் பெற்றக்ஷேத்திரம் திருக்கோணேஸ்வரம். இத்தலம் புராணம், இதிகாசம், சரித்திரம், கல்வெட்டுக்கள், திருமுறைகள் முதலிய நீண்ட நெடுங்கால வரலாறுகளையுடையது: இலங்காபுரியை ஆண்ட இராவணன் காலந்தொடக்கம் இன்றுவரையுள்ள காலப்பகுதியில் தொடர்ச்சியான பல வரலாறுகளுக்கு, அகச்சான்று, புறச்சான்றுகளைக் கொண்டு விளங்குவது திருக்கோணேஸ்வரம். இயற்கையாகவே க்ஷேத்திரம் என்று சொல்லப்படுவதற்குரிய தெய்வீகச் சிறப்புக்களைக் கொண்டிருப்பதாலும், கி. பி, 1622 இல் போத்துக்கீசரால் இடித்தழிக்கப்பட்டதும், அதியற்புதமான சிற்பக் கலைகள் நிறைந்த கற்கோயில்களையும் சாந்நித்தியம் பொழியும் தெய்வீகத் திருவுருவங்களையும் கொண்டிருப்பதாலும் பன்னெடுங்காலத்திற்கு முன்பே இருஷிகள் இங்கு கடுந்தவம்புரிந்து, அதஞல் தெய்வீக சக்திகள் இடையருது சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருப்பதிஞலும், மூர்த்தி, தலம், தீர்த்த மகிமைகளைக்கொண்டிருப்பதிஞலும் க்ஷேத்திரமென்னும் சிறப்பிற்குரியதாய் விளங்குகிறது குளக்கோட்டு மன்னஞல் அமைக்கப்பட்ட ஆலயங்கள் போத்துக்கீசரால் தரைமட்டமாக்கப்பட்டு, மீண்டும் 1963ம் ஆண்டு புதியதோர் ஆலயம் அமைக்கப்பட்டது வரையுமுள்ள காலப்பகுதியான முன்னூற்றைம்பத்தியொரு வருடங்களும் மாதுமையம்பாள் சமேத கோணேசப் பெருமான் எங்கே சாந்நித்தியங் கொண்டிருந்தார்? என்பது சிந்திக்க வேண்டிய தொன்ருகும். ஆலயம் அழிக்கப்பட்டபின் கடலும், மலையும் சங்கமித்துக் கொண்டிருக்கும் கோணேஸ்வரத்தின் சிதாகரச வெளியை நோக்கிப் பக்தி பூர்வமாக வழிபட்டுவந்த அடியவர்களுக்குத் திருமுறைகளில் எழுந்தருளியிருந்து இறைவன் திருவருள் பாலித்துக் கொண்டிருந்தான் என்பது மறைக்கவோ மறுக்கவோ முடியாத உண்மையாகும். வேதங்கள் இறைவனைத் துதித்தன. திருமுறைகள் இறைவனுக்கு உறைவிடமாயின. திருமுறைகள் இல்லையேல் திருக்கோயில்களும் இல்லாதொழிந்திருக்கும். எனவே திருக்கோயில் கிரியைகளில் வேதம், சிவாகமம் திருமுறைகள் என்பன இறைவனுடைய திரிநேத்திரங்கள் போல் மதிக்கப்படவேண்டும். திருக்கோணேஸ்வரத்தில் 1981 ம் ஆண்டு தைத்திங்கள் 12ம் நாள் 25-1-81 ஞாயிற்றுக்கிழமை காலை உத்தர நட்சத்திரம் கூடிய சுப தினத்தில் மீனலக்கினத்தில் ஜீர்ணோத்தாரண மகாகும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. இந்த மங்கல நன்ஞளை இன்றும், எதிர்காலத்திலும் உள்ளவர்கள் மறவாது நினைவில் வைத்துக்கொள்வதற்காக இம்மலரை வெளியிட்டு, மாதுமையம்பாள் சமேத கோணேசப்பெருமான் திருவடிகளில் சமர்ப்பிக்கின்ருேம். அருள்நிறைந்த இந்த அறிவமுதத்தைத் திவ்விய பிரசாதமாகக்கருதி ஒவ்வொருவரும் பெற்று அனுபவிக்கவேண்டும். ஜெகத்குரு, காஞ்சி காமகோடிப் பெரியவர்கள் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளும், ஆதீன அருட்குருமணிகளும், அகிலத்திற்கும் அறிவொளி பரப்பும் அறிவுடைச் சான்ருேர்களும், அருள்விருந்தையும், அறிவுவிருந்தையும் இம்மலரில் தேஞகச் சொரிந்துள்ளார்கள். வண்டுகளாக உட்புகுந்து இம்மலரைக் குடைந்தாடி மதுவுண்டு மாந்திமகிழும்படி எல்லாம்வல்ல கோணேசப்பெருமானை நினைந்து பணிவன்புடன் வேண்டுகின்ருேம்.

---

சைவப்புலவர், பண்டிதர் இ. வடிவேலு
செயலாளர், திருக்கோணேசர் ஆலய அறங்காவலர் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

## ஸ்ரீலஸ்ரீ காசிவாசி

# முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்

## அவர்களின்

# ஆசியுரை

ஈழ நாட்டின்கண் உள்ள இரண்டு சிவஸ்தலங்களில் ''திருக்கோணேஸ்வரம்'' திருப்பதியும் ஒன்று. ''தென் (தெட்சண) கயிலாயம்'' என்றழைக்கப்படும் சிறப்பினையுடையது.

ஆளுடைய பிள்ளையும், ஆளுடைய நம்பியும் திருப்பதிகம் பாடியருளிய பெருமையினையுடையது. ''கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்து'' இயற்கையெழில் நலங்களுடன் இலங்குவது. இத்தகு அரும் பெருமைகளையுடைய திருக்கோணேஸ்வரப் பதியில் அமைந்து உள்ள திருக்கோணேஸ்வரர் திருக்கோயில் புனருத்தாரணம் செய்யப் பெற்று குடமுழுக்கு விழா நிகழவிருப்பதையறிந்து மகிழ்கின்றோம்.

''தாயினும் நல்ல தலைவரென்றடியார் தம்மடி போற்றிசெய்ய வாயினும் மனத்தும் மருவிநின்றகலா மாண்பினராம்'' இறைவருக்கு, பரிந்து நன் மனத்தால் அடியார் எடுக்கும் குடமுழுக்கு விழா பாங்குற சிறக்கவும், தெய்வீக அருட்பணியில் ஈடுற்றுத் திருத்தொண்டாற்றும் அன்பர்கள் அளப்பிலா வளங்கள் பெற்றுச் சீருடன் வாழவும், குடமுழுக்குவிழாவையொட்டி வெளியிடப்பெறும் மலர் ஆன்மீக, இலக்கிய சுவைமணம் கமழும் பொன்மலரெனப் பொலிந்து இலங்கவும் செந்திநகர்க் கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

சுபம்

சிவ சிவ

திருப்பனந்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

## திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
## 26வது குருமகா சந்நிதானம்
## ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
## அவர்களின்

# ஆசியுரை

**''ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்**
**ஆலவாயில் உறையும் எம் ஆதியே''**

தேவாரம் பெற்ற தலங்களாகிய திருக்கோணமலை, திருக்கேதீச்சரம் என்னும் இரண்டும் ஈழநாட்டின் இரு கண்களாக விளங்குவன. திருஞானசம்பந்த சுவாமிகள் சேதுவின்கண் செங்கண்மால் பூசை செய்த சிவபெருமானைப் பாடிப் பணிந்து எழுந்தருளியிருந்தபோது ஆழிபுடை சூழ்ந்தொலிக்கும் ஈழத்திலுள்ள திருக்கோணமலையையும், திருக்கேதீச்சரத்தையும் எண்ணித் திருப்பதிகம் பாடினுர். சுந்தரமூர்த்தி சுவாமிகளும் இராமேசுவரத்தில் இருந்தபடியே திருக்கேதீச்சரத்தைப் பாடினுர். இவ்விரு சமயாசாரியர்களும் தமிழ்நாட்டுக் கடற்கரைத் தலத்திலிருந்தே கடலுக்கு அப்புறத்திலுள்ள ஈழநாட்டுத் திருத்தலங்களைப் பாடியிருத்தல் போற்றுதற்குரியது.

ஆதிசேடனும், வாயுவும் தம்முள் யார் வலியார் என்று கருதி மாறுபாடு கொண்டனர். அப்போது ஆதிசேடன் மகாமேருமலைச் சிகரங்களை அசையாமல் பாதுகாக்க, வாயு தன் வேகத்தினுல் அம் மலையின் மூன்று சிகரங்களைப் பெயர்த்து எறிந்தான். அவற்றுள் ஒன்றே திருக்கோணமலையாகும்.

திருஞானசம்பந்த சுவாமிகளால் பாடப்பெற்ற சிறப்புடைய திருக்கோணமலையில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு மாதுமையாள் உடனுகிய அருள்மிகு கோணேஸ்வரர் திருக்கோயில் திருப்பணியை ஈழத்து அன்பர்கள் பெரும் பொருட்செலவில் நிறைவுசெய்து கும்பாபிஷேகம் நிகழ்த்துவதும் அதன் நினைவாக மலர் வெளியிடுவதும் அறிந்து மகிழ்கின்றோம்.

> ''உறுதியாய்ச் சிவாலயத்திற்கு ஒரு செங்கல் அடுக்குதற்குச்
> சிறிதுதந் திடுவோர் தாமும் சிவலோகத்து அடைவர் என்றால்
> பெறுதிருப் பணிதனக்குப் பெரும்பொருள் உதவும் பேற்றை
> அறுதியிட்டு இவளவென்றே அறைவதற்கு எளிமையன்றே''

என்ற பாடல் திருக்கோயில் திருப்பணிக்குப் பொருளுதவி செய்தோர் அடையும் பயனை எடுத்துரைக்கின்றது. சிவநெறியில் வழுவாதொழுகும் செம்மனச் செல்வர்களாகிய ஈழநாட்டு அன்பர்கள், பண்பாட்டிலும், பக்திமேம்பாட்டிலும், தமிழகத்தோடு நெருங்கிய தொடர்புடையவர்கள். அவர்கள் பெருமுயற்சியோடு மேற்கொண்ட ஆலயத் திருப்பணி இனிது நிறைவெய்தி மகா கும்பாபிஷேகம் நிகழவும் விழா மலர் நன்கு மலர்ந்து தெய்வமணம் கமழவும் இத்தகைய சிவப்பணியில் பங்குகொள்ளும் அன்பர்கள் எல்லா நலன்களும் பெற்று நீடு வாழவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

சிவ சிவ

தருமபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

## திருவாவடுதுறை மட ஆதீனகர்த்தர்
# ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண பண்டார சந்நிதி அவர்களின்
# ஆசியுரை

எல்லாம் வல்ல ஸ்ரீ ஞானமா நடராஜப் பெருமான் திருவருளால் ஈழ நாட்டில் உள்ள திருக்கோணேஸ்வர புனருத்தாரண சபையினர் மேற்கொண்டுள்ள மேற்படி ஆலயம் புனருத்தாரணத் திருப்பணிகள் யாவும் செவ்வனே இனிது முடிந்து, மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் தைத்திங்களில் நடைபெற நாம் சதா சிந்தித்திருக்கின்றோம்.

திருக்கோணேஸ்வர ஆலய மகா கும்பாபிஷேக நன்னாளில் அன்பர்கள் மகிழும் வண்ணம் கும்பாபிஷேக மலர் மலரவிருப்பது குறித்து நாம் பெரிதும் உளம் மகிழ்ந்து ஆசீர்வதிக்கின்றோம்.

ஸ்ரீ மாதுமையம்பாள் சமேத ஸ்ரீ கோணேசப் பெருமான் ஆலயப் புனருத்தாரண கும்பாபிஷேக சபையினர் அனைவர்க்கும் தீர்க்காயுளும், சிந்தித மனோரத சித்தியும், அஷ்ட ஐஸ்வரிய ஆதிக்கமும், நித்திய மங்கள குருகடாக்ஷமும் மேன்மேலும் பெருக உண்டாகுமாறு ஸ்ரீ ஞானமா நடராஜரைப் பிரார்த்தித்து நாம் ஆசீர்வதிக்கின்றோம்.

இவ்வாலய கும்பாபிஷேக மலர் எங்கணும் மணம் வீசுக. சிவ சுந்தம். ஆழ்க தீயது எல்லாம். அரன் நாமமே சூழ்க.

சிவ சிவ

திருவாவடுதுறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பெரியவர்கள்

# ஜெகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்களின் ஆசிச்செய்தி

க்ஷேத்திரங்கள் இரண்டுவகை. தேவாரப் பாடல் பெற்றது, அல்லாதது என்பன. தேவாரத்திற்கு மூவர்தேவாரமெனப் பிரசித்தியுண்டு. ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் இம்மூவர் தேவார ஆசிரியர்களாவர். இயற்கையாகவே கோவில் உள்ள பூமி பவித்ரபூமி, புண்ணியபூமி. சமயக் குரவர்களால் தேவாரம் பாடப்பெற்ற பூமி மிகவும் பவித்திரமான பூமி. மனித வாழ்விலே நாம் எவ்வளவோ பாவங்களைச் செய்திருக்கின்றோம். நம்முடைய பாவங்கள் அகல, நம்முடைய எண்ணங்கள் மேலிட, தேவார க்ஷேத்திரங்களை வலம் வருவதும், தரிசிப்பதும், தேவாரப் பாடல்களைப் பாடுவதும் மிகவும் உன்னதமான பணி. ஆயிரம் புதுக்கோயில்களைக் கட்டுவதில் எவ்வளவு புண்ணியமோ அதில் ஒரு புதுக்கோயிலைக் கட்டுவதில், அதிலும் ஒரு தேவாரக் கோயில் கட்டுவதில் மிகுந்த புண்ணியமுண்டு.

ஈழநாட்டிலே தேவாரப் பாடல்பெற்ற இரண்டு சிவஸ்தலங்கள் உண்டு. தக்ஷிணகைலாசம் என்று போற்றப்படும் திருக்கோணேஸ்வரர் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து, வருகிற தைத்திங்களில் மகாகும்பாபிஷேகம் செய்வதுகேட்டு மிகுந்து சந்தோஷிக்கின்றோம். திருப்பணியும் பரிபூரணமாக நல்ல முறையில் நடைபெற்று, இதில் பங்குகொண்ட எல்லா அன்பர்களுக்கும் இறைவனின் பரிபூரண ஆசி கிடைக்கும்படியாய் ஆசீர்வதிக்கின்றோம்.

நாராயணஸ்மிருதி

ஸ்ரீமடம் சமஸ்தானம்,
காஞ்சிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
சிவ சிவ

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்

# ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

குரு பாதம்

**அரர்க்கன்பு புரிகுவதே, நரர்க்கு முறையாகுவதே**
**திருப்பணிகள் செய்குவதே பெருத்த புண்ணியம்.** (சிவன்)

ஈழத்தின் இரு கண்களாகத் திகழும் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் என்னும் இரு பாடல்பெற்ற தலங்களுள் திருக்கோணேஸ்வரம் என்னும் தலத்தில் ஏராளமான பொருட்செலவில், புனருத்தாரணத் திருப்பணிகள் நடைபெற்று அங்கு எழுந்தருளியுள்ள மாதுமையம்பாள் சமேத கோணேஸ்வரப் பெருமானுக்கு கும்பாபிஷேக வைபவம் மிகச் சிறப்பாக நிறைவேற இருப்பது சைவ உலகத்திற்கு ஒரு பொற்காலத்தின் ஆரம்பத்தைக் குறிக்கின்றது. ஞானசம்பந்தப்பெருமான் திருப்பதிகம் பாடிய இத்திருத்தலத்தின் கும்பாபிஷேக விழாவை நடத்த முன்வந்துள்ள திருப்பணிச் சபையினர்க்கும், சிவாச்சாரியப் பெருமக்கட்கும், வேத விற்பன்னர்களுக்கும், திருமறை வல்லார்க்கும், பக்த கோடிகட்கும் எல்லா நலன்களுமெய்தி, மண்ணில் நல்லவண்ணம் வாழவும் வைகலும் எண்ணி நல்லகதி பெறவும் கோணமாமலையமர்ந்த பெருமானைப் போற்றி உளமார ஆசீர்வதிக்கின்றோம்.

யாழ்ப்பாணம்,
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
சிவ சிவ

# தவத்திரு குன்றக்குடி அடிகளார் வழங்கிய

# வாழ்த்துரை

பண்டைத் தமிழகம் விரிந்தது, பரந்தது. இன்றைய கிழக்காசிய நாடுகள் பழங்காலத் தமிழகம் என்று கூறல் வரலாறு. அகழ் வாராய்ச்சி ஆகிய அடிப்படையில் மிகையாகாது. தமிழ் வளர்ந்த மொழி. தமிழே சிவமாகவும், சிவமே தமிழாகவும் வளர்ந்த மொழி. தமிழ் என்பது ''சிவம்'' ''இனிமை'' என்பது பேரிசைச் சூத்திரம். தமிழ்மொழி வழங்கிய நிலமடங்கலும் சிவநெறி பரவியிருந்தது. திருக்கோணமலை பழைய திருத்தலம். திருக்கோயில் பாடல்பெற்றது. பழைய திருக்கோணமலையைக் கடல்கொண்டுவிட்டது. மீண்டும் இலங்கைவாழ் சைவமக்கள் திருக்கோயில் எடுப்பித்தும், புதுப்பித்தும் போற்றிவருவது பாராட்டுக்குரியது. திருக்கோயில் திருப்பணி இனிதே நிறைவெய்தவும், குடமுழுக்கு விழா இனிதே நடைபெறவும் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

இன்ப அன்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# டாக்டர், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

வழங்கிய

# பிரார்த்தனையுரை

''கோணமாமலை அமர்ந்தார்''
''கேதீச்சரம் பிரியார்''

என்ற வாக்குக்கள் ஞானப்பால் பருகிய ஞானக்குழந்தையின் திருவாய் மலரிலிருந்து ஒழுகியவைகள். இந்த அருள் வாக்குக்களை நியம மந்திர மாகக்கொண்டு நாடோறும் வைகறைப் பொழுதில் தியானித்து நம் வாழ்க்கையைப் புனிதஞ் செய்யும் முகமாகப் புனருத்தாரணம் செய்வோமாக.

''இராவணன் மேலது நீறு'' என்பதும் ஞானக்குழந்தையின் அருள்வாக்கு. இராவணன் விபூதிதாரி. இராவணனோடு தொடர்பு பட்ட பழமையான சரித்திரம் படைத்தது திருக்கோணேஸ்வரம். இராவணன் ஈழவேந்தன். ஈழத்தின் இரு விழிகள் திருக்கோணேஸ் வரம், திருக்கேதீஸ்வரம். திருக்கோணேஸ்வர புனருத்தாரணம் இப் பொழுதைய ஈழத்தின் புனருத்தாரணமாய ஈழத்தைப் புனிதஞ் செய்வதாக, என்று திருக்கோணேஸ்வரப்பெருமான் திருவருளைப் பிரார்த்திப்போமாக.

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# திருக்கோணமலை தேசியப் பேரவை உறுப்பினர்
# திரு. இரா. சம்பந்தன் அவர்களின்
# வாழ்த்துரை

## ஈழத்தின் தெய்வீக ஊற்று திருக்கோணேஸ்வரம்

இயற்கையின் சீற்றத்தால் பண்டை ஈழம் சிதைவுற்றபோது இந்துசமுத்திரமானது பண்டை ஈழத்தின் பல பகுதிகளைத் தன் வயிற்றினுள்ளே அடக்கிக்கொண்டது. இறைவனே பஞ்சபூதங்களாக விரிந்து பரந்திருப்பதால் அந்த இறைவன் ஜீவராசிகளிடத்தில் கொண்டுள்ள கருணையினால் பண்டை ஈழத்தின் சில பகுதிகளைச் சமுத்திரத்திற்கு மேலே உயர்த்தி வைத்துக்கொண்டிருக்கின்றான். மூன்றாவது கடல்கோளுக்குப்பின் எஞ்சியுள்ளதே தற்போதைய ஈழநாடு. இந்த ஈழநாடு சிவபூமியென்பதைத் திருமூலர் திருமந்திரத்திலே கூறுகின்றார். கிழக்கே திருக்கோணேஸ்வரம், வடமேற்கே திருக்கேதீஸ்வரம், வடக்கே நகுலேஸ்வரம், மேற்கே முனீஸ்வரம், தென்கிழக்கே தான்தோன்றீஸ்வரம் என்று பஞ்ச ஈஸ்வரங்களைக் கொண்டுள்ள ஈழநாடு சிவபூமி என்பதற்கு ஐயமில்லை.

ஈழத்தில் தினமும் உதயசூரியன் தனது ஒளிக்கிரணங்களால் கோணேஸ்வரத்தை வழிபட்டுப் பிரகாசிக்கின்றான். திவ்விய க்ஷேத்திரமாகிய இந்தத் திருக்கோணேஸ்வரத்தில் மாதுமையம்பாள் சமேதராக எழுந்தருளியிருந்து கோணேசப் பெருமான் அருள் ஒளியை அனைவருக்கும் வழங்கிக்கொண்டிருக்கின்றார். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் முறையே அமைந்த புனித க்ஷேத்திரம் திருக்கோணேஸ்வரம். திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாராலும், அருணகிரிநாத சுவாமிகளாலும் பாடப்பெற்ற தலம் திருக்கோணேஸ்வரம். சிவபக்த இராவணனால் வழிபாடு செய்யப்பட்ட தலம் கோணேஸ்வரம். குளக்கோட்டு மன்னனால் திருப்பணிகள் செய்யப்பட்ட தலம் திருக்கோணேஸ்வரம். ஈழநாட்டின் இந்துக்களின் ரோமாபுரியென்று சரித்திரப் பேராசிரியர்களால் போற்றப்பட்ட தலம் கோணேஸ்வரம். தமிழ்மக்களும், மன்னர்களும் தமது உடல் பொருள் ஆவியனைத்தையும் அர்ப்பணித்து வழிபட்டு அருள்பெற்ற தலம் கோணேஸ்வரம். புராண, இதிகாச, சரித்திர வரலாறுகளையும், கல்வெட்டுக்களையும், அகச்சான்றாகக்கொண்டு விளங்கிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தெய்வீகத் தலம் திருக்கோணேஸ்வரம்.

ஆலயங்கள் அழிக்கப்பட்டாலும் அந்தத் தலத்தின் தெய்வீகம் அழிவதில்லை, அழிக்கவும் முடியாது. கி. பி. 1624 இல் போத்துக்கீசத் தளபதி கொன்ஸ்ரன்ரைன் டிசா என்பவனால் திருக்கோணேசராலயம் அழிக்கப்பட்டது. அன்றிருந்த பக்தர்களின் துணிச்சலான தியாகத்தினால் சுமார் முன்னூற்றியைம்பது வருடங்களாக ஆலயத் திருவுருவங்கள் பூமாதேவியின் வயிற்றிலே வாசஞ்செய்தன. போத்துக்கீசரால் அழிக்கப்பட்ட ஆலயம் இருந்த இடத்தில் 1963 ஆம் ஆண்டு புதிய ஆலயத்தை மீண்டும் மக்கள் அமைத்தார்கள். ஆலயம் இல்லாதிருந்த இடைக்காலத்தில் சுமார் முன்னூற்றி ஐம்பது வருடங்களாக கோணேஸ்வரத்தில் கடலும் மலையும் சங்கமமாகும் பெருவெளியாகிய சிதாகாச வெளியைத் தமது சிந்தையிலே வைத்து மக்கள் மனமுருகிப் பிரார்த்தித்து வந்தார்கள். மக்களின் பிரார்த்தனை வீண்போகவில்லை. 1950 ஆம் ஆண்டு கோணேசப்பெருமானுடைய திருவுருவங்களைப் பூமாதேவி வெளிக்கொணர்ந்தாள். இறைவனுடைய திருவருட்செயலை எம்மால் அறியமுடியாது. மக்களுடைய பிரார்த்தனைக்கிரங்கி வெளிப்பட்ட மாதுமையம்பாள் சமேத கோணேசப்பெருமான் இன்று புனருத்தாரணத் திருப்பணி நிறைவுற்று இரண்டாவது கும்பாபிஷேகச் சிறப்போடு விளங்கும் திருக்கோணேஸ்வரத்தில் எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கின்றார்.

திருக்கோணேஸ்வரத்தில் மேலும் பல திருப்பணிகள் செய்யப்படவேண்டி இருக்கின்றன. தமிழ்ப் பேசும் சைவப் பெருங்குடிமக்கள் மேலும் பல திருப்பணிகள் செய்து கோணேஸ்வரத்தைச் சிறப்படையச் செய்யக் கடமைப்பட்டவர்கள். திருக்கோணேஸ்வரத்தை பண்டைப் பெருநிலைக்குக் கொண்டுவந்து மக்கள் தங்கள் தெய்வீக வாழ்க்கையைப் பலப்படுத்தி திருக்கோணேசப் பெருமானுடைய திருவருளுக்காளாகி வாழவேண்டுமென்று திருப்பணித் தொண்டர்கள் அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

திருக்கோணமலை நகராண்மைக் கழக நகர முதல்வர்
செல்வி சரஸ்வதி சுவாமிநாதபிள்ளை அவர்களின்

# வாழ்த்துரை

## எடுத்தவன் தருக்கழித்த திருக்கோணேசர்

ஈழநாட்டில் தேவாரப் பாடல்பெற்ற திவ்விய க்ஷேத்திரங்கள் இரண்டு. அவற்றிலொன்று திருக்கோணேஸ்வரம். ஞானப்பாலுண்டு கானமிர்தம் பொழிந்த ஞானக்குழந்தையாகிய திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார், இந்தப் புனிதத் தலத்திற்குத் தேவாரப் பதிகம் பாடித் தந்துள்ளார். அப்பதிகத்திலே மாதுமையம்பாள் சமேத கோணேசப் பெருமான் எழுந்தருளியிருந்து திருவருள் பாலித்துக்கொண்டிருக்கின்றார்.

திருக்கோணேஸ்வரத்தின் இயற்கை அழகையும், அதன் தெய்வீகச் சிறப்பையும், கோணேசப் பெருமானுடைய திருவருட்செயலையும், சம்பந்தப்பெருமான் இத்திருப்பதிகத்திலே திருவாய்மலர்ந்தருளியுள்ளார். இராவணன் கைலாசமலையை எடுத்ததையும், அவனுடைய தருக்கைத் தன் கால்பெருவிரலால் அடக்கி அருள்செய்த மறக்கருணையையும் ஒரு பாடலிலே சம்பந்தப் பெருமான் குறிப்பிடுகின்றார்.

இராவணன் வாழ்ந்த காலந்தொடக்கம் போத்துக்கீசர் திருக்கோணேஸ்வரத்தில் இருந்த ஆலயத்தை இடித்தழித்த காலம்வரையும் தொடர்ச்சியான வரலாற்றுப் பெருமைகளைக்கொண்டு விளங்குவது திருக்கோணேஸ்வரம்.

திருக்கோணேஸ்வரத்தை நினைக்கும்போது குளக்கோட்டு மன்னனும், அவன்செய்த ஆலயத் திருப்பணிகளும், அவன் இவ்வாலயத்தில் நித்திய, நைமித்திய கருமங்களைக் குறைவுபடாமல் செய்வதற்கு வகுத்துவைத்த திட்டங்களுமே நமது மனக்கண்முன்னே வந்து நிற்கின்றன. இத்திட்டங்கள் கோணேசர் கல்வெட்டு என்னும் பெயரால் இன்றும் இருந்து வருகின்றது. கோணேசர் கல்வெட்டு கோணேஸ்வரத்திற்குரிய சட்டப்புத்தகம். இவைகளெல்லாம் போத்துக்கீசருடைய பொருளாசைக்கு இரையாகிவிட்டன. கோணேஸ்வரத்தின் தெய்வீகம் மந்திர, தந்திர, யந்திரங்களால் ஆக்கப்பட்டதல்ல. இயல்பாகவே அந்தத் தெய்வீகம் கோணேஸ்வரத்தில் சுரந்துகொண்டிருக்கின்றது. அந்த அருட்பொழிவைத் தேக்கிவைத்து மக்கள் அனைவரும் காலத்திற்குக் காலம் பெற்றுக்கொள்வதற்காக 1963 ஆம் ஆண்டில் புதிய ஆலயம் கட்டப்பட்டு இப்பொழுது புனருத்தாரணத் திருப்பணிகள் நிறைவேறி 25-01-81 இல் ஜீர்ணோத்தாரண கும்பாபிஷேகம் நடைபெற்றிருக்கின்றது.


இன்று புதுப்பொலிவோடு விளங்கும் கோணேசர் ஆலயம் மேலும் மேலும் பல சிறப்பு அமைப்புக்களைப் பெற்று ஈழத்தின் கலைக்கோயிலாய், அருட்கோயிலாய் அமையவேண்டும் என்பது எமது பிரார்த்தனை. புனருத்தாரணத் திருப்பணிகள் செய்து மகாகும்பாபிஷேகப் பெருவிழாவை நடாத்திவைத்த அடியார்கள் அனைவரும் கோணேசப் பெருமானுடைய திருவருளுக்காளாகி மகிழ்வுடன் வாழவேண்டும் என்று இதயபூர்வமாக வாழ்த்துகின்றேன்.

நகராண்மைக் கழகம்,
திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நுரைகடல் சூழ்ந்த கோணமாமலை மூலவர்



வீரநகரில் கிணறு அகழப்படும்போது கிடைக்கப்பெற்ற புராதன விக்கிரகங்கள் ஐந்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாயினும் நல்ல தலைவர்


பிடியன்ன நடையாள்




கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலைக்கு நாயகருடன் சிவகாமி



மலைக்கு நாயகி மனோன்மணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தனித்ததோர் வில்லவர்




மல்லவர் காதலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நினைத்த காரியம் அனுகூலமேபுரி பெருமான்




விண்ணுயர்ந்த குன்றம் விளங்கும்
ஆயிரங்கால் மண்டபத்து ஒரு தூண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மிலப்பூசை நடைபெறும் திரிகோண வாயில்



கோட்டை உட்பக்க வாசல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாயகன்தான் கண்ட நால்வர்




கயிலையங்கிரியைத் தூக்கி கானம் இசைத்திட்ட இலங்கைவேந்தன்




கோயிலின் கற்கள் கொண்டு கட்டிய கோட்டை வாயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீதகற்றும் மெய்த்திர்த்தமாய் விளங்கு கன்னியா வெந்நீரூற்றதே



வாள்கொண்டு இராவணனுர் வரைபிளந்தார் இடம்காண்மின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பாண்டியன் இருகயல் இலச்சினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோயிலில் வட்டக் கற்கள்



அகஸ்தியர் ஸ்தாபனக் கல்வெட்டு




ஆழ்கடலுள் மைக் வில்சனுல்
கண்டெடுக்கப்பட்ட லிங்கம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராவணன் (கைலாச வாகனம்)




திருக்கோணேசர் நகர் ஊர்வலம்




மாதுமை அம்பாள் வாசல் உருவங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவாமி இளைப்பாறும் இடம்



பாபநாசத் தீர்த்தக் கிணறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெப்பத் திருவிழாக் காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
RECEIVED

# திருக்கோணேஸ்வரம்

## 25-1-1981ல் நடைபெறும் குடமுழுக்கு வைபவம்

முருகுப்பிள்ளை கோணாமலை செல்வராசா
சட்டத்தரணி ஜே. பி., யு. எம்.
தலைவர், திருக்கோணேசர் ஆலய பரிபாலனசபை.

ஈழவள நாட்டிலே கிழக்கு மாகாணத்தில் அமைந்திருக்கும் சிவனுக்குரிய திருக்கோயில் ''திருக்கோணேஸ்வரம்''. அது இராவணன் காலத்துக்கும் முந்திய பெருமை வாய்ந்தது. இத் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவனைத் ''திருக்கோணேஸ்வரர்'' எனப் போற்றி வழிபட்டுவருகின்றது சைவ உலகம். காலத்துக்குக் காலம் இலங்கைக்கு வந்த மேல்நாட்டவர்கள் முதன் முதலாகக் கண்வைத்தது திருக்கோணமலையிலேதான் என்பதை வரலாறு காட்டுகின்றது./ ஒல்லாந்தர், பிரான்சியர், தானிஷ்காரர், ஆங்கிலேயர் ஆகிய எல்லோருமே முதலில் திருக்கோணமலையினைத்தான் கைப்பற்ற முயன்றார்கள். கீழைத்தேயங்கள் எல்லாவற்றையும் பாதுகாக்கக்கூடிய ஓர் அரணாகவே திருக்கோணமலை விளங்கிக்கொண்டிருக்கிறது. திருக்கோணமலை இயற்கைவளமும், எழில்வளமும் கொண்டது,

இலங்கையில் பண்டைக்காலச் சரித்திரப் பெருமைவாய்ந்த திருக்கோணமலை, பல்லோரைக் கவரும் பான்மைவாய்ந்த பழம்பதி, ''வான்பொய்ப்பினுந் தாள் பொய்யா'' மகாவலி கங்கை வளம் பெருக்கும் கொட்டியாபுரப்பற்று இதற்குத் தெற்கே, திருக்கோணேஸ்வரத்துக்கு செந்நெல்லும் செழுங்கனியும் தீம்பாலும் தர, குளக்கோட்டன் கண்ட குளம் நீர்ப்பாய்ச்சும் வளங்கள் நிறைந்த தம்பலகமம் மேற்கே, ஈன்ற தாய்க்கு ஈமக்கடன் செய்ய இலங்கேசன் தொட்ட வெந்நீர்ச் சுனைகள் விளங்கும் கன்னியாய் வடமேற்கே, உப்பு விளையும் நிலாவெளி வடக்கே, முத்து விளையும் கிண்ணியா தென்மேற்கே, செழுங்கடல் தரளமும் இப்பியும் கொழிக்கும் திரைகடல் கிழக்கே, ''நீலத் திரைகடல் ஓரத்தில் நின்று'' நெடுங்கடலோடும் பரதவர் தமக்கு வரும்வழி காட்டும் கலங்கரை விளக்கு, தன் ஒளிக் கதிர்க் கரங்களை நீட்டி, ஆழமறியா ஈழத்துறைமுகத்துள் ''வருக'' வென்றழைக்கும் வண்மையையும் காணலாம்.

கைலாச புராணம்மூலம் திருக்கோணமலையின் சிறப்பை உணர்ந்த மனுநீதிகண்ட சோழ மன்னன் இத்தலத்தைத் தரிசித்தார் எனவும் பின்னர் அம்மனனது மகனை குளக்கோட்டு மகாராஜா இக்கோயிலைக் கட்டினான் எனவும் கவிராஜவரோதய புலவர் எழுதிய பாட்டுகள் கூறுகின்றன. கிறிஸ்து பிறப்பதற்கு 1300 ஆண்டுகளுக்கு முன்னரும், புத்தர் பிறப்பதற்கு 800 ஆண்டுகளுக்கு முன்னரும் கோணேசராலயம் கட்டப்பட்டது என்று சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இராவணேஸ்வரனும் அவரது தாயாரும் இத்தலத்தைத் தரிசித்ததாக வரலாறு கூறுகின்றது. அகத்தியர்கூட இத்தலத்துக்கு வந்து வணங்கிச் சென்றதாகச் சரித்திர ஏடுகள் தெரிவிக்கின்றன. கிறிஸ்துவுக்கு முன்னர் 1263ம் ஆண்டில் இலங்கையைக் கைப்பற்றிய வீர பாண்டியன் என்ற பாண்டிய மன்னர், வெற்றிச் சின்னமாக இரண்டு ''மீன்'' இலச்சினைகளை இந்த ஆலயத்தில் பொறித்துச் சென்றதாக சரித்திரம் கூறுகின்றது. இதை நிரூபிக்கும் வண்ணம் அந்த இரண்டு கயல் சின்னங்களும் இன்றும் கோணேசர் கோட்டை நுழைவாயிலில் காணப்படுகின்றன.

முன்னே குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியை
பின்னே பறங்கி பிரிக்கவே — மன்னவபின்
பொண்ணாத்தானை யியற்றவழித் தேவைத்து
எண்ணாரே பின்னரசர்கள்.

என்ற கல்வெட்டுக்கூட இன்றும் கோணேசர் கோட்டை நுழைவாயிலில் காணப்படுவது ஆலயத்தின் சரித்திரச் சிறப்புக்களை மேலும் உயர்த்திப் பெருமை தருகின்றது. ''கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமா மலையமர்ந்தாரே'' என்ற திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் அருட்பாடலால் சிறப்பிக்கப்பெற்ற பெருமை இத்தலத்திற்கு உண்டு.

முற்காலத்தில் குளக்கோட்டு மகாராஜா கோணநாயகருக்குத் தெப்பத் திருநாள் நடாத்துவதற்கு ஓர் தெப்பக்குளத்தை உண்டுபண்ணி, அதற்குத் தெற்குப் பக்கமாக ஒரு வெள்ளை வில்வ விருக்ஷத்தின் கீழ் தெப்பத் திருநாளுக்குக் கோணேசர் ஆலயத்திலிருந்து எழுந்தருளி வந்து வீற்றிருப்பதற்கு ஒரு மண்டபத்தையும் கட்டினார். பின்னுள்ளவர்கள் அம் மண்டபத்தை ஓர் கோயிலாக்கி இலிங்கப்பிரதிஷ்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து, வெள்ளை வில்வத்துக் கோணேசர் கோயில் எனப் பெயரிட்டு வழங்கிவருகிறார்கள். இவ்வாலயம் மின்சாரநிலைய வீதியில் காணக்கூடியதாக இருக்கின்றது.

போத்துக்கீசர் 1624ம் ஆண்டு ஆலயத்தை இடித்துத் தரைமட்டமாக்கினர். அடுத்து பிரிட்டிஷார் 1795ம் ஆண்டு கைப்பற்றினர். அதன்பின்பு சைவமக்கள் இடிந்தநிலையிலிருந்த ஆலயத்துக்குச் சென்று வழிபட அனுமதிக்கப்பட்டனர். போர்த்துக்கீசர் ஆட்சியின்போது நிலத்தின் அடியில் புதையுண்டிருந்த சிவன், பார்வதி, சந்திரசேகரமூர்த்தி திருவுருவங்கள் ஏகாம்பரம் வீதியின் கடற்கரையில் ஒரு கிணறு தோண்டும்பொழுது கண்டெடுக்கப்பட்டன. கண்டெடுக்கப்பட்ட விக்கிரகங்களை முதலியார் ச. கார்த்திகேசு அவர்களின் உபயமாக கட்டப்பட்ட கோயிலுக்குள் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டன.

1624ம் ஆண்டு இக்கோயிலை இடித்துத் தரைமட்டமாக்கும்போது கோயில் விக்கிரகங்களை எடுத்துக்கொண்டு நாலா பக்கங்களிலும் ஓடிய பக்தர்கள் வசதியான இடங்களில் புதைத்து வைத்தனர். ஆனால் இருபாகை முதன்மைக் குருக்களில் சிலரும், தானத்தாரும், வரிப்பத்தாரும் சில விக்கிரகங்களை எடுத்துக்கொண்டு தம்பலகமத்திற்கு மேற்கேயுள்ள 'சுவாமி மலை' என்ற இடத்தில் ஒளித்து வைத்தனர். தம்பலகம வாசிகள் சிலர் ''கோ ண ை ம லை க் கிழங்கு'' எடுக்க சுவாமிமலை சென்ற சமயம் சுவாமிமலையில் விக்கிரகத்தோடு செப்பேடு ஒன்றும் கண்டெடுக்கப்பட்டு தம்பலகமத்தில் ஓர் கோயில் கட்டி பிரதிஷ்டை செய்தனர். இப்போது அக்கோயில் ''ஆதி கோணைநாயகர் கோயில்'' என்று வழங்கப்பட்டு வருகிறது. இவ் ஆதி கோணைநாயகர் கோயில் குடமுழுக்கு வைபவம் 28-1-1980-ல் நடைபெற்றதென்பது குறிப்பிடத்தக்கது.

1963ம் ஆண்டு மீண்டும் புதிதாக கோயிலைக் கட்டி, சிவபதமடைந்த திரு. ந. இ. இராசவரோதயர் அவர்கள் தலைமையில் கும்பாபிஷேக வைபவம் நடைபெற்றது. 1963ம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட பரிபாலன சபைக்கு காலஞ்சென்ற டாக்டர் சு. சித்திரவேல் அவர்கள் தலைமைதாங்கினர். 1971ம் ஆண்டில் அவர் சிவபதமடைந்த பின்பு உபதலைவராகப் பணிபுரிந்த நான் சபையின் தலைவராக பணியை ஏற்று இன்று வரை பரிபாலன சபைக்கு தலைமை தாங்கி நடாத்த கோணேசப் பெருமானின் உதவியே முதற்கண்.

முன்பு குளக்கோட்டு மகாராஜா காலத்தில் தெப்பத் திருவிழா நடந்து வந்தது. மீண்டும் எங்கள் தலைமுறையில் 1973ம் ஆண்டு முதலாக ஆரம்பித்து வருடா வருடம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. தெப்பத் திருவிழாவை துறைமுக அதிகார சபை உபயமாக நடாத்திவருகிறார்கள். 1973ல் தெப்பத் திருவிழா தொடங்கியபொழுது சிவபதமடைந்த ஸ்ரீ வெ. இராஜாமணிக் குருக்கள் ஆலய குருவாக கடமையாற்றினர்.

பாலஸ்தாபன வைபவம் 4-5-1980-ல் நடைபெற்றன. அதன்பின் ஆலய திருப்பணி வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நேரத்தில், சபையின் உபசெயலாளர் திரு. பொ. மு. சித்திரவேல், நிருவாகசபை அங்கத்தவர் திரு. மு. குமாரசாமி ஆகியோர் சிவபதமடைந்தனர்.

ஆலய திருப்பணி வேலைகளை சிறப்புற நடைபெற உதவி செய்த இலங்கைவாழ் சைவ மக்கள், மற்றையோர், சிரமதானப்பணி செய்தோர், ஆலோசனை வழங்கிய சைவப் பெரியார்கள், நிதி உதவி அளித்தவர்கள், ஆலய சபை நிர்வாகிகள். கும்பாபிஷேக சபை அங்கத்தவர்கள், ஆலய சிப்பந்திகள், ஸ்தபதியார், ஆசாரியார், திருவிழா உபயகாரர், அயராது உழைத்த திருமலை எம். பி. திரு. இ. சம்பந்தன், ஆலய குருமார்கள். பக்தர்கள், பிரதிஷ்டா குரு சிவஸ்ரீ சுவாமிநாதபரமேஸ்வரக் குருக்கள் ஆகியோருக்கும் கோணேஸ்வரப் பெருமானின் திருவருள் கிடைக்க இறைஞ்சுகின்றேன்.

நிரைகழல் அரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பரும் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும்
கோணமா மலையமர்ந் தாரே.

— திருஞானசம்பந்த சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஸ்ரீ செல்வ கணபதி துணை

# கும்பாபிஷேக க்ரியைகள்


சிவாகம ஞானசாகரம், ஸௌம்ய சாக்தரத்ன, திருகோலக்கா
**N. இராமநாத சிவாச்சாரியர்**
32, திருகோலக்கா, சீர்காழி 609110, தமிழ்நாடு.


அகண்ட பரிபூர்ண சச்சிதானந்த மூர்த்தியாய் விளங்கும் இறைவன் ஆன்மாக்கள் உய்வு பெற மூர்த்தி, தலம், தீர்த்தம் என அமர்ந்து அருள் பாலிக்கிறுர் என்பதை

"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாகத் தொடங்கினுர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

என்கிருர் தாயுமானவர்.

சிவேநஸ்தாபித சைவ: சைவேநஸ்தாபித சிவ:

சிவபெருமான் தன்னைத் தாபித்து வழிபட்டு உய்வுபெற நம்மைப் படைத்தான் என்கிறது காரணுகமம்.

செய்வதை முறையாகச் செய்யவேண்டும் என்பதை அப்பரடிகள்:

"விதியினுற் றிடவல்லார்க்கு கரும்பினிற் கட்டிபோல்வார்
கடவூர் வீரட்டனுரே" என்முர்.

நாம் வழிபாடு செய்து உய்வுபெற, ஆலயத்தில் மூர்த்தியை எப்படி அமைத்துப் பிரதிஷ்டை செய்யவேண்டும் என்பதை சிவாகமம் ஐந்து ச்லோகங்களினுல் அறிவிக்கிறது:

1. ஆதௌ த்ரவ்ய ஸமர்ச்சனம் குருவரோ வீப்ரே ரனுஞ்ஞாபனம்
   ஸம்பூஜ்யாத மஹேச்வரம் கிரிஸுதா விக்னேஸ்வர ஸம்பூஜநம்
   வாஸ்து பிம்ர்ம ஸமர்ச்சனஞ்ச விதிவத் ரக்ஷோக்ன யாத்ராபலிம்
   சாந்திம் தேனு விவாஸநஞ்ச விதிவத் புண்யாக ஸம்ப்ரோக்ஷணம்.

2. விப்ராணும தபோஜனம் க்ரஹமகம் பிர்மாங்க ஹோமம் க்ரமாத்
   காஷ்டா ஹோம மதாசரேத் குருவர சாந்தியாக்ய மூர்த்தேஹவம்
   மிருத் க்ராஹ்யம் ததாங்குரம் நிசிசரேத் ஆசார்ய ரக்ஷாவஹம்
   பச்சாத் தேவவிசேஷ பூஜநம்தோ தேவ்யா ப்ரஸன்னுர்ச்சனம்

3. யாகாலங்கரணம் ததஸ்து விதிவத் கும்பேது ஸம்யோஹகம்
   யாத்ராஹோம ஸதாநகம் குருவர: க்ருத்வா கடோத்வாஸநம்
   பச்சாத்யாக நிவேசநம் விதியுதம் நிர்த்திஷ்ட காலார்ச்சனம்
   யந்ர ஸ்தாபன பூர்வகம் நவமணே: பிம்பாதி ஸம்ஸ்தாபனம்.

4. அஷ்ட த்ரவியஞ்ச ஸூபந்தனம் விதிவத் பிம்பாதி ஸூத்திம் க்ரமாத்
   ரக்ஷா ஸூத்ர நிபந்தனம் பசுபதே: தத்வ த்ரயோஜனம்
   ந்யாஸாத்யை: சிவமர்ச்சயேத் குருவரோ யாகாவ ஸாந க்ரமாத்
   கார்யா ரக்ஷ, க்ரஹப்ரியம் விதியுதம் தானம் கடோத்வாஹகம்.

5. சம்போர் கேஹ விவேசனம் கடயுத: கும்பாபிஷேகம் க்ரமாத்
   ஸாங்கோபாங்க ஸூபூஜனம் விதியுதம் தேவஸ்ய திவ்யோத்ஸவம்
   ஸ்ரீகல்யாண மஹோத்ஸவம் சுபகரம் முக்திப்ரதம் குர்வதாம்
   குர்யாத் ஸர்வ யசோவஹம் சுபகரம் ஆசார்யவர்யோ ததஹா.

ஈழநாட்டின் இருகண்களாக விளங்குவன திருக்கேதீஸ்வரமும் திருக்கோணேஸ்வரமுமாகும் ஞானக்குழந்தையான திருஞானசம்பந்த சுவாமிகளாலும், தம்பிரான் தோழரான சுந்தர மூர்த்தி சுவாமிகளாலும் பாடி வழிபட்ட சிறப்புடையதும், சிவபக்த சிகாமணியான இராவணேஸ்வரனுல் வழிபட்டதுமான திருக்கோணேஸ்வரத்தில் நிகழும் மஹா கும்பாபிஷேகத்தின் நினைவு மலரில் கும்பாபிஷேகக் க்ரியைகள் விளக்கம் வெளிவருவது, திருக்கோணேஸ்வரப் பெருமானின் திருநோக்காகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## த்ரவிய ஸமர்ப்பணம் (தனபூஜை)

ப்ரதிஷ்டை நிகழ்த்துவதற்கு வேண்டிய த்ரவியங்களைச் சேகரித்ததும் அதை பொன், வெள்ளி தாம்பாளத்தில் பட்டுப் பீதாம்பரத்தினால் அலங்கரித்து, சிவதருமத்திற்குரிய பொருளை அதன்மீது வைத்து, யானை அல்லது சிவிகைமீது தட்டினை வைத்து. சிவாச்சாரியாரும் எஜமானரும் மங்கள வாத்தியங்களுடன் வலமாக தேவாலயத்தை அடைந்து அலங்கரித்த மண்டபத்தில் நெல், அரிசி பரப்பி அஷ்டதள பத்மமிட்டு அதன்மேல் வைத்து ஸ்ரீ மகாலக்ஷ்மியைப் பூஜித்து, த்ரவியத்தை மூன்று பங்காக்கி ஒரு பங்கு ஆலய நிர்மாணத்திற்கும் ஒருபங்கு நித்ய பூஜைக்கும், மிகுதியுள்ள ஒருபங்கை கும்பாபிஷேகத்திற்குமாக ஸமர்ப்பிக்கவேண்டும். கும்பாபிஷேகத்திற்கு உரிய பொருளை பதினொரு பங்காக்கி இரண்டு பங்கு யாகத்திற்கும், ஒரு பங்கு அபிஷேகத்திற்கும், ஒரு பங்கு சிவாச்சாரியாருக்கும், இரண்டு பங்கு ரித்விஜர்களுக்கும், இரண்டு பங்கு நான்கு வேத - பன்னிரு திருமுறை தேவாரங்களுக்கும், ஒரு பங்கு யாக த்ரவியங்களுக்கும், ஒருபங்கு அன்னதானத்திற்கும், ஒருபங்கு சிற்பி முதலானவர்களுக்கும் செலவிடவேண்டும்.

## ஆசார்ய வரணம்

இது கோயிலைப் பரிபாலிக்கும் தர்மகர்த்தா ப்ரதிஷ்டை செய்யத் தகுந்த சிவாச்சாரியாரைத் தேர்ந்தெடுத்து, அவரிடம் ப்ரதிஷ்டை செய்யும் பொறுப்பினை ஒப்புவிக்கும் க்ரியையாகும். பின்பு சிவாச்சாரியார் ஷெ ப்ரதிஷ்டைக்குத் தகுந்த போதகர்கள், சாதகர்கள், ரித்விஜர்கள் முதலியவர்களை அமர்த்திக்கொள்வர்.

## விப்ரானுக்ஞை

வேத சிவாகமங்களை அறிந்த பெரியோர்கள் முன்னிலையில் தக்ஷிண தாம்பூலம் தந்து, தான் இப்பிரதிஷ்டை செய்யத் தகுதியுடையவனு என்றுகேட்க சபையோர்களால் தகுதியுடையவர் என்பதை ஆமோதிப்பது.

## தேவானுக்ஞை

சிவபெருமானிடம் ஸாங்கோபாங்கமாக பூஜை செய்து பெருமானிடம் சிவப் ப்ரதிஷ்டை அருள் பாலிக்க வேண்டுவது. (அவனருளாலே அவன் தாள் வணங்கி) பின்பு தேவியிடமும் அனுக்ஞை பெறுதல்.

## விக்னேச ஸம்பூஜநம்

ப்ரதிஷ்டை கார்யமானது எந்த விக்னமுமில்லாமல் நிறைவேற விக்னராஜாவான மஹாகணபதியை பூஜை, ஹோமம் முதலியவைகளால் திருப்தியடையச்செய்து பிரார்த்திப்பது.

## வாஸ்துசாந்தி

புதிதாக அமைக்கப்பெற்ற ஆலயங்கள், யாகசாலை முதலியவைகளில் வாஸ்து உபாதை நீங்குவதன்பொருட்டு தண்டிலம் அமைத்து அதன்மேல் வெள்ளைத் துணியின்மேல் அறுபத்துநான்கு பதம் அமையும் முறையில் வாஸ்து மண்டலம் (மண்டுகம்) அமைத்து நடுவில் கூர்ச்சத்தில் வாஸ்து புருஷனை பூஜித்து, கிழக்கு மேற்காகவும், தெற்கு வடக்காகவும் 9 சூத்திரத்தால் பந்தனம் செய்து அதன்மேல் பிர்ம்மா முதலான ஐம்பத்திமூன்று தேவர்களை பூஜித்து, ஹோமம் செய்து பூசணிக்காய் பலிதந்து ஹோமம் செய்த அக்னியை தேவிக்காஜல் (பரமசாயி) தர்பை, பலாசு, சுத்தி, அரசு மா முதலியவைகளாலும் காய்ந்த சருகுகளாலும் அல்லது தென்னை ஓலையாலும் நான்கு முழ அளவிற்கு உருவம் செய்து, அதில் வாஸ்து புருஷனை ஆவாகனம் செய்து அதில் ஹோமாக்கினியைச் சேர்த்து பரிசாரகருக்கு தக்ஷிண தாம்பூலம் தந்து அந்த வாஸ்துபுருஷ உருவத்தை இழுத்துக்கொண்டு ஆலயத்தையும், யாகமண்டபத்தையும், வீதியையும் வலமாக வந்து ஈசான்ய திக்கில் விஸர்ஜனம் செய்யவேண்டும். சாதகாச்சாரியர் கும்பஜலத்தை ப்ரோக்ஷிக்கவேண்டும். இப்படிச் செய்வதால் வாஸ்துபாதை நீங்குமென்பது.

## ரக்ஷோக்ன ஹோமம்

கிழக்குமுதலான திக்குகளில் உள்ள யக்ஷராக்ஷஸ முதலாய துர்தேவதைகளை துரத்துவதின் பொருட்டு சதாசிவ மூர்த்தியாகிய கட்கேசரையும் ரக்ஷோக்ன தேவதையையும் பூஜித்து ரக்ஷோக்ன மந்திரத்தால் ஹோமம் செய்து, கட்கத்தை எடுத்துக்கொண்டு சிவாக்ஞையைக் கூறிச்செய்வதாகும்.

## பிரவேச பலி

இடையூறுகள், உபத்ரவங்கள், அரிஷ்டங்கள் முதலியவைகளை நிவர்த்திசெய்து யக்ஷ ராக்ஷஸ, அசுர, பைசாச, பிர்மராக்ஷஸ முதலியவைகளை உச்சாடனம் செய்து அதற்குரிய இடமான வனம், மலை, சமுத்ரம் முதலாய இடங்களுக்குச் செல்வதற்கு நிகழ்த்தப்படும் க்ரியையாகும்.

1. கிழக்குத் திக்கில் உள்ள பரக்ஷனை மலையுச்சிக்குப் போகச்சொல்லி அந்த இடத்தில் தாபித்தல்.
2. அக்னி திக்கில் உள்ள ராக்ஷஸனை மலைக்குச் செல்லுமாறு செய்து அக்கினியை அந்த இடத்தில் தாபித்தல்.
3. தெற்கில் உள்ள பூதங்களை பித்ருஸ்தானத்திற்குச் செல்லுமாறு செய்து யமனை அந்தவிடத்தில் தாபித்தல்.
4. தென்மேற்கில் உள்ள பைசாசங்களை வனமத்தியத்திற்குச் செல்லுமாறு செய்து நிருருதியை அந்த இடத்தில் தாபித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. மேற்கில் உள்ள பிர்மராக்ஷஸர்களை நதிக் கரைக்குச் செல்லச்செய்து வருணனை அந்த இடத்தில் தாபித்தல்.

6. வாயுதிக்கில் உள்ள காளியைக் காட்டிற்குச் செல்லுமாறு செய்து வாயுவை அந்த இடத்தில் தாபித்தல்.

7. வடக்குத்திக்கில் உள்ள சரஸியை ககன மார்க்கத்தில் செல்லுமாறு செய்து குபேரனை அந்த இடத்தில் தாபித்தல்.

8. வடகிழக்கில் உள்ள பைரவரை ச்மசானத் திற்குச் செல்லுமாறு செய்து அந்த இடத்தில் ஈசானை தாபித்தல்.

பின்பு மஹாலக்ஷ்மியைப் பூஜிக்கவேண்டும்.

## கோபூஜை (தேனுவாசம்)

நூதன ஆலயத்தில் பசுவும் கன்றும் கர்பகிர ஹத்தில் நிறுத்தி பூஜிக்கவேண்டும். பழைய ஆலய மாக இருந்தால் அஷ்டபந்தன மருந்து சாத்தியபின்பு லக்ஷ்மி பூஜைசெய்து பசுவும் கன்றும் முன்செல்ல பூர்ண கும்பம் தீபத்துடன் சென்று ஆலயத்தில் அகண்டதீப ப்ரதிஷ்டை செய்வது,

## புண்யாக வாசனம்

ஒரு கும்பத்தில் வருணனையும் கங்கை முதலான நதிகளையும் பூஜித்து, அந்தத் தீர்த்தத்தைத் தெளித்துப் பரிசுத்தமாக்குவது.

## விப்ரயோஜனம்

நூதன ஆலயமாக இருந்தால் கர்பகிரஹம், மண்டபம் முதலிய இடங்களில் அன்ன சூக்தம் சொல்லி வேதசிவாகமங்களை அறிந்த விப்ரர்களை யோஜனம் செய்யச் செய்து தக்ஷிண தாம்பூலம் தருவது.

## நவக்ரஹ மகம்

கர்ஷணம், பாலஸ்தாபனம், தேவஸ்தாபனம், அஷ்டபந்தனம், கும்பாபிஷேகம் நிகழும் வேளை திதி வார நக்ஷத்ர யோக கரண முதலியவைகளாலும் நவக்ரஹங்களாலும் ஏற்படக்கூடிய இடையூறுகளை நீக்கி சுபமாகவும் சுலபமாகவும் நிகழவேண்டி நவக் ரஹ மண்டலமிட்டு நடுவில் சூரியனையும் கிழக்கில் சந்திரனையும், தென்கிழக்கில் செவ்வாயையும் தெற் கில் புதனையும், தென்மேற்கில் சனிபகவானையும், மேற்கில் குருவையும், வடமேற்கில் ராகுவையும், வடக்கில் சுக்ரனையும். வடகிழக்கில் கேதுவையும் பூஜித்து, அதற்குரிய சமித்து, அன்னம், நெய், தானியங்களைக்கொண்டு ஹோமம் செய்து பின்பு நவதானியங்களைத் தானம் செய்தல்வேண்டும்.

## ஸம்ஹிதா ஹோமம்

கும்பத்தில் சிவனையும் ஈசான முதலான பதி னொரு ஸம்ஹிதா மந்திரங்களைப் பூஜித்து ஹோமத் தில் தனித்தனியாக, ஸம்ஹிதா மந்திரத்தால் ஹோமம் செய்து, பூர்ணாகுதி செய்து இதயத்தில் ஒடுக்கி அந்ததீர்த்தத்தை புரோக்ஷிப்பது.

## காஷ்டா ஹோமம்

கலை காஷ்டா முதலான கால தேவதைகளைப் பூஜித்து ஹோமம் செய்து நாளும் கோளும் நல்ல வையே செய்யவேண்டுவது.

## சாந்தி ஹோமம்

பதினொரு கும்பம் ஸ்தாபித்து நடுவில் பாசு பதாஸ்திர மூர்த்தியைச் சுற்றி வஜ்ரம் முதலான பத்து அஸ்திரங்களையும் பூஜித்து, சமித்துகளை பாலில் தோய்த்து உரிய மந்திரங்களால் ஹோமம் செய்ய வேண்டும். நெய்யினாலும் பால்கலந்த எள்ளினாலும் அறுகினாலும் ஹோமம் செய்து பூர்ணாகுதியும் செய்து பாசுபதாஸ்திர மூர்த்தியை இதயத்தில் ஒடுக்கி தீர்த்தத்தை லிங்கத்தைச் சுற்றியும் மற்ற இடங்களி லும் புரோக்ஷிக்கவேண்டும்.

## மூர்த்தி ஹோமம்

நடுவில் சிவகும்பமும் வர்த்தனியும் அஷ்டமூர்த் திகளையும் சுற்றி வஜ்ர முதலான அஸ்திரங்களையும் பூஜித்து அகோராஸ்திர மந்திரத்தால் நெய், சமித்து அன்னம், எள், பால், தேன் முதலானவைகளால் ஹோமம் செய்து பூர்ணாகுதி செய்து அக்னியால் உள்ளமூர்த்தியை கும்பத்தில் சேர்த்து கும்ப தீர்த் தத்தை சிவலிங்கத்திற்கு அபிஷேகிப்பது.

## மிருத்ஸங்கிரஹணம்

பாலிகையில் முளையிடுவதற்கு நல்ல மண் எடுப் பதுதான் மிருத்ஸங்கிரஹணமாகும். நதிக்கரை யிலோ புண்ய விருக்ஷங்களின் அடியிலோ புதரடி யிலோ மலையடியிலோ பூமிதேவியை பூஜித்து, பூமிக் கதிபதியான பிரமதேவனை பூஜித்து மண்வெட்டி யால் அஸ்திரத்தைப் பூஜித்து ஸகல வாத்தியம் முழங்க, மண்வெட்டியால் மூன்றுதரம் தேங்காய் அளவு மண் எடுத்தல்வேண்டும். வெட்டிய இடத் தில் லவணம் முதலான ஏழு சமுத்திரங்களை பூஜித்த தீர்த்தத்தால் அபிஷேகிக்கச்செய்து பின்பு மண்ணை தாம்பாளத்தில் பட்டினால் மூடி, பரிசாரகர் தலை மேல்வைத்து மங்கள வாத்தியம் முழங்க வலமாக யாகசாலையை அடைவிப்பது.

## அங்குரார்ப்பணம்

மங்களகரமான க்ரியைகளில் தொடக்கத்தில் இடம்பெறுவது அங்குரார்ப்பணமாகும். கும்பாபி ஷேகம், உத்ஸவம், கலியாணம் முதலிய க்ரியைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழும்பொழுது அதற்கு ஒன்பது, ஏழு, ஐந்து, மூன்று, ஒன்று ஆகிய நாட்களுக்குமுன் இரவில் செய்யவேண்டும், பயிர்களுக்கு அதிபதியான சந்திரனை நடுவில் கும்பத்தில் பூசித்து சுற்றி பாலிகைகளில் (24 அல்லது 12 அல்லது 5 பாலிகைகள்) வைத்து பூசித்து, பாலில் ஊறிய நவதானியங்களை ஓஷதிருக்த மந்திரத்தால் அபிமந்திரித்து உரிய மந்திரங்களை கூளியாரிகைகளில் இடுவது.

## ஆசார்ய ரக்ஷாபந்தனம்

சிவாச்சார்யார்முன் சங்கற்பித்த சிவ பிரதிஷ்டை நிகழும்வரை தனக்கு, ஆத்யாத்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம் முதலான எந்த இடையூறும் ஏற்படாதவண்ணம் அதற்குரிய மந்திரங்களினால் செபம் செய்யப்பட்ட பொன், வெள்ளி, பட்டு நூல் முதலியவற்றில் ஏதாவதொன்றினால் ரக்ஷாபந்தனம் செய்துகொள்வது. பின்பு ரித்விஜர்களுக்கும் சாதகாசாரியர்களுக்கும் எஜமானர்களுக்கும் ரக்ஷாபந்தனம் (காப்புக்கட்டுதல் செய்வர்).

## பிரஸன்ன பூஜை

கலாகர்ஷணத்திற்கு முன் சுவாமிக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் ஸ்நபன ஹோமத்துடன் அபிஷேகம் செய்து பூஜை நடத்துவது ப்ரஸன்ன பூஜையாகும்.

## யாக அலங்காரம்

யாகசாலை அமைத்து அதில் வேதிகை, குண்டங்கள் அமைத்து வேதிகைமேல் நெல், அரிசி, நவதானியங்கள், பொரி முதலியன பரப்பி வேதிகைகளில் அஷ்டவித்தியேசுவரர் 8 கும்பங்களும் யாகசாலையைச் சுற்றி ஸப்தவிம்ஸதி 27 கும்பங்களை அலங்காரத்துடன் அமைத்தல், யாகசாலையைச் சுற்றி கூந்தல், மாவிலை, தோரணங்கள், தார்போட்ட வாழைமரங்கள் முதலியவைகளால் அலங்கரிக்க வேண்டும்.

## கும்பாலங்காரம்

கலாகர்ஷணம் செய்வதற்காக பொன், வெள்ளி செம்பு அல்லது பித்தளை முதலான குடத்தில் பட்டு நூலினால் அளவு பிரமாணப்படி சுற்றி, அந்தக் குடத்திற்குத் தூபங்காட்டி கங்கை முதலான புண்ய தீர்த்தங்களை அதற்குரிய மந்திரங்களைச் சொல்லி நிரப்ப வேண்டும். விளாமிச்ச வேர் முதலிய வாசனைத்திரவியங்களையும் பொன், வெள்ளி, நவரத்னங்களையும் அதற்குரிய மந்திரங்கள் மாவிலை, தேங்காய், கூர்ச்சம் வஸ்திரங்கள், சந்தனம், அக்ஷதை, குங்குமம், புஷ்பமாலைகளால் அலங்கரித்து செய்வது கும்பாலங்காரமாகும்.

## கலாகர்ஷணம்

அலங்காரம் செய்யப்பட்ட கும்பங்களை அந்த மூர்த்தியிடம் எதிரில் வைத்து, கும்பத்திற்கும் மூர்த்திக்கும் பொன், வெள்ளி கம்பிகளினால் அல்லது பட்டு நூலினால் நாடி சந்தானம் செய்து, லிங்கத்தில் (மூர்த்தியில்) சாங்கோபாங்கமாக பூஜைசெய்து, கும்பத்தில், லிங்கத்தில் உள்ள மூர்த்தியின் கலைகளை குரு உபதேச மார்க்கமாக கலா ஆகர்ஷணம் செய்து கும்பத்தில் ஸ்தாபிக்கவேண்டும். பிறமனேன்மணியையும் அஷ்டவித்தியேசுவரர் முதலியோரை முறையே கலாகர்ஷணம் செய்தல் முறையாகும்.

## யாத்ராஹோமம் யாத்ராதானம்

மஹாமண்டபத்தில் உள்ள நித்யாக்னி, குண்டத்தில் ஹோமம் செய்து முக்கனி, தேன், பால், நெய் முதலியவற்றால் மிருத்யுஜ்ஜய மந்திரத்தால் ஹோமம் செய்து க்ஷண ஹோமம் ஸம்ஹிதா ஹோமம் செய்து, பூர்ணாகுதி செய்து அக்னியுள்ள மூர்த்தியை கும்பத்தில் சேர்த்து, பின்பு யாத்ராதானம், தசதானம், பஞ்சதானம், பலதானம், நவக்ரஹ ப்ரிதிதானங்கள் செய்யவேண்டும். மூலாலயத்திலிருந்து யாகாலயத்திற்குச் செல்கையில் இடையூறு நேராவண்ணம் செய்வதாகும்.

## கடம் புறப்பாடு

மூலாலயத்திலிருந்து யாகாலயத்திற்குச் செல்வதற்காக சாதகாசிரியர் அல்லது ஸ்தானீகர் தலையின் மீது பரிவட்டம் கட்டி அதில் ரிஷபதேவஹ ஆவாகனம் செய்து ஸகல வாத்தியங்கள் முன்செல்ல வேத, தேவார, திருமுறை கோஷங்களுடன் குடை சாமரம் முதலிய இராஜோபசாரத்துடன் ஆலயத்தை வலமாகச் சென்று சேர்வதாகும்.

## யாகசாலாப்ரவேசம்

யாகசாலைக்கு வந்தவுடன், பூசித்து கர்ப்பூரம் காட்டி, நெற்பொரி, புஷ்பங்களை மந்திரஜால மந்திரத்தைச் சொல்லி தூவி, கும்பங்களை அதற்குரிய வேதிகைகளில் வைத்து, பானகம் நீர்மேல் நிவேதனம் செய்து நீராஜனம் செய்வதாகும்.

## யாகபூஜை ஹோமம்

பெருமான் யாகத்தில் அதிவாசமாக தங்கியிருக்கும் காலத்தில், விஷேசமாக பூசை, ஜபம் ஹோமம் முதலியவைகள் செய்யப்படவேண்டும். முதலில் ஸகல வடிவினரான சூரியனைப் பூசித்து பின்பு நிஷ்களரான சிவபெருமானைப் பூசிக்கவேண்டும். நிர்ணயத்திற்கு கால, யாக பூசை, இரண்டு கால யாக பூசை முதல் 4, 6, 8 என்ற முறையில் செய்யப்படவேண்டும். அஷ்டமூர்த்தியாத்மகரான பெருமானுக்கு அக்னியில் ஹோமம் செய்வதினால் அந்த அருள்சக்தியானது பிம்பத்தில் நின்று நமக்கு அருள் பாலிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யந்திரஸ்தாபனம்

மந்திரோபாஸனையில் வல்லவரான சிவாச்சாரியர்கள் அந்தந்த மூர்த்திகளுக்குரிய யந்திரங்களை (பொன், வெள்ளி, செம்பு) முறையாக பூசை, ஜப, ஹோம தர்பணுகுதிகள் செய்து அந்தந்த பிம்பங்களுக்கு அடியில் உரிய நேரத்தில் தாபிப்பது.

### ரத்னநியாஸம்

பிம்பங்களை தாபிக்கும் பீடங்களில் நவரத்னங்கள், நவதானியங்கள், நவஔஷதிகள், நவஉலோகங்கள் முதலியவைகளை பீடத்திலுள்ள நாதகுழியில் தனித்தனியே உரிய மந்திரங்களுடன் வைக்கப்பட வேண்டும்.

### பிம்பஸ்தாபனம்

பிம்பங்களை மங்கள வாத்ய, வேத, தேவார கோஷங்களோடு நல்ல சுபவேளையில் கர்ப்பக்ரஹத்திலுள்ள யந்திரம், நவரத்னங்கள் முதலியவைகள் இட்ட பீடத்தின்மீது தாபிப்பது.

### அஷ்டபந்தனம்

மூர்த்தியையும் பீடத்தையும் இணைத்துச் சாத்துவது அஷ்டபந்தனமாகும். சுக்கான், குங்கிலியம், கொம்பரக்கு, தேன்மெழுகு, நற்காவி, செம்பஞ்சு, எருமைவெண்ணெய், ஜாதிலிங்கம் என்பன அஷ்டபந்தனத்திற்குரிய திரவியங்களாகும்.

### பிம்பசுத்தி

அஷ்டபந்தனம் சாத்தியபின் 1. அஷ்டமிருத்துகளின் கஷாயம் 2. பத்ரோதகம் 3. காந்தோதகம் 4. மூலோதகம் 5. மார்ஜனோதகம் 6. கந்தோதகம் 7. புஷ்போதகம் 8. பலோதகம் 9. ரத்னோதகம் 10. தான்யோதகம் 11. உலோகோதகம் 12. மான்யோதகம் 13. ச்ருங்கோதகம் 14. அஸ்திரோதகம் 15. பரிமார்ஜனோதகம் 16. பஞ்சகவ்யம் முதலியவைகளை கலசங்களில் நிரப்பி உரிய மந்திரங்களால் பூசித்து ஹோமம் செய்து அந்த தீர்த்தங்களை தனித்தனியாக லிங்க மூர்த்திகளுக்கு அபிஷேகம் செய்யப்படவேண்டும்.

### ரக்ஷாபந்தனம்

பிம்பசுத்தி முடிந்தவுடன் முன் ஆசாரிய ரக்ஷாபந்தனத்திற்கு செய்ததுபோல் பூசை, செபம் முதலியவைகள் செய்து லிங்கத்திற்குப் பாணத்திலும், பிம்பங்களுக்கு வலது கையிலும், சக்தி பிம்பங்களுக்கு இடது கையிலும் நந்திகேசுவரருக்கு கொம்பிலும் அதற்குரிய மந்திரங்களைச் சொல்லி ரக்ஷாபந்தனம் செய்வது. நோயுற்ற குழந்தைக்காக தாய் மருந்துண்பதுபோல உலகத்தில் உள்ள ஸகல ஜீவராசிகளையும் காக்கும்பொருட்டு அம்மையப்பரான இறைவனுக்கு ரக்ஷாபந்தனம் செய்யப்படுகிறது.

### தத்வ த்ரயோஜனம்

பிம்பத்தில் கலா, தத்வ, புவன, வர்ண பத மந்திர என்கிற ஆறு அத்வாக்களையும் பூசித்து கும்ப, அக்னி, லிங்க அல்லது பிம்பத்திற்கும் நாடிசந்தானம் செய்து, 36 தத்வங்களையும் பூசித்து ஹோமம்செய்து ஆத்மதத்வமான பிர்ம்மயாகத்தில் இருபத்தி நான்கு தத்வங்களை, வித்யாதத்வமான விஷ்ணுயாகத்தில் ஏழு தத்வங்களையும், சிவதத்வமான ருத்ரயாகத்தில் ஐந்து தத்வங்களை பூசித்து பிம்பத்தில் ஸம்போசனம் செய்தல். அஷ்டமூர்த்திகள், மூர்த்தீஸ்வரர் மூர்த்தீஸ்த்ரீ இவர்களைப் பூசிப்பது.

### யாஹாவஸாநகம்

பூசை, ஹோமம் முதலியவற்றில் குறைதல், தவறுதல் அறிந்தும் அறியாது செய்த தோஷங்களை நீக்கி பிராயசித்தமாக முடிந்த அளவு மூலமந்திரத்தாலும், அஸ்திர மந்திரங்களாலும் ஹோமம்செய்து நிறைவுசெய்யச் செய்வதுதான் பூர்ணகுதியாகும்.

### யாத்ராதானம் க்ரஹப்ரிதிதானம்

கும்பாபிஷேக தினத்தன்று யாகபூசை, பூர்ணகுதி முடிந்தபின் யாகசாலையிலிருந்து மூலாலயம் செல்ல புறப்படுமுன் வழியில் இடையூறு ஏற்படா வண்ணம் செய்வது. கும்பத்தில் இருக்கும் பெருமான் கர்ப்பக்ரஹப்ரவேச நேரமும் கும்பாபிஷேக லக்னமும் சுபமாக அமைந்து நற்பயன் கிட்டச்செய்ய நவக்ரஹங்களையும், காலதேவதைகளையும் திருப்தியடையச்செய்ய செய்வதாகும்.

### கும்ப உத்தாபனம்

சிவதீக்ஷை பெற்ற ஸ்தானீகர் அல்லது சாதகாசிரியர் இவர்களுக்கு சந்தனம், புஷ்பம், பரிவட்டம் முதலியவைகளால் அலங்கரித்து சிரஸ்ஸால் ரிஷப தேவரைப் பூசித்து சிவகும்பத்தையும் வர்த்தனி அஷ்டவித்யேசுவரரையும் எழுந்தருளச் செய்து மங்களவாத்தியம் முழங்க வேத, தேவார கோஷங்களோடு ஸகல இராஜோபசாரத்துடன் ஆசாரியர் மூலமந்திர செபத்துடன் மூலாலயம் சேர்தல், மந்திர லாஜ புஷ்பங்கள் செய்து கர்ப்பகிரஹத்தில் சிவலிங்கத்தின் எதிரில் தண்டிலத்தின்மீது வைப்பது.

### கும்ப, லிங்க, ஸம்யோஜனம்

முன்பு லிங்கத்திலிருந்து கும்பத்திற்கு கலாகர்ஷணம் செய்ததுபோல இப்போது கும்பத்திலிருக்கும் எல்லாக்கலைகளையும் லிங்கத்திற் சம்யோஜனம் செய்வது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹா கும்பாபிஷேகம்

குறிப்பிட்ட சுபவேளையில் அந்தக் கும்பத்தில் உள்ள தீர்த்தத்தை லிங்கத்தில், ஸ்தாபியில், பிம்பங்களுக்கு அபிஷேகம் செய்வது. பசும்பாலும், மதுவர்க்கமும் நிவேதனம் செய்து பெருமானை லிங்கத்தில் ஸ்தூபம் பிம்பத்தில், நித்யவாஸம் செய்யுமாறு பிரார்த்தனை செய்தல்,

## சாங்கோபாங்க பூஜை

பின்பு லிங்கத்தில் பெருமானை சாங்கோபாங்கமாக பஞ்சாவரணத்துடன் பூசைசெய்து பிரார்த்தனை செய்வது.

## மஹாபிஷேகம்

யதோக்தமாக எல்லா அபிஷேகத் திரவியங்களைக்கொண்டு ருத்ராபிஷேகமாக செய்தல்வேண்டும். நிவேதனங்கள் நிறையாக (மஹாக்ராஸம்) செய்தல்வேண்டும்!

## திருக்கல்யாண உற்சவம்

உலகத்தில் சகல ஜீவராசிகளுக்கும் தாயாகவும் தந்தையாகவும் இருந்து காக்கும் பெருமான் சிவ சக்தி ஐக்கியத்தையும் ஜீவாத்மா பரமாத்மா ஐக்கியத்தையும் விளக்குவது திருக்கல்யாணம். இதில் அனுக்ஞை, விநாயகர் பூசை, சங்கல்பம், வரப்ரோக்ஷணம், கன்யாதானம், பாணிக்கிரஹணம், மாங்கல்ய சூத்ரதாரணம், ஸப்தபதி (அக்னிவலம்வருதல்) லாஜஹோமம், ஆசிர்வசனம் முதலியவை முக்கிய அம்சங்களாக விளங்குகின்றது.

## திருவீதியுலா

கருணைக்கடலான சிவபெருமான் தனது அருளே சக்தியாகவும், தடைகளை நீக்கி காரியசித்தியையும் நல்ல புத்தியையும் தர கணபதியாகவும், ஞானத்தைத்தர முருகப்பெருமானுகவும். சிவபக்தியினுல் எதையும் பெறமுடியும் என்பதைக்காட்ட சண்டேசனுகவும் காக்ஷி தந்து, பக்குவமில்லாத ஆத்மாவிற்கும் அருள்பாலிக்கவேண்டுமென்ற கருணைதான் வீதியுலாவாகும்.

## ஆசார்ய உற்சவம்

ப்ரதிஷ்டா ப்ரதம குருவான சிவாச்சாரியாருக்கும் ஏனைய சிவாச்சாரியாருக்கும் சந்தனம், மலர் மாலை, பரிவட்டம், தக்ஷிணை தாம்பூலம் தந்து அவர்களை ஸகல வாத்யங்கள் முழங்க மாளிகைக்குச் சேர்ப்பித்தல்:

## எஜமான உற்சவம்

சங்கற்பித்துக்கொண்ட எஜமானர் (தர்ம கர்த்தா) கும்பாபிஷேக பிரசாதங்களைப் பெற்று, பரிவட்டம் மாலைகளைப்பெற்று ஸகல வாத்தியங்கள் முழங்க உறவினர்கள், நண்பர்கள் எல்லாரும் புடைசூழ தனது மாளிகைக்குச் சென்று எல்லோருக்கும் சந்தனம் சர்க்கரை தாம்பூலம் வழங்கி ஆசிபெறுவது.

## அவபிருதஸ்நானம்

சிவயாகம் முடிந்த மறுநாள் அதிகாலையில் அஸ்திர தேவருள் ப்ரதிஷ்டா குருமார்கள் எஜமானர்கள் எல்லோரும் ஸமுத்திரம், நதி, குளம், முதலிய ஏதாவதொரு இடத்தில் சங்கற்பம்செய்து அகமர்ஷண சூக்தம் சொல்லி ஸ்நானம் செய்வது:

## ரக்ஷா விஸர்ஜனம்

நன்றாக முளைத்திருக்கும் பாலிகைகளை ஜலத்தில் சேர்த்து ரக்ஷாபந்தன காப்புக்களை விஸர்ஜனம் செய்து அஸ்திரதேவரிடம் ஸமர்ப்பித்து பிரார்த்தனை செய்வது.

ஷை

மூர்த்திகள் ரக்ஷாபந்தனம் ஒருமண்டலத்திற்குப் பின்பு விஸர்ஜனம் செய்யவேண்டும்.

## மண்டல பூஜை

கும்பாபிஷேகத்தில் அறிந்தோ அறியாமலோ செய்த பிழைகளுக்குப் பிராயச்சித்தமாக ஒரு மண்டலம் (45 நாட்கள்) கும்பம், மண்டலம், அக்னி, பிம்பம் முதலியவைகள் செய்வதால் தேவஸாந்நித்யம் ஏற்படும்.

## மண்டலபூஜை பூர்த்தி

45 நாள் பூர்த்தியில் ருத்ராபிஷேகம், தச, சதஸஹஸ்ர சங்காபிஷேகம் செய்வதாகும்.

## சண்டயாகம்

சிவயாக பலன்தருமாறு சண்டேசப் பெருமானைப் பூசித்துப் பிரார்த்திப்பது.

சுபம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்முகக் கடவுளின் சிறப்பு

புலவரேறு திரு. ந. ரா. முருகவேள்,
ஆசிரியர்: "திருக்கோயில்"
அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 34.

— முன்னுரை —

சிவபிரானின் மூர்த்தங்கள் (திருவுருவங்கள்) போக மூர்த்தம், யோக மூர்த்தம் வேக மூர்த்தம் எனப் பலவகைப்படும். இறைவன் தான் போகியாய் திகழ்ந்து, உயிர்களுக்குப் போகத்தைப் புணர்த்துகின்றான். யோகியாக அமர்ந்து, உயிர்களுக்கு யோகமுத்தியை உதவுகின்றான். வேகியாய் விளங்கி, உயிர்கள் செய்த வினையை அழித்தருள்கிறான்.

## தென்முகக் கடவுள்

தட்சிணாமூர்த்தி யோகத்திற்கும் ஞானத்திற்கும் உரிய கடவுளாவர். அவர் தட்சிணம் எனப்படும் தெற்குத் திசையை நோக்கி வீற்றிருந்தருள்தலில் அவருக்குத் தட்சிணாமூர்த்தி எனப் பெயர் வழங்குவதாயிற்று. தட்சிணாமூர்த்தியைத் தமிழில் "தென்முகக் கடவுள்" என வழங்குவர்.

## ஞானமூர்த்தி

தட்சிணம் என்னும் சொல்லுக்கு, ஞானம் என்றும் ஒரு பொருள் உண்டு. ஞானத்தின் திருவுருவாய் அமர்ந்து, தன்னை வழிபடுவோர்க்கெல்லாம் ஞானத்தை வழங்கியருள்பவராதலினால், அவருக்குத் தட்சிணாமூர்த்தியெனப் பெயர் போந்ததெனினுமாம். ஞானமானது தட்சிணாமூர்த்தியின் முன்னிலையில் அவரையே நோக்கி நின்றுகொண்டு இருக்கின்றது என்று கூறுவர். எனவே தட்சிணாமூர்த்தியை "ஞானமூர்த்தி" என்று கூறலாம்.

## திருவுருவ அமைப்புத்திறம்

கோயில்களிற் கருவறையின் தென்புறச் சுவரின் ஒரு மாடத்தில் தட்சிணாமூர்த்தி எழுந்தருளியிருப்பார். ஆலங்குடி, திருவாரூர் போன்ற தலங்களில் தனிச்சந்நிதியும் தட்சிணாமூர்த்திக்கு உண்டு. கல்லால மரநிழலில், தனிமையான சூழலில் புலித்தோலின் மேல் அவர் அமர்ந்திருப்பார். சில சிற்பங்களில் தாமரை மலர்மீதும் (பத்மாசனம்) அவர் அமர்ந்திருப்பதுண்டு. அவர்தம் வலக்கால் ஆசனத்தின் கீழ் தொங்கவிடப்பட்டிருக்கும். இடக்கால் வளைந்து வலத்தொடையின்மீது குறுக்காக இருக்கும். இந்நிலை வீராசனம் எனப்படும். சில சிற்பங்களில் உத்குடிகாசனம் முதலிய நிலையிலும் அவர் விளங்குவார். அவர்தம் திருவடியின்கீழ் முயலகன் கிடப்பான். திருவடியான்து அவனை அழுத்திக்கொண்டோ அழுத்தாமலோ இருக்கும்.

தட்சிணாமூர்த்தி முக்கண்ணும் நாற்றோளும் உடையவர். அவருடைய வலக்கை சின்முத்திரையைக் காட்டிக்கொண்டு திகழும். சில சிற்பங்களில் நாட்டிய நூல்கள் கூறும். சாந்தாம்ச முத்திரையும் காட்டுவதுண்டு. இடக்கை வரதம் அல்லது தண்டம் ஆகிய குறிப்பினை உணர்த்தும். மற்றொரு வலக்கையில் உருத்திராக்க மாலையும், இடக்கையில் நெருப்பு அல்லது பாம்பு இருக்கும். சில சிற்பங்களில் உருத்திராக்க மாலைக்குப் பதில் புத்தகமும் நெருப்பு அல்லது பாம்புக்குப் பதில் நீலோற்பல மலரும் விளங்கும். அமுதகலசத்தினையும் அவர் ஏந்தியிருப்பார். தட்சிணாமூர்த்தியின் வடிவம் வளைவு நெளிவுகள் இன்றி நேராக நிமிர்ந்த நிலையில் திகழும். ஒரு நெறிப்பட்ட உள்ளத்தின் உறுதியையும் தியாகநிலையின் இயல்பினையும் உணர்த்துதற்கு அஃது ஓர் அடையாளமாகும். சடாபாரம், சடாபந்தம், சடாமண்டலம், சடாமகுடம் முதலியவைகளுள் ஒன்றை உடையவராக அவர் விளங்குவார். அதன்கண் கங்கையும் மதியும், கபாலமும், கொன்றையும் காணப்படும். திருமுக மண்டலம் தெளிவும் மகிழ்வும் நிரம்பி சாந்த நிலையில் திகழும். அவர்தம் பார்வை தியாக யோக பாவனையில் மூக்குநுனியை நோக்கியிருக்கும். அவர் பளிங்குபோன்ற வெண்ணிறமுடையவராக விளங்குவார்.

## வியாக்கியான தட்சிணாமூர்த்தி

யோக தட்சிணாமூர்த்தி ஞான (மேதா) தட்சிணாமூர்த்தி, வியாக்கியான தட்சிணாமூர்த்தி என நான்கு வேறுவகையில் இவர் வழிபடப்பெறுவர். பெரும்பாலான கோயில்களில் விளங்குபவர் வியாக்கியான தட்சிணாமூர்த்தியேயாவார். வேதாகமங்களின் நுண்பொருள்களையெல்லாம் விளக்கி அருள்புரிபவர், "வியாக்கியான தட்சிணாமூர்த்தி" எனப்படுவார். முன்னொரு காலத்தில் சனகர், சனந்தனர், சநாதனர், சனற்குமாரர் என்னும் நான்கு முனிவர்கள் வேதத்தின் பொருள் விளங்காமல் மயங்கி, இறைவனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கித் தவம்புரிந்தனர். அவர்களுக்கு இறைவன் வெளிப்பட்டு வியாக்கியான தட்சிணாமூர்த்தியாக வேதங்களின் பொருள் நுட்பங்களை ஆகமங்களால் தெளிவித்து அருளினன்:

''ஏரிசையும் வடபாலின்கீழ் இருந்தங்கு
ஈரிருவர்க்கு இரங்கி நின்று
நேரிய நான்மறைப் பொருளை உரைத்து
ஒளிசேர் நெறியளித்தோன்'',
''அழிந்த சிந்தை அந்தணர்க்கு
அறம், பொருள், இன்பம்,
வீடு மொழிந்த வாயன்''

என வரும் தேவாரப் பாடல்கள் இங்கு கருதற் பாலன.

## யோக தட்சிணாமூர்த்தி

இறைவன் வேதங்களின் நுண்பொருள்களை ஆகமங்களைக்கொண்டு தெளிவித்த பின்னருங்கூட, மனம் ஒருநெறிப்படாமல் வருந்திய அம்முனிவர்கள் நால்வர்க்கும், இறைவன் யோகநெறியால் ஞானம் அடைந்து நிட்டைகூடும் நிலைகளை விளக்கியருளினார். கந்தபுராணத்தில், காமதகனப்படலத்தில் இவர்தம் இயல்பு பெரிதும் விளங்கப்பெற்றுள்ளது.

## மேதா தட்சிணாமூர்த்தி

இறைவன் திருவுருவம் ஞானம், ஆனந்தம் என இருவகைப்படும். நடராசப் பெருமானின் திருவுருவம் ஆனந்தமாகும். தட்சிணாமூர்த்தியோ ஞானவடிவினர். ஞானமே திருமேனியாகக் கொண்டு திகழும் அப்பெருமான் தன்னை அன்பால் வழிபடும் அடியார்களுக்கெல்லாம் ஞானத்தைக்கொடுத்து நலம்புரிந்தருளுகிறார். இவரையே ஞான தட்சிணாமூர்த்தி அல்லது மேதா தட்சிணாமூர்த்தி எனச் சான்றோர்கள் போற்றுவார்கள்.

## வீணா தட்சிணாமூர்த்தி

''வேதத்து ஒலிகொண்டு வீணைகேட்பார் வெண்காடு மேவிய விகிர்தனாரே'' எனவும் ''கருங்கடல் வண்ணன் களேபரமும் கொண்டு கங்காளராய் வருங்கடல் மீள நின்று எம்இறை நல்வீணை வாசிக்குமே'' எனவும் கூறப்படுவதுபோல, சிவபெருமான் தன் திருக்கையில் அவர் ''வீணா தட்சிணாமூர்த்தி', என்று துதிக்கப்படுவர்.

## தத்துவ பொருள் நுட்பங்கள்

(1) தட்சிணாமூர்த்தியின் பளிங்கு போன்ற வெண்நிறத் திருமேனி, இவர் உலகப்பொருள் ஒன்றிலும் தோயாது தூயவராகத் திகழ்ந்ததை உணர்த்தும்.

(2) இவர் எல்லாத் தீமைகளையும் அடக்கியாளும் வலிமையுள்ளவர் என்பதற்கு அடையாளமாகத் தம் வலக்காலால் முயலகனை மிதித்துக் கொண்டு விற்றிருக்கின்றார்.

(3) இவர் திருக்கையில் உள்ள சிவஞானபோதம் எல்லா ஞானங்களையும் தன்னுள்ளே அடக்கிக் கொண்டு திகழ்கின்றது. ஞானத்தால்தான் வீடு பேறு எய்துதல் இயலும் என்பதனை இது காட்டுகின்றது. நோய்வாய்ப்பட்டு வருந்தும் பிணியாளர் பொருட்டு மருத்துவர்கள் மருந்துப் பொருட்களைக் கட்டிச் சுமந்துகொண்டு சென்று தந்து நலம்விளைவிப்பதுபோல மும்மலங்களின் வயப்பட்டு மயங்கி வருந்தும் உயிர்களின் பொருட்டு இறைவன் அவற்றின் அறியாமையைப் போக்கி அறிவையளிக்கும் சிவ ஞானபோத செழும்பொருள் நூலைக் கையில் ஏந்திக் கொண்டு இருக்கின்றான்.

(4) இவர் வைத்துக்கொண்டுள்ள உருத்திராக்க மாலை 36 அல்லது 96 என்னும் தத்துவங்களை உணர்த்துகின்றது. இது திருவைந்தெழுத்தை உருத்திராக்க மாலைகொண்டு பன்முறை எண்ணிப் பலகாலும் செபித்து உருவேற்றித் தியானித்தலே ஞானத்தை அடையும் நெறி என்றும் குறிப்பிடுகின்றது. இதனால்தான் தட்சிணாமூர்த்தியின் முன்னர் இருந்து தியானம் செய்யும்படி நூல்கள் கூறுகின்றன.

(5) இவர் இடக்கையில் அமிர்தகலசம் ஏந்திக் கொண்டிருத்தல் அனைத்துயிருக்கும் பேரின்பத்தையளிக்க வல்லவராதலை அறிவிக்கின்றது.

(6) இவர் புலித்தோலின்மீது அமர்ந்திருத்தல் தீய சக்திகளை அடக்கியாளும் ஆற்றல் மிக்கவர் என்பதனைக் காட்டுகின்றது. மேலும் இவர் தாமரை மலரில் அமர்ந்து இருக்கும் தன்மை ''மலர்மிசை ஏகினான்'' எனத் திருக்குறள் குறிப்பிடுவதற்கேற்ப அன்பர்களின் இருதயமாகிய தாமரை மலரில் எழுந்தருளுவார் என்பதனைக் குறிக்கும். தாமரை மலர் ஓங்காரமாகிய பிரணவத்தையும் உணர்த்தும் என்பர்.

(7) எவராலும் வெல்லயியலாத காமதேவனை எரித்தருளிய இவர்தம் செயல் ஞானமும் வீடும் எய்த விரும்புவோர் எவரும் ஐம்பொறி அவாக்களை அறுத்தொழித்துப் புலனடக்கம் உடையராதல் வேண்டும் என்பதனைப் புலப்படுத்துகிறது. துறவுநெறியின் சிறப்பினையும் தட்சிணாமூர்த்தம் இங்ஙனம் செம்மையுற உலகுக்குத் தெளிவிக்கின்றது.

(8) படர்ந்து பரவியுள்ள ஆலமரமும் அதன் நிழலும் மாயையினையும் அதன் காரியம் ஆகியே காட்டுகின்றன. சங்கநூல்களில் ''ஆலமரச் செல்வன்'' என்னும் பெயரே தட்சிணாமூர்த்திக்கு பெரு வழக்காகக் காணப்படுகிறது.

(9) தட்சிணாமூர்த்தியின் அருகில் உள்ள வெள்விடை தருமத்தையும் அதன் இயல்பினையும் விளக்குகின்றது. அவரைச் சூழ்ந்துள்ள விலங்குகளும் பிறவும் அவரே அனைத்துயிர்களுக்கும் தலைவர் (பசுபதி) என்பதற்கு அடையாளமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(10) அவர்தம் உடலின்மீது அணிந்துள்ள பாம்பு குண்டலிசத்தின் அறிகுறியாகத் திகழ்கிறது.

(11) வடக்கு முகமாகவேனும் கிழக்குமுகமாக வேனும் இருந்தே தியானம் முதலிய செயல்களைச் செய்யவேண்டும் என்பது விதி. ஆனால் தட்சிணா மூர்த்தியோ தென்முகம் நோக்கி வீற்றிருக்கின்றார். அஃது அவர் நம்மைப்போல விதிவிலக்குகளுக்கு உட் பட்டவரல்லர் அப்பாற்பட்டவர் என்பதனை அறி விக்கும்.

## சின்முத்திரையின் நுண்பொருள்

தட்சிணாமூர்த்தி தன் திருக்கையால் சின்முத் திரையைக் காட்டிக்கொண்டு இருக்கின்றார். சித் முத்திரை சின்முத்திரை எனப்படும் சித்-ஞானம் முத்திரை - அடையாளம் ஞானப்பொருளின் அடை யாளக் குறிப்பாகத் திகழ்வது, சின்முத்திரை என லாம். பெருவிரலும் சுட்டு விரலும் ஒன்றை ஒன்று வளைந்து சார்ந்து நிற்க ஏனைய மூன்று விரல்களும் விலகி தனித்து நின்றுகொண்டிருக்கும் நிலை சின்முத் திரையாகும். பெருவிரலின் உதவியின்றி நாம் எத னையும் பிடித்தல் எடுத்தல் முதலியன செய்தல் இய லாதாகலின் அது சின்முத்திரையிற் பதியினைக் குறிக்கின்றது. சுட்டுவிரல் தன்னியல்பில் நிற்கின் றது. அந்நிலை பசு எனப்படும். உயிரானது ஆணவம் மாயை, கன்மம் என்னும் மும்மலங்களோடு சேர்ந்து இருந்ததால் பதியாகிய கடவுளின் தொடர்பைப் பெறலாம். பிறப்பிறப்புத் துன்பத்துட்பட்டு உழல் தலை உணர்த்தும் உயிரானது பிறப்பு இறப்பு துன்பங் களில் நின்று விடுபடுதல் வேண்டுமாயின் மும்மலங் களின் தொடர்பைவிட்டுப் பதிப்பொருளின் திருவடி களை அடையப்பெறுதல்வேண்டும். அதனை விளங் கவே சின்முத்திரையின் சுட்டுவிரலானது வளைந்து பெருவிரலின் அடியைச் சென்று தொட்டுக்கொண்டு இருக்கிறது. இது சின்முத்திரையின் நுண்பொரு ளாகும்.

## மோனமும் ஞானமும்

சமயப் பொருள்களை ஆராய்ச்சி, அநுபூதி என் னும் இருவகையில் நாம் உணர்தல்வேண்டும். ''நாடிக் கண்டு மயற்வற அளித்த சிவஞான போதம்'' என்னும் தொடருக்குச் சிவஞானசுவாமி கள் நாடி எனவே ஆராய்ச்சியால் என்பதும் கண்டு எனவே அநுபூதியால் என்பது தாமே போதரும் என விளக்கவுரை வரைந்தருளியிருத்தல் இவ்வுண் மையை வலியுறுத்தும் ஆராய்ச்சியாவது நூல்களின் துணைகொண்டு அறிவால் அநுபூதியாவது குருவின் துணைகொண்டு அருளால் அறிவது. ஆராய்ச்சியை விட அநுபூதியே மிகவும் சிறந்தது. ''அருளால் எவையும் பார் என்றான். அத்தை அறியாதே என் அறிவாலே பார்த்தேன். இருளான பொருள் கண்ட நல்லால் கண்ட என்னையும் கண்டிலேன் என்னடி தோழீ'' எனவரும் தாயுமானசுவாமிகள் பாடலும் இங்கு கருதியுணரற்பாலது.

இத்தகைய அநுபூதி ஞானம் மௌனநிலையை அடிப்படையாகக் கொண்டு திகழும். ''மோனம் என்பது ஞானவரம்பு'' என்பது ஔவையார் அரு ளிய செவ்விய பொருளுரை சமய வாத பேதங்களைக் கைவிட்டு மௌனத்தைக் கடைப்பிடிப்பது சமய அநு பவம் பெறுவதற்கு தலைசிறந்த நெறியாகும்.

தேனை உண்ணாத வரையில்தான் வண்டுகள் ரீங் காரம் செய்து மலரை வட்டமிட்டுச் சுற்றி அலைந்து திரிந்துகொண்டிருக்கும். தேனை உண்ணத் தலைப் பட்டுவிட்டாலோ தம்மையும் உலகையும் மறந்து போன நிலையில் வண்டுகள் தேனைப்பருகி இன்புற்றுக் கொண்டிருக்கும். அதுபோல உண்மைச் சமய நுட் பங்களைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பில்லாதவர் கள்தான் சமய வாதங்களில் தலைப்பட்டுக் காலம் கழித்துக்கொண்டிருப்பர். அநுபூதிமான்களோ அவற்றினின்று விலகி மோன தவநிலையில் அழுந்தி இருப்பார்கள் என இராமகிருஷ்ண பரமஹம்சர் கூறுவர்.

எவனொருவன் சமயவாதங்களில் தலைப்பட்டு தருக் கம் பேசிக்கொண்டே இருக்கின்றானோ அவன் தன் உள்ளத்தினுள்ளேயிருந்து இறைவன் சிறிய மெல்லிய குரலில் கூறிக்கொண்டிருக்கும் நல்லறிவுரைகளைக் கேட்டு உய்யும் பேற்றைப் பெறமுடியாமல் இழந்து விடுகிறான்.

இவன்போடும் வெற்றுரவாரக் கூச்சலினால் இவ னது உள்ளத்துக்குள்ளே இருந்துகொண்டு இறைவன் விடுக்கும் சிறிய மெல்லிய குரலின் செய்தி இவனுக் குக் கேட்காமற் போகிறது.

''நானேதும் அறியாமே என்னுள் வந்து
நல்லனவும் தீயனவும் காட்டாய் நின்றாய்''

எனத் திருநாவுக்கரசர் பாடுவதுபோல் உள்ளத்தில் இருக்கும் இறைவனின் குரலை நாம் கேட்டு உய்தி பெறவேண்டுமானால் நாம் பேசுதலைக் கைவிட்டு அமைதியாகவும் மௌனமாகவும் இருக்கப்பழகி ஒன் றியிருந்து நினைத்துவருதல்வேண்டும். மௌன நிலை யால் விளையும் அருள் அனுபவ நலன்களுக்கு ஓர் அளவேயில்லை. இத்தகைய மௌனநிலையின் மாண் புகளையெல்லாம் நம்மானோர்க்கு தகவுற நன்கினிது தெருட்டுவதே தட்சிணாமூர்த்தம் எனலாம்.

## சொல்லாமற் சொல்லும் நல்லாசிரியர்

பல்வேறு சமயங்கள் பல்வேறு வகைகளிற் கட வுளை வழிபடுகின்றன. தாயென்றும் தந்தையென் றும், அரசனென்றும், தலைவனென்றும், பிணிதீர்க் கும் மருத்துவனென்றும், அறியாமை போக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியனென்றும் பலவகை நிலைகளில் கடவுள் வழிபாடு உலகில் திகழ்ந்துவருகிறது. அவற்றுள் கடவுளை ஆசிரிய நிலையில் வைத்து வழிபடும் முறையே தட்சிணாமூர்த்தம் எனப்படும். தன் வாய்மொழிகளாற் கற்பிக்கும் ஆசிரியனைவிட ஒப்புயர்வற்ற தன் தூய இனிய வாழ்வின் சிறப்பினால் மாணவர்களுக்கு உள்ளொளி பெருக்கச்செய்யும் திறம் உடையவனே மிகவும் சிறந்த நல்ல பேராசிரியனாவான். அதனாலேயே அருணகிரிநாதர் தம் திருச்செந்தூர்த் திருப்புகழில் இவரை ''ஊமைத்தேவர்'' எனக் குறிப்பிடுகிறார். தட்சிணாமூர்த்தி வேதாகமப் பொருள் களையெல்லாம் ''சொல்லாமற் சொல்லி'' விளக்குகின்றார், என்கிறார் பரஞ்சோதி முனிவர். அங்ஙனம் மாணவர்களைச் சிந்திக்கச்செய்து உய்த்துணர வைக்கின்ற ஒப்புயர்வற்ற சிறந்த தெய்வீக அருட்பேராசிரியர் தட்சிணாமூர்த்தி எனலாம்.

— முடிவுரை —

மனித குலத்தின் விழுமிய பெருஞ்செல்வமாக விளங்கும் சிந்தனைத் திறன், சிந்தித்து உணரவல்ல உரிமைச் சிறப்பு, சிந்தித்து உணர்வினால் விளையும் தெளிவு, நலம் ஆகிய அரிய பல குறிக்கோள்களைத் தட்சிணாமூர்த்தம் தக்காங்கு விளக்கிக் கொண்டு தனிப்பெருஞ் சிறப்புடன் திகழ்கின்றது.

## திருநாவுக்கரசர் பாடிய திருநெய்த்தான பதிகத்தில்

## திருக்கோணேஸ்வரம்

தக்கார் அடியார்க்கு நீயே என்றும்
தலையார் கயிலாயன் நீயே என்றும்
அக்காரம் பூண்டாயும் நீயே என்றும்
ஆக்கூரில் தான்தோன்றி நீயே என்றும்
புக்காய ஏழுலகும் நீயே என்றும்
புள்ளிருக்கு வேளூராய் நீயே என்றும்
தெக்கார மாகோணத் தானே என்றும்
நின்ற நெய்த் தானா என் நெஞ்சுளாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேக தத்துவம்

பிரதிஷ்டா குரு, சிவாகம ஞானபானு,
பிரதிஷ்டா பூஷணம்
**ஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள்**
நயினை.

பூலோகத்தில் தக்ஷிண கைலாசம் மூன்றினுள் அன்னதின் பிறகு அமைந்தது கோணமா அசலம்; இன்ன மூன்றையும் தெக்கண கைலாசம் என்பர். ஒன்றுகிய திருக்கோணமலை குன்றில் வீற்றிருக்கும் மாதுமை உடன் உறை கோணேசப் பெருமானின் குடமுழுக்கு கும்பாபிஷேக விளக்கத்தில் காண்பாம்.

பாரார், விசும்புளார், புறத்தார் ஆராலும் காண்டற்கரியவனுய், அனைத்தையும் கடந்து அப்பாலுக்கு அப்பாலாய் நிற்கின்ற இறைவன் அடியவர்க்கெளியனுய் அவர்தம் கண்ணும் மனமும் களிகூர அணியனுய்க் காட்சியளித்து ஆரா இன்பத்து அருளை வழங்குவதற்கு எழுந்தருளியுள்ள இடங்கள் ஆலயங்களாகும். இத்தகு ஆலயங்களின் பெருமை அளவிடற்கரியது.

''ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே'' என்று சிவஞானபோதம் செப்புகின்றது. உயிர்சார்ந்தன் வண்ணமாகும் தன்மையைப் பெற்றிருப்பதால் உலகியலில் உழலும் உயிர் அதில் சிக்குண்டு, வினைகளைப் புரிந்து மயக்குண்டு குறிக்கோளை மறந்து மீண்டும் மீண்டும் பிறவித்தளையில் கட்டுண்டு கிடக்காமல் இருக்கவே ஆலயங்களை அமைத்து ஆண்டவனை பிரதிஷ்டை செய்து நித்திய நைமித்திய வழிபாடுகளை குறைவற நடாத்தி அவற்றில் நம்மை ஈடுபடுத்துவதன்மூலம் அவனைச் சார்ந்து அவன்வண்ணம் ஆகும் நிலையை ஏற்படுத்தித் தந்தவர்கள் நம்முன்னேர்கள்.

இத்தகைய சதசத்தான உயிர், தான் எடுக்கும் பல்வகைப் பிறப்புக்களில் சிறந்ததாய மானுடப் பிறவியைப் பெற்று, அதன்பின்னும் ஞானமும் கல்வியும் நயந்து, கற்பன கற்றுக் கேட்பன கேட்டுத் தானமும் தவமும் தான்மிகக் கொண்டு, சீலமும் நோன்பும் சிறக்க உடையதாய் ஐம்பொறிகளும் அடக்கி, ஆசையை அறுத்து, உண்டி சுருங்கி, உயிர்ப்பும் அடக்கி இவ்வாறெல்லாம் முயன்று தவம்மிக்க முனிவர்களெல்லாம் பெற்ற, பெறற்கரிய பேற்றினை ஆலயம் தொழுவதன்மூலம் எழிதில் அடையலாம்.

இதனையே,

எத்தகைய போகங்கள் அவற்றினுக்கும்
காரணியாய்
வைத்தபடி இடம் போதா வகைநெருங்கும்
மன்னுயிர்கள்
முத்திபெறத் திருவுள்ளம் முகிழ்த்தபெருங்
கருணையினல்
அத்தனுமித் தலம்நண்ணி அலகில்இடம்
கைக்கொண்டான்.

எனக் கோயிற்புராணம் விளக்கி நிற்கின்றது.

இறைவன் அருவம், அருஉருவம், உருவம் என மூவகைத் திருமேனிகளை உடையவர். இவற்றில் அருவத் திருமேனி நமது சூக்கும தரிசனத்திற்கும் உணர்வுக்குமே புலப்படும். மற்ற இருவகைத் திருமேனிகளையே ஆலயத்தில் பிரதிஷ்டைசெய்து வழிபடலாம். மகேஸ்வரரிடத்திலிருந்து தோன்றிய சந்திரசேகரர் முதலான இருபத்தைந்து மூர்த்தங்களும் வியக்தலிங்கமாகும். இது சிவன் என்னும் பெயருடையது. ஆவுடையாளும் லிங்கமுமாக விளங்குவது வியக்தா வியக்தலிங்கமாகும். இது சாதாக்கியம் எனப்படும். இது சிவசாதாக்கியம், அமூர்த்த சாதாக்கியம், மூர்த்த சாதாக்கியம், கர்த்திரு சாதாக்கியம், கர்ம சாதாக்கியம் என ஐந்தாகும். இவற்றிற்கு உற்பத்தியும் சிவம் முதலிய பெயர்களும் ஞானம் கிரியை என்னும் சக்திகளால் ஆயின என்றும் இந்த ஐந்து சாதாக்கியங்களும் லிங்கமும் ஆவுடையாளும் கூடிய கூட்டமென்றும் வாதுளாகமத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. இதிலும் அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கத் திருமேனியே சிறந்தது என ஆகமங்களும் உபநிடதங்களும், புராணங்களும் போற்றுகின்றன. சிவலிங்கம் என்பது சிவமாகிய லிங்கம் என விரிந்து என்றும் இருக்கும். சிவசக்திகளையும் அச்சிவசக்திகளைப் புலப்படுத்தும் குறியையும் கொண்டிருக்கிறது. சிவம் ஏவஸ்வயம் லிங்கம் என்பது ஸ்காந்தம். லிங்கம் என்னும் சொல் தோற்ற ஒழுக்கங்களுக்குக் காரணமாயிருப்பது என்னும் பொருளையுடையது. ஒடுக்கவேளையில் இயங்கியலும் நிலையியலுமாகிய எல்லாம் ஒடுங்கிப் பின்பு தோற்ற வேளையில் அவ்வாறே தோன்றுகின்றமையால் லிங்கம் எனப்படும்.

''லயம் கச்சந்தி பூதாநி ஸம்காரே நிகிலானிச
ஸ்ருஷ்டி காலே யதா ஸ்ருஷ்டிஷ் தஸ்மாத் லிங்கம்
உதாக்ருதம்''

என்னும் சுப்பிரபேத ஆகம வாக்கியத்தில் இது அறியப்படுகிறது.

இத்துணைப் பெருமைவாய்ந்த சிவலிங்கத் திருமேனியை ஆலயத்தில் அருள்பெருக நிலைநிறுத்தும் செயற்பாடே கும்பாபிஷேகமாகும். இஃது அவ்வாறு ஆகமங்களில் கூறப்படுகின்றது என்பதனை சிறிது ஆராய்வோம். காரணம் முதலிய இருபத்தெட்டு ஆகமங்களும். ஆலய அமைப்பு முறைகளையும் கும்பாபிஷேக நித்ய, நைமித்திய விழா நெறிகளையும் தெள்ளத் தெளிவாக எடுத்தியம்புகின்றன. கும்பாபிஷேகம் ஆவர்த்தம், அனுவர்த்தம், புனராவர்த்தம் அந்தரீகம் என நால்வகையாகக் கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில் இல்லாத இடத்தில் புதிதாக ஆலயம் அமைத்து புதிதாக விக்கிரஹங்களை பிரதிட்டைசெய்தால் அனுவர்த்தம் எனவும் முன்பு ஆலயம் இருந்து பின் இயற்கையின் சீறல்களினாலோ அன்றி படித்தம் முதலிய காலங்களிலோ அல்லது வேறு எவ்வகையாலோ அழிவுபட்டுப் பின் அவ்வாலயம் வரலாறுகள் மூலம் அல்லது கர்ணபரம்பரைக் கதைகள் மூலம் சிறு ஆலயமாக வழிபாடு ஆற்றப்பட்டு வந்தால் அதற்கு புதிதான ஆலயத்தை பழைய இடத்திலேயே நிர்மாணித்து பிரதிஷ்டை செய்வது ஆவர்த்தம் எனவும் ஆலயத்தில் உள்ள வர்ணங்கள் விக்கிரஹங்களில் பிழை ஏற்பட்டாலும் மருந்து என்று கூறப்படும் அஷ்ட பந்தனம் பழுதடைந்தாலும் செய்யப்படும் கும்பாபிஷேகம் புனராவர்த்தம் எனவும், அபமிருத்யு, கள்ளரால் நித்திய பூசைகள் தடைப்பட்டால் செய்யப்படுவது அந்தரீதம் எனவும் கூறப்படுகின்றது. இவற்றுள் இங்கு ஹம்ஸ கமலாம்பிகா ஸமேத ஸ்ரீ கோணேஸ்வரப் பெருமானுக்கு நடைபெறவுள்ள கும்பாபிஷேகம் புனராவர்த்தப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகமாகும். கும்பாபிஷேகம் அல்லது பெருஞ் சாந்தி எனும் கிரியையே ஆலயக் கிரிகைகளில் முக்கியமானதும் அதிசிறந்ததுமாகும் கும்பாபிஷேகம் செய்வதற்கோ அல்லது அதனைச் செய்விப்பதற்கோ அன்றி தரிசிப்பதற்கோ மானுடர்களாகிய நாம் பூர்வ ஜென்மத்திலும் தொடர்ந்து இப்பிறவியிலும் புண்ணியம் செய்தவராக இருக்க வேண்டும். இதனுள் நிரம்பிய கிரியைகள் அடங்கியுள்ளன. இவற்றுள் தன பூஜை முதல் மண்ணெடுத்தல் வரை (மிருத்சங்கிரஹணம்) உள்ள கிரியைகள் பூர்வாங்கம் எனவும் முளையிடுதல் முதல் மஹா கும்பாபிஷேகம் வரையுள்ள கிரியைகள் உத்தராங்கம் அல்லது யாகாங்கம் எனவும் கூறப்படுகின்றது. பூர்வாங்க கிரியைகள் யாவும் கும்பாபிஷேக நிறைவாக நடைபெறுவதற்காக செய்யப்படும் பிரார்த்தனைகளும், வேண்டுகோள்களுமாக பெரும்பாலும் அமைந்துள்ளன. முதலில் தனபூஜையுடன் கும்பாபிஷேகக் கிரியை ஆரம்பமாகின்றது. தனபூஜையாவது ஒருவன் தான் உழைத்த பணத்தால் தருமம் செய்த பின் அது தனது என்று நினைவு கொள்ளாது அஃது இறைவனுடைய பொருளாகக் கருதவேண்டும் என்ற அடிப்படையில் செய்யப்படுகின்றது. அதே போன்று கும்பாபிஷேகத்திற்காகத் தேடப்பட்ட திரவியங்கள் யாவும் இறைவன்முன் வைக்கப்பட்டு அவர் முன்னிலையில் இதில் நாம் செய்யவேண்டிய கிரியைகளுக்கு இன்னஇன்ன விகிதாசாரப்படி செய்யவேண்டும் என்று ஆகமங்கள் கூறியபடி பிரித்து எடுத்தலாகும். தொடர்ந்து ''அனுக்ஞை'' எனும் நிகழ்ச்சி இடம்பெறும். அனுக்ஞை என்றால் உத்தரவுபெறுதல் எனப் பொருள்படும். தனது குரு சர்வசாதகர் சர்வபோதகர் முதலானவர்களையும் சிவனையும் வழிபட்டு இந்தத் திரவியத்தைக் கொண்டு இக்கும்பாபிஷேகத்தை சாத்திரப்படி செய்ய உத்தரவு வேண்டும் என உத்தரவு பெறுதலாம். சிவனிடம் உத்தரவு பெறுதலில் இரண்டு வகையுண்டு. ஒன்று சாங்கம், மற்றையது உபாங்கம். சிவனிடமும் சக்தியிடமும் கேட்டல் சாங்கமாகும். உபாங்கத்தில் கணேசர், முருகன், நந்தி, சண்டிகேஸ்வரர் முதலிய தேவர்களிடம் அனுமதி பெறுதலாகும். அனுக்ஞையைத் தொடர்ந்து கணபதி ஹோமம், விநாயகரை வழிபட்டு செய்யும் பிரார்த்தனையாகும். வினை களைந்து விக்னம் தீர்க்கும் வேழமுகத்தோன் வழிபாட்டின் மூலம் வரப்போகும் கும்பாபிஷேக விழாவில் எவ்வித விக்னங்களும் ஏற்படாதவாறு காப்பாற்றும் வண்ணம் வேண்டுதல் செய்தல். தொடர்ந்து பிரவேச பலி, கிராமசாந்தி ஆகியவை, கிராமத்திலும், ஆலய சூழலிலும் உள்ள துஷ்ட தேவதைகளுக்கு அவற்றுக்குப் பிடித்தமான பலிகளை உணவாகக் கொடுத்து திருப்தியடையச்செய்து சிவன் ஆக்ஞைப்படி அவர்களைத் தூர இடங்களுக்கு (வனம், கடல், ஸ்மசானம்) செல்லும்படி பணித்தலாகும்.

செய்வது தேவகாரியமாயினும் செய்கின்ற செய்விக்கின்ற நாம் மானுடர்களாதலால் கட்டாயமாக கிரகங்களின் ஆளுகைக்கு உட்பட்டவர்களேயாவோம். இறைவன் எம்மிடம் வந்து எம்மை ரக்ஷிப்பதற்காகவே யாம் இறைவனுக்கு வழிபாடுகள் செய்கின்றோம். இதனையே ''வாழ்த்துவதும் வானவர்கள் தான் வாழ்வான்வேண்டி'' எனும் தேவார அடிகளும் புலப்படுத்துகின்றது. எனவேதான் சூரியாதி நவக்கிரஹ தேவர்களையும் நாம் வழிபாடுசெய்து கும்பாபிஷேகத்தில் அவர்களுடைய அனுக்கிரகத்தையும் வேண்டுகிறோம். மேலும் நவக்கிரகங்களின் அதிபதிகளாக சிவன், விஷ்ணு, சுப்ரமண்யர் போன்ற தேவர்கள் அமைவதால் அவர்களது ஆசியும் அருளும் நமக்கு நவக்கிரகசாந்தி செய்வதன் மூலம் கிட்டுகின்றது. அதனாலேயே கும்பாபிஷேக விழாக்களில் இதுவும் ஓர் இன்றியமையாத கிரியையாக இடம்பெறுகின்றது.

அடுத்தபடியாக ''வாஸ்து சாந்தி'' எனும் கிரியை இடம்பெறும். பூமிக்கு அதிபதி வாஸ்துப் பிரம்மா. அவரை மண்டலத்தில் பூசித்து நாம் கட்டிய கோவில் யாகங்கள் முதலியவற்றில் உள்ள தோஷங்களை நீக்கும்படி செய்யப்படுவதாகும்.

எவ்வித சுபகாரியங்களிலும் முளையிடுதல் என்பது ஓர் அங்கமாகும். முளையிடுவதற்கு மண்வேண்டும். இம்மண்ணை ஆசாரியர் பூமாதேவியைப் பூசித்து ஓர் சுத்தமான இடத்தில் எடுக்கவேண்டும். இதுவே ''மிருத்சங்கிரஹணம்'' எனச் சொல்லப்படும் கிரியையாகும். இத்துடன் பூர்வாங்கக் கிரியைகள் நிறைவுபெற்று யாகாங்கக்கிரியைகள் ஆரம்பமாகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாபிஷேகத்தில் ''யாகம்'' என்பது பிர தான அம்சமாகும். இதனை வேள்விச்சாலை, மந்திர சாலை எனவும் கூறலாம். ஞானயாகம் செய்யுமிடம் யாகசாலையாகும். யாகசாலை நிர்மாணம் பற்றியே பலவிதமாக பல ஆகமங்கள் எடுத்தியம்புகின்றன. இந்த யாகசாலைகள் ரவிசூத்ரம், மநுசூத்ரம், கண சூத்ரம், கலாசூத்ரம் எனப் பலபிரிவுகள் உள. அவற் றுள் சூத்ரங்கள் என்பன அளவு கோடுகளாகும். அந்தளவுகளின் மத்தியில் வேதிகை குண்டங்களாகும் குண்டங்கள் 49, 33, 25, 9 என்னும் கணக்குகள் ஆகும். இவற்றுள் யாவும் எட்டு என்னும் கணக்கு களின் அமையும். அதையே ''வட்டக் குண்டத்து எரி ஓம்பி'' என்னும் தேவாரம் குறிக்கின்றது. வட்டக்குண்டமே பிரதானமாகும். கிழக்கு முதலான எண் திசைகளிலும் முறையே சதுரம், அரசிலை, அர்த்த சந்திரன், முக்கோணம், வட்டம், அறு கோணம், பத்மம், எண்கோணமும் ஆகும். இவை அட்டமூர்த்தி வடிவமாக இருக்கும் இறைவனை அப்படியே காட்டுகின்றன. உலகின் உண்மைப் பொருட்கள் நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம், சூரியன், சந்திரன் ஆன்மா என எட்டாகும். இறை வன் உண்மையானவர். இறைவனின் வியஷ்டி வடிவமே மேற்கூறிய எட்டுமாம். இதனை எடுத்துக் கூறுத நாயன்மார்கள் இல்லையெனக் கூறலாம்.

''பற்றுமாகி வானுளோர்க்குப்
பல்கதிரோன் மதிபார்
எற்று நீர்தீக் காலுமேலை
விண்ணியமான னோடு
மற்று மாதோர் பல்லுயிராய்
மாலயனும் மறைகள்
முற்றும் ஆகி வேறும் ஆனன்
மேயது முதுகுன்றே''

என ஞானசம்பந்த சுவாமிகளும்,

''இரு நிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமானனாய் அறியுங் காற்றுமாகி
அரு நிலைய திங்களாய் ஞாயிறாகி
ஆகாசமாய் அட்டமூர்த்தியாகி''

என வாகீசப் பெருந்தகையும்,

''தரிக்குந் தரைநீர், தழல் காற்றுந்தரஞ்
சந்திரன் சவிதா இயமானன் ஆனீர்''

என சுந்தரரும்,

''நிலம், நீர் நெருப்புயிர், நீள் விசும்பு
நிலாப்பகலோன் புலன் ஆயமைந்தனொடு
புணர்ந்து நின்றான்.''

என மணிவாசகப் பெருமான் தனது திருவாசகத் திலும் பாடியுள்ளார்கள்.

இத்துணைப் பெருமை வாய்ந்த அஷ்ட மூர்த்தி களோடு சமஷ்டியாக ஒரு குண்டம் சேர்ந்ததே நவகுண்டபக்ஷ யாகசாலையாகும். இந்த ஒன்பது குண்டங்களிலும் அதன் வடிவங்களும் பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் சூரியன், சந்திரன், ஆத்மா என்ற அட்ட மூர்த்திகளின் தன்மையைக் காட்டுகின்றன.

இவ்வாறாகத் தத்துவ மூர்த்தி மூர்த்தீஸ்வரர் களைப் பூஜித்து ஆகுதிசெய்து எரி ஓம்பும் யாகசாலை யில் பிரதானமாக விளங்கும் கும்பங்களை அறிமுகப் படுத்துவாம். கும்பம் சர்வதேவதாஸ்வரூபம்.

கடம் மாமிசத்தையும், ஜலம் ரத்தத்தையும், ரத்தினம் அஸ்தியையும், சூத்திரம் (நூல்) நாடிகளை யும், வஸ்திரம் தோலையும், மந்திரம் பிராணத்தை யும், பூர்ஜம் கேசங்களையும், மாவிலை ஜடாமுடியை யும், மாதுளம் தந்தங்களையும், கனக பங்கஜம் ஜீவனையும் குறிக்கின்றது. அரிசிகள் பூமியாகவும் விஷ்ணு தேவதையாகவும் வர்த்தனிகுடங்கள் பிரம்ம தேவர்களாகவும் நெய் காலாக்னி தேவதை யாகவும் காரணகமம் இயம்புகின்றது.

இவ்வாற்றல் விளங்கும் யாகசாலையில் பூஜை கள் ஆகுதிகள் செய்து தத்துவ தத்தேஸ்வரன் மூர்த்தி, மூர்த்தீஸ்வரர்களைக் கும்பத்திலேயிருந்து மூலமூர்த்தியிடம் ஸ்பர்சாகுதி என்னும் கிரியைகளி னால் சேர்த்து உரிய நல்வேளை நன்னேரத்தில் கும்ப மூர்த்திகளை யாகத்திலேயிருந்து கருவறையாகிய மூலஸ்தானத்திற்குக் கொண்டுசென்று சிவாசாரிய ரின் மந்திரபாவனை ஆவஹணம் பிம்பத்திலே செய்து கும்பநீரைச் சொரிந்து சூரியன், சந்திரன், மலை, பூமி இருக்கும்வரை இவ்விம்பத்தை நிலைக்களனாகக் கொண்டு உலகத்து ஆன்மாக்களுக்கு அருள்செய்ய வேண்டுமென்று பிரார்த்திப்பதாகும். தேவர்கள் பூசைக்காகச் சிலமணிநேரம் திரு கடை காப்புச் செய்து தச தர்சனமாகி மங்கலப் பொருட்களை ஆண் டவனுக்குத் தரிசனை செய்விப்பதாகும். மஹாபிஷே கம் நிலைநின்று அருள்புரிய மண்டலாபிஷேகமுமாகும். இன்னோரன்ன சிறப்புடைய கும்பாபிஷேகம் ஸ்வ ரூபத் திருமேனி தாங்கிய இறைவனை தடத்தத் திரு மேனியாக வேண்டி மந்திரம், கிரியை, பாவனையால் அருள்பெறச்செய்வதாகும்.

முவ்வினைகளை நீக்குவதால் பெருஞ்சாந்தியாகும்.

எல்லாவற்றுக்கும் மேலானதாய் ஒரு குணங்களு மோரடையாளமு மில்லாததாய், மலமற்றதாய், ஏகமாய், அழியாததாய், எண்ணிறந்த ஆன்மாக் களுக்குணர்வாய், அசலமாய், இன்ப சொரூபமாய், அறியாதார் சென்று கூடுதற்கரிதாய், வழிபட்ட வர்களுக்குச் சென்று பொருந்துகைக்கிடமுமாகிய முத்திப் பொருளாய், சர்வ வியாபியாய், அநுக்கிரககிருத்தியத்தைச் செய்கின்ற இதன் பேற்றை அம்சுமான் என்னும் ஆகமமம் கும்பா பிஷேகத்தைக் குயிற்றிய மனிதர் பாபம் அனைத்தை யும் பற்றவிடுபவர். வீடு விரும்பினோர் வீடு பெறு வர். நாடு விரும்பினோர் நாட்டையும் புதல்வரை விரும்பினோர் புதல்வரையும் சிதைவின்மையை விரும்பினோர் சிதைவின்மையையும் பொருளை விரும் பினோர் பொருளையும் அருளை விரும்பினோர் அருளையும் ஞானம் மோனம் விரும்பினோர் அஃதையும் இம்மை யில் சகல பேறும்பெற்று செல்வமுடையராய் வாழ்ந்து அந்தத்தில் சிவசாயுச்சியம் பெறுவார்கள். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளமும் கோட்டமும் கொண்ட கோணமாமலை

எம். சற்குணம் எம். ஏ.

இந்தியத் துணைக்கண்டத்துக்கு மிகவும் அண்மையிலும், இந்து சமுத்திரத்தின் நடுநாயகமாகவும் ஈழம் விளங்கி வந்ததாலே திருக்கோணமலை சிறந்த அரணாகப் பன்னெடுங்காலமாக விளங்கிவரக் காரணமாயிற்று. திருக்கோணமலை அல்லது திரிகோணமலை என்னும் பெயர் மும்மலைகள் சூழ முக்கோண வடிவினதாய் இருந்ததால் ஏற்பட்டதென்பர். கோணேசுவரர் எழுந்தருளப்பெற்ற மலையாதலின் இது திருக்கோணேஸ்வரம் (1), திருக்கோணமலை, திருக்கோணமாமலை, திரிகோணாசலம், திருமலை என்றெல்லாம் பெயர் கொள்ளலாயிற்று. மச்சகேசுவரம் என்னும் பெயரும் (2) இதற்கு வழங்கி வந்திருக்கிறது.

'காசில் பொற்சிலம் பின்சிக ரத்தைக்
கால்ப றித்தே யெறிந்திட வந்த
மாசில் தென்கோண மாமலை'

(8) என்று கதிரமலைப் பள்ளு கூறிச் செல்லும் (3) இங்கு குறிப்பிடப்படும் சிகரத்தைப் பறித்தெறிந்த செய்தி தக்ஷிண கைலாச மான்மியத்தில் உண்டு.

முன்னொரு காலத்தில் வாயுபகவானுக்கும் ஆதிசேஷனுக்கும் உண்டாகிய விவாதத்தினாலே உரோசமுண்டானமையினால் இருவருக்கும் பகை விளைந்தது. ஆதிசேஷன் தனது ஆயிரம் படங்களினாலும் மகாமேரு கிரியை விரைவில் மறைத்தனன். அப்பொழுது வாயுபகவானே தனது பலத்தினாலே தாக்கி வீசியடித்தும் பின் மகாமேரு சிகரங்கள் பலவற்றுள் மூன்று சிகரங்களைத் தாக்கி எறிந்தான். (4)

இச்செய்தியினைக் கீழ்வரும் செவ்வந்திப் புராணச் செய்யுள் உறுதிசெய்கின்றது.

'முன்னர் வீழ்ந்திடு சிகரி காளத்தியாய் மொழிவர்
பின்னர் வீழ்ந்தது திரிசிரா மலையெனும் பிறங்கல்
அன்னதற் பின்னர் வீழ்ந்தது கோணமா வசலம்
இன்ன மூன்றையுந் தக்ஷிண கைலையென் றிசைப்பர்'

இச்செய்யுளின்படி சீகாளத்தியும், திரிசிரா மலையும் திருக்கோணமலையும் தக்ஷிண கைலாசம் எனக் கூறப்பட்டபோதும், முத்துராச கவிராயர் இயற்றிய கைலாய மாலையின் குறிப்பினால் திருக்கோணமலை 'தென்கைலை' எனப் பண்டைக் காலத்தே அழைக்கப்பெற்று வந்திருக்கிறது என்பதை அவதானிக்க முடிகிறது;

''சித்திரகை லாசமொடு தென்கயிலை யிவ்விரண்டு
நித்தமுற மோர்ந்துறையு நேயபத்தி—அத்துடனே
முக்கைலை யாகநல்லை மூதூரி னென்றமைந்த
தக்கைலை மீதி லமர்ந்துறைய '' (292-295)

1. இதனைத் 'திருக்கோணேச்சரம்' என்று அழைப்பது மரபாகாது. சைவநெறி மூன்றும் வகுப்பு, (கொழும்பு-1979) பக் 21.

2. சண்முகரத்தினையர் ஆ. (பதிப்பாசிரியர்) திருக்கோணாசல புராணம், (யாழ்ப்பாணம் 1909) பக்கம் 42, செய்யுள் 128, இதற்கு ஆதாரமாகவே தக்ஷிணகைலாச புராணம், மச்சாவதாரச் சுருக்கமும், நிலாவெளிப் பிள்ளையார் கோவிற் கிணற்றுப் படிக்கட்டிலுள்ள 'திருக்கோணமலை மச்சகேசுவரமுடைய மஹாதேவர்க்கு' என்ற குறிப்பும், மானாங்கேணி வில்பத்திரர் கோயிற் சாசனக் குறிப்பும் காணப்படுகின்றன.

3. ஜம்புலிங்கம்பிள்ளை சே. வெ. (பதிப்பாசிரியர்) கதிரைமலைப்பள்ளு, (சென்னை 1935) பக்கம் 5.

4. நாகலிங்கம்பிள்ளை சி. தக்ஷிணகைலாசபுராணம் - வசனம் (யாழ்ப்பாணம் 1928) பக்கம் 7

எனக்கூறப்பட்டிருப்பதால் (5) சித்திரகைலாயமெனக் குறிக்கப்பெற்ற வடகைலாசத்துடன் தென் கைலாயமாகிய திருக்கோணமலையையும், யாழ்ப்பாணத்தில் நல்லூரில் ஜயவீரசிங்கையாரியன் எடுப்பித்த கைலாயநாதர் கோயிலை மூன்றாவது கைலாயமாகவும் குறிப்பிட்டிருப்பதை நோக்கலாம். கோணேசர் கல்வெட்டு (6) என வழங்கும் கோணேச சாசனத்தில் 'திரிகயிலை' என்ற தொடர் பல இடங்களிற் பயிலப்பட்டு வந்துள்ளன.

இத்தலத்தின் புராதன வரலாறு இராவணனோடு சம்பந்தப்படுத்திக் கூறப்பட்டுள்ளது. சிவலிங்கம் ஒன்றைப் பெறும்பொருட்டு வெள்ளியங் கைலாசத்திற் தவஞ்செய்யச் சிவபெருமான், இராவணனது கையில் சிவலிங்கத்தைக் கொடுத்துச் சில கூறினார். சிவலிங்கத்தைப்பூமியில் வைத்தால் அதனை மீண்டும் எடுக்க இயலாதென்றும், அதனைப் பிரதிட்டை செய்துவைத்தால் பூமியில் அவனை வெல்லக்கூடியவர் ஒருவருமில்லை என்றும் கூறினர். அதன்படி நடப்பதாக ஒத்துக்கொண்டு இராவணன் திரும்பி வரும்போது தேவர்கள் ஒருபாயஞ் செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன் ஈழத்திலே சிவலிங்கத்தைப் பிரதிட்டை செய்தால், அவனை யாராலும் வெல்லமுடியாதென நினைந்து விநாயகப் பெருமானைக் கொண்டு அதனைத் தடுத்து நிறுத்தி இராவணனது லிங்கத்தை நிலத்தில் வைக்கப்பண்ணிவிட்டனர். இது முதலான கதைகள் சிவராத்திரி புராணம் (7) கன்மாடபாதச் சுருக்கத்திலும் (52-70) பிரமோத்தர காண்டம் சிவதான மகிமையிலும் (49-60) பார்க்கவ புராணத்திலும் கூறப்பெற்றிருக்கின்றன. இக்கதையில் விநாயகப் பெருமான் கூறப்பெற்றுலும் தக்ஷிண கைலாச புராணத்தில் (தெரிசனுமுத்திச் சுருக்கம் 105) விஷ்ணு கூறப்பட்டிருக்கிறுர். இராவணனேடு பின்னப்பட்ட இன்னும் பல கதைகள் திருக்கோணுசல புராணத்திலே காணப்படுகின்றன. அகத்தியர் கதைகளும், இராமரும் விபீஷணரும் பற்றிய கதைகளும் இத்தலத்தோடு சேர்க்கப்பட்டுக் கூறப்பட்டுவருகின்றன. இவையெல்லாம் மரபுவழிக் கதைகளாகக் கொள்ளப்பட்டபோதும், இவை இத்தலத்தின் தொன்மையை வெளிக்காட்டவே எழுந்தது எனக் கூறலாம்.

மகாவம்ச நூலின் குறிப்பின்படி மகாசேனன் மகாயான பௌத்தத்துக்கு ஆதரவாகவும் ஏனைய மதங்களுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளில் அவனுல் இடிக்கப்பட்ட கோகர்ண பிராமண விகாரையும் ஒன்றுகக் காணப்படுகிறது. (8) இங்கு குறிப்பிடப்படும் கோகர்ணம் திரிகோணமலையைக் குறிக்கும் என்பர். (9) இதற்கு மலய தீவின் கிழக்குக் கரையில் இருந்ததாக வாயுபுராணம் குறிப்பிடும். கோகர்ணம் என்னும் சிவன் கோயில் ஈழத்தின் கிழக்குக்கரையில் உள்ள கோகர்ணக் கோயிலைக் குறிக்க வழங்குவதே பொருத்தமாகலாம். (10) ஆனுல், தென்னிந்தியாவின் மேற்குப் பகுதியில் இதே பெயருடைய தலமொன்று பற்றிய குறிப்பு ஞானசம்பந்தர் (3:337) நாவுக்கரசர் (6:263) தேவாரப் பாடல்களில் இடம்பெற்றிருக்கிறது. இதுபற்றிக் கலைக்களஞ்சியமும் பின்வருமாறு கூறிச்சென்றுள்ளது

5. ஐம்புலிங்கம்பிள்ளை சே. வெ. (பதிப்பாசிரியர்) கைலாயமாலை, (சென்னை 1939) பக்கம் 21.

6. சைமன் காசிச் செட்டியால் இதன் மொழி பெயர்ப்பு சுருக்கமாக வெளிவந்துள்ளது.

''Translation of Kavi Rajavarothayar's Poem giving an account of the origin and History of the Hindu Temple at Trincomalee
''The Ceylon Government Gazette.''

26-11-1831 சின்னத்தம்பிப் பிள்ளையால், 1888ல் பு. பொ. வைத்திலிங்க தேசிகரால் 1916ல் தக்ஷிண கைலாச புராணத்தோடும் இது வெளிவந்துள்ளது.

7. குமாரசூரியப்பிள்ளை ம. (உரையாசிரியர்) சிவராத்திரி புராணம், (தும்பைநகர் 1013) பக்கம் 238-245

8. Mahavamsa - XXXVII, 40 - 41

9. Malalasegara G. P. Dictionary of Pale Proper Names (London 1937) P. 782

10. குணசிங்கம் செ. கோணேஸ்வரம் (பேராதனை 1973) பக்கம் 63. தனிநூலாக 38 பக்கங்களில் வெளிவந்தது.

'துருவ நாட்டிற் பம்பாய் இராச்சியத்தில் வடகன்னடம் மாவட்டத்தில் உள்ளது. சிவபிரான் பெயர் மகாபலிநாதர். அம்மையின் பெயர் கோகர்ணநாயகி... இராவணன் கையிலிருந்து இலங்கைக்குக் கொண்டுசென்ற லிங்கத்தை இத்தலத்திலே வைத்து திரும்ப எடுத்தபோது எடுக்கமுடியாமற் பசுவினது காதுபோலக் குழைந்து நீண்டதால் அதற்குக் கோகர்ணம் எனப் பெயர்வந்தது. (11)

மேற்குறித்த தகவல்களுக்கு சிவராத்திரி புராணச் செய்யுளும் (கன்மாட பாடச் சுருக்கம் 65) தக்ஷிண கைலாச புராணச் செய்யுளும், (தெரிசனுமுத்திச் சுருக்கம் 108) ஆதாரமாகக் காணப்படுகின்கின்றன.

மயில்வாகனப் புலவர் எழுதிய 'யாழ்ப்பாண வைபவ மாலை'யில் இத்தலம் விஜயனேடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. அவன் தனது ஆட்சிக்குப் பாதுகாப்பாகக் கிழக்குத் திசையில் தம்பலகமத்துக் கோணேசர் கோயிலைப் புதுப்பித்துக் கட்டுவித்து நித்யநைமித்தியங்கள் நியமந்தவருது நடக்கவேண்டிஆக்கிரகாரம் முதலிய வசதிகளும் செய்துகொடுத்து இருத்திவைத்தான். (12)

இக்கருத்தினை உறுதிசெய்வதாகவே பீரிஸ் அவர்களின் குறிப்பும் அமைந்திருக்கிறது.

''விஜயன் இலங்கைக்கு வருவதற்கு அதிக காலத்துக்கு முன்பே இலங்கையில் ஐந்து சிவாலயங்கள் இருந்தன. அவையாவன: மகாதித்தவில் திருக்கேதீஸ்வரமும், சிலாபத்தில் முனீஸ்வரமும், மாந்தோட்டைக்கருகில் தண்டேஸ்வரமும், பெரியகொட்டியாரக் குடாவுக்கு எதிரே திருக்கோணேஸ்வரமும், காங்கேசன்துறைக்கு அண்மையில் நகுலேஸ்வரமும் இருந்தன.''(13)

விஜயன் காலத்தின் பின்பு மநுநீதிகண்ட சோழன் மகன் குளக்கோட்டு மகாராஜன் யாத்திரை பண்ணித் திருக்கோணேசர் மலையிற் சேர்ந்தபோது கோணேசர் சிவாலயத்தைத் தரிசித்துத் தம்பலகமத்திற் பழுதுபட்டுக்கிடந்த கோணேசர் சிவாலயத்தைப் பழுதுபார்ப்பித்து அக்கிரகாரம் முதலிய வேலைகள் அனைத்தையும் திருத்தினுன் என்றும், யாழ்ப்பாண வைபவ மாலை கூறியுள்ளது. (பக். 9) இந்த மநுநீதி கண்ட சோழனின் பட்டப்பெயரைத் தக்ஷிணகைலாச புராணம் 'வரராமதேவர்' என்று கூறியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளது (14) இவர் மச்சேந்திர புராணத்திலே கூறப்பட்டிருந்த தக்ஷிணகைலாச மான்மியங்களைக் கேட்டு ஈழம் வந்து திருக்கோணமலைச் சிகரத்தில் கோணேசருக்குக் கோயில் எடுப்பித்துத் தமனியத்தால் வேய்ந்து பூசைவிழா முதலியன நடாத்தித் தனது அந்திய காலத்திற் திருப்பணிக்குக் கொண்டுவந்த பொன்னைக் கிணறொன்றிலே அடைத்துவைத்துத் தனது மரணத்தை மகனுக்கு அறிவிக்கும்படி தூது அனுப்பித் தேகவியோகம் அடைந்தார். (தக்ஷிண கைலாச புராணம் - திருநகரச் சுருக்கம்) (31-51)

11. கலைக்களஞ்சியம். 4ந் தொகுதி (சென்னை) பக்கம் 274

12. சபாநாதன் குல. (பதிப்பாசிரியர்) யாழ்ப்பாண வைபவ மாலை 2ம் பதிப்பு (சென்னை 1953) பக்கம் 6 – இந்நூலை சி. பிறிற்றோ 1879ல் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். இந்நூலின் ஆய்வுரையாக சுவாமி ஞானப்பிரகாசரால் வெளியிடப்பட்ட 'யாழ்ப்பாண வைபவ விமர்சனம் 1928ல் வெளிவந்துள்ளது.

13. Pieris P. E. Nagadipa and Buddist Remains in Jaffna J R A S C B XXVI No. 70 (1917) P. 17-18

14. வைத்திலிங்க தேசிகர் பு. பொ. (பதிப்பாசிரியர்) தக்ஷிணகைலாச புராணம் (தும்பைநகர் 1916) பக். 67. இந்நூலை கா. சிதம்பர ஐயரும் 1887ல் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

கனகசுந்தரப் பெருமாள் வளமைப்பத்ததியிற் கூறப்பட்ட செய்தியாகக் கோணேசர் கல்வெட்டுத் தரும் குறிப்புகளின்படி குளக்கோட்டன் (குளமும் கோட்டமும் அமைப்பித்தவனுயிருக்கலாம்) ஆடக சவுந்தரி கதைகளும் மட்டக்களப்பு மான்மியந்தருஞ் செய்திகளின்படி மகாசேனன் ஆடக சவுந்தரி கதைகளும் ஒன்றுகவே இருப்பதால் மகாசேன மன்னனே 'குளக்கோட்டன்' என்ற சிறப்புப்பெயர் பெற்றவன் என்பது பொருத்தமாகக் காணப்படுகிறது. திருக்கோயிலின் தென்பாலுள்ள உகந்தமலைக்கும், 'பாலர் நகைநாடு' (பாணமை) என்ற பண்டைய துறைமுகத்துக்கும் இடையிலிருந்த உன்னரசுகிரி நகரத்தை (15) ஆட்சிசெய்த ஆடகசவுந்தரியை மகாசேனன் மணம்செய்து மீனேரி (மின்னேரி) யையுங் கட்டி 'தட்சணுபதி' (திருக்கோணமலை)க் கோயிலையுஞ் செப்பமுற அமைத்து (16) அக்கோயிலுக்கு மானியமாக நெல் வயல்நிலங்களை அளித்து அவற்றுக்கு நீர்ப்பாய்ச்சுவதற்கென்று 'கந்தளை ஏரி' (கந்தளாய்க் குளம்) என்னும் பெரிய குளத்தை ஆடக சவுந்தரியின் வசத்தில் இருந்த பூதப் படைகளின் துணைகொண்டு கட்டிமுடித்து நாடெங்கும் வைதூலிய சைவம் வளர்த்துச் சிறப்புற ஆண்டான் என்று மட்டக்களப்பு மான்மியம் கூறிச்செல்கிறது. (17)

குளக்கோட்டு மகாராஜா வழமைப் பத்ததியின்படி கீழ்வரும் செய்திகளை அறியமுடிகின்றது. தேவராசராகிய திருக்குளக்கோட்டு மநுவேந்தர் திரிகோணுசலத்தின் மீது கோணநாயகருக்கு அதிகமான சிவாலயங்களும் எந்நாளும் மாறு மடைபாயும் திருக்குளமும் வயல்வெளிகளும் திரவியக் குகைகளும் திட்டம்பண்ணி உங்கள் பரவணியென்று அந்தந்தக் காலத்து அந்தந்தப்படி எந்தக்காலமும் இந்தத் திருப்பணி திருக்குளம், செந்நெல், விளைவருவல், பூங்காவனம், மாடகூடம், மண்டபம், படிகள், திரவியக் குகைகள் சிதைவுபடாமல் பராமரித்துக் கோணநாயகருக்குத் திருப்பூசை, அபிஷேகம், கிராம தேவதை பூசை, சிவாலயவலங்காரம், திருக்குளத்திற் பூசை விதி, இவை முதலாகச் சிவாலயத்துட் பணிவிடை அவரவர் செய்யுந் தொழும்பு இன்று போல அனவரதகாலமுஞ் செய்யவேண்டியது. இதனுற் கனகசுந்தரப்பெருமாள் குடியில் உள்ளவர்களுக்குக் கோயிலுக்கு முன்னரும், கட்டுக்குளப்பற்றும் நிலாவெளி (இந்துவெளி) நிந்தவூருமாகக் கிடைத்தது.

மருங்கூர் முதலிய இடங்களிலிருந்து வன்னிய ஜாதிக் குடும்பத்தவர்களையும், காரைக்காடு முதலிய இடங்களிலிருந்து குடிசனங்களையும் கொண்டுவந்து குடியேற்றி அவர்களுக்கு நிலங்களும் மானியமாகக் கொடுத்து, ஒவ்வொருவரும் செய்யவேண்டிய கடமைகளைக் கனகசுந்தரப் பெருமாள் வழமைப் பத்ததி முதலிய ஏடுகளில் வரைவித்தான். வகைமாதிரிக்கு கீழ்வருஞ் செய்யுளை எடுத்துக்காட்டலாம்,

15. கந்தையா வி. சி. மட்டக்களப்புத் தமிழகம் (சுன்னாகம் 1964) பக். 413

16. மகாவம்சக் குறிப்பின்படி திருக்கோணமலையிலிருந்த பிராமணக் கடவுளுக்கான கோயில் ஒன்றை மகாசேனன் இடித்தான் என்று கூறப்பட்டது. இதனை மகாவம்சத்தின்மீது எழுதப்பட்ட உரைநூலான 'வங்சத்தப்பகசினி'யும் குறிப்பிட்டுள்ளது. G. P. Malalasekara (Editor) Vamsaththappakasini, commentary on the Mahavamsa Pale Text Society II (London 1935) P. 685

17. நடராசா எவ். எக்ஸ். சி. (பதிப்பாசிரியர்) மட்டக்களப்பு மான்மியம், (கொழும்பு 1962) பக்கம் 33-35

'சந்நிதியில் நீவிர்செய்யுந் தொழும் புமக்கு
நாமுரைக்கத் தான்நீர் கேளும்
நன்னயஞ்சேர் பட்டாடை கொய்தல் கட்டல்
நல்லபுஷ்ப பத்திரங்கள் எடுத்தல் தூர்த்தல்
முன்னநிரை விளக்கேற்றல் தளிசை தட்டு
முடிவைகள் விளக்கல்கொடி குடைகள் நித்தம்
உன்னதமாய் எடுத்தல்நெல் குற்றல்சாணி
மெழுகுதல்மற் றரிகரும்பும் உகந்தேயீதல்'

கோயிற்றெழும்புகள் கிரமமாக நடைபெறுவதற்கும், தொழும்பாளர்களுக்கு இடையில் விவகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரங்கள் தீர்ப்பதற்கும் மதுரையில் இருந்து தனியுண்ணுப் பூபாலனை அழைத்து அதிகாரஞ் செலுத்து மாறு வன்னிமையாக நியமித்துத் தனது ஆணை தனை நிலைநாட்டினான்.

'மாருத புனல் பாயும் திருக்குளமும்
வயல்வெளியும் வருந்திச் செய்தே
வீறுக என்மர போற் கியாமற்
கோணமலை விமலர்க் கீந்தேன்
பேருன பெரியோரே இதற்கழிவு
நினைத்தவர்கள் பெட்பு நீங்கி
நீறுகப் போவரிது நிச்சயம் நிச்
சயங்கோண நிமலர் ஆணை'

குளக்கோட்டு மகாராஜாவுக்கு அடுத்ததாகக் கயபாகு மன்னனைப்பற்றிய செய்திகளையே கோணேசர் கல்வெட்டுத் தருகிறது. இவன் காலத்தில் கோணைநாயகருக்குக் கொடுக்கப்பட்ட தானங்கள் போதாதெனக் கருதிப் பல மானியங்களை வழங்கினான்.

''படவர வசைக்கும் பரமர் கோணேசர்க்
கடன்மிகு பூசைக் காடகம் போதாதெனத்
திடமொடு கொடுக்கச் சிந்தையு ணினைந்து
வரவுறு வடக்கு வருகரம் பகமாந்
திரமுறு மேற்குச் சிறந்த முனீச்சுரந்
தரைபுகழ் தெற்கு சங்கமங் கண்டி
உரமிகு கிழக்கு உகந்தவங் காளம்
ஏற்றுகைக் கோணை யிறைவனுக் காமென
இலைகாய் கனிபூ விரணியம் நெல்முதல்
விலைபெறு சரக்கின் மிகுந்தவா தாயம்
பலபொரு ளெதுவும் பத்தினுக்கொன்று
நிலைபெறக் கோணை நிமலற் களிப்பீர்''
எனக் கூறித் திட்டஞ் செய்தான்.

இங்கு கூறப்பட்ட கயபாகு வேந்தன் சிலப்பதிகாரத்துக் 'கடல்சூழிலங்கைக் கயபாகு' வேந்தனுய் இருக்கமுடியாது. இவன் இரண்டாம் கயபாகு வேந்தனுய் இருக்கவேண்டும். கந்தளாய்ச் சிவன்கோயிற் கல்வெட்டின்படி அங்கிருந்த சதுர்வேதி மங்கலம் பற்றி அறியமுடிகிறது. (18) இவை பெரும்பாலும் வேதம் தெரிந்த பிராமணர்களுக்கு வரியில்லாமல் வழங்கப்பட்டிருக்கும் குடியிருப்புக்களைக் குறிக்கும். ஸ்ரீவிஜயபாகு தேவரான ஸ்ரீ சங்கபோதியின் 42ம் ஆட்சியாண்டில் வெளிவந்த பளமோட்டைச் சாசனத்தில் விஜயராஜச் சதுர்வேதி மங்கலமென அழைக்கப்பட்ட கந்தளாயில் உள்ள தென்கைலாசம் என்ற கோயில் இருக்கும் ஸ்ரீ விஜயராசேஸ்வரம் உடையார் என்னும் கடவுளுக்குக் கொடுக்கப்பட்ட தானங்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. (19) இரண்டாம் கயபாகுவின் காலத்துக் கந்தளாய்ச் சாசனத்திலும் இப்பிராமணக் குடியேற்றம் (பிரமதேயம்) பற்றியறிய முடிகிறது. (20) இம்மன்னன் காலத்ததாக கந்தளாயிற் கண்டுபிடிக்கப்பட்ட இன்னுமொரு தமிழ்க் கல்வெட்டும் (21) மாங்கனுய்க் கல்வெட்டும் (22) கயபாகு காலத்துப் பண்பாட்டுத் தகவல்களை அறிய வாய்ப்புகளைத் தருவதால் கயபாகு மன்னன் இரண்டாம் கயபாகு மன்னனுய் இருக்கலாம் என்பதையே நிரூபிக்கிறது.

பல்லவர் காலத்தில் இத்தலத்துக்கிருந்த சிறப்புப்பற்றி அறிய ஞானசம்பந்தப் பெருமானின் திருக்கோணமலைப்பதிகம் (3:381) ஒன்றே போதுமானது. இத்தலம்பற்றி நாவுக்கரசரும், திருநெய்த்தானம் பதிகத்திலும் (6:255-6) குறிப்பிட்டுச் சென்றுள்ளார். பல்லவர் காலத்துக்குரியதாகத் திருக்கோணமலை மாவட்டத்திற் கண்டுபிடிக்கப்பட்ட குச்சவெளிக் கல்வெட்டு, திரியாய் சமஸ்கிருதக் கல்வெட்டு, திரியாய்ப் பாறைச் சாசனம் ஆகியனவும் அக்காலத்தில் ஏற்பட்ட பல்லவர்காலப் பண்பாட்டின் செல்வாக்கினை உணர்த்துவதாய் அமைகின்றன.

''அந்நகரி லமர்ந்தங் கனினிது மேவி
யாழி புடைசூழ்ந் தொலிக்கும் ஈழந்தன்னின்
மன்னு திருக்கோணமலை மகிழ்ந்து செங்கண்
மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப்பாடி''

என்று சேக்கிழார் சுவாமிகள் ''பெரியபுராணம்'' என வழங்குகின்ற திருத்தொண்டர் புராணத்தில் இத்தலம் பற்றிக் குறித்துச் சென்றுள்ளார். சோழர் தமது பாதுகாப்பு நோக்கம் ஒன்றினையே அடிப்படையாகக்கொண்டு பொலன்நறுவையைத் (ஜனநாதமங்கலம்) தலைநகராக்கிக்கொண்டபோதிலும் அவர்கள் தமது தலைமைத் தானமாகத் திருக்கோணமலை மாவட்டத்தையே கொண்டிருந்தார்கள் என்றுகூற மானுங்கேணி வில்ப பத்திரர் கோவிற் கல்வெட்டும், கந்தளாய்ச் சிவன்கோயிற் கல்வெட்டும் தரும் செய்திகள் உதவுகின்றன. (23) எனவேதான் சோழராட்சியின்போது ஈழத்தின் வேறெந்தவொரு மாவட்டமும் அடைந்திராதளவுக்குத் திருக்கோணமலை மாவட்டம் கூடிய பாதிப்புக்குள்ளானது. அக்காலத்துக்குரியதாக அதிகமான கல்வெட்டுகளும் புதைபொருள்களும் கிடைக்கப்பெற்றிருக்கின்றன. இவற்றிலே நிலாவெளிப் பிள்ளையார் கோவிற் கல்வெட்டு கோணேசர் கோயிலுக்குக் கொடுக்கப்பட்ட நிலத்தானங்களைப் பதிவுசெய்வதற்குப் பொறிக்கப்பட்டதாகக் காணப்படுகிறது. கொட்டியாபுரப்பற்றில் உள்ள கங்குவேலியிற் கண்டெடுக்கப்பட்ட சாசனத்தின்படி 'கோணைநாதருக்குக் கங்குவேலியிற் கொடுக்கப்பட்ட வெளியும் புலநடப்பும்' பற்றிக் கூறிச்செல்கிறது. (24)

18. இந்திரபாலா கா. ''கந்தளாயிற் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சோழ இலங்கேஸ்வரன் காலத்துக் கல்வெட்டு'', பாவலர் துரையப்பாபிள்ளை நூற்றாண்டு விழாமலர், (சுன்னுகம் 1972) பகுதி 11 பக்கம் 9.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. Paranavitana S. "A Tamil Slab-Inscription from Palamottai" Epigrophia Zeylonica (E Z) IV No. 24, (London 1943) P 193.

20. Veluppillai A. Ceylon Tamil Inscription Vol. IV No. 1397 (Peradeniya 1972) P 37

21. Krishna Sastri S. South Indian Inscription Vol. IV No. 1937 (Madras 1923) P 492

22. Kanapathippillai K. "Mankanai Inscription of Gajabahu II" University of Ceylon Review (UCR) XX, No. I (April 1962)

23. குணசிங்கம் செ. கோணேஸ்வரம் (பேராதனை 1973) பக் 83

24. Hugh Nevil (Editor) The Taprobanian Vol. III (Bombay, April 1888) P 26

பெரியகுளத்திற் கிடைக்கப்பெற்ற கல்வெட்டின்படி நாத்தனூர் கோவில் எனப்பட்ட 'வெல்கம் விகாரை' என்ற பௌத்த விகாரையை இராசராசப் பெரும் பள்ளி என மறுபெயரிட்டுச் சோழர் பேணிவந்தனர். அத்துடன், இராசராசனால் அது புதுப்பிக்கப்பட்டது. சோழப்பெருமன்னர் நாகபட்டினத்தில் சூடாமணி விகாரத்தைப் பேணியதுபோல திருக்கோணமலையில் வெல்கம் விகாரையைப் பேணியதால் (25) இதனை அவதானித்த பரணவிதான இராசராசனும், இராசேந்திரனும் சமயப் பொறுமை காட்டினர் எனக் கூறிச்சென்றுள்ளார். எனவே, இந்து சமயத்தைச் சேர்ந்ததும், ஏனைய மதங்களைச் சார்ந்ததுமான எல்லா வழிபாட்டுத் தாபனங்களும் பூரண மானியங்களைச் சோழர் காலத்திற் பெற்றுக்கொண்டனர் எனலாம்.

சோழப் பேரரசு நிலைகுலையத் தமிழ்நாட்டிலும் ஆந்திர, மலையாள, கன்னட தேசங்களிலும் வெற்றியடைந்து ஆட்சிபுரிந்தவன் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன். இவனுக்கு சக அரசனாகவிருந்த புவனேகவீக பாண்டியன் ஈழத்துச் சிங்கள மன்னனான புவனேகபாகுவை வெற்றிகொண்டதால் "ஸ்ரீசங்கபோதி புவனேகபாகு" என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டான். இவன் வீரச்செயல் பொறித்த குடுமியாமலைச் சாசனத்தில் முந்திய அரசர்களைப்போலக் கோணேசர் கோயிலுக்குரிய நிலங்களை இறைகடமையில்லாதனவாக்கினான் என அறிய முடிகிறது. இதனை

"...... ... திருக்கோண அலைவரப்
பாடன் கழித்து வழங்கியருளி"

என்ற தொடர் குறித்துச் செல்கிறது. அத்துடன் கோணமலையில் இலச்சினை பொறித்தான் என்பதை,

'கானு மன்னவர் கண்டு கண்டொடுங்க
கோணு மலையிருந்த திரிகூட கிரியிலும்
உருகெழு கொடிமிசை இருகயலெழுதி'

என்ற தொடராலும் அறிந்துகொள்ளலாம். (26)

தக்ஷிணகைலாச புராணம் கயபாகு சரித்திரத்தின்பின் செகராசசேகரனைப் பற்றிச் செல்கிறது. திருக்கோணாசல புராணம் கயபாகுவுக்குப்பின் பரராசசேகரனையும் கண்டி அரசனாகிய வரராசசிங்கனையும் கூறிமுடிக்கிறது. கோணேசர் கல்வெட்டு பரராசசேகரன் செகராசசேகரன் இருவரையும் ஒருங்குகூறிச் செல்கிறது. ஆரியச் சக்கரவர்த்திகள் யாழ்ப்பாணத்து நல்லூரைத் தலைநகராகக்கொண்டு பரராசசேகரன் செகராசசேகரன் என்ற பட்டப்பெயர்களில் மாறிமாறி ஆட்சிபுரிந்து வந்தார்கள். இங்கு குறிப்பிடப்படும் செகராசசேகரன் ஐந்தாம் செகராசசேகரன் என்ற பட்டப்பெயர் பெற்ற சகவீரசிங்கையாரியனவான். (27) சைவம் தோன்றிடத் தோன்றிய இவனால் இயற்றப்பட்டதாகக் கருதப்படும் கண்ணகி வழக்குரை நூலில் திருக்கோணேசர்பற்றிய தகவல் சிலவற்றை அறியமுடிகிறது.

25. வேலுப்பிள்ளை. ஆ., சாசனமும் தமிழும் (கண்டி - 1971) பக். 338.

26. AR to 356 of 1906

27. சற்குணம். ம., ஈழத்திற் கண்ணகி வழிபாட்டுத் தமிழ் இலக்கியங்கள், இலங்கைப் பல்கலைக் கழகப் பேராதனை வளாகத்தில் முதுமானிப்பட்டத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை - (வெளியிடப்படாதது) 1976, பக். 82.

"சேர்த்தபுகழ் பூண்டவர்தன்
திருக்கோணமலையில்......
மலையைப் போற்றிப் பட்டணவர்
மனமகிழ்ந்து கொண்டாடி
அலையஞ்சுற்றுங் கோபுரத்துள்
அனேவோருந் தானேகிக்
கொலையஞ்சுற்றுஞ் சடையுடையார்
கூற்றுதைத்தார் தனைத்தொழுது
கலையஞ்சுற்றுஞ் சங்கரர்க்குக்
காணிக்கையிட்டு வந்தார்" (28)

பரராசசேகரன் கோணைநாயகரின் பெருமை தனைக் கேட்டுவந்து பாவநாச தீர்த்தத்திலும் படிந்து எழுபட்டு முத்துமாலையும் வைர இரத்தினம் பதித்த தங்கப் பதக்கமும் சாத்துவித்து நாட்டில் நூல் வாங்கிக் கோயிலுக்கு ஒப்புவிக்கிறதற்கு இறை கடமையில்லாத திரியாயூரும் அதற்கு ஏழு குளமும் ஏழு வெளியுங்கொடுத்து எந்தக் காலத்துக்குந் திரிக்கு நூல் வாங்கிக் கொடுக்கச் சொல்லித் திட்டம்பண்ணிச் சென்றதாகக் கோணேசர் கல்வெட்டுக் கூறிச் செல்கிறது. இதனைத் திருக்கோணாசல புராணம் பின்வருமாறு கூறியுள்ளது.

"அன்ன நாளிடை யாழிகு முகன்புவி முழுதுந்
தன்ன தாகவே தனிக்குடை நீழலிற் றுங்கும்
மன்ன னும்பர ராசசேகர னெனும் வள்ளல்
பொன்னு லாந்திரி கோணமால் வரை
தனிற்பொருந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தையன் பினோ டரனுமை தனைத் தரிசித்தாங்
கந்தமின் நிதி பூண்மணி நிபந்தங்கள் அமைத்து
முந்துசீர் விழாத் தேர்த்திரு நாண்முறை
போற்றி
சொந்த மாநகர் சார்ந்தனன் தொல்குலத்
தரசன்''

உமாபதி சிவாசாரியர் 'மன்று திருக்கோணமாமலையின் மாதுமைசேர், பொன்னே கோணேசப் புராதனு' என்று சிவநாமக்கலி வெண்பாவிலும், அருணகிரிநாதர் 'நிலைக்கு நான்மறை மகத்தான பூசரர் திருக்கோணமலை தலத்தாறு கோபுரம்' என்று திருப்புகழிலும் இத்தலம்பற்றிக் குறித்துச் சென்றுள்ளனர்.

இத்தகைய பெருமையும் புகழும் பெற்று விளங்கிய கோணசலம் 1624 - 1627 வரை போர்த்துக்கேயத் தேசாதிபதியாகவிருந்த கொன்ஸ்ரன்ரைன் டீஸா என்பவனுல் இடித்துத் தள்ளப்பட்டு அதன் கற்களாற் கோட்டை கட்டப்பட்டது. இவன் கோயிலை இடிக்குமுன் அதனைப் படமாக வரையப் பணித்திருந்தான். மூன்று கோயில்களின் படங்கள் வரையப்பட்டதென்றும் அவற்றில் ஒன்று போர்த்துக்கல்லில் உள்ள லிஸ்பன் நகரின் பிரசித்திபெற்ற 'அட்சடா' நூலகத்திலே கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. டீஸா புதிய கோட்டை கட்டும்போது கல்வெட்டொன்றைக் கண்டெடுத்தான் என்றும் அக் கல்வெட்டில்,

''இவ்விலங்கையின் சக்கரவர்த்தியாகிய மநுராசா இவ்வாலயத்தை 'வீதியா மேல்மண்டா' என்னும் தெய்வத்துக்குக் கட்டுவித்தான். பறங்கி என்றழைக்கப்படும் சாதியார் வந்து இதனை இடித்தழிப்பர். பின் இதனைக் கட்டியெழுப்ப இத்தீவில் அரசனுளனுகான்'' - என்ற பொருள் பொதிந்த வாசகம் இருந்ததாகப் போர்த்துக்கேயப் பாதிரியார் குவேரோஸ் குறிப்பிட்டுள்ளார்.

28. கந்தையா. வீ. சீ., (பதிப்பாசிரியர்) கண்ணகி வழக்குரை, (சுன்னுகம். 1968) பக். 41.

''சேர்ந்த பின்னர் மறையோர்கள் கோணைநாதர்
திருப்பூசை வெகுகாலஞ் செய்யுமந்நாள்
மாந்தளிர்போல் மேனியுடைப் பறங்கி வந்து
மஹாகோணைப் பதியழிக்க வருமந்நாளில்...''

எனக் கோணேசர் கல்வெட்டுக் கூறிச் செல்லும் விபரங்களும்,

''அரசனே இவ்விராச்சியம் முதன்முதல் பறங்கிக்
காரர் கையில் அகப்படும். அவர் சில ஆலயங்
களையெல்லாம் இடித்து——''

என்று யாழ்ப்பாண வைபவமாலையிற் கூறப்படும் செய்திகளும் ஒத்திருப்பது அறிந்து ஆச்சரியப்படத்தக்கதாயிருக்கிறது.

பிரடறிக் கோட்டை என்றழைக்கப்படும் தற்காலக் கோட்டை வாசலில் உள்ள கல்லொன்றிலே எழுத்துகள் சில வருமாறு காணப்படுகின்றன.

| | |
|---|---|
| (மு) | ன னெ கு ள |
| | கா ட ட ன மூ ட டு |
| (தி) | ரு ப ப ணி னை ய |
| | ன ெ ன ப ற ங் கி |
| (க) | க ெ வ ம ன ன |
| | ன ெ ப ா ண ன |
| (ச) | ன யி ய ற (று) |
| (ெ) | த னை வ த |
| (ண) | ணு |
| | க ள |

இக்கல்லெழுத்தின் வாசகம் முதன்முதலில் வின்ஸ்லோ அகராதியில் வெளிவந்துள்ளது. வின்ஸ்லோ அகராதி தயாரித்தபோது அவருக்கு இதனை எழுதிக்கொடுத்தவர் யாரோ தெரியவில்லை.

'முன்னைக் குளக்கோட்டன் மூட்டுந்திருப்பணியை
பின்னை பறங்கி பிடிப்பனே—மன்னுகேள்
பூனைக்கண் செங்கண் புகைக்கண்ணன் ஆண்டபின்பு
மானே வடுகாய் வரும்' (29)

போர்த்துக்கல் நாட்டில் கேக் என்ற நகரிலிருந்த அரச சாசனவியலாளர் ஈ. பி. றெய்மார்ஸ் என்பவர் திருக்கோணமலையிலிருந்து போர்த்துக்கேயர் கொண்டுசென்ற சுவடிகளிற் கண்டதாக குவேரோஸ் பாதிரியார் தனது சரித்திர நூலில் மேற்குறித்த வாசகங்களை வருமாறு பதிவுசெய்துள்ளார்.

'முன்னே குளக்கோடன் மூட்டுந் திருப்பணியை
பின்னே பறங்கி பிரிக்கவே — மன்னவபின்
பொண்ணுத தனையியற்ற வழித்தே வைத்து
எண்ணுரே பின்னர சர்கள்'. (30)

29. Winslow M. Rev. Tamil and English Dictionary (Madras 1862) P 259

30. Fernando De Queyroz - The Temporal and Spiritual Conquest of Ceylon - Translated by S. G. Perera - Bode I (Colombo 1930) P 378

முதலியார் இராசநாயகம் இதனை பின்வருமாறு வெளியிட்டுள்ளார்.

'முன்னே குளக்கோடன் மூட்டுந் திருப்பணியைப்
பின்னே பறங்கி பிரிக்கவே — மன்னவபின்
பொண்ணுத தனையியற்ற அழித்தே வைத்து
எண்ணுரே பின்னர சர்கள்'. (31)

இவ்வாறு இராசநாயகம் வெளியிட்டு வைத்தபோதும் கொட்றிங்ரன் என்பார் இன்னும் சில திருத்தங்களுடன் இதனை வெயிட்டுவைத்துள்ளார். அவரது பாடம் வருமாறு காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'முன்னே குளக்கோடன் மூட்டுந் திருப்பணியை
பின் பரங்கி பிரிக்கவே — மன்னவபின்
பொண்ணாத தனேயியற்ற வழித்தே வைத்து
எண்ணார் வருவேந் தர்கள்' (32)

மேற்குறித்த கல்லெழுத்துக்களில் வெளிவந்த வாசகம் பலரைப் பலவிதமாகத் தடுமாறவைத்தாலும் கூறப்பட்ட விடயம் ஒன்றுதான். கல்லிலே சில எழுத்துக்கள் மறைந்திருந்ததால் அதனை நிரப்ப எடுத்த முயற்சிகளாலே இத்தடுமாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. குளக்கோட்டனால் எடுக்கப்பட்ட காரியங்கள் அனைத்தும் பரங்கியரால் அழிக்கப்பட்ட செய்தி உண்மையாய் இருந்தாலும் அதனைக் கால வர்த்தமானங்கடந்தும் முன்பே உணர்ந்தும் எழுதி வைத்தவரின் திறமையினை வியக்காமல் இருக்கமுடியாது.

''கீழைத்தேசத்தில் உள்ள கிறித்தவரல்லாத மக்களின் உரோமாபுரி'' என்று குவேரோஸ் பாதிரியார் கூறுமளவுக்கு இத்தலத்தின் பெருமை இருந்திருக்கிறது. இத்தகைய தலம் இடித்துத் தரை மட்டமாக்கப்பட்டபோது கோயிலின் விக்கிரகங்களை எடுத்துக்கொண்டு திசைகெட்டுப் பக்தர்கள் ஓடியுள்ளனர். கடலிலே சிலவற்றை எடுத்தெறிந்ததோடு மறைவிடந்தேடி ஒழித்தும் வைத்தனர். தம்பலகமத்தில் கோயில்கட்டி அந்த விக்கிரகங்களை வழிபட்டு வந்தனரென்றும் அறியமுடிகிறது. எனினும் கோணேசர் கல்வெட்டின் கூற்றுப்படி பரங்கியர் கோணைநகரை அழிக்கமுன்பு கோணைநாதர் தம்மையும் தமது பரிவார தேவர்களையும் ஆபரணங்களையும் பொக்கிஷங்கள் முதலான திரவியங்களையும் கழனி மலைக்குக் கொண்டுசெல்லும்படி கோயில் அதிகாரிகளுக்கு ஆணைபிறப்பித்ததால் அவர்கள் அவ்வாறே செய்தனர் என அறிய முடிகிறது.

இவ்வாறு சிலகாலம் செல்ல வரராசசிங்கன் எனப் புராணங்கள் கூறும் முதலாம் இராசசிங்கனுற் கழனிமலைக்கு அருகாகத் தம்பைநகர் எனப்படும் ஒரு நகரமும் கோணைநாதருக்குக் கோயிலும் புதிதாகக் கட்டப்பட்டது என்று திருக்கோணாசல புராணத்தின் தம்பைநகர்ப் படலத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இதனை,

''கன்னல்வேலி வரம்புடுத்த
கழனி சூழும் தம்பைநகர்
என்னும் நாட்டின் அன்பினொடும்
இலங்கும் மணிப்பொன் னாலயமும்
சொன்ன முறையிற் றூனமைத்துத்
தூய பூசைத் தேர்த்திருநாள்
மன்ன அவன்செய் கெனஅருளி
மறைந்தான் கோண மலைநாதன்

என்னும் செய்யுள் முதலியவற்றால் அறிந்துகொள்ளலாம்.

31. Rasanayagam C. Ancient Jaffna (Jaffna 1926)

32. Codrington H. W. ''The inscription at Fort Fredrick, Trincomalee JRAS CB - XXX, No. 80 (Colombo 1927) PP 448 - 451

மைக்வில்சன், ஆதர்கிளாக், ரோட்னி ஜோங்களாஸ் என்போர் திருக்கோணமலைக் கடலினுள் மூழ்கி ஆராய்ந்து வெளிக்கொணர்ந்த விக்கிரகங்களும் பொருள்களும் இக்கோணமலையான் கோட்டத்தைச் சேர்ந்ததாகும். 1950 யூலை 27ம் திகதி கிணறு தோண்டும்போது தொழிலாளர் சில புதைபொருள்களைக் கண்டெடுத்தனர். அக்குழியிலிருந்து மூன்று விக்கிரகங்களும் பிறிதோரிடத்திலிருந்து இரண்டு உருவங்களும் தோன்றின. அவற்றிற் சந்திரசேகர மூர்த்தி தாமரைச் சிங்காசனத்தில் இருக்கும் நிலையிலும், நிற்கும் நிலையிலும் காணப்பட்ட வெண்கல உருவங்களும், பார்வதியின் வெண்கல உருவமும் சிறப்புவாய்ந்தன. (33)

''தென்னிலங் காபுரி திசைநோக்கி வருகையில்
திரிகோண மலைத் திரைகடல் நடுவில்
கட்டிய தன்மையாற் கப்பலும் நின்றது
நின்றிடுங் கப்பலைக் கண்டதும் அரசன்
காரண மேதெனக் கண்டறி வோமென
ஏவலா ளர்களை இறக்கிப் பார்க்கையில்
ஐந்து கரமும் யானை முகமும்
கணேசனை வாவென கைகூப் பித்தொழ
வீரமுனையென விளம்பிய நதிக்கரையில்
கப்பல் சேரக்கண்டு எல்லோரும்
ஐங்கரக் கடவுளுக் காலய மொன்று
சீக்கிரம் அமையெனச் செலவு கொடுத்து
சிந்துயாத் திரையுள் திருவடி கண்டதால்
சிந்தாத்திரைப் பிள்ளையார் என்னும்நா மத்துடன்
நித்திய பூசை நியம மாக......''

என்று சீர்பாதக் கல்வெட்டு கூறிச்செல்வதால் (34) வீரமுனையில் உள்ள சிந்தாத்திரைப் பிள்ளையார் கோயில் விக்கிரகம் கோணேசப் பெருமான் கோயிலைச் சேர்ந்ததாயிருக்கலாம் என ஐயுறவேண்டியுள்ளது.

'வாவியுங் குளமும் வயங்கு மோடையும்
கூவலும் யாறும் குளிர்தடம் பொய்கையும்
செந்நெற் கழனியும் செறிந்தும்'
'மண்டப நிரையும் மாளிகைப் பந்தியும்
கொண்டல்கண் படுக்கும் கோபுர வாயிலும்
வளமுறு வீதிகள் வயங்கு மாலயம்'

கொண்டும் விளங்கியதாகத் 'திரிகோணநாதர் மும்மணி மாலை' கூறும் இத்தலம் காலந்தோறும் 'குளமும் கோட்டமும் கொண்ட கோணமாமலை' யாகத் திகழ்ந்தது' என்பதில் ஐயமில்லை.

33. Balendra W. ''Trincomalee Bronzes Tamil Culture No. 2 (April 1953) PP 176-198

34. நடராசா எவ். எக்ஸ். சி. (தொகுப்பாசிரியர்) மட்டக்களப்பு மக்கள் வளமும் வாழ்க்கையும். (மட்டக்களப்பு 1980) பக் 22-23

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பந்தரது சமயப்பணியில் திருக்கோணேஸ்வரம்

கலாநிதி அ. சண்முகதாஸ்
மனோன்மணி சண்முகதாஸ்

''இதற்குப் பின்னர் நாம் அறிகின்ற கோணேஸ்வரம் பற்றிய அடுத்த தகவல் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் தேவாரப் பாடல்கள் சிலவற்றில் இடம்பெறுவதாகும். இக் கோயில் பற்றி ஒரு பதிகத்தையே பாடியுள்ளார் நாயனார். இலங்கைக்கு ஒருபோதும் வராதிருந்தவரான சம்பந்தர் தென்னிந்தியாவில் இருந்தவாறே கோணேஸ்வரக் கோவிலின் மகிமையைக் கேள்வியுற்று இந்தியாவில் சிறப்புப்பெற்ற ஏனைய தலங்களின் வரிசையில் வைத்து இதன்மீதும் பதிகம் பாடியுள்ளார் என்பதைக் கவனிக்கும்போது இக்கோவில் இக்காலமளவில் பெற்றிருந்த சிறப்புத்தன்மை தெளிவாகின்றது. இக்கோவிலின் பெருமை இந்தியாவிலிருந்து இங்கு வந்து சென்றோராலும் இங்கிருந்து இந்தியா சென்றோராலும் எடுத்துக் கூறப்பட்டது எனலாம்.''

மேல்வரும் கூற்றுக்கள் போன்று கோணேஸ்வரக் கோயிலின் பழமையை எடுத்துக்காட்டும் கூற்றுக்களாகும். ஈழத்துத் திருத் தலங்களிலே பாடல்பெற்ற தலமாகச் சிறப்பித்துப் பேசப்படுவது திருக்கோணேஸ்வரம். சம்பந்தர் பெருமான் பாடிய அப்பதிகம் ஆலயத்தின் சிறப்பினை அகிலத்திற்கு உணர்த்துகின்றது. சைவ நாயன்மார்களுள் முதன்மை பெற்றவராகிய திருஞானசம்பந்தர் பாடிய பாடல்கள் திருக்கோணேஸ்வரத்திற்கு திருமறைச் சிறப்பூட்டியுள்ளன. திருக்கோணேஸ்வரத்தின் வரலாற்றினை எழுதப் புகுந்த வரலாற்றாசிரியரான செ. குணசிங்கம் கோணேஸ்வரம் என்னும் நூலில் கோவிலைப்பற்றிக் கூறிச்சென்றுள்ளார். ஏனைய வரலாற்று மூலமந்திரங்களுடன் சம்பந்தரது கோணேஸ்வரம் பற்றிய பாடல்களையும் அவர் ஒப்புநோக்கிக் கோவிற் சிறப்பினை உணர்த்தியுள்ளார்.

ஈழத்து வரலாற்றைப் பொறுத்தவரையில் அது காலத்துக்குக்காலம் தமிழ்நாட்டு வரலாற்றுடன் சம்பந்தப்பட்டிருப்பதை நாமறிய முடிகின்றது. குறிப்பாகப் பல்லவர் காலத்துத் தமிழ்நாட்டு வரலாற்றின் புதியபோக்கு அயலிலிருந்த இலங்கையையும் பெருமளவிற்குப் பாதிக்கலாயிற்று. இக்காலத்திலேற்பட்ட தமிழ்நாட்டு இலங்கைத் தொடர்புகளின் பின்னணியிலேயே கோணேஸ்வரக் கோயிலின் சிறப்புற்ற நிலையினைச் சரியாக விளங்கிக்கொள்ள முடியும். இக்காலத்திலேற்பட்ட அரசியல் வர்த்தகத் தொடர்புகள் இப்பணியினை இலகுவாக்குகின்றன: சிங்கள இளவரசர்களுக்கும் பல்லவர்களுக்குமிடையே ஏற்பட்ட தொடர்பினால் தமிழ்க் கூலிப் படையினர் இலங்கையில் வந்து குடியேறியதாக வரலாற்றாய்வாளர்கள் கருதுகின்றனர். இதனை ஆதார பூர்வமாக சாசனங்கள் கொண்டும் விளக்குகின்றனர். இவைபற்றிய விரிவான தகவல்களை கோணேஸ்வரம் நூல் தந்துதவுகிறது.

இத்தகைய பல்லவத் தொடர்புகள் ஈழத்தில் ஏற்பட்ட காலத்தில் சம்பந்தர் வாழ்ந்த பல்லவர் காலத்தில் பக்தியியக்கம் தோன்றி வளரலாயிற்று. தமிழ்நாட்டின் தென்பாகத்தில் இவ்வியக்கத்தின் தலைவராக சம்பந்தர் விளங்கினார். பாண்டிநாட்டிலே பரவியிருந்த சமண சமயத்தை எதிர்த்து சம்பந்தர் சமயப் பிரசாரம் செய்தார். சோழநாட்டிலே பிறந்தவராக இருந்தபோதும் சைவசமயப் பிரசாரம் செய்தவரை சம்பந்தர் பாண்டி நாட்டிற்கு வர வேண்டியிருந்தது. அவர் பாடிய பதிகங்கள் தனித்துவமான அமைப்புடையனவாக இருப்பது இதனை நன்குணர்த்துகின்றது. சைவசமயப் பிரசாரத்திற்காகவே, அந்த நோக்கத்தின் சாதனமாகவே பதிகத்தை அமைத்துப் பாடியுள்ளார். இது சம்பந்தரது பாடல்களே என அறிவதற்காக இறுதிப் பாடல்களில் தமது பெயரையும் இணைத்துள்ளார்.

சம்பந்தர் பாடல்களிலே காணப்படுகின்ற பொதுப் பண்புகளை நோக்கும்போது அவரது நோக்கம் தெளிவுபடுகின்றது. அவரது பாடல்கள் ஒவ்வொன்றிலும் பெரும்பான்மையாக இரண்டு வரிகளாவது இயற்கையை வர்ணித்துப் பாடுவனவாக அமைந்துள்ளன. இறைவனைப்பற்றி இரண்டு வரிகள் அமைக்கப்பட்டிருக்கும். இவ்வமைப்பு சம்பந்தருக்கு இயற்கையிலே இருந்த ஈடுபாட்டையும் இறையருளில் இருந்த ஈடுபாட்டையும் ஒன்றுசேர உணர்த்துகின்றது. இயற்கை வர்ணனை பற்றிய வரிகள் கோவில் அமைந்த சூழலை வர்ணிப்பன. தான் பாடுகின்ற தலத்தின் சூழலை அவர் அழகுணர்வோடு பாடல்களில் அமைத்துள்ளமை சிறப்பானது. தமிழ்நாடு முழுவதும் சமயப் பிரசாரத்திற்காக சம்பந்தர் சென்றவர். இதனால் குறிப்பிட்ட பிரதேசத்துத் தலங்களுக்கிடையேயுள்ள வேறுபாட்டினை அவ்வச் சூழல் வர்ணனைகள் மூலம் காட்ட முயன்றுள்ளார். சைவத்தின் மறுமலர்ச்சியிலே பங்குகொள்ளச் செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்காக அவர் இம்முயற்சியினை மேற்கொண்டார். தமது பாடல்கள்மூலம் மக்கள் மனத்தை ஈர்த்த அதே வேளையில் தலத்தின் சூழல்பற்றிய கருத்தையும் சம்பந்தர் மதிக்க முயன்ருர்.

இவரது பதிகங்களில் எட்டாவது பாடலில் இராவணனைப்பற்றிய குறிப்பு அமைந்திருக்கும். இவ்வாறு இராவணன் கதையைப்பற்றி அவர் கூறுவதற்கு ஏதாவது முக்கிய காரணம் இருந்திருக்கவேண்டும். இராமாயண, பாரத இதிகாசக் கதைகளை அவர் தமது பிரசாரத்திற்காகப் பயன்படுத்தியிருக்க வேண்டும். தீயவருங்கூடச் சிவனை வணங்கி அருள் பெறலாம் என்பதை மக்களுக்கு உணர்த்துவதற்காக இக்கதையை அவர் எடுத்தாண்டிருக்கவேண்டும். ஆனல், பிற்காலங்களில் வாழ்ந்த சைவ நாயன்மார்களான சுந்தரரும், மாணிக்கவாசகரும் இராவணன் கதையை விசேடமாகக் குறிப்பிடவில்லை. சம்பந்தரோடு சமகாலத்திலே வாழ்ந்த அப்பரும் இப்பகுதியைக் குறிப்பிட்டிருப்பதால் அவ்விருவருக்கும் அக் காலச் சூழ்நிலையில் அக்கதையைக் கூறவேண்டிய தேவை இருந்திருக்கவேண்டும். அக்காலத்தில் தமிழ் நாட்டிலே இருந்த பாண்டிய பல்லவப் பேரரசுகளின் அரசியல் நிலை இதற்குக் காரணமாக அமைந்திருக்கலாம்.

ஒவ்வொரு பதிகத்தின் ஒன்பதாம் பாடலில் சிவனுடைய அடிமுடியைத் தேடி பிரமனும் திருமாலும் சென்றகதை குறிப்பிடப்படும். பத்தாம் பாடலில் சமண பௌத்தர்கள் இழித்துக் கூறப்படுவர். சமண பௌத்த மதங்களிலே சம்பந்தருக்கிருந்த வெறுப்பினை இப்பண்பு உணர்த்துகின்றது. வெறுப் புணர்ச்சியை அதிகமாக சம்பந்தர் தமது பாடல்களிற் காட்டியுள்ளார். சைவ சமயம் வலி குன்றுவதற்குச் சமண பௌத்தர்கள் காரணஸ்தர்களாக இருந்தமையால் இவ்வமைப்பினைச் சம்பந்தர் தனது பதிகங்களிலே மேற்கொண்டிருக்கலாம். இது மக்களிடையே சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தவேண்டுமென்ற உணர்வினைத் தூண்டியிருக்கும். அவர்களுக்கு ஊக்கத்தையும் கொடுத்திருக்கும். இதற்காகப் பதிகத்தின் பயன் கூறுகின்ற முத்திரைக் கவிகள் அமைக்கப்பட்டுள்ளன. பாடல்களில் 'நற்றமிழ் ஞானசம்பந்தன்' 'தமிழ் ஞானசம்பந்தன்' 'சம்பந்தன் செய்த தமிழ்மாலை', 'தமிழ்நாடு ஞானசம்பந்தன்', 'ஞாலம் புகழ்காழி சம்பந்தன்', 'நாடுபுகழ் ஞானசம்பந்தன்', தமிழ் நவிலும் ஞானசம்பந்தன்', 'இசைஞான சம்பந்தன்', 'புகலிவேந்தன் ஞானசம்பந்தன்', 'கலைஞான சம்பந்தன்' என்னும் தொடர்கள் சம்பந்தரது நோக்கத்தை நன்கு புலப்படுத்துகின்றன. மொழி உணர்வின் ஊடாகப் பக்தி உணர்வினைச் சம்பந்தர் பரப்புகிருர். அதன்காரணமாக இன்று பக்தியின் மொழி தமிழ் என்றும் சிறப்பித்துப் பேசுவதற்கு வாய்ப்பு உண்டாயிற்று. சம்பந்தரது சமயப் பணியும் போற்றுதற்குரியதாயிற்று.

சமய மறுமலர்ச்சிக்காகச் சம்பந்தர் செய்த தொண்டுகள் பிற்காலத்தவராற் பெரிதும் பாராட்டப்பெற்றன. அவர் சமய குரவருள் முதல்வராகக் கொள்ளப்பட்டார். நம்பியாண்டார் நம்பி சம்பந்தரைப்பற்றி ஆறு பிரபந்தங்கள் பாடியுள்ளார். பெரியபுராணத்தைப் பாடிய சேக்கிழார் தமது நூலிற் பெரும்பகுதியை சம்பந்தருக்கு ஒதுக்கிச் சிறப்பித்துள்ளார். சம்பந்தரது தேவாரங்கள் முதல் மூன்று திருமுறைகளாக வகுக்கப்பட்டன. அவரது தேவாரமே வேதத்தின் காரணமென்று பலர் சிறப்பித்துக் கூறுகின்றனர். பின்வந்த சமய குரவர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாகவே சம்பந்தர் விளங்கினுர். சம்பந்தர் தமிழ் நாட்டிலே சைவத்தை நிலைநாட்டவேண்டிய பெரும் பணியிலே பங்கு கொண்டு உழைத்தவர். பிறமதங்களின் தாக்குதலை எதிர்த்துப் போராடியவர். இதனுல் இறைவனது அருட்காட்சியிலே ஆர்வங்கொண்டவரானுர். அந்த ஆர்வம் அவரது பாடல்களிலே முக்கியமான பகுதியாக அமைந்தது.

''தோடுடைய செவியன் விடையேறியோர்
தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசிஎன்
உள்ளங் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் உனைநாட்பணிந்
தேத்த அருள் செய்த
பீடுடையபிர மாபுர மேவிய
பெம்மானிவனன்றே''

என்னும் அவரது முதற் பாடல் இதனை உணர்த்துகின்றது.

சம்பந்தர் பாடிய திருக்கோணேஸ்வரப் பதிகங்கள் பற்றி நோக்கும்போது மேற்கூறிய பொதுப் பண்புகள் யாவும் அமைந்திருப்பதனை நாம் காண முடிகின்றது. திருக்கோணமலையின் இயற்கைச்சூழலைச் சம்பந்தர் அழகுற வர்ணித்துள்ளார்.

''கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும்
கோணமா மலையமர்ந்தாரே''

''கொடிதெனக் கதறும் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமுன் நித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றும்
கோணமா மலையமர்ந் தாரே''

''கோயிலுஞ் சுனையுங் கடலுடன்
சூழ்ந்த கோணமா மலையமர்ந் தாரே''

''விரிந்துயர் மௌவல் மாதவி புன்னைவேங்கை
வண் செருந்தி செண்பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" துன்றுமொண் பௌவமவ்வலுஞ் சூழ்ந்து
 தாழ்ந்துனு திரைபல மோதிக்
குன்று மொண்கானல் வாசம் வந்துலவுங்
 கோணமா மலையமர்ந் தாரே "

மேற்காட்டிய பகுதிகள் சம்பந்தர் பாடல்களில் அமைந்த வர்ணனைகளின் தன்மைகளை எடுத்துக் காட்டுகின்றன. திருக்கோணமலையில் அமைந்த கோவில் சூழலைத் தமது பாடல்களிலே பல்வேறு காட்சிகளாகக் காட்டுகின்றார். கோயிலைச் சூழ்ந்துள்ள பாடலின் ஒலியைப்பற்றித் தேவாரத்திலே இசைப் பண்பு பொருந்தக் கூறியுள்ளார். " குரைகடல் " என்னும் சொற்றொடரைப் பல பாடல்களில் உணர்த்துகின்றார். ஆரவாரிக்கின்ற கடல் சூழ்ந்த பிரதேசத்திலே இறைவன் வீற்றிருக்கின்றார். அவரது சப்திக்கின்ற கழல்களை இறைஞ்சுபவர்களை சம்பந்தர் அழைக்கின்றார். கடலாற் சூழப்பட்ட கோணேஸ்வரத்தின் இயற்கை எழில் கேட்பவர் மனத்தைப் பிழிகின்றது. அங்கமர்ந்து அருள்புரியும் இறைவன் குரலாக அது ஒலித்துக்கொண்டிருக்கிறது என்ற தத்துவத்தைச் சம்பந்தர் பக்தர்களுக்குப் புலப்படுத்தியுள்ளார். இங்கு கடலோசையின் தன்மைபற்றி வர்ணித்த தமிழ் நாவலாசிரியரான ராஜமையரின் கருத்தை நோக்கும்போது இது இன்னும் தெளிவாகின்றது.

" அழிவற்று ஆகாயமட்டுமளாவி அநேக ஆயிரம் சிரசுகளையுடையதாய் திசைகளோடு பரமாத்மாவே மூர்த்தி கரித்து நின்றாற்போல் நிற்கும் ஸ்ரீமோத் பர்வதமானது திடீரென்று ஒருநாள் தனது மௌனப் பிரசங்கத்தை நிறுத்தி வாய்திறந்து பேசினால் எப் படியோ அப்படிப் பெரிய கம்பீரமான பொருள் நிறைந்த வேத ரகசிய தத்துவார்த்தத்திற்குத் தக்க தோர் குரலுடனே கடலானது நம்முடன் வசனிக்கின்றது "

இவ்வுணர்வே சம்பந்தரது பாடல்களிலும் புலப் படுத்தப்பட்டுள்ளது. இறைவனது தெய்வீகக் குரலான அதனை அவர் கூறிச் சென்றுள்ளார்.

கோயிற் சூழலில் இயற்கைத் தன்மை செழிப்புடனிருந்ததாகச் சம்பந்தர் பாடல்கள் காட்டுகின்றன. சந்தனமும், அகிலும், மௌவலும், மாதவியும், புன்னையும், வேங்கையும், செண்பகமும், முல்லையும் கொண்ட இயற்கை எழில் கொஞ்சும் பிரதேசமாக அப்பிரதேசம் அமைந்திருந்ததை நாம் காண வைக்கின்றார். அழகு கொழிக்கும் இச்சூழல் மனதில் பக்தியைத் தூண்டுகிறது. பொழில்கள் மத்தியிலே அமைந்த கோவிலும் சுனையும் இறைவன் எழில்வடிவத்தோடு இணைந்து சிறப்புப் பெறுகின்றன. பண்டைய இலக்கியங்களிலே பொதிந்து கிடந்த இயற்கைச் சூழல் அழகுகளையெல்லாம் இறைவனைப் பாடச் சம்பந்தர் பயன்படுத்துகிறார். இயற்கையழகு பொருந்திய கோணேஸ்வரத்தின் சூழல் அவர் பாடல்களில் இப்பண்ணிலே சிறப்புடன் போற்றப் படுகிறது.

திருக்கோணேஸ்வரப் பதிகத்தின் அடுத்த பாடல்கள் இறைவனது அருட்செயல்களை வரிசைப் படுத்திக் கூறுகின்றன.

"கடிதென வந்த கரிதனை யுரித்து
 அவ்வுரி மேனிமேற் போர்ப்பார்

"பாங்குட மதனனைப் பொடியா விழித்தவன்
 தேவி வேண்ட முன்கொடுத்தவர்"

"மதில்மேல் தனித்த பேருருவ விழித்தழல்
 நாகந் தாங்கிய மேருவெஞ் சிலையாக
 குனித்ததோர் வில்லார்"

"பரிந்து நன்மனத்தால் வழிபடும் மானி
 தன்னுயிர் மேல்வரும் கூற்றைத்
 திரிந்திடா வண்ணம் உதைத்தவர்"

"எடுத்தவன் தருக்கை யிழித்தவர் விரலால்
 ஏத்ததிட வாத்தமாம் பேறுகொடுத்தவர்"

"பெருங்கடல் வண்ணனும் பிரமன்
 இருவரும் அறியாவண்ணம் தன்
 எரியாய் உயர்ந்தவர்"

மேற்காட்டிய பகுதிகள் இறைவனது தன்மைகளை வெளிப்படுத்திக்காட்டுவதாக சம்பந்தர் அவற்றைத் தமது பாடலில் இணைத்தமைக்குச் சான்றாகின்றன.

இக்கதைகளைப்பற்றிச் சம்பந்தர் பல இடங்களிலே கூறியிருப்பினும் எட்டாவது பாடலில் இராவணனது குறிப்பினை வைப்பது அவருடைய தனித்துவமாக அமைகின்றது. அதேபோன்று ஒன்பதாம் பாடலிலே பிரமனும் விஷ்ணுவும் அடிமுடி தேடிய வரலாற்றை அமைத்திருப்பார். இவ்வமைப்பு முறைக்கு அவர் முக்கியத்துவம் கொடுத்ததற்கு ஒரு காரணமுண்டு. இராவணன் அரக்கனெனினும் சிவபக்தனாக இருந்தமையால் தேவர்களுக்கு முன்னாகக் குறிப்பிடுகின்றார். பக்தி இயக்கத்தை வளர்ப் பதற்காகவே சம்பந்தர் இதனைக் கையாண்டுள்ளார். சாதாரண மனிதநிலையில் இருந்து எவ்வாறு இறைவனை அடையமுடியும் என்பதற்குரிய வழிகாட்டுதலாகவே இது அமைகிறது.

கோணேஸ்வரத்திற்கும் இராவணனுக்கும் தொடர்பு உண்டென்ற மரபும் ஒன்றுண்டு. இதனைத் தெளிவுபடுத்துவதற்கான சில குறிப்புகள் பலராலும் கூறப்பட்டுள்ளன.

1. "குபேரனுக்குப் பின் இலங்கையையாண்ட இராவணன் பெரும் சிவபக்தன். அவனை "இராவணேஸ்வரன்" என்று உலகம் பாராட்டியது. கைப் போது மலர் தூவி முப்போதும் சிவபிரானை வழிபட்ட முறைமையாளன் இராவணன். "இரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணன் மேலது நீறு'' என்று திருநீற்றின் பெருமையைச் செந்தமிழிற் செம்மாந்து பாடுகின்றார். திருஞானசம்பந்தர் இந்த ''இராவணேஸ்வரன் தன் தாயார் வணங்கும் பொருட்டு கோணமாமலையமர்ந்த கோவிலின் அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கத்தைப் புரட்டிப் புரண்டு விழுந்து எழுந்து வணங்கி மன்னிப்புப் பெற்ற பெருங்கதை'' என்ற குறிப்பினை திருக்கோணேசர் ஆலய கும்பாபிஷேக மலரிலே திரு. விஸ்வநாதக் குருக்கள் குறிப்பிட்டுள்ளார்.

2. ''வள்ளல் இருந்த மலையதனை வலஞ்செய்தல் வாய்மையென உள்ளங்கொள்ளாது தன் வலியைத் தானே வியந்து தருக்கிய இராவணன் கயிலை மலையை எடுத்தபோழ்து தமது கால் விரலால் அவனது செருக்கை அழித்துப் பின்னர் அவன் தன் சிறுமை நினைந்து வழிபட அவனுக்கு வேண்டும் வரங்களை நல்கிச் சிறப்பித்த கோணமலையானமாணருளை 'எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால் ஏத்திட ஆத்தமாம் பேறுகொடுத்தவர்' என்றும் கூறுகின்றார்'' என ஒரு குறிப்பினை ''திருஞானசம்பந்தர் கண்ட திருக்கோணமலை'' என்ற கட்டுரையிலே சு. துரைசாமிப்பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

3. ''இவ்விலங்கையைச் சிறந்த சிவபக்திமானாகிய இராவணேஸ்வரன் ஆண்டானென்றும் அக்காலத்தில் அவனும் அவன் தம்பி விபீடணனும் பல சிவாலயங்கள் ஆக்கப்பட்டனவென்றும் வரலாறு கூறுகின்றது'' என ''தக்கிணகைலாய தெய்வீகம்'' என்னும் கட்டுரையில் கா, அருணசலம் தேசிகர் குறிப்பிட்டுள்ளார்.

4. ''மீண்டும் திருக்கைலாயத்துக்குப் போகும் வழியில் விட்டுணு மூர்த்தி ஒரு வயோதிக அந்தணன் வடிவில் தோன்றி தெட்சண கைலாயத்தின் பெருமையையும் அங்கு சிவலிங்கம் பெறலாமென்றும் கூறினர். இராவணன் தெட்சண கைலாசம் எனப்படும் திருக்கோணமலைக்கு வந்து இறைவனை வழிபட்டு நின்றார். இறைவன் காட்சியளிக்காததால் கோபங்கொண்டு மலையின் இயங்கி மலையைக் கட்டிப் பிடித்து அசைத்தான். மலை சிறிதும் அசையவில்லை. வெளியேவந்து மலையில் தெற்குப் பகுதியில் வாளினால் ஓங்கி வெட்டினன். மலையில் ஒரு சிறுதுண்டு உடைந்து மேற்குப் பக்கம்போய் விழுந்தது'' என்னும் குறிப்பினை திருக்கோணேஸ்வரம் என்னும் நூலில் வை. சோமாஸ்கந்தர் குறிப்பிட்டுள்ளார்.

5. ''காப்பிய அரசன் இராவணன் கோணேஸ்வரர் பெருமானில் சிறந்த பக்திமான். சிவனில் அவன் கொண்ட பக்தி தமிழ் சைவ ஞானிகளின் பக்திப் பாடல்களில் அழியா இடம்பெற்றுள்ளது. அவனின் தாயும் மனைவி மண்டோதரியும் சிவனில் சிறந்த பக்தியுடையவர்கள்'' என சி. எஸ். நவரத்தினமும் ஒரு குறிப்பினைக் கூறியுள்ளார்.

ஆனல் இக்குறிப்புக்கள் யாவும் ஒரு குறிப்பிட்ட புராணக் கதையிலிருந்து தோற்றம் பெற்றனவாகவே அமைகின்றன. தக்கிண கைலாச புராணம், கோணசல புராணம் போன்றவற்றிற் கூறப்பட்ட செய்திகளே இதற்கு அடிப்படையாக அமைந்தன. எனினும் கோணேஸ்வரக் கோயிலுக்கும் இராவணனுக்கும் இடையில் தொடர்புகாணக்கூடிய வகையில் இராமாயணத்தில் குறிப்புக்கள் கிடையா. இக்கதைமரபு பிற்பட்ட காலத்தில் தோன்றியதென வரலாற்றுய்வாளர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். ஆனல் சம்பந்தர் இக்கதை மரபினையறிந்து தமது பாடல்களிலே இக்குறிப்பினைப் பயன்படுத்தியிருக்கவேண்டும். கர்ண பரம்பரைக் கதைகள் பல மக்கள் மனத்தைச் செம்மைப்படுத்துவதற்காகக் கூறப்பட்டுள்ளன. அம்மரபை யொட்டியே சம்பந்தரும் தமது சமய நோக்கத்திற்காக இக்கதையினையும் ஒன்பதாம் பாடலில் வருகின்ற பிரமா விஷ்ணு பற்றிய கதை இக்கருத்தினை வலியுறுத்துகின்றது. புராணக்கதைகளை நாயன்மார்கள் பிற்காலத்தும் தமது பாடல்களிலேஏற்றவகையில் பயன்படுத்தியுள்ளார்கள். இம்மரபினை ஆக்கியவர் சம்பந்தர் எனலாம். ஈழத்துத் தலங்களிலே கோணேஸ்வரம் இக்கதை மரபினல் ஈழத்தில் மட்டுமன்றித் தென்னகத்திலும் புகழ்பெற இடமுண்டாயிற்று.

சம்பந்தர் தமது பதிகங்களிற் கையாண்ட பொதுவான அமைப்பினையே கோணேஸ்வரப் பதிகத்திலும் கையாண்டுள்ளார். இயற்கை அழகு கூறுகின்ற அதே வேளையில் இறைவன் அழகிலே ஈடுபாடு இருந்ததையும் குறிப்பிடுகின்றார்.

''நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பும்
 நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்த
 வடிவினர் கொடியணி விடையர்
பனித்திளம் திங்கட் பைந்தலை நாகம்
 படர்சடை முடியிடை வைத்தார்
பழித்திளங் கங்கை சடையிடை வைத்தவர்
 அருவரா தொருகை வெண்டலையேந்த
யகந்தொறும் பலியுடன் புக்க
 பெருவரா யுறையும் நீர்மையர்''

என்னும் அடிகள் இறைவனது அழகுக் கோலத்தை அடியார்க்கு உணர்த்தும் பணியில் சம்பந்தர் ஈடுபட்டதாகக் காட்டுகின்றன. ''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்ற பரந்த நோக்கினைச் சம்பந்தர் இவ்வடிகளிலே முன்வைத்துள்ளார்.

பத்தாவது பாடலிலே கூறப்படுகின்ற பிறமதத்தவர்பற்றிய குறிப்பும் திருக்கோணமலைப் பதிகத்தைப் பொறுத்தவரையில் முக்கியமானதாகும். சம்பந்தர் தென்னுட்டில் வாழ்ந்தவர். பிறமதத்தின் தாக்கத்தை தம்மதத்தில் உணர்ந்தவர். அதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேரோடு அழிக்கும் கடமையில் முன்னின்றவர். இதனால் தன் சமயத்தை அழிக்க முனையும் பிற மதங்களை இழித்துரைப்பதையும் செய்ய முற்பட்டார். ஈழத்தைப் பொறுத்தவரையில் சமயச்சூழலை முற்றும் உணராதவராகியும் அவர் இருந்திருக்கலாம். ஏனெனில் அவர் இங்கு வந்துசென்ற குறிப்புக்களும் இல்லை. இதனால் பிறமதங்கள் பரவியுள்ள ஈழத்திலும் திருக்கோணமலைப் பதிகத்தில் அவற்றைக் கண்டிக்க வேண்டுமெனக் கருதியுள்ளார்.

''நின்றுஞ் சமனும் இருந்துணுந் தேரும்
நெறியலா தனபுறங் கூற
வென்று நஞ்சுண்ணும் பரிசினர் ஒருபால்''

என்னும் பத்தாவது பாடலில் அமைந்த குறிப்பு ஈழத்தவர்களது பிற சமயப் போக்கினைக் கண்டிக்கும் தன்மையிலமைந்துள்ளது. தமிழ்நாட்டில் சைவத்தை நிலைநிறுத்த எண்ணியதுபோலவே ஈழத்திலும் சைவத்தை சம்பந்தர் நிலைநிறுத்த எண்ணியமைக்கு இவ்வடிகளே சான்றுகளாகும்.

சம்பந்தரது ஏனைய பாடற் பதிகங்களோடு ஒப்பிடும்போது திருக்கோணமலைப் பதிகத்தின் சிறப்பினையும் உணரவேண்டும். தென்னாட்டுத் தலங்களைப்பற்றியும் சம்பந்தர் ஆய்வுகள் நடாத்தியுள்ளார் என்பது இதனால் புலப்படுகின்றது. தென்நாட்டிலே பல தலங்களுக்கும் சென்று பாடல்களைப் பாடிய சம்பந்தர் ஈழத்திற்கு வருகை தராமலே பாடிய பதிகம் இது என்பதாலும் இப்பதிகத்திற்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. இயற்கையழகினைப்பற்றிய குறிப்புக்கள் மட்டுந்தான் இப்பதிகத்தைத் திருக்கோணமலைப் பதிகமாக்கிக்காட்டுகின்றது. ஏனைய அம்சங்கள் யாவும் பிறதலங்களின் பதிகங்களுக்கு அமைக்கப்பட்ட பொது அமைப்பினையே கொண்டமைந்துள்ளன. ''கோணமா மலையமர்ந்தாரே'' என்ற சொற்றொடர் இப்பதிகத்தின் சிறப்பிற்கு முத்திரையாக விருக்கின்றது. சம்பந்தர் தனது பாடல்களில் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் குறிப்பிட்ட தலத்தின் பெயரை இணைத்துப் பாடுபவர். அதன்மூலம் அத்தலத்திற்குத் தனித்துவத்தை ஏற்படுத்துகின்ற ஒரு மரபினை ஆரம்பித்துவைத்த காரைக்காலம்மையாரின் வழிநடந்தவராகின்றார். பக்தியுணர்வினை முதன்முதல் ஊட்டுகின்ற பாடல்களைப் பாடியவர் காரைக்காலம்மையார். அதாவது திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் இதற்குச் சான்றுபகரும்.

''குண்டிலோமக் குழிச்சோற்றை வாங்கிக்
குறுநரி தின்னவதனை முன்னே
கண்டிலோ மென்று கனன்று பேய்கள்
கையடித் தோடிடு காடரங்கா
மண்டல நின்றங் குளாளமிட்டு
வாதித்து வீசியெடுத்த பாத
மண்டமுற நிமிர்ந்தநாடு குடும்பங்கள்
அப்பனடந் திருவாலங் காடே''

183618

என்னும் பாடலில் திருவாலங்காட்டின் பெயர் குறிப்பிடப்படுகின்றது. இதுபோன்றே சம்பந்தரும் தமது பாடல்களில் திருக்கோணமலைபற்றி ''கோணமாமலையமர்ந்தாரே'' என்று குறிப்பிடுகின்றார்.

இறைவன் புகழ்பரப்பும் எண்ணம்கொண்ட சம்பந்தர் தன்பணியை விரிவான முறையிலே செய்ய முனைந்துள்ளார். அதுவுமன்றித் திட்டமிட்ட முறையிலே தமக்கு பின்வருவோரும் பங்குகொள்ளக்கூடிய வகையிற் செய்துள்ளார். தான் மட்டும் சென்று தலங்களை வழிபட்டுப் பயன்பெறுமல் ஏனையோரையும் அழைத்துச்சென்று அடியார்கள் எனும் கூட்டத்தை ஆக்கினார். கோவில்களுக்குச் செல்லும் போது கூட்டமாகச் சென்று இறைவன் புகழைப் பலரும் சேர்ந்து பாடும்போது ஏற்படும் கூட்டுணர்வு சமயத்தின் வளர்ச்சிக்கு வழி வகுத்தது. சைவ நாயன்மார்கள் அடியார்கள் வரிசையிலே பலர் இவ்வாறு தோன்றிப் புகழ்பெற்றுள்ளனர்.

சம்பந்தரைப் பொறுத்தவரையில் வயதிலே மிகவும் இளையவராக இருந்தபோதும் தமது பணியினைச் சிறப்பாகச் செய்வதற்காகச் சில ஒழுங்கு முறைகளைக் கையாண்டுள்ளார். அம்முறையிலே தமக்கு முன்னோராக இருந்த காரைக்காலம்மையாரின் வழியைக் கடைப்பிடித்துள்ளார். பதிகம் என்கின்ற பத்துப் பாடல்கள் கொண்ட அமைப்பினை தலங்களைப் பாடுவதற்கு ஏற்ற அமைப்பாகக் கொண்டார். கோயிலை வலம் வந்து வணங்கும்போது இப்பாடல்கள் பத்தும் இசைப்பதற்குரிய சிறந்த பாடல்களாக அமைந்தன. ஈழத்துத் தலமொன்றிற்கு இத்தகைய பதிகமமைப்பினைக் கொண்ட பாடலை அமைத்தவர்களில் சம்பந்தர் சிறப்பிடம் பெறுகிறார். இதனால் தேவாரத் திருமுறைகளிலே ஈழத்துத் தலம்பற்றிய குறிப்பும் இடம்பெறலாயிற்று.

ஈழத்தைப் பொறுத்தவரையில் இங்கு வாழ்ந்த சைவ மக்களிடையே சமயவுணர்வு மட்டுமன்றி மொழியபிமானத்தை ஊட்டுவதற்கும் இப்பாடல்கள் உதவி பிரதேச ரீதியாகத் தலங்களின் வரலாறுகளை ஆராய முற்படுபவர்கள் இன்னும் கோணேஸ்வரப் பதிகத்தைப் பாடுகின்றனர். இந்த வகையில் இப்பதிகமானது ஈழத்து வரலாற்றினை அறிவதற்கு உதவும் இலக்கிய மூலாதாரமாகும் சிறப்பினைப் பெறுகின்றது. திருக்கோணமலைப் பிரதேசத்தின் வரலாற்றை ஆராய்பவர்க்கு வரலாற்றுத்தரவுகளும் ஒப்பிட்டாய்வு செய்வதற்குமுதவுகின்றன.

''குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றும்
கோணமா மலையமர்ந்தாரே''

என்னும் பகுதி இப்பண்பு கொண்டமைந்தது. தென்னகத்திற்கும் ஈழத்திற்குமுள்ள தொடர்பினை யறிவதற்கும் கோணேஸ்வரப் பதிகம் உதவுகின்றது. திருக்கோணமலை ஆலயம் கி. பி. 1622ல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துக்கேயரால் தரைமட்டமாக இடிக்கப்பட்டது. ஆனால் கோவிலைப்பற்றிய தகவல்களை மீண்டும் அறிய உதவு மூலாதாரங்களாகச் சம்பந்தரது பாடல்களும் உதவின. முத்திரைக் கவிதையிலே ஞானசம்பந்தர் தனது நோக்கத்தை தெளிவுபடுத்தியுள்ளார்:

குற்றமிலாதார் குரைகடல் சூழ்ந்த
  கோணமா மலையமர்ந்தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
  கருத்துடை ஞானசம்பந்தன்
உற்ற செந்தமிழார் மாலையீரைந்து
  உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்றமுமாகித் தொல் வினையடையார்
  தோன்றுவர் வானிடைப் பொலிந்தே.

ஈழத்துத் தலத்தின் சிறப்பு என்ற வகையிலேயே மட்டுமன்றி இறைவன் அமரும் கோயில் என்ற வகையில் சம்பந்தர் மக்கள் மனதிலே இறையருளைப் பரப்புவதற்காக எடுத்த இம்முயற்சி பல்வேறு பயன்களைத் தந்தது.

ஈழத்தில் சைவம் எத்தகைய நிலையிலிருந்தது என்பதைக் காட்டுவதற்கும் இது உதவியது. நாயன்மார்கள் பக்தி இலக்கியத்தினை ஆரம்பித்ததால் ஈழத்துக் கோவில்களும் தமது வளர்ச்சியிற் புதிய தொரு கட்டத்தையடைய முடிந்தது. வெறும் சமயக் கருத்துக்களும் அவைபற்றிய நம்பிக்கைகளும், சைவத்தின் வலிமையை நிலைநாட்டப் போதுமானவையல்ல என்பதனை நாயன்மார்களிற் சிறப்பாகச் சம்பந்தர் உணர்ந்தார். தலங்களின்மேற் பதிகங்கள் பாடுவதன்மூலம் தமது சமயக் கருத்துக்களின் செல்வாக்கினைப் பெருக்கிப் பிற மதங்களை வலியிழக்கச் செய்யலாம் என்ற நம்பிக்கை சம்பந்தருக்கிருந்தது. இந் நம்பிக்கையினாலேதான் தமிழ் நாட்டுத் தலங்களின் வரிசையிலே ஈழத்துக் கோணேஸ்வரக் கோயிலையும் அவர் சேர்த்துக்கொண்டார். ஈழத்துக் கோயில்களைப் பாடுவதன்மூலம் தமது சமய நம்பிக்கைகள் கடல் கடந்து பரவி நிலைபெற்றன என்பதை மற்றவர்க்கு உணர்த்த முற்பட்டார். பல்லவர் காலத்துத் தமிழ் நாட்டுப் பத்திஇலக்கியப் பேரில் ஈழத்துக் கோவில்களும் இணைக்கப்பட்டமையாலே தான் குறிப்பிட்ட கோயில்களை புராணக் கதைகளோடு தொடர்பு படுத்துகின்ற மரபும் ஏற்பட்டிருக்க வேண்டும். சம்பந்தர் பாடல்களிலே இராவணன் வீரத்தினை விட இறையன்புக்கு அழுத்தம் கொடுப்பது இதற்குச் சான்றாகும். காலத்தால் முற்பட்ட பெருஞ் சமயமாகச் சைவத்தைப் பிற மதங்களுக்கு காட்டுவதற்காக இம் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கவேண்டும். இதனால் ஈழத்துத் திருக்கோணேஸ்வரம் சிறப்பையும் வளர்ச்சியையும் பெற்றது; தேவாரப் புகழ் பெற்றது; நாயனாரின் சமயப் பணிக்குப் பயன்பட்டது. அது ஒன்றே இக்கோவில் வளர்ச்சி நிலையை எடுத்துக் காட்டுவது.

சம்பந்தரது பாடல்களைத் தொகுக்கும் முயற்சியிலீடுபட்டவர்கள் இப்பண்பு கண்டனர் எனலாம். பதிக வரலாறு அப்பாடல்களோடு இணைக்கப்படுவதன் மூலம் கோணேஸ்வரச் சிறப்பு நிலை பெறுவதாயிற்று. இப்பாடல்களைத் தொகுத்த தருமபுர ஆதினத்தார் பதிக வரலாறு எனப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளனர்.

''சேதுவின்கண் செங்கணவன் மால பூசை செய்த
சிவபெருமானைப் பாடிப்பணிந்து போற்றி
வாழ்ந்திருந்த
காலத்தில் ஆழிபுடை சூழ்ந்து ஒலிக்கும்
ஈழத்தலமென்று திருக் கோணமலையை மகிழ்ந்த
செங்கண் மழவிடையாரை வணங்கிப்
பாடியருளியது இப்பதிகம்.

தென்னாட்டுப் பதிகங்களின் வரலாற்றுடன் ஒப்பவைத்து திருக்கோணேஸ்வரமும் நோக்கப்பட்டதை இது உணர்த்துகின்றது.

சைவத்தின் பெருமையைக் காட்டும் குறிப்பும் ஒன்று இத்தொகுப்புக்களில் தெளிவுபடுத்தப்படுகின்றது.

''சமணர்கள் நின்றுண்பவர்
பௌத்தர்கள் இருந்துண்பவர்
எமது பெருமான் நஞ்சுண்பவர்
என்பது ஓர் நயம்''

இது பாடல்களைத் தொகுக்கும்போது காலத்தால் பிற்பட்டாலும் கூட அக்கருத்தினைத் தெளிவுபடுத்தவேண்டுமென்ற நோக்கு இருந்ததைப் புலப்படுத்துகிறது.

செந்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் இறைவன் புகழ் பாடியவர் சம்பந்தர். அவ்விறைவன் புகழ் அகிலமும் பரவவேண்டுமென்ற நற்பணியிலே திருக்கோணேஸ்வரப் பதிகம் சிறப்பிடம் பெற்றது. சைவ நிலையை எடுத்து விளக்கும் பதிகமாகவும் அமைந்தது. இனிய சந்தமும் சிறந்த பொருளும் கொண்ட இப்பதிகத்தை ஓதி இன்புறுபவர் பலர். இதனால் சம்பந்தரது கனவு இன்று நனவாகிவிட்டது. தேவாரப் பாடல்களினாற் சைவத்தின் வளர்ச்சி மட்டுமன்றிப் பேணலும் நடைபெறும் என்பதில் ஐயமில்லை.

யாரேடும் போல் அருளுடையார் இன் கமலத்
தாரேயுஞ் சென்னித் தமிழ் விரகன் - சீரேயுங்
கொச்சை வயன்றன் குரைகழற்கே மெச்சி
அடிமை செயப் பெற்றேன் அறிந்து.

(ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைப் பெரு வரலாறுகளில் கோணேஸ்வரம்

சைவப்புலவர், பண்டிதர் இ. வடிவேலு
திருக்கோணமலை.

திருக்கோணேஸ்வரத்தின் பழைய வரலாறுகளை இங்கே எடுத்துக்கூறுகின்றோம். கிறிஸ்து பிறப்பதற்கு 1300 ஆண்டுகளுக்கு முன் கோணேசர் ஆலயம் கட்டப்பட்டுள்ளது. அதாவது இற்றைக்கு 3000 ஆண்டுகட்கு முற்பட்ட வரலாற்றுப் பெருமையுடையது. புத்தபகவான் பிறப்பதற்கு சுமார் 800 ஆண்டுகட்குமுன் இவ்வாலயம் கட்டப்பட்டுள்ளது. இத்தகவல்கள் போத்துக்கீசரால் அழிக்கப்பட்ட கோணேசர் கோவில் கற்தூண்களில் உள்ள கல்வெட்டுக்களில் காணப்பட்ட செய்தியாகும். குவைரோஸ் பாதிரியார் எழுதிய ''கொண்குவிஸ்ரா'' என்ற நூலில் இச்செய்திகள் காணப்படுகின்றன. (பக்கம் - 51 ...கலாநிதி போல். ஈ. பீரிசின் பதிப்பு)

போத்துக்கல் நாட்டில் லிஸ்பெனிலுள்ள ''அஜடா'' நூல்நிலையத்திலுள்ள சுவடிகளில் பின்வரும் செய்திகள் காணப்படுகின்றன. (பக்கம் 51 VIII - 40) மனுராசா அல்லது மாணிக்கராசா என்னும் மன்னன் இலங்கையை ஆண்டான். அவன் கி. மு. 1300ம் ஆண்டு கோணேசர் கோவிலைக் கட்டினன் என்று கூறப்பட்டுள்ளது. இத்தகவல் றோயல் ஏசியாட்டிக் சொசைட்டி வெளியீடு தொகுதி XXX-80ல் 449ம் பக்கத்தில் காணப்படுகிறது.

இலங்கையை ஆண்ட மன்னன் இராவணன் திருக்கோணேசர் கோவிலோடு தொடர்புபட்டுள்ள வரலாறுகள் புராண, இதிகாசங்களிலும், தேவாரங்களிலும் காணப்படுகின்றன.

இவை சில உதாரணங்கள்:

''கரையார் கடல்சூழ் இலங்கையர்கோன்
முடிசிதறத்
தொலையா மலரடி யூன்றலும்
உள்ளம் விதிர்விதிர்த்து'' —
(திருநாவுக்கரசர் - திருக்கழுமலைப்பதிகம்)

''இலங்கை மன்னன்தனை
இடர்கண்டு அருள்செய்த
சலங்கொள் சென்னி
மன்னுவென்னத் தவமாமே'' ...
(திருஞானசம்பந்தர் - சீர்காழிப்பதிகம்)

''திரையினார் கடல்சூழ்ந்த
தென்னிலங் கையர்கோனை
செற்றவனைச் செஞ்சடைமேல்
வெண்மதியினனை'' ...
(சுந்தரர்-திருக்கானாட்டு முள்ளூர்ப்பதிகம்)

இந்த இராவணனும், அவனுடைய தாயாரும் கோணேஸ்வரத்தைப் பக்தியுடன் வழிபட்டுவந்தார்கள். திருக்கோணேஸ்வரத்திலுள்ள மலையின் கிழக்குப் பக்கத்தில் உள்ள இராவணன் வெட்டு என்னும் மலைப்பிளவு இதற்கு ஆதாரமாயுள்ளது.

இந்துக்களின் மகரிஷிகளில் ஒருவராகிய அகத்திய முனிவர் கோணேஸ்வரத்தை வழிபட்டுவந்தவர். அகத்தியரின் வரலாறுகள் புராண, இதிகாசக் குறிப்புக்களில் காணப்படுகின்றது. அகத்தியர் கோணேஸ்வரத்தைத் தரிசித்து வழிபட்டபின் திருக்கோணமலைக்குச் சமீபமாகவுள்ள கங்குவேலி என்று இன்று வழங்கிவரும் திருமங்கலாய் நகரில் இருந்து தவஞ் செய்துவந்தார். அகத்தியர் ஸ்தாபனம் என்ற இடம் இன்றும் அங்கிருக்கின்றது. அந்தத் தலத்திற்குரிய திருக்கரசைப் புராணத்தில் அகத்தியருடைய வரலாறு உண்டு. இவ்வரலாற்றை ஆராய்ந்த சரித்திர ஆசிரியர்களின் கணிப்பின்படி அகத்தியர் காலம் கி. மு. 1000 ஆண்டுகட்கு முற்பட்டதென்று காணப்படுவதால் இவ்வாலயம் அகத்தியர் காலத்திலிருந்ததென்பதைத் திடமாகக் கொள்ளலாம்.

திருக்கோணமலையில் பிரடெறிக்கோட்டை வாசலில் இருபக்கங்களிலுமுள்ள தூண்களில் பாண்டிய மன்னனுடைய இரட்டை மீன் இலச்சினை பொறிக்கப்பட்டிருப்பதை இன்றுங்காணலாம். இத்தூண்கள் போத்துக்கீசரால் அழிக்கப்பட்ட கோணேசர் கோவிலில் இருந்த பழைய கற்தூண்களாகும். பாண்டிய மன்னர்கள் அநுராதபுரத்திலிருந்து கலியப்தம் 433 - 460 வரை ஆட்சிபுரிந்திருக்கின்றார்கள்.

பாண்டியமன்னன் (SAKA - 436AC) (கலியாப்தம்) ஆட்சிபுரிந்த காலத்தில் மனுநீதி கண்ட சோழனின் (வரராயதேவன்) மகனாகிய குளக்கோட்டு மன்னன் திருக்கோணமலைக்குவந்து கோணேசர் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்தான் என்று யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது. அனுராதபுரத்திலிருந்து பாண்டியமன்னர்கள் ஆட்சிபுரிந்த காலத்தில் குளக்கோட்டுமன்னன் சோழநாட்டிலிருந்து வந்து திருக்கோணமலையில் கோணேசர் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்துள்ளான் என்பதற்கு பிரடெறிக் கோட்டை வாசலிலுள்ள கல்வெட்டுப்பாடல் சான்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாடல் இது -

முன்னே குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியைப்
பின்னே பறங்கி பிரிக்கவே — மன்னுகேள்
பூனைக்கண் செங்கண் புகைக்கண்ண ருண்டபின்
தானே வடுகாய் விடும்.

7ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த சைவசமய குரவராகிய திருஞானசம்பந்தர் திருக்கோணேஸ்வரத்தைத் தேவாரப் பதிகங்களால் பாடியுள்ளார்.

''நிரைகழல் அரவம் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்தும் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றி
குரைகட லோதம் நித்திலங் கொளிக்கும்
கோணமா மலையமர்ந் தாரே.''

அவர்பாடிய திருக்கோணசலப் பாடல்கள் பத்தில் இதுவுமொன்று. திருஞானசம்பந்தரின் பாடலின்படி கோணேசர் கோணமாமலையில் அமர்ந்திருந்ததாகவும், மலையில் கோயிலும் பாபநாசத் தீர்த்தமும் இருந்ததாகப் பாடியுள்ளார்.

15ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த அருணகிரிநாத சுவாமிகள் கோணேஸ்வரத்திற்குத் திருப்புகழ் பாடியுள்ளார். ''விலைக்கு மேனியில் அணிக்கோவை மேகலை'' என்று தொடங்கும் பாடலில்

''திருக்கோணமலைத் தலத்தாரு கோபுர
நிலைக்குள் வாயிலுள் கிளிப்பாடு பதியில் -
வருவானே. என்று பாடியுள்ளார்.

குளக்கோட்டு மன்னனுடைய திருப்பணிகளை விளக்கிக் கூறும் கோணேசர் கல்வெட்டு என்ற நூலில் அம்மன்னன் புனருத்தாரணம் செய்த ஆலயத்தின் சிறப்பு ஒரு பாடலில் தரப்பட்டிருக்கிறது. அப்பாடல் இது.

''திருந்து கலிபிறந்து ஐநூற்றெருபதுடன்
இரண்டாண்டு சென்றபின்னர்
புரிந்திடபமா தமதில் ஈரைந்தாந்தேதி
புணர் நன்னுளில்
தெரிந்தபுகழ் ஆலயமும் சினகரமும்
கோபுரமும் தேரூர்வீதி
பரிந்துரத்ன மணிமதிலும் பாபநாசச்சுனையும்
பகுத்தான் மேலோன்.''

திருஞானசம்பந்தருடைய பாடலிலும், கல்வெட்டுப் பாடலிலும் கூறப்படும் செய்திகளிலிருந்து கோணேசர் கோயில் இருந்த இடமும் கோயிலினுடைய அமைப்பும் சிறப்பும் அறியக்கூடியதாயிருக்கின்றது.

இலங்கையை அரசாண்ட போத்துக்கேயர்களின் பதிவேடுகளில், திருக்கோணேஸ்வரத்தை அழித்த கொன்ஸ்ரன்ரையின் டீசா வரைந்த படங்கள், குறிப்புகள், கட்டிடப்படங்கள் ஆகியவற்றில் அவனால் அழிக்கப்பட்ட ஆலயத்தின் பரப்புத் தரப்பட்டுள்ளது. கோபுரம் அமைந்த நிலத்தின் நீளம் 600 பாகம். அகலம் 80 பாகம். அது ஒடுங்கி ஒடுங்கிச்சென்று 30 பாகமாயிருந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கூற்றின்படி தற்போது ஆலயம் இருக்கும் கோட்டைப்பகுதி முழுவதும், ஆலயப் பிரதேசமாயிருந்ததென்பதை அறிகிறோம். எனவே நாலு நூற்றுண்டுகளுக்குமுன் இப்பொழுது கோட்டை அமைந்திருக்கும் முழு நிலப்பரப்பும் கோணேசராலயத்திற்குரியதாக இருந்ததென்பதை போத்துக்கீசரின் பதிவேடுகள் உறுதிப்படுத்துகின்றன.

கலாநிதி போல். ஈ. பீரிஸ் என்பவர் எழுதிய ''இலங்கை'' என்னும் தனது நூலில் போத்துக்கீசர் காலம் என்ற பகுதியில் தொகுதி ஒன்று 328 ஆம் பக்கத்தில் பின்வருமாறு எழுதியுள்ளார். ''திருக்கோணமலையில் பெரிய வளைகுடாப் பகுதி தற்கால உலகில் மிகவும் பிரபல்யம் அடைந்துள்ளது. இங்குள்ள ஆலயம் கிழக்குலகின் தீபமாகப் பிரபல்யமடைந்துள்ளது. கோணேசர் மலைப்பகுதியிலுள்ள மூன்று ஆலயங்களில் நடுவேயுள்ள மிகப் பெரிய உயர்ந்த ஆலயக் கோபுரத்திலிருந்து சமயப் பிடிவாதகாரர் கீழேயுள்ள கடலில் குதித்து உயிர்த்தியாகம் செய்வார்கள். இந்நிகழ்ச்சி இவ்வாலயத்தில் வழக்கமாக நடைபெறுவதுபோலத் தெரிகின்றது. இங்கே உள்ள கோபுரம் கடலில் மிகத்தூரத்தில் செல்லும் மாலுமிகளையும் கவரக் கூடியதாக அமைக்கப்பட்டிருந்தது. நுனே அஸ்வரஸ் பெரரா போத்துக்கீச தளபதியாயிருந்த காலத்தில் இவ்வாலயத்தை அழிப்பதற்குப் போத்துக்கீசர் செய்த சதித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக அனுப்பப்பட்ட கனேசிஸ் (Ganezes) ஜெடாக்கஸ் (Jedacas) என்பவர்கள் ஒருவர் பின் ஒருவராகப் படுகொலை செய்யப்பட்டார்கள். இதையடுத்து கொன்ஸ்ரன்ரைன் டீசா என்பவனால் கி. பி. 1624 இல் இவ்வாலயம் அழிக்கப்பட்டது. அக்கோயில்களின் கற்கள் கோட்டை கட்டுவதற்கு உபயோகிக்கப்பட்டுள்ளன. அக்கோயிலில் இருந்த பழைய கல்வெட்டொன்று கோட்டை வாசலில் வைத்து கட்டப்பட்டு அதன் படமொன்று போத்துக்கீச அரசனுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஏனெனில், பறங்கியரால் இவ்வாலயம் அழிக்கப்படுமென்ற தீர்க்க தரிசனம் இக்கல்வெட்டில் காணப்படுவதாலேயாகும்.''

கலாநிதி போல் ஈ. பீரிஸ் என்பவர் எழுதிய நூலின் தொகுதி இரண்டு 168 ஆம் பக்கத்தில் கூறப்படுவதாவது. ''1624 ஆம் ஆண்டில் கோடைகாலத்தில் டீசா என்பவன் கோணேசர் கோவிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிக்கும் காரியத்தில் ஈடுபட்டான். அவன் இவ் வழிவு வேலையைச் செய்வதற்குத் தெரிவுசெய்த இடம் கோணேசர் மலையின் உச்சிப்பகுதியாகும். கோணேசர்மலை பட்டணத்தோடு நீண்டு தொடர் புற்றுக்கிடக்கின்றது. அப்பகுதியில் மூன்று ஆலயங் களிருந்தன. ஒன்று மலை அடிவாரத்திலும், அடுத் தது இடைநடுவிலும் இருந்தன. கடல்மட்டத்தி லிருந்து 400 அடி உயரமான மலையுச்சியில்தான் மூன் றுவதான மிகப்பிரபல்யமான ஆலயம் அமைந்திருந் தது. மிகச்சிறப்புள்ள தலமாக இது விளங்கியுள் ளது. நிறைந்த செல்வமும், தோற்றப்பொலிவு முள்ள ஆலயமாகவும் இது விளங்கியுள்ளது. இதனை அழித்து முக்கோண வடிவமான கோட்டையைக் கட்டினார்கள். இக்கோட்டை கல்லினாலும், சாந்தினா லும் கட்டப்பட்டுள்ளது.''

போத்துக்கீச சரித்திர நூலாசிரியராகிய டீ. குவைரோஸ் பாதிரியார் தனது நூலில் பாகம் 2, பக் கம் 236 இல் பின்வருமாறு கூறுகின்றார். ''கிழக் கின் ரோமாபுரியாக இவ்வாலயம் விளங்குகின்றது. பூரிஜெகன்னாத் ஆலயத்திற்கும், இராமேஸ்வரத்திற் கும் போய்த் தரிசனம் செய்துவரும் யாத்திரிகர் களிலும் பார்க்க, மிக அதிகமான யாத்திரிகர்கள் இவ்வாலயத்தைத் தரிசித்து வருகின்றார்கள்.'' இதே ஆசிரியர் இங்கிருந்த கோணேசர் ஆலயத்தைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார். ''திருக் கோணமலைத் துறைமுகத்தில் தரைப்பகுதியிலிருந்து கடலுக்குள் நீண்டிருக்கும் மலையின்மேல் இலங்கை மன்னர்கள் மூன்று ஆலயங்களைக் கட்டினார்கள். அவற்றிலிரண்டு இரு தொங்கலிலும் மற்றது இடை நடுவிலும் கட்டப்பட்டிருந்தது. கடலினுள் நீண் டிருக்கும் மலைப்பகுதியில் மிக உயரத்தில் இருந்த ஆலயமே இந்திய நாட்டு இந்துக்களாலும் முக்கியத் துவம் கொடுத்துப் போற்றி வணங்கப்பட்டுவந்த ஆலயமாகும்.''

கி. பி. 1860 ஆம் ஆண்டு சேர் எமேசன் ரெனற் என்பவர் தான் எழுதிய இலங்கை என்னும் நூலில் பின்வருமாறு கூறுகின்றார்.

''இலங்கைக்கு வந்த போத்துக்கீசர் ஆரம்ப காலத்தில் திருக்கோணமலையைக் கைப்பற்றி தமது ஆட்சிக்குட்படுத்த வேண்டுமென்று சிறிதளவும் அக் கறை கொள்ளவில்லை. ஆனால் டச்சுக்காரர் இலங் கைக்கு வந்து கண்டி மன்னர் உடன்படிக்கை செய்த பின்னரே அக்கறை செலுத்தத் தொடங்கினார்கள். கி. பி. 1622 ம் ஆண்டு கொன்ஸ்ரன்ரைன் டீசா டச்சுக்காரர் இலங்கையில் ஆதிக்கம் செலுத்துவதன் அபாயத்தை உணர்ந்து மட்டக்களப்பு திருக்கோண மலை ஆகிய இரண்டு துறைமுகங்களையும் கைப் பற்றினான். அந்த நேரத்தில் திருக்கோணமலையி லிருந்த ஆயிரம் தூண்கள்கொண்ட ஆலயத்தை அழித்து அதன் பகுதிகளைக்கொண்டு கோட்டை யைக் கட்டினான். அழிக்கப்பட்ட இந்த ஆலயத் தின் விக்கிரகங்கள் சில தற்போது தம்பலகமம் கோணேசர் ஆலயத்தில் இருக்கின்றன. இவ்வாலயத் தின் அழிவு சிதைவாய் இருந்த கற்களும் கல்வெட்டுக் களும் கோட்டைச்சுவர்களிலும் பீரங்கி வைக்கப் பட்டிருந்த மேடையின் அடித்தளங்களிலும் பயன் படுத்தப்பட்டன. ஆலயம் அழிக்கப்பட்ட பின்னர் கைக்குன்றின் அடியிலுள்ள குகைவாயில் போன்று காணப்படும் இடத்தைக் குறித்து இந்துக்கள் தங் கள் வணக்கத்தைச் செலுத்தி வந்தார்கள். ஆண்டுக் கொருமுறை பக்தர்கள் கடலுக்குள் நீண்டிருக்கும் பாறையில் கூடி ஒரு தொகையான சடங்குகளை செய்து முடித்தபின் மக்கள் கடலுக்குள் இருக்கும் பாறையை நோக்கித் தேங்காய்களை எறிந்து உடைப் பார்கள். அங்கு பூசை நடத்தும் பூசகர் பஞ்சா லாத்தி என்னும் தீபத்தை தன் தலையின்மேல் தூக் கிக்காட்டி பூசையை முடிப்பார். இத்தீப ஒளி கடலிலும் வெகுதூரத்துக்கு தெரியக்கூடியதாய் இருந்தது.

சேர். எமேசன் ரெனற் என்பவர் எழுதிய இலங் கைச் சரித்திரம் இரண்டாம் பாகம் 484 - 485 ஆம் பக்கங்களில் பின்வரும் விபரங்கள் காணப்படுகின் றன. கி. பி. 1639 ஆம் ஆண்டில் டச்சுக்காரர்கள் திருக்கோணமலையைக் கைப்பற்றி மிகுதியாகவுள்ள கற்களையும் தூண்களையும் இடித்து ஆலயத்தின் ஏனைய பொருட்களையும் எடுத்துத் தங்களுடைய கோட்டையைக் கட்டப் பயன்படுத்தினார்கள். இங் குள்ள சில இடங்களுக்கு டச்சுப் பெயர்களையும் சூட்டினார்கள். இவ்வாறு இவர்கள் கொள்ளையடித்து ஆலயப் பொருட்களைச் சிதைத்த போதும் பக்தர் கள் ஒளித்திருந்து தங்கள் வணக்கத்தை செலுத்தி வந்தார்கள். ஆங்கிலேயர் ஆட்சியில் கி. பி. 1890 ல் மத்திய மாகாண அரசாங்க அதிபராய் இருந்த ஹென்றி டபிள்யூ. கேவ் அவர்கள் எழுதிய இலங் கை என்னும் சரித்திர நூலில் திருக்கோணேஸ் வரத்தைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார். திருக் கோணமலையில் கடலுக்குள் நீண்டிருக்கும் குன்று மிகப்பழமை வய்ந்ததும் மனத்தைக் கவரக்கூடிய வரலாற்றுச் சம்பவங்களைக் கொண்டதுமாகும்.

குறிப்பிட்ட குன்று ஆழ்கடலினுளிருந்து எழுந்து 400 அடி உயரத்தில் அழகுற நிமிர்ந்து நிற்கின்றது. இந்துக்களின் வரலாற்றுச் செல்வங்களைக் கொண் டதாக விளங்குகின்றது. புத்தர் பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்தே இந்துக்கள் இதை ஒரு புனித இடமாகப் போற்றி வந்துள்ளார்கள். தங்களைப் பிராமணர் என்று சொல்லிக்கொள்ளும் ஒரு சாரார் (ஆரியர்) தென்னிந்திய கலைச்செல் வங்களைக் கொண்டதாக விளங்குகிற தூபி, கோபுரம் என்பன உடையதாக ஆலயங்களைக் கட் டியிருந்தார்கள். ஆயிரங்கால் மண்டபத்தைக் கொண்டதாயும் இருந்தது. போத்துக்கீசர் இக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலை இடித்தழித்த பின் இப்பொழுது அந்த
இடம் வெற்றிடமாகக் காட்சியளிக்கிறது. போத்
துக்கீசரின் அக்கிரமத்துக்கு எடுத்துக் காட்டாக
இப்போது விளங்குகின்றது. இதனைப் பார்த்தால்
யாரும் வருத்தப்படாமல் இருக்கமுடியாது. ஒருசிறு
காரணமும் இல்லாமல் இவ்வாலயம் அழிக்கப்பட்டு
விட்டது. எனினும் இந்துக்கள் அந்த வெற்றிடத்
தைச் சிவவழிபாட்டுத் தலமாக மதித்து வழிபட்டு
வருகிறார்கள். பிரடெறிக் கோட்டையை பிரித்
தானியர் கைப்பற்றிய பின்னர் வருடத்துக்கு ஒரு
முறை இவ்வாலயம் இருந்த இடத்தில் இந்துக்கள்
வழிபாடு செய்வதற்கு உரிமை வழங்கப்பட்டு இருந்
தது. தெய்வநிந்தனைக்குரியதும் வருத்தத்துக்குரியது
மான செயலை 17ம் நூற்றாண்டில் போத்துக்கீசர்
செய்த போதிலும் இன்னமும் அந்த இடம் புனிதமும்
மேன்மைக்குரிய வழிபாட்டுத் தலமுமாக இருந்து
வருகின்றது.

இதுவரை கூறிய விஷயங்களிலிருந்து சரித்திர
ஆய்வாளர்கள் கோணேஸ்வர மலைப்பிரதேசத்தில்
பௌத்த ஆலயங்களோ விகாரைகளோ தாபனங்
களோ இருந்ததாகக் கூறவில்லை. ஆதலால்
கோணேஸ்வர மலைப்பிரதேசம் இந்துக்களுக்கே
உரியதாகும்.

கி. பி. 1795 ஆம் ஆண்டில் பிரித்தானியர்
கோட்டையைக் கைப்பற்றினார்கள். அவர்கள் எல்
லோருக்கும் வணக்க உரிமை இருக்கவேண்டுமென்ற
பரந்த மனப்பான்மை உடையவர்களாகையால்
பக்தர்கள் சென்று வழிபடுவதை தடுக்கவில்லை.
இரண்டாவது மகா யுத்த காலத்தில் கோட்டைப்
பிரதேசம் பாதுகாப்புக்குரிய தலமாக இருந்த
போதிலும் பிரித்தானியர் மக்களின் வழிபாட்டைத்
தடை செய்யாமல் வழிபாட்டுக்குரிய வசதிகளை
எல்லாம் செய்து கொடுத்திருந்தார்கள். அவர்கள்
கோணேஸ்வரத்திலுள்ள தெய்வீக சக்திக்கு மதிப்
பும் மரியாதையும் கொடுத்தார்கள். அதன் பயனை
யும் யுத்தகாலத்தில் அநுபவித்தார்கள். யப்பானியர்
மாரிபோல் பொழிந்த குண்டுகளில் ஒன்றேனும்
கோணேசர் மலைப்பிரதேசத்தில் விழவில்லை என்
பது சிந்தனைக்குரிய சம்பவமாகும்.

போத்துக்கீசர் ஆலயத்தை அழித்தபோது
சில பக்தர்கள் ஆலயத்திலிருந்த சில விக்கிரகங்களை
எடுத்துச் சென்று நிலத்தில் புதைத்து வைத்திருந்
தார்கள். அவைகள் 1950ஆம் ஆண்டு திருவருளால்
வெளிப்பட்டன. பிள்ளையார், சிவன், பார்வதி,
திருவெங்கவடிவ அம்பாள், அஷ்திர தேவர்,
சந்திரசேகரர், அன்னவாகனம் முதலிய இத்திரு
வுருவங்கள் வெளிப்பட்டபோது அவற்றை இலங்கை
முழுவதும் ஊர்வலமாக எடுத்துச்சென்று பக்தர்
களின் தரிசனத்துக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. சைவப்
பெருமக்கள் முன்னர் ஆலயம் இருந்த இடத்திலேயே
திருக்கோயிலைக்கட்டி இந்த விக்கிரகங்களைப் பிர
திஷ்டை செய்தார்கள். 1963ஆம் ஆண்டு கும்பா
பிஷேகம் நடைபெற்றது. இப்பொழுது இந்த
ஆலயம் சைவப் பொதுமக்களிலிருந்து தெரிவு
செய்யப்பட்ட தர்மகர்த்தா சபையினால் நிர்வகிக்
கப்பட்டு வருகின்றது. இவ்வாலயத்தைப் பழம்
பெருநிலைக்குக் கொண்டுவருவதற்கு இன்னும்
அநேக காரியங்கள் செய்யவேண்டியிருக்கின்றது.
இவ்வாலயம் பிறநாட்டுப் படையெடுப்பாளர்
களாலும் கொள்ளையடிப்பாளர்களாலும் சிதைக்
கப்பட்டதோடு இவ்வாலயத்துக்கு குளக்கோட்டு
மன்னனாலும் பிறராலும் மானியமாக வழங்கப்பட்ட
கந்தளாய், தம்பலகமம், கொட்டியாபுரம் முதலிய
பகுதிகளிலுள்ள வயல்கள் எல்லாவற்றையும் இழந்த
நிலையில் இன்று இருக்கின்றது. கஜபாகு மன்னனும்
இவ்வாலயத்துக்கு மானியமாக வயல்நிலங்களை
வழங்கியுள்ளான் என்று கல்வெட்டுக் கூறுகின்றது.
கோணேஸ்வர ஆலயம் உள்ள கோட்டைப் பிரதேசம்
முழுவதும் இவ்வாலயத்துக்குரியதென ஐயத்துக்கு
இடமின்றி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த
ஸ்தலத்துக்கு இந்தியா, பர்மா, தாய்லாந்து
முதலிய கிழக்குநாடுகளிலிருந்து வந்து வழிபாடு
செய்து சென்றிருக்கின்றார்கள். எங்கெல்லாம் இந்துக்
கள் வாழ்கின்றார்களோ அவர்கள் எல்லாம் இங்கு
வந்து வழிபட்டுச் செல்லவேண்டுமென்பதே எங்கள்
விருப்பம்.

தெக்ஷணகைலாயம் எனப்படும் கோணேஸ்
வரத்தில் எழுந்தருளியிருக்கும் மாதுமையம்பாள்
சமேத கோணேசப் பெருமானையும் பாபநாச தீர்த்
தத்தையும், தலவிருட்சமாகிய கல்லாலினையும்
பண்டுபோல் இன்றும் இனிமேலும் சிறப்புற்றோங்கத்
திருவருள் பாலிப்பதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தக்ஷிணகைலாச மகாத்மியத்தில் திருக்கோணேஸ்வரம்

மூலம் :
சம்ஸ்கிருத தக்ஷிண கைலாச மாஹாத்மியம்

மொழிபெயர்ப்பு: **வியாகரண சிரோமணி** (அண்ணுமலை சர்வகலாசாலை)
**பூரண - தியாகராஜக் குருக்கள்,** B. A. Hons. (Cey.)
சம்ஸ்கிருத, இந்துநாகரிக விரிவுரையாளர், சிவாநந்த வித்தியாலயம். மட்டக்களப்பு.

— முன்னுரை —

இவ்வுலகினில் மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூவகைப் புண்ணியச் சிறப்புக்களமைந்த பல புண்ணிய ஸ்தலங்களைத் தன்னகத்தே கொண்டதும், **'நகரீஷு லங்கா'** (நகரங்களிற் சிறந்தது இலங்கையே) எனப் புகழப்படுவதுமான இவ்விலங்கையின்கண் தேவாரப் பதிகம்பெற்ற ஸ்தலங்களிரண்டினுள் திருகோணமலையுமொன்ருகும். ஞானப் பாலுண்டு உலகினுக்கு ஞானமூட்டிய ஞான சம்பந்த ஸ்வாமிகளாலும், அருணகிரிநாத ஸ்வாமிகளாலும் ஏத்திப் பாடப்பெற்றதும், புராண, இதிகாசத் தொடர்புடையதும் இத்திருத்தலமாகும். மேலும், **கிரிப்ராந்தம்** (மலை, அல்லது மலையினருகிலிருப்பது - பழனி முதலியன) **வநப்ராந்தம்** (காடு, அல்லதுகாட்டினருகிலுள்ளது - கதிர்காமம் முதலிய ஸ்தலம்) **சமுத்ரப்ராந்தம்** (கடலினருகிலிருப்பது - திருச்செந்தூர் முதலியன) ஆகிய ஸ்தலங்கள் மிக்க அருட்சக்தி வாய்ந்தன. மலையிலிருப்பது, கடலாற் சூழப்பட்டிருத்தல், காட்டினருகில் இருத்தல் ஆகிய மூவகைச் சிறப்பினையும் ஒருங்கே கொண்டிருப்பதனுல் இதன் பெருமை அளவிடற் கரியது.

இதற்கே தக்ஷிணகைலாசமெனப் பெயருமுண்டு. இத்தலத்தின் மகத்துவத்தை தக்ஷிணகைலாச புராணம், திரிகோணசல புராணம் முதலியவற்ருல் அறியலாம்.

பெருமானின் திருநாமம் கோணேசர் அம்பிகையின் திருநாமம் மாதுமையம்மை, (ஹம்சகமனும்பிகை - பிடியன்ன மென்னடை யம்மனெனவும் வழங்குவர்.) இதனை உமாபதி சிவாசாரியார் அருளிய சிவநாமக் கலிவெண்பாவில்,

''மன்னுதிரு கோணமாமலையின் மாதுமைசேர்
பொன்னே கோணேசப் புராதனு''

என்று வருவதாலறியலாம்.

சிவநேயச் செல்வர்களின் நன்முயற்சியினுல் கும்பாபிஷேகம் நிகழப்போகும் இச்சுபதினத்தில் இத்தலத்தின் பெருமையினை விளக்கும் ஸ்கந்த புராணத்து ''தக்ஷிண கைலாச மகாத்மியம்'' என்ற சம்ஸ்கிருத நூலில் கூறப்பட்டுள்ள ''தக்ஷிண கைலாசமெனும் திருகோணமலையின் பெருமை'' ''தக்ஷிண கைலாச வர்ணனை'' ஆகிய பகுதிகளைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுதல் அடியார்களுக்குப் பயனளிக்கும் என்ற எண்ணத்தால் ''தாயினும் நல்ல தலைவரென்று அடியார் தம்மடி போற்றிசைப்பார்கள் வாயினும் மனத்தும் மருவிநின் றகலா மாண்பின''ரான கோணேசப் பெருமானின் பாதகமலங்களைப் பன்முறை பரவித் துணிந்துள்ளேன்.

## மொழிபெயர்ப்பு

ஸ்ரீ சூதமகாமுனிவர் கூறினர்:

முனிவர்களே! தக்ஷிண கைலாச க்ஷேத்திரத்தின் பெருமையினைக் கூறுவேன். ஆதரவுடன் கேட்பீராக. இதனைப் பக்தியுடன் கேட்போரும், படிப்போரும் பிரமஹத்தி முதலிய பாவங்களினின்றும் நீங்குவர். சந்தேகமேயில்லை.

முற்காலத்தில் இப்பரந்த உலகமழிய (உலகமுடிவில்) பிரளயகாலச் சமுத்திரத்தில் தோன்றிய பிந்து ரூபமான பராசக்தி குமிழி உருவமாக அதன் நடுவில் தோன்ற, அதனைக் கண்ணுற்ற நாதரூபியான மஹேஸ்வரன் தனது நெற்றிக்கண்ணுல் அதனை நோக்கி அக்கணமே வற்றச்செய்தார். குமிழிரூபமான அவ்வஸ்து வெள்ளிமயமான மலையாக ஆனது. அஃதே கைலாசமெனும் பெயரில் எல்லாவுலகிலும் புகழ்பெற்றது.

அங்கே அழகிய மண்டபத்தின்கண் இரத்தின மயமான பீடத்தில் உலகினுக்கு நன்மை புரிபவரான சிவபெருமான் வீற்றிருந்தருளினர். நந்திதேவரும் பிருங்கி முனிவரும் பலவிதமாகத் தோத்திரம் புரிந்தனர். தும்புருவும் நாரதரும் கலாவதி, மகதி எனும் யாழ்களைக் கையினிலேந்தி சிவபிரானின் இருமருங்கிலும் நின்று பாடினர். சித்தர், கந்தருவர்கள் ராகத்துடன் கானம் செய்தனர். அப்சரஸ்திரீகள் நாட்டியமாடினர். பிரமன், விஷ்ணு, மகேந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரன் முதலிய தேவர்கள் எப்போதும் அங்கேயே இருந்தனர்.

இச்சமயத்தில் சிவபெருமான் சபையின்கண்ணே யுள்ள தேவர்களைப்பார்த்துப் புன்சிரிப்புடன் ''ஓ தேவர்களே! கேளுங்கள், படைத்தலுக்குப் பிரம தேவனையும், காத்தலுக்கு விஷ்ணுவையும், அழித்த லுக்கு உருத்திரனையும், உலகினைத் தாங்குவதற்கு ஆதிசேடனையும் நியமிக்கிறேன்'' என மொழிந்தார்.

இவ்வாக்கியத்தைக் கேட்டு மிகவும் கோப மடைந்த வாயுதேவன் ''அநந்தனுக்கு (ஆதிசேட னுக்கு) உலகினைத் தாங்குவதற்கு என்னைக்காட்டி லும் அதிக பலமுண்டோ?'' என்று ஆத்திரத்துடன் கூறினர். அதனைக்கேட்டுக் கோபமடைந்த ஆயிரந் தலைகளையுடைய ஆதிசேஷன் ''வாயுவே! எனக்கு ஆகாரமாக உள்ள நீ எவ்வாறு பலவானுவாய்? நானே வெனில் எல்லா உலகினுக்கும் கண்களான சூரிய சந் திரர்களையே விழுங்கிப் பின் அவர்களை நீக்குகிறேன்'' எனப் பதில் கூறினர். இதனைச் செவியுற்ற வாயுதே வன் கோபமடைந்து ஆதிசேடனை நோக்கி 'இது எவ் வாறு நிகழும்? எனது உயிரை நானன்றே தாங்கு கின்றேன். கருடனைக் கண்டதும் உனது கர்வம் அடங்கிவிடுமே! என்று கூறினர். இவ்வாறு நானே பலவான், நானே கெட்டிக்காரன் என்று அவ் விருவருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று. பின்பு சிவபெருமானின் கட்டளைப்படி சர்ப்பராசனுன ஆதி சேடன் கைலாச மலையின் சிகரங்களைத் தனது படத் தினுல் மூடித் தனது நீண்ட வாலினுல் மலையின் அடிப்பாகத்தையும் சுற்றியது. அதைக்கண்டு கோபத்தினுல் சிவந்த கண்களையுடைய வாயுதேவன் விரைவாகப் பேருருவமெடுத்து சர்ப்பராசனைத் தாக்கியது. அவ்வேளையில் உலகமெல்லாம் பயத்தி னுற் கலங்கியது. தேவர்களும் முனிவர்களும் நிலை தளர்ந்தனர். அப்போது தேவர்கள் சிவனைக் குறித்து ''கைலாசநாதனே! தேவர் தலைவனே! பார்வதி நாயகா! கருணைக்கடலே! எங்களைக் காப் பாற்றுக, பயத்தை நீக்குக'' எனத் தோத்தரித் தனர். இத்தோத்திரத்தினுல் மகிழ்ச்சியடைந்த மாதொருபாகனுகிய பரமன் பிரமனை நோக்கி ''பிரமதேவனே திரிகோண வடிவான மலையுச்சியில் எனக்கு ஒரு அழகான பீடத்தினை அமைப்பாயாக'' என்று திருவாய்மலர்ந்தருளப் பிரமனும் ''அவ் வாறே ஆகுக'' என்று கூறி, கோடி சூரியர்கள்போல் மிளிர்கின்றதும், கோடி சந்திரர்போல் குளிர்ச்சி யானதும், நவரத்தினங்கள் பதிக்கப்பெற்றதுமாகிய அழகிய சிங்காசனம் ஒன்றைத் திரிகோணவடிவான மலையுச்சியினில் படைத்தார். அந்தப் பீடத்தைக் கண்டு மகிழ்ச்சியடைந்த மகாதேவன் சுவர்ணலிங்க உருவத்துடன் அம்பிகையோடு கூட, பிரமன், விஷ்ணு, மகேந்திரன் முதலிய தேவர்களும் முனிவர் களும் புடைசூழ அதில் அமர்ந்தருளினுர்.

அதன்பின் சிவபெருமான் ஆதிசேடனை நோக்கிப் பின்வருமாறு கூறினுர். ''ஆதிசேடனே! கேள்! மிக அற்புதமான ரகசியத்தைக் கூறுகின்றேன். குமாரி கண்டமே எல்லாக்கண்டங்களிலும் சிறந்தது. அதன் தென்பாகத்தில் என்மனம் ஈடுபடுகின்றது. உங்கள் விரோதம் போதும், நீவிர் சமபலமுள்ள வர்களே! சர்ப்பராச! உலகின் நன்மையை விரும்பி உனது படங்களிலொன்றை எடுப்பாயாக (விலக்கு வாயாக)'' என்றுர். ஆதிசேடனும் ''அவ்வாறே யாகுக'' என்று கூறி ஒரு படத்தைச் சுருக்கியது. அந்நேரத்தில் வாயுதேவன் சிவனருளால் கைலா சத்தின் தென்பாகத்தில் உள்ள மூன்று சிகரங்களைப் பிடுங்கிக்கொண்டு விரைந்து சென்றுன். அவ்வேளை தேவர்கள் எல்லோரும் பூமாரி சொரிந்தனர். அம் மூன்று முடிகளில் நடுச்சிகரமே திருக்கோணு சலமாகும். இது எல்லாப் பாவங்களையும் அழிப்பது. எல்லாத் துன்பங்களையும் நீக்கவல்லது புனிதமானது. **அப்போது வாயுதேவன் உலகநன்மையை விரும்புவான் வேண்டி, வசந்தருதுவில், சித்திரை மாதத்தில் ஞாயிற்றுக்கிழமையும் அத்தநக்ஷத்திரமும் விருத்தி யோகமும் கூடிய பௌர்ணமி திதியில் குருவோரை யில் சனி மகரராசியில் பிரவேசித்த காலமான ரிஷப லக்கின சுபமுகூர்த்தத்தில் திரிகூடமலையின் வடபாகத் தில் முப்பது யோசனை தூரத்தில் அம்மலையை ஸ்தா பித்தார். அதுமுதல் இம்மலை தக்ஷிணகைலாசமெனப் பெயர் பெற்றது.**

இவ்வாறு கடவுளின் பெருமையினுல் கைலா சத்திற்கு ரஜதாத்ரி (வெள்ளிமலை) திரிகூடம், திருகோணமலை என மூன்று பெயர்கள் உண்டாகின. இந்தமலை ஆச்சரியமானதும், பல சித்திகளைத் தரு வதும் எல்லா உயிர்களுக்கும் நினைத்தமாத்திரத்தே பல சித்திகளைத் தருவதுமாக விளங்குகின்றது. பின் முனிவர்கள், ''சூதமுனிவரே! அதனுடைய பெருமையையும், உயர்வையும், விஸ்திரத்தையும் கேட்க ஆவலுடையோம், ஆகையினுல் தயவுகூர்ந்து கூறவேண்டும்'' என்று கேட்க சூதமுனிவர் பின்வருமாறு கூறினுர். ''முனிவர்களே! அவதான மாகக் கேளுங்கள். இம்மலையின் அடிப்பாகம் ஒரு யோசனையும், பூமியில் இருந்து ஆறு தண்டம் உயர்ந்தும் பல வர்ணங்களோடு கூடியதும் அதன் மேல் விஸ்தாரம் பதினைந்து தண்டம் அளவுள்ள தாகவும் கூறப்படுகின்றது. இம்மலையின் நான்கு திக்குகளிலும் நாலு யோசனை விஸ்தாரமுடைய பெரிய க்ஷேத்திரமாக இது கணிக்கப்படுகின்றது. இம்மலையின் கொடுமுடியின் ஒளி மனதைக் கவர் வதாகவும், தங்கரத்தின மயமாகவும், திரிகோண உருவமாகவும் திகழ்கின்றது.

இத் தக்ஷிணகைலாசமானது பார்த்த மாத்தி ரத்தே போக மோக்ஷங்களைக் கொடுக்கவல்லது. நிர்க்குணமாயும், பராசக்தி சொரூபமாயும் உள்ளது. இதன் நடுவில் ரகஸ்யமான குகை ஒன்று உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மலை கோடி சூரியனின் ஒளியை நிகர்த்தது. ஆயிரம் தங்கத் தூண்களோடும், நூற்றுக்கணக் கான இரத்தினமயமான ஒன்பது பிரகாரங்களோடு கூடியதுமாக விளங்குகின்றது.

கோபுரங்களும் விதம்விதமான சிகரங்களும் உள்ளன. நான்கு வாயில்களோடும், மணி தோர ணங்களோடு கூடியதும், பல மண்டபங்களை உடையதும் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டதும், இரத்தினம் பதித்த சாளரங்களை உடையதும், பூந்தோட்டங்கள் மலிந்ததுமாக விளங்குகின்றது. அங்கே தங்கத்தாமரை மிளிர்கின்றதும், தங்கமய மான நெற்கதிர்களை உடையதும், அன்னம், சார சப்பறவைகளால் சூழப்பட்டதுமான ஒரு தடாகம் இருந்தது. மேலும் அநேக அற்புதங்களைக் கொண் டதும் நந்தவனங்கள் நிறைந்ததுமாக விளங்குகின் றது இத்தலம்.

அங்கே கற்பகவிருக்ஷத்தினடியில் சிந்தாமணி யினுல் அமைக்கப்பட்ட இத்தலத்தின் நடுவில் பஞ்சப்பிரமமயமான அழகிய இரத்தின மஞ்சத்தின் நடுவில், அழகிய மணிகளோடு கூடிய ஹம்ச தூளிகா மஞ்சத்தின் மீது பத்மாசனத்தில் அமர்ந் துள்ளார் இறைவன். மேலும் ஒருமுகம், **முக்கண், நான்கு கைகளுடன் கூட் எல்லாவித ஆபரணங்களா லும் அலங்கரிக்கப்பட்டுச் சந்திரசேகரராக புஷ்பபாணம், கோதண்டம், பாசம், அங்குசம், தரித்து புன்சிரிப்போடு கூடிய முகத்துடன் வீற்றிருக்கின்ருர்.**

**உலகமாதாவும், இளஞ்சூரிய மண்டலத்தை ஒத்த வளும், நான்கு புயங்கள், முக்கண்களோடு கூடிய வளும், பாசம் அங்குசம், வில், பாணம் தரித்தவளும், மந்தகாசம் புரிபவளுமாகிய அம்பிகையை மடியின்மீது வைத்துச் சங்கரன் வீற்றிருக்கின்ருர்.**

தென்பால் விநாயகரும், வடபால் ஷண்முகரும், நந்தி, பிருங்கி, மகாகாளர், பைரவர் முதலியோர் புடைசூழ வீற்றிருக்கின்ருர். நாரதர் பரிவாரங்க ளோடு கூட கீதமிசைக்கின்ருர். அதனைத் தும்புரு வும் கந்தருவர் முதலியோரும் நன்கு பாடுகின்றனர், அப்சரஸ்த்ரீகள் நடம்புரிகின்றனர். இவ்வாறு நாட் டியம், கீதம், வேதகோஷங்கள், துந்துபி ஒலி, தோத்திரங்கள், மந்திரங்கள் ஆகியவைகளால் சோபிப்பவரும், வேண்டுவார் வேண்டுவதை ஈபவரு மான கோணேசப் பெருமான் இந்த உருவத்தை எடுத்துச் சதாசிவனுகவும், சச்சிதானந்த உருவின ராகவும், சகலராகவும், நிஷ்கலராகவும், சாமகானத் தில் விருப்புள்ளவராகவும், நாதவிந்து சொரூபராக வும், தாரக மந்திரமாகவும் காட்சியளித்து தக்ஷிண கைலாசத்தில் அம்பிகையோடு கூடவிளங்குகின்ருர்.

வேதன், விரிஞ்சி, பூசிரஷ்டா, பத்மபூதன், பிதாமகன், ஸ்ரீமத் கமலவாசி, சுயம்பு, சதுர்முகன், விஸ்வசிரஷ்டா இவ்விதமாக ஒன்பது பிரமாக்கள் கூறப்பட்டுள்ளனர்.

விஷ்ணு, தாமோதரன், கிருஷ்ணன், வாசு தேவன், அச்சுதன், சரோருகாக்ஷன், ஸ்ரீ பத்மநா பன், கேசவன், நாராயணன், சக்கரபாணி என விஷ்ணுக்கள் பத்துப்பேர்.

கிரீசன், சங்கரன், சம்பு, ஜோதிரக்ஷன், கலா தரன், விரூபன், பகவான், சூலி, வாமேசன், தீப்த மூர்த்தி, கங்காதரன் என ருத்திரர்கள் பதினெொன் ருகக் கூறப்பட்டுள்ளனர்.

ஒன்பது பிரமாக்கள், பத்து விஷ்ணுக்கள், பதி னொரு ருத்திரர்கள் ஆகியோர் திரிகோணம் என்று பெயருள்ள சிற்சபையில் ஒவ்வொரு கோணத்தின் கண்ணும் வசிக்கின்றனர்.

இச்சபையின் மத்தியில் பரமான்மாவான நடேஸ் வரன் சதானந்த நடனம் புரிகின்ருர். இப்படிப் பட்ட சபையினைக் கண்ட மாத்திரத்திலேயே புனர் ஜன்மம் உண்டாகாது.

இரண்டாவது மலையான காளஹஸ்தி மலையை நினைத்தளவில் எல்லாப் பாவங்களும் நீங்கும். தரிசிரா மலை என்ற மூன்ருவது முடியினை நினைத்தும், பார்த்து வணங்கினும் போகங்களும் மோக்ஷங்களும் சித்திக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரிக்கோணசல புராணத்தில் "திருக்கோணேஸ்வரம்"

— சந்திரசேகரம்பிள்ளை ஜெயச்சந்திரன் —

ஆயிரம் வருடங்கட்கு மேலாக வரலாற்றுச் சான்றுகளோடும், ஆயிரத்தைந்நூறு வருடங்கட்கு மேலாக இலக்கியச் சான்றுகளோடும் தமிழ்ப் பெருங் குடியினர் தம்பழந்தமிழ்க் குடியிருப்பாய்த் தொன்றுதொட்டு இன்றுவரை ''திருக்கோணமலை'' என்ற பெயருடனேயே விளங்கிவருவது ''கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை''

இதிகாச புராண புருஷர்களோடு திருக்கோணேஸ்வரம் இயம்பப்பட்டு வருவது கர்ண பரம்பரைக் கதையாம் செவிவழிச் செய்மதியாக மட்டுமல்லாது, புராணங்களிலும் நூல்களிலும் கி. பி. ஐந்தாம் நூற்றுண்டளவிலிருந்தேனும் இடம்பெற்று வருவது ஓர் உண்மைச் செய்தியாக மிளிர்கின்றது. ஸ்கந்தபுராணத்தில் தெட்சண கைலாச மான்மியத்தும், கி. பி. 6ம் நூற்றுண்டில் எழுத்துருவெடுத்த ஈழத்து முதல் நூலாய ''மகாவம்சத்''திலும் திருக்கோணமலை குறிப்பிடப்படுகின்றது. ''கோண வரை''யின் தோற்றமும் அதனோடு தொடர்புடையோரது செய்தியும் அழகுற ''தெட்சண கைலாய மான்மிய''த்தில் எடுத்தாளப்பட்டுள்ளது.

''கோணேச பீடமென்று'' அழகுற அமைந்துள்ள திருக்கோணமலையின் சிறப்பை

''மச்சபுராணக் கதையும் கயிலாய
புராணத்தின் வாய்மைதானு
முச்சகம் போற்றிடு மறிஞர்முன் னுரைத்த
மரபுகளின் முறையுந் தூக்கி
மெச்சியசீர்த் தென்கயிலைப் பெரியோர்கள்
கூறெனமுன் விதியினராய்த்
திச்சகத்திற் கோணவரைப் புராணமெனத்
தமிழ்ப்பாவி லியம்ப லுற்றேன்''

என்று. திருக்கோணமலையில் இற்றைக்கு நூறு வருடங்கட்குமுன் வாழ்ந்த மாசிலாமணி முத்துக்குமாரு என்பவர் ''திரிகோணசல புராணம்'' என்ற நூலை நமக்குத் தந்து உதவினுர்கள்.

''எண்ணமில்லா வல்லரக்கன் எடுத்து முறிந்து இசைபாட அண்ணல் அவர்க்கு அருள்புரிந்த ஆக்கப் பாட்டினை'' எடுத்தோதி இராவணனுக்குத் தவத்தின் தோற்றத்தை மாயவன் எடுத்துரைக்கும் பாங்கிலமைந்து, இராவணன் தாயிறந்ததாயுணர்த்திக் கன்மாதி செய்யும் புண்ணிய பூமியாய் இஃதினை எடுத்துக்கூறுகின்றது.

இராவணன் கைலயங்கிரியை எடுத்தான். அவன் எடுத்தது வடகயிலையா, இன்றித்தென்கயிலையா என்ற கேள்வி எழுகின்றது. சந்தேகத்திற்கு இடமின்றி தென்கைலையாகிய ''திருக்கோணமலையே'' என்று சான்று பகருகின்றது ஸ்கந்தப்புராணத்து தெட்சண கைலாச மான்மியம். இதனை அழகுற எடுத்து வற்புறுத்துவதற்காக, கடலினுள் மூழ்கி கலங்கிக் கதறி அழுதான் இராவணன் என்று கூறுகின்றது. இதனையறிந்தே நம் ஞானசம்பந்தப் பெருந்தகையும் ''எறிகடல் புடைதழுவு இலங்கை மன்னனை முறிபட வரைபிடை அடர்த்த மூர்த்தி'' என்று எம்பெருமானைப் போற்றுகின்றுர். மேலும் ''வாளினல் வேலினன் மால்வரை எடுத்த திண்தோளினன் நெடு முடி தொலையவே ஊன்றிய தாளினன் இறைவன்'' என்று இயம்புகின்றுர்.

''கடலில் வீழ்ந்து தாழ்ந்திடு தசமுகனுங் கலங்கியே'' என்று திரிகோணசல புராணத்து ஆசிரியரும் அழகுற எடுத்துரைக்கின்றுர். ஆயிரத்து ஐந்நூறு வருடங்கட்கு முன் ஸ்கந்தத்தில் கூறப்பட்டு அதையடுத்து இருநூறு வருடங்களின்பின் தேவாரத் திருமுறையால் அரண்செய்யப்பட்டு இற்றைக்கு நூறு வருடங்கட்கு முன் வாழ்ந்த ஒரு புலவரால் கையாளப்பட்டு வந்த ஓர் கருத்து இன்று சந்தேகத்திற்குரியதாய் வடகயிலையா இன்றித் தென்கயிலையா என்றும், தென்கயிலையாயின் காளத்தியா, திரிசிராப்பள்ளியா, திருக்கோணமலையா என்றும் இடர்ப்படும் படியான நிலை விந்தையிலும் விந்தையே! வருந்த வேண்டியதொன்றுகக் கிடக்கின்றது.

இறைவனது திருக்கல்யாண வைபவம் வடகயிலையில் நிகழ்ந்தது. ஒன்றுகூடினர் தேவர்கள்.

வடகோடு சாயத் தென்கோடுயர்ந்தது. ''சமன் செய்யத் தென்னுடு போந்தார் அகத்தியர்'' சங்கத் தமிழ் நூல்களிலே முத்தூர் அகத்தியர்பற்றிச் செய்தி உண்டு. திருக்கோணமலையை அடுத்துள்ள 'மூதூர்' என்ற பழம்பதி இன்றும் 'முத்தூர்' என்றே சிங்களவர்களால் அழைக்கப்படுகின்றது. அகஸ்தியர் ஸ்தாபனம் கங்குவில்லைச் சார்ந்த வவனுவில் தீர்த்தக்கரையிடையே மூதூரில் திகழ்வதும் முத்தூர்அகத்தியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நம்பழம் பெருமுனிதானே என்ற ஐயப்பாட்டைத் தோற்றுவிக்கின்றது. திருமணக்கோலக் காட்சியை கோணவரையினிலேயேதான் அகஸ்தியர்க்கு இறைவன் அருள்பாலித்தான்'' என்று திரிக்கோணசல புராணம் கூறுகிறது.

''காணக் கிடைக்குமோ
கோணைக் கிழவனார் காட்சி''
யீதெங்களுக்கு என்று

நினைந்து பழங்காலத்தினை நினைவுகூரத் தோன்றுகின்றது அகத்தியர்ப்படலம்.

இராம இராவண யுத்தத்தில் இராவணன் மாள பிரமஹத்தி தோஷம் நீக்குவதற்கு இராமேஸ்வரம், முனீஸ்வரம், நகுலேஸ்வரம், கேதீஸ்வரம் என்ற இத்தலங்களோடு திருக்கோணேஸ்வரத்தையும் தரிசித்து சிவபூசை செய்தான் இராமன் என்ற செய்தியும் திரிக்கோணசல புராணம் எடுத்துக் கூறுகின்றது.

குளமும் கோட்டமுமமைத்துக் குளக்கோட்டனெனப் பெயர்பெற்ற சோழமன்னனது வரலாறு, அவனது திருப்பணிகள் எடுத்தியம்பப்படுகிறது. பின் கஜபாகு மன்னன் சரிதம் கூறப்படுகிறது.

''பரிதியின் மரபிற் றோன்றும்
பரிதிபோ லக்குலத்தே
பொருவிறு கித்தார் வேய்ந்த
புவனேய கஜபாகுப் பேர்
நிருபன்வந் துதித்துச் சைவ
நீங்கியே யமண ஞகித்
திரிசங்க போதி யென்னுச்
செப்புமோர் நாமம் பெற்றான்''

என்று கூறித் திரிக்கோணசல புராண ஆசிரியர் கஜபாகு, புவனேகபாகு, திரிசங்கபோதி என்று பல மன்னர்கள் நாமத்தையும் ஒன்றி இணைக்கின்றார்.

மேலும் ''தென்னிலங்கையிற் செங்கோன்'' முறை செலுத்தினனென்றும் பின் ''ஆற்றவர்க் குடைந்த தேர ரனுராசநகரினேகி மாற்றமீங் கிதனைக் கூற'' என்று உரைப்பதாலும் தென்னிலங்கை, அநுராதபுரம் என்ற இரண்டிலும் இவர் இடர் படுகின்றார் போலும்.

இலங்கைச் சரித்திரத்திலேயே கஜபாகு என்ற பெயரோடு இருமன்னர்கள் முறையே கி. பி. 113லும் கி. பி. 1131-1153லும் அரசோச்சியுள்ளார்கள். புவனேகபாகு என்ற பெயரோடு ஏழு மன்னர்கள் கி. பி. 1271 முதல் 1551 வரையுள்ள முந்நூறு வருட காலங்களுள் இடையிடையே அரண் ஏறியுள்ளனர்.

சங்கபோதி என்று சிறீசங்கபோ என்ற மன்னன் கி. பி. 248ல் வாழ்ந்திருக்கின்றான். சிலப்பதிகாரத்தில் ''கடல்சூழ் இலங்கை கஜபாகு'' என்று குறிப்பிடப்படும் மன்னனே தன் தந்தையின் காலத்தில் சோழ மண்டலக் கரையோரத்தில் காவிரிக்கரையில் வேலை செய்வதன்பொருட்டு அனுப்பப்பட்ட பன்னீராயிரம் மக்களின் பொருட்டாக இருபத்து நாலாயிரம் தமிழர்களைச் சோழமண்டலத்திலிருந்து சிறையெடுத்து வந்ததாகச் செய்திகள் உண்டு.

இவ்விருபத்து நாலாயிரம் தமிழர்களும் இலங்கையில் பல்வேறு பாகங்களில் குடியிருத்தப்பட்டனர். காரசியப்பத்து, தமிளஹஸ்பத்து ஹிரக்கம நிந்தவூர், ஆணைமடுவ, அக்கரைப்பற்று. ஊர்களின் பேர்கள், (நாநூறுபற்று, தமிழூர் ஏழு, சிறையூர், தானமாகக் கொடுக்கப்பட்ட ஊர்) நிலைநாட்டுவதாகவும்; தமிளஹத்துரு, என்ற ''கே'' பெயர் அல்லது ''வாசகம'' பெயர் ''என்ற பெயரின் பகுதி'' ''தமிழ் அடிமைகள்'' என்ற அர்த்தத்தைத் தருவதாலும் ஏற்புடையதாகின்றது. சோழன் தம்மை மீட்கவராத காரணத்தால், இத்தமிழர்கள் மதம் மாறினரென்றும், செவிவழி செய்தி வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

எனவே திருக்கோணசல புராணத்தில் குறிப்பிடப்படும். புவனேகஜபாகு என்போன் முதலாவது கஜபாகுவே என்றும் சிறிசங்க போதி என்ற பெயரே திரிசங்கபோதி என்று இவனையே குறிக்கும் பெயராய், திரிபீடமாய யுத்ததர்மத்தைப் போதிக்கும் நூல்களையும் சங்கமென்றது புத்த சங்கத்தையும் ''போதி'' என்ற சொல் புத்தபகவானையும் குறிப்பதாய்க் கொண்டு திரிசங்கபோதி என்ற பட்டம் ''தர்மச்சரணங்கச்சாமி'' சங்கம் சரணம் கச்சாமி ''புத்தம் சரணங்கச்சாமி'' என்ற மும்மணிகளையும் சரணடைந்த ''திரிசங்கபோதி என்ற பட்டமாகவும் இருக்கலாம்.

இந்தக் கஜபாகு மன்னனே கோணேசராலயத்தை இடிப்பதற்கு படையெடுத்து வந்ததாகவும் ''கண்இழந்து'' கண்தழைத்த இடமே கண்தழை கந்தளாயானதென்றும்

''நோக்குகண் விளங்கக் கண்டறுவலருங்
கயத்துக் கின்பாற்
றேக்குகண் டழையா மென்னன்
சிறந்ததோர் பெயரை நாட்டி''

என்ற அடிகள் நினைவுறுத்துவதற்காக அமைந்துள்ளது.

வந்தமன்னன் ''அரனுறை திரிகோணத்தினுத் தரதிசையிலுள்ள ஒலிகடற் றீரத்துற்றான்'' ஊற்ற அப்போழ்தினிலே எங்கோணுறை திரிகோணம் என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் பொற்பைக் கண்ணுறலும் வீழ்ந்து போற்றி மற்றொரு விழியும் தோன்றப் பெற்றவனானன். அங்கிருந்த கல்லொன்றிற்கு ''கண்தளைக்கல்'' என்று பெயர் சூட்டினான். இதுவே இன்றும் சின்னக்கந்தளாய் என்றழைக்கப்படும் திருக்கோணமலை இந்துமயானமாகிய கந்தளாயாக விளங்குகின்றது. இன்னோரன்ன செய்திகள் பலவும் கொண்டதாக இலங்கும் திரிகோணாசல புராணம்பற்றி அதன் ஆசிரியர் கூறுமாப்போல் நாமும்

''உலகெலாம் போற்ற வாட
லுவந்தரு ளொப்பின் மூர்த்தி
யலகிலா வெழில்பெற் றோங்கு
மன்னமென் னடையி னோடெங்
குலமெலா முய்ய வந்த
கோணமா மலையின் காதை
பலமெலாம் புரியு மென்னு
மாசையாற் பகர்த லுற்றேன்''

என்று அமைவாம்.

## சுந்தரமூர்த்தி நாயனர் பாடிய ஊர்த்தொகைப்பாடலில்
# திருக்கோணேஸ்வரம்

நிறைக்காட்டானே நெஞ்சத்தானே நின்றியூரானே
மிறைக்காட்டானே புனல்சேர் சடையாய் அனல்சேர்கையானே
மறைக்காட்டானே திருமாந்துறையாய் மாகோணத்தானே
இறைக்காட்டாயே எங்கட்குன்னை எம்மான்தம்மானே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ தட்சண கைலாச புராணத்தில் திருக்கோணேஸ்வரம்

திருமதி ந. பாலேஸ்வரி, திருக்கோணமலை.

ஈழத்திருநாட்டின் சிறப்புமிக்க சிவாலயங்களில் மேன்மைமிக்கது திருக்கோணேஸ்வரம். ஈழநாட்டின் கிழக்குக் கரையோரத்திலுள்ள திருக்கோணயம் பதியில் கடலலைகள் முத்தமிடும் மலையடிவாரத்தின் உச்சியில் குடிகொண்டுள்ளார் கோணநாயகர். இவ்வாலயம்பற்றிப் பல கர்ணபரம்பரைக் கதைகளும் வரலாற்றுக் கதைகளும் கூறப்படுகின்றன. அந்த வகையில் இவ்வாலயம் மூன்று வகையிற் சிறப்புப் பெறுகிறது.

முதலாவதாகத் தேவார முதலிகளில் ஒருவரும் மிகவும் பால்ய வயதில் தேவாரம் பாடியவருமான திருஞானசம்பந்தரால் தேவாரம் பாடப்பெற்ற ஸ்தலம் இது. இரண்டாவதாக வாயுபகவானுக்கும் ஆதிசேடனுக்கும் வலிமை காரணமாக நடைபெற்ற போட்டியின்போது வாயுபகவானால் தூக்கி எறியப்பட்ட சிகரங்களில் ஒன்றாகத் திகழும் பேறுபெற்றுள்ளது. மூன்றாவதாகக் குளக்கோட்டு மகாராசனால் புனருத்தாரணம் செய்விக்கப்பட்ட சிறப்பையும் பெற்றுள்ளது.

இவ்வாலயத்துக்குள்ள இன்னொரு தனிச்சிறப்பு இங்கு சாதிமத பேதமின்றிப் பல இன மக்களும் வந்து வழிபடும் ஸ்தலமாகப் பிரபல்யம் அடைந்துள்ளதாகும். இத்துணைச் சிறப்பும் பெற்ற ஆலயத்தின் வரலாற்றைப் பலநூல்கள் எமக்கு எடுத்துரைக்கின்றன. அவற்றிலே ஸ்ரீ தட்சிண கைலாச புராணமும் ஒன்றாகும். இந்நூலைப் பிரம்மஸ்ரீ பண்டிதராசர் அருளிச் செய்துள்ளார்.

கந்தப்புராணத்துத் தட்சிண கைலாச மகாத்மியத்தில் மேருமலையின் திரிகூட சிகரமே இலங்கை என்பது வெளிப்படை; கைலாசமென்பது கிலாச முனிவர் சிவபெருமானை நோக்கித் தவங்கிடந்து அவரைத் தாங்குமாற்றலுற்ற மலைவடிவானமையின் இப்பெயர் பெற்றது. இது உலகிலுள்ள 1001 சிவ க்ஷேத்திரங்களிலொன்று. இது இமாசல கைலாசம் மேரு கைலாசம், மந்தர கைலாசம், தட்சண கைலாசம் முதலாகப் பலவுள. வெள்ளிமலையாகிய இமாசல கைலாசமே சிறப்பாக நூல்களிற் கூறப்பட்டுள்ளது. அதனையே இராவணன் எடுத்துத் துன்புற்றனன். இங்கே தட்சிண கைலாசமென்பது தேவாரமும் திருப்புகழும் பெற்ற திருக்கோணமலையே. இது உத்தர கைலாசத்தில் வாயுவாற் பிடுங்கிய சிகர மூன்றனுளொன்று.

அதனை,

''முன்னர் வீழ்ந்திடு கிரி<br>
காளத்தியாய் மொழிவர்<br>
பின்னர் வீழ்ந்தது<br>
திரிசிரா மலையெனும் பிறங்க<br>
லன்னதற் பின்னர் வீழ்ந்தது<br>
கோணமாவசல - மின்னமூன்றை<br>
யுந்தஷ்ணகைலை யென்றிசைப்பார்.

என்று செவ்வந்தி புராணச் செய்யுள் கூறுகிறது. திரிகூடம், மகேசுரம் என்ற பெயர்களும் இத்தலத்திற்கு உண்டு.

வாயுபகவானுக்கும் ஆதிசேடனுக்கும் ஆரம்பித்த பலப்பரீட்சையைக் கண்டு தேவர்களும் மனிதர்களும் சகல ஜீவராசிகளும் நடுநடுங்கினர். அப்போது தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட சிவபெருமான் வாயுபகவானை அழைத்து அவனை அவனது வீரத்துக்காகப் புகழ்ந்து பிடுங்கிய சிகரங்களுள் ஒன்றை ஈழத்தின் வடகரையில் நிறுத்தும்படி கூறியதாகத் தட்சண கைலாச புராணத்தின் திருமலைச் சுருக்கத்தில் பின்வரும் பாடல் கூறுகிறது.

''புகழ்ந்த வாயுவைக் கையிலையின்<br>
றென்புறம் பொலிந்து<br>
திகழ்ந்த வித்திரி கூடமாஞ்<br>
சிகரத்தை யேந்தி<br>
மகிழ்ந்தி யாமதில் வருகுவந்<br>
தென்கடல் மருங்கே<br>
நிகழ்ந்த வீழத்தின் வடகரை<br>
நிறுத்து நீயென்றான்''

ஈழ வேந்தனான இராவணனின் தாய் நாள் தோறும் நெற்குற்றி மாவாக்கி அதில் சிவலிங்கம் அமைத்து வழிபட்டு வருவது வழக்கமாயிருந்தது. ஒரு நாள் தற்செயலாகத் தன் மாளிகையில் தன் தாயானவள் நெற்குற்றுவதைக் கண்ட இராவணன் அதிர்ச்சியுற்று மூவுலகத்தையும் ஆளும் வல்லமை பெற்ற ஒரு அரசனின் தாய் நெல் குற்றலாமா? என்று வினவ அவள் அதற்குத் தட்சணகைலாசத்தில் வீற்றிருக்கும் இறைவனை நாள்தோறும் சென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபடமுடியாமையாலேயே இப்படித் தன் கையால் லிங்கம் அமைத்து வழிபடுவதாகக் கூறினுள். உடனே இராவணன் தானே சென்று இறைவனை வழிபட்டுச் சிவலிங்கம் ஒன்றைப் பெற்று வருவதாகக் கூறிச் சென்றான் என்பதை தட்சணகைலாச புராணப் பின்வரும் பாடலால் அறியத்தருகிறது.

''தானே நெற்குற்றுழக்குந் துயரென்
கொலுகையெனலுந் தாயுங்கேட்டு
மானேயுங் கரத்தானே மடப்பிடியின்
வடிவமைத்து வணங்கவென்ன
யானேயித்தரையிலான நெற்குற்றலியல்போ
வென்றிலிங்கம் வாங்க
வானேறு சிவபெருமான் வடகயிலைத்
திருமலை போயடைந்தானன்றன்.

தெட்சணகைலாசமெனப்படும் திருக்கோணேஸ்வரத்துக்காக குளக்கோட்டு மகாராசாவின் தந்தை ஏகப்பட்ட செல்வத்தை இங்குள்ள கிணறென்றிற் சேமித்து வைக்க அவற்றைப் பூதமொன்று காத்ததாகவும், காலப்போக்கில் தென்னாட்டில் இருந்து தட்சண கைலாசம் வந்த பிராமணனொருவன் இவ்வாலயத்தில் துயில்கொள்ளும்போது பூதம் அவனுக்கிதையுணர்த்தியதாகவும் அவன் தென்னாடு திரும்பியதும் இதைத் குளக்கோட்டு மகாராசாவுக்குக் கூற அவர் கடல்கடந்துவந்து ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்ததாகவும் இப்புராணம் கூறுவதை,

''அடைந்தவந் நாளிலங்கை வலமாக
வந்தவொரு மறையோன்
கிடந்த செம்பொற் கிணற்றருகே
துயிலுறங்கினர் பூத
நடந்தவனை யெழுப்பி யுங்கரை
வலந்திவுக் கரசன்
கடந்து கடனீங்கி முன்னிக்
கயிலைமலைக் கெய்தினனல்
எய்தியரற் காலய முமியற்றிய
வர்க்கநேகம் பொன்
பெய்து கிணற்றிடை மூடிப்
பெருங்காவலெனை நிறுத்தி
வையகத்திற் போந்து கலிவருதலின்
முத்தியை யடைந்தா
னையவன் புதல்வனுக் கீதறைகவென
வறைந்ததுவே
அதுமொழிதன் செவிப்படலு
மருமறையோன் றனியெழுந்து
முதுகடலுங் கடந்தந்த
முடிமன்னன் றனிக்குமரன்
விதிமுறை செய் குளக்கோட்டனுடன்
மறையோன் விளம்பவபன்
பதியரசு தன் மகற்குப்
பாலித்துப்பால் வந்தான்''

என்னும் பாடல்களால் அறியக்கூடியதாயுள்ளது.

அத்துடன் இம்மாபெரும் ஆலயத்துக்குப் பாவநாசம் என்னும் சுனையையும் அவனே அமைத்தான் என்பதை,

தொடைபுனை வேதியர் முதலாந்
தொல்லோர்க்கு மெல்லோர்க்கும்
படையில் வினைப்பவந்
தீர்க்கும்படி பாவநாசமென்னுந்
தடமது கண்டதற்கருகே
தனி முதல்வநீராடு
மிடமருவு மண்டபமு
மியற்றுவித்தான் செயதருமன்.

என்று கூறுகிறது.

மேலும், தென்னாட்டிலிருந்து இங்கு வந்த கஜபாகு என்னும் வேந்தன் ஸ்ரீ சங்கபோதி என்ற பெயருடன் ஆட்சிசெய்து வருங்காலை கோணநாயகரை வணங்கப் பூப்பறித்துச் செல்லும் பாசுபதர்களை அடித்து, அல்லற்படுத்திய புத்தர்களைப் பாசுபதர்கள் கடலிற் தள்ளி வீழ்த்த அதை அவர்கள் வேந்தனுக்கு முறையிட, வேந்தன் கனல் கக்கும் கண்களுடன் நாலுவிதப் படைகளோடும், தெட்சண கைலையை நோக்கிச் செல்லுங்காலை அவன் கண்களில் ஒன்று ஒளியிழந்ததாகவும், அப்போது கோணநாயகர் ஒரு மறையோன்போல் வந்து விபூதி கொடுக்க அதை அணிந்ததாகவும் அதன்பின் ஒளி பெற்று கண்தளைத்த அவ்விடத்திற்கு 'கண் தளை' என்ற பெயர் சூட்ட அது மருவ கந்தளாய் என்று வந்ததாகவும் பின்வரும் பாடல்களால் அறிய முடிகிறது.

1. விளம்பு மொழியினையுணர்ந்து வேந்தன்
பொங்கி விழியிரண்டும் கனல் பொழிய
வெகுண்டு வேணிக்
களங்கமதிக்கபாலி கயிலையெங்
கோன்கணையாகக்
குப்பனெனக் கருத்திலுன்னித்
துளங்கறிலாச் சதுரங்க படையினேடுந்
தொடர்தலுங் கயிலைமலைச் சோதி நோக்கு
யுளங்கனிவில்லா வரசன் கண்ணிற் சோதி
யொளியிருளத் திருவுளத்தி லுன்னிநின்றன்

2. நின்றகலாக் கண்ணிருள நிருப தெஞ்சு
நினைவு மறந்த
வசமுறுநேரங்கோனை குன்றிறையோ னொரு
மறையோன் முன்னெய்திக் கொடுத்திடவத்
திருநீற்றைக் கோமான் வாங்கி
தன்றகைய நெறிபோந்து சிவ சிவாய
சங்கர வென்றுரைத்து
நுதற்றரித்த காலை
யன்றருகுளின்ற புத்தர் பலருநாணித் தறிவழிய
வொரு விழி நன்றுயதம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. நோக்கிய தன் கண்டமைத்த
காரணத்தானுவல் பெயருங்
கண்டமையென்ற தற்கு நாட்டி
யாக்கி நனித்திருக்குளமு நகரு நாடும்
அரனுர்க்குக் குளக்கோடனவன்
முன்செய்த பாக்கிய நன்றென
மன்னனுவந்தானந்தப் பாசுபதர்
பவுந்தரை கொல் பயத்தாலாளி
நீக்கியெழிற் றிரிகோணைப் பெருமான் மேவி
நிருமலத்தி னெருமை பெறீஇ
நெறியிற் சூழ்ந்தார்.

இத்துணை சிறப்புகளும் பெற்ற கோணநாயகரின் கும்பாபிஷேகம் இந்துக்களுக்கு ஒரு பெறற்கரும் பேருகும், 'அவனருளாலே அவன்றுள் வணங்கி' என்ற மணிவாசகரின் கருத்துக்கமைய நாமும் அவனருளாலே அவனருள்பெற்று உய்வோமாக.

## சம்பந்தர் பாடிய திருக்ஷேத்திரக் கோவைப் பதிகத்தில்
## திருக்கோணேஸ்வரம்

அண்ணமலை ஈங்கோயம் அத்திமுத்தாறகலா
முதுகுன்றம் கொடுங்குன்றமும்
கண்ணர் கழுக்குன்றம் கைலைகோணம்பயில்
கற்குடிகாளத்தி வாட்போக்கியும்
பண்ணர்மொழி மங்கையோர் பங்குடையான்
பரங்குன்றம் பருப்பதம்பேணி நின்றே
எண்ணய் இரவும்பகலும் இடும்பைக்கடல்
நீந்தலாம் காரணமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோணேசர் கல்வெட்டில் திருக்கோணேஸ்வரம்

புலவர் வை. சோமாஸ்கந்தர், திருக்கோணமலை.

ஈழ நாட்டில் கிழக்கு மாகாணத்தில் தேசாந்திர ரேகை 81'—15'யும் அட்சரேகை 8'—30'யும் சந்திக்கும் இடத்தில் திருக்கோணமலை அமைந்திருக்கிறது. மிகப்பழமையான காலத்தில் கோணேசர் மலையிலிருந்த திருக்கோணேசர் ஆலயம் மிகவும் புனிதமும் புகழும் வாய்ந்ததாகும். முற்காலத்தில் திருக்கோணேசர் ஆலயத்தின் பெருமையினல் திருக்கோணமலை உலகப்புகழ் பெற்று விளங்கியது.

கோணேசர் கல்வெட்டு கவிராசரால் இயற்றப்பட்டதாகும். தக்கிணகைலாச புராணம் இயற்றிய பண்டிதராசரும் கவிராசரும் ஒரே காலத்தவர் என்பதை சிறப்புப் பாயிரக் கவியினுல் அறியலாம். பண்டிதராசரும் கவிராசரும் செகராசசேகரமன்னன் காலத்தில் வாழ்ந்தவர்கள். இதனுல் கோணேசர் கல்வெட்டு 15ம் நூற்ருண்டில் இயற்றப்பட்ட நூல் எனக் கொள்ளலாம். வைத்திலிங்க தேசிகரால் வெளியிடப்பட்ட கோணேசர் கல்வெட்டுப் பிரதியில் 58 பாடல்கள் உள்ளன. திருக்கோணமலைத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவராக விளங்கிய அகிலேசபிள்ளையவர்களின் மகன் திரு. அ. அழகைக்கோன் பிரசுரித்த பிரதியில் 60 பாடல்கள் காணப்படுகின்றன. இது பற்றிய சரியான முடிவினை அறிவதற்கு பழைய ஏட்டுச் சுவடிகளை ஒப்புநோக்கி ஆராயவேண்டும்.

கோணேசர் கல்வெட்டை ஆராய்வதன்மூலம் கோணேசர் ஆலயத்தில் நிகழ்ந்த வழிபாட்டு முறைகளையும் கோவிற்ருெழும்புகள் எவ்வாறு நடைபெற்றனவென்பதையும் கோயிற்ருெழும்பு செய்வாரையும் அவர்களுக்குரிய கடமைகளையும் அக்காலச் சமூக அமைப்பினையும் அறியலாம். இந்நூல் பழமையான சமூகம், பொருளாதாரம், வழிபாடு, கோவில் நிர்வாகம் முதலிய நிகழ்ச்சிகளை ஆராய்வதற்குப் பெரிதும் உதவுகின்றது.

## தானத்தார்

குளக்கோட்டன் திருக்கோணசர் ஆலயத்தில் தொழும்பு செய்வதற்கு மருங்கூரிலிருந்து முப்பது குடிகளைக் கொண்டுவந்து திருக்கோணமலை நகரில் குடியேற்றினன். இம் முப்பது குடியினரும் தானத்தார் எனப்படுவர். இவர்களுக்கு மூவகையான கடமைகள் வகுக்கப்பட்டுள்ளன. இறைவன் முன்னர் ஆலாத்தி, நடனமாடல், பன்றிகுற்றல், அதிக பட்டு அரசர்க்கீதல் இவைகள் தானத்தார் கோயிலுக்குச் செய்யவேண்டிய கடமைகளாகும். இம் முப்பது குடியினரில் ஏழு குடியினருக்கு குளக்கோட்டன் இராயப்பட்டம் ஈந்தான். பிற்காலத்தில் வந்த கஜபாகு மன்னன் மேலும் இவர்களுக்குப் பல கடமைகள் விதித்துள்ளான். முதன்மைமாருள் நன்மை தீமைவந்தால் அவர்கள் செய்யவேண்டிய கடமைகளும் பலவாக அமைந்துள்ளன. அவைகளைக் கோணேசர் கல்வெட்டில் விரிவாகக் காணலாம்.

## வரிப்பத்தார்

குளக்கோட்டு மன்னன் இறைவன் தொழும்புக்கு ஆட்கள் போதாது என நினைத்து காரை வாய்ந்த வளநாடு சென்று வரிபிடித்தான். மூவேழு குடிவாழ்வோரைக் கொண்டுவந்து குடியேற்றினன். பட்டாடை கொய்தல், கட்டல், புட்பபத்திரங்கள் எடுத்தல், விளக்கேற்றல், தளிசைத்தட்டு விளக்குதல், தீர்த்தம் எடுத்தல், நெல்லுக்குற்றல், சாணி மெழுகல், ஏரி துரும்பு ஈதல், நடனப்பெண்ணுக்கு முட்டுவகை கொட்டல், பாடல், நரபலியாள் தனக்குக் கரும்பாவாடை இடல், கொடியேற்றல், இறக்கல், கட்டல், சுமத்தல், சந்தனம் அரைத்துக்கொடுத்தல் ஆலயப்பணிகளெல்லாம் விளக்கமுடனும் துப்பரவாகவும் விரைவாகவும் செய்தல் முதலியன இவர்கள் செய்யவேண்டிய தொழும்புகளாகும். நீர் பாயும் பள்ள வெளிநிலம் இவர்களுக்கு நிவந்தமாகக் கொடுக்கப்பட்டது.

## தனியுண்ணுப் பூபாலன்

குளக்கோட்டு மன்னன் மதுரைக்குச் சென்று மதிக்குலத்துதித்த தனியுண்ணுப் பூபாலனை அழைத்து வந்து திருக்கோணமலை நகரில் குடியேற்றினன். தானத்தார், வரிப்பத்தார் இவர்களுக்கு நடுநின்று நீதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டி நகரை அரசு செய்வது தனியுண்ணுப் பூபாலன் கடமையாகும்.

## பாசுபதர்

குளக்கோட்டன் பாசுபதர்களைக் கோயிலுக்குப் பூசகர்களாக நியமித்தான். பாசுபதர் என்போர் பாசுபத சமயத்தோராவார். பாசுபதர் மயேச்சுரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் அழைக்கப்படுவர். திருநீறு அணிதலும் சிவலிங்க வழிபாடும் இவர்களுக்கு ஏற்புடையன. சிவகணங்களிடத்தில் பற்றுடையவர்கள். நகுலேச பாசுபதமே வீரசைவம் என்ற கருத்தும் உண்டு.

## இருபாசு முதன்மை

கஜபாகு மன்னன் வருவதை அறிந்த பாசுபதர்கள் கடலில் வீழ்ந்திறந்தனர். அதன்பின்னர் சைவநாய முதன்மை, வேதநாயக முதன்மை என்ற இருபாக முதன்மையினர் கோயில் அர்ச்சகர்களாயினர்.

## அரசியல் அமைப்பு

கோணேசர் கோயிலுக்குத் தொழும்பு செய்வோரும் வரிகொடுப்போரும் வாழும் எல்லைகள் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளன. வடக்குத்திசை எல்லை கரம்பகம், மேற்குத்திசை எல்லை முனீச்சரம், தெற்குத்திசை எல்லை சங்கமங்கண்டி, கிழக்குத்திசை எல்லை வங்காளம். கரம்பகம் ஏறக்குறைய 175 மைலும், முனீச்சரம் ஏறக்குறைய 100 மைலும், சங்கமங்கண்டி ஏறக்குறைய 150 மைலும் இருக்கின்றது. மிகுந்த ஆதாயத்தில் பத்துக்கொன்று கோயிலுக்குக் கழிக்கும் வழக்கமும் அமைந்திருந்தது. கோயில் வருவாயை பத்துப் பங்காக்கி எட்டுப்பங்கு இருப்பாகவும் இரண்டு பங்கு அர்ச்சகர்களுக்கெனவும் வகுக்கப்பட்டுள்ளன.

திருக்கோணமலைப் பகுதியை வன்னிமை அரசாட்சி செய்தான். அவருக்குக் கீழ் 32 தலைமைக்காரர்கள் இருந்தனர். அரசுக்குச் சிறப்பு அங்கமாக விளங்கும் படையைப் பற்றிய செய்தியெதுவும் கல்வெட்டில் கூறப்படவில்லை.

அக்காலத்தில் வன்னிமை நாட்டில் உள்ள வழக்கம், பாரம்பரியம் முதலியவற்றை அனுசரித்தே ஆட்சி செலுத்தினன். ஆண்களுக்கும் ஒழுக்கம் சரியாக வற்புறுத்தப்பட்டது என்பதனை பின்வரும் வரிகளால் அறியலாம்.

"... ...........
ஐயமறஉன் தாரந் தாரமாகு
மயலகத்தோர் தாரமெல்லா நின்றுயாகும்."

குற்றம் செய்தவர்களுக்கு ஏற்ற தண்டனைகள் கூறப்பட்டுள்ளன. உயிர்க்குயிர் வாங்குதல், மண்கடகம் தலையில் ஏற்றி அடித்தல் முதலியன குற்றங்களின் தண்டனைக்கேற்ற தண்டனைகளாகும்.

"... ...........
மையனைய கண்டர் திருக்கோணை நாதர்
மகாபூசை திருப்பணியும் வழங்கச் செய்யே"

என்ற கல்வெட்டு அடிகளால் அக்காலத்தில் சமயத்துக்கும் அரசியலுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு புலனாகின்றது. அரசனே ஆலயத்தின் அறங்காவலனாகவும் விளங்கினன்.

கோயில் தொழும்பு செய்பவர்களுக்கு எல்லாம் நிலம் கொடுக்கப்பட்டது. அவ்வருவாயைக் கொண்டே அவர்கள் வாழ்ந்தனர். இரண்டுவகையாகக் கணக்குகள் வகுக்கப்பட்டுள்ளன. கருவூலக் கணக்குள் நாள் வருவாயும் செலவும் அடங்கும். பெரிய வழமை பத்ததி அரசர்களும் ஊரவர்களும் கோவிலுக்குதவிய நிதி பற்றிய கணக்குகளைக் கொண்டதாக அமைந்திருந்தது.

## கோயிலும் வழிபாடும்

கோயில் மிகவும் பெரியதாக அமைந்திருந்தது. கோயிலின் புறத்தே மலிநீர் வாவியும் திருக்குளமும் அமைந்திருந்தன. பவமறுக்கும் பாவநாசச் சுனையும் கோயில் வீதியில் அமைந்திருந்தது. தேரோடும் வீதியும் அமைந்திருந்தது. கோயில் வருவாய்க்கு ஆக இரண்டாயிரத்தெழுநூறு அவணம் விதைப்புத் தரைத்திட்டம் செய்யப்பட்டிருந்தது.

இரண்டவணம் செம்பூச்சம்பா நாளும் கறியமுது செய்யப்படும். கோயிலில் நாளும் மும்முறை வழிபாடு நிகழும். ஆடல் பாடல் எல்லாம் கோயிலில் நடைபெற்றன. அதற்கென நடனப் பெண்களும் பாடகர்களும் இருந்தார்கள். வாயிலுக்குத் தென் கிழக்குத் திசையில் ஏழு எண்ணெய்க் கிணறுகள் இருந்தன. எண்ணெய்க் கிணறுகளைச் சுற்றி சுவர் கட்டப்பட்டு கதவும் இடப்பட்டிருந்தது. எண்ணெய்க்கிணறுகளுக்குத் துலாக்களும் போடப்பட்டிருந்தன. கோயிலில் 11,000 விளக்குகள் அமைக்கப்பட்டிருந்தன.

கட்டுக்குளத்தார் இறைவன் தொழும்பு செய்தார்கள். இந்துவெளி (நிலாவெளி) யில் வாழ்வோர் இறைவன் முன்னர் காப்பணிதல், விழா நடத்தல், சுத்தமாக ஆறவணம் நெல் கோயிலுக்குக் கொடுத்தல் முதலிய கடமைகளைச் செய்தார்கள். ஆயத்தீர்வை கட்டும் வழக்கமும் இருந்தது. கொட்டியாபுரத்தில் இருந்து வெற்றிலை பாக்கு, கருங்கதலிக் கனி, அரைத்த சந்தனம், பால், தயிர், நெய், முதலியன வந்தன. கெவுரி முனையில் இருந்து ஏரண்டம், (ஆமணக்கு) இருப்பை, புன்னை முதலிய வித்துக்களில் இருந்து எடுக்கப்பட்ட நெய் மீகாமனால் கொண்டுவரப்பட்டு எண்ணெய்க்கிணறுகளில் ஊற்றப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைகளில் திருக்கோணேஸ்வரம்

ஆசிரியர் க. கணபதிப்பிள்ளை - கரவெட்டி.

இதுவரை கிடைத்த தேவாரத் திருமுறைகளுள் காழிவேந்தர் 219 தலங்களுக்கும், நாவேந்தர் 125 தலங்களுக்கும் சுந்தரர் 84 தலங்களுக்கும் பதிகங்கள் பாடியுள்ளனர். இவையன்றி, மேலும் பலநூறு தலங்களை அவர்கள் வணங்கிப் பாடியுள்ளனர். இதற்கு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய க்ஷேத்திரக்கோவை, ஊர்த்தொகை, திருநாட்டுத்தொகை, க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகம், அடைவுத் திருத்தாண்டகம் என்பனவும் பிறதலத்துப் பதிகங்களும் சான்ருகின்றன. பதிகம் பெருத தலங்கள், பிறதலத்துப் பதிகங்களில் இடம்பெறும்போது அவை வைப்புத் தலங்கள் ஆகின்றன.

இத்தலங்களுள் மூவர் முதலிகள் சென்று வழிபடாத இமயத்தலங்களும் ஈழநாட்டுத் தலங்களும் பலவுண்டு. வடக்கில் திருக்கயிலை, ஸ்ரீபர்வதம், இந்திரநீலபர்வதம், அநேகதங்காவதம், கேதாரம், நொடித்தான்மலை என்பனவும் ஈழத்தில் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், கதிர்காமம் என்பனவும் இடம்பெறுகின்றன. ஈழநாட்டுத் திருப்பதிகளுள் திருக்கேதீச்சரத்துக்கு சம்பந்தப்பிள்ளையாரும் சுந்தரரும் பாடிய பதிக வடிவங்களுண்டு. ஆனல் கோணமலைக்குக் காழிவேந்தர் பதிகம் மட்டுமேயுண்டு. அதிலும் ஏழாம் பாடல் மறைந்தமை வருந்துதற்குரியது. இந்தநிலையில் கேதீச்சரத்துக்கு அப்பரும், கோணமலைக்கு அப்பரோடு சுந்தரரும் முகிழ்த்த திருமுறைப் பதிகங்கள் இந்நாள்வரை நமக்குக் கிடைக்காமை நமது தவக்குறைவேயாகும். இருந்தும் அப்பரும் சுந்தரரும் அருளிய க்ஷேத்திரக் கோவைத் தாண்டகம், ஊர்த்தொகை, திருநாட்டுத்தொகைப் பதிகங்களில் திருக்கோணேஸ்வரம் அவ்விருவராலும் வைப்புத்தலமாகப் பாடப்பட்டிருப்பது மகிழ்வுதருவதாகும்.

## நாவேந்தர் நாவில் திருக்கோணேஸ்வரம்

திருநெய்த்தானம் திருநாவுக்கரசர் பாடிய தலங்களுள் ஒன்று. அதில்,

''தக்கார் அடியார்க்கு நீயே என்றும்
தலையாய கயிலாயர் நீயே என்றும்
அச்காரம் பூண்டாயும் நீயே என்றும்
ஆக்கூரில் தான்தோன்றி நீயே என்றும்
புக்காய ஏழுலகும் நீயே என்றும்
புள்ளிருக்கு வேளூராய் நீயே என்றும்
தெக்கார மாகோணத் தானே என்றும்
நின்றநெய்த் தானஎன் நெஞ்சுளாயே''

என்பது அப்பதிகத்தில் ஆரும் பாடல். இத்திருப்பாட்டு வைப்புத்தலங்கள் பலவற்றைக்கொண்டு பொலிவது. அவற்றுள் ஒன்ருக மலர்கிறது தெக்காரமா கோணபதி. தெக்கு ஆர் அ மா கோணம் என்பது இதன் பிரிநிலை. தெக்கு - தெற்கு இஃது எதுகை நோக்கிச் சிதைந்தது. அன்றி, தெக்கணம் என்பதன் சிதைவு எனினுமமையும். அ. மா. கோணம் என்னும் தொடர்மொழி அந்த - மா - கோணம் என்ரே அழகிய மாகோணம் என்ரே பொருள் தரும். எனவே, தெற்குத் திசையின்கண் பொருந்திய அந்த மாகோணம் என்பதுவே இத்தொடர் மொழி தரும் பொருளாகும். இங்கு மலரும் கோணம் எது என்பது ஆராய்வுக்குரியது. இப்பதிகத்தில் உள்ள பாடல்கள் அனைத்திலும் வடகயிலை பாடப்படுகின்றது. அதனேடு தென்கயிலைகள் மூன்றனுள் திருச்சிராப்பள்ளியும் காளத்தி மலையும் ஏனைய பாடல்களில் அவற்ருேடு இணைந்த மாகோணமலையும் காட்சிதருவது வியப்பன்று. எனவே, இந்தக் கோணம் திரிகோணமேயாகும் என்பது தெளிவு.

இனி, இங்கு குறிப்பிடும் மாகோணம், கும்பகோணம் ஆதலும் கூடுமோ என நமக்கு ஐயம் தோன்றலாம். ஆனல் அது பொருந்துவதன்று. அப்பரும், சம்பந்தரும் கி. பி. 7ம் நூற்ருண்டில் வாழ்ந்தனர் என்பது வரலாற்று முடிபு. அவ்விருவரும் அக்காலத்தில் கும்பகோணத்தை குடந்தை குடமுக்கு என்றே பதிகம் பாடியுள்ளனர். சம்பந்தர் பல தலங்களையும் வைத்துப் பாடிய பதிகம் ஒன்றேயாகும். அது க்ஷேத்திரக் கோவைப் பதிகம். அப்பதிகத்தில் முதற் பாடலில் ''குடந்தை'' என்று பாடுகின்ருர். இரண்டாம் பாடலில் கயிலை என்றும் ''கோணம்'' என்றும் தனித்தனி பிரித்துப் பாடுகின்ருர் காழிப்பிள்ளையார். எனவே ஒரு பதிகத்திலேயே சம்பந்தப்பிள்ளையாரால் ''குடந்தை'' எனவும் ''கோணம்'' எனவும் ஒரு தலம் சுட்டுப் பெயர்கள் இடம்பெரு என்பது தெளிவு. எனவே கோணம் என்பது கும்பகோணம் அன்று. அது திரிகோணமே என்பது முடிவு.

அப்பர் அருளிய அடைவு திருத்தாண்டகம், திருவதிகைபாடுவது அதில் ஒவ்வொரு தாண்டகத்திலும் அதிகையோடு வேறுபல தலங்களையும் சிந்திக்கின்ருர் நாவேந்தர். ஆருவது பாடலில் ''பவ்வம் திரியும் பருப்பதமும்'' என்னும் தொடர் காட்சி தருகின்றது. இங்கு, பவ்வம் என்பது பேராழி; பவ்வம் திரியும் பருப்பதமும் என்பதற்குச் சமுத்திர அலைகள் வந்து மோதும் மலை'' என்பது பொருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தநிலையில் ''பருப்பதம்'' என்பது ''ஸ்ரீபருப்பதம்'' என்னும் தலமாதலும் கூடுமோ என்பது எங்கள் ஐயம். ஸ்ரீபருப்பதம் - ஸ்ரீசைலம். அதுவே மல்லிகார்ச்சுனம் ஆகும். இது வடநாட்டில் காநூல் ஜில்லாவில் கிருஷ்ணா நதிக் கரையில் உள்ளது. இத் தலம் மலையில் அமைந்திருப்பினும் பேராழியை அடுத்தது அன்று. மேலும் இந்த அடைவு திருத் தாண்டகத்திலேயே பதினொராம் பாடலில் இலங் கார் பருப்பதத்தோடு ஏணர் சோலைக்காணர் மயிலார் கருமாரியும் எனப் பருப்பதம் பவ்வம் நீக்கிச் சொல்லப்படுவதால் பருப்பதமாகிய மல்லிகார்ச் சுனம் வேறு, பவ்வம் திரியும் பருப்பதம் வேறு என்பது முடிபாகும். ஆகவே, பவ்வம் திரியும் பருப்பதம் கோணமலையாகத்தான் இருத்தல் வேண்டும்.

## சுந்தரர் நாவில் திருக்கோணேஸ்வரம்

அப்பரும் சம்பந்தரும் க்ஷேத்திரக் கோவை களைப் பாடியிருப்ப, ஊர்த்தொகை திருநாட்டுத் தொகை என்னும் புதிய அமைப்புக்களைப் பாடிய வர் சுந்தரர். அவர் அருளிய ஊர்த்தொகையில்,

''நிறைக்காட்டானே நெஞ்சத்தானே
நின்றியூரானே
மிறைக்காட்டானே புனல்சேர்சடையாய்
அனல் சேர்கையானே
மறைக்காட்டானே திருமாந்துறையாய்
மா கோணத்தானே
இறைக்காட்டாயே எங்கட்குன்னை
எம்மான் தம்மானே.''

என வருவது மூன்றும் பாடல். இங்கு குறிப்பிடும் மாகோணம் ஈழநாட்டுத் திரிகோணமேயாகும். இதுவும் கும்பகோணம் ஆதலும் கூடுமோ எனின் அது பொருந்துவதன்று. கி. பி. 9ம் நூற்றாண்டு முற்பகுதியில் வாழ்ந்தவர் சுந்தரர். அவர் கும்ப கோணத்தைப் பாடிய பதிகம் இதுவரை கிடைக்க வில்லை. கிடைக்காவிடினும் பிறதலங்களில் கும்ப கோணத்தைப்பாடுகிறார் அவர்.

''கோட்டம் கொண்டார் குடமூக்கிலுயர்
கோவலும் கோத்திட்டையும்
வேட்டங் கொண்டார் வெண்ணெய்
நல்லூரில் வைத்தெனை ஆளும்கொண்டார்.

என வருவது திருநாவலூர்ப் பதிகத்தில் ஆறும் பாடல்.

சம்பந்தர் பாடிய திருச்க்ஷேத்திரக் கோவைப் பதிகத்தின் இரண்டாம் பாடல்.

''அண்ணாமலை ஈங்கோயம் அத்திமுத்தாறகலா
முதுகுன்றம் கொடுங்குன்றமும்
கண்ணார் கழுக்குன்றம் கைலை கோணம்
பயில் கற்குடி காளத்தி வாட்போக்கியும்
பண்ணார்மொழி மங்கையோர் பங்குடையான்
பரங்குன்றம் பருப்பதம் பேணிநின்றே
எண்ணாய் இரவும் பகலும் இடும்பைக்கடல்
நீந்தலாம் காரணமே''

எனவருவது இங்கு குறிக்கப்படும் குடமூக்கு கும்ப கோணமாகும். எனவே கி. பி. 9ம் நூற்றாண்டிலும் கும்பகோணம் குடமூக்கு எனவே வழங்கப்பட்டு வந்தமை தெளிவாகும். இவர் காலத்தன்றி 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரியார் காலத்திலும் கும்பகோணத்திற்கு, குடந்தை குடமூக்கு என்னும் பெயர்கள் வழக்கில் இருந்தமையை அவர் பாடிய திருப்புகழ்ப் பாட்டுக்கள் வலியுறுத்துகின்றன.

இனி சுந்தரர் பாடிய ஊர்த்தொகை 9 ஆம் பாடலில் ''புகலூர்ப் போதா மூதூரா'' என்னும் தொடர் காட்சிதருகின்றது. இங்கு குறிக்கப்படும் மூதூர்ப்பதி எது'' என்பது வினா. அப்பர் சுவாமி களும் திருவதிகைப் பெருமானை ''அதிகை மூதூர் அரசினை'' எனவழுத்துகின்றார். இங்கு மூதூர், அதிகை என்னும் அடைமொழி கொண்டுள்ளது. அதிகைமூதூர் என்பது அதிகையாகிய மூதூர் என விரியும். ஆனால் சுந்தரர் தழுவு சொல் எதுவுமின்றி ''மூதூரா'' என்கிறார் ஊர்த்தொகைப் பதிகத்தில், திருவதிகைக்கு மூதூர் என்னும் பெயர் வழக்கு இதுவரை கிடைத்த திருமுறைகளில் வேறெங்கும் காணப்படவில்லை. எனவே சுந்தரர் பாடும் மூதூர் ஈழத்து மூதூராகுமாயின் அத்தலம் திருமலையை அடுத்துள்ள அகத்தியர் தாபனம் எனப்படும் ''திருக்கரசைப்பதி'' ஆதலும் கூடும். திருக்கரசை சோழர் காலத்தில் சிறப்புற்றிருந்தது என்பது வரலாற்றுண்மை.

183618

மூவர் முதலிகளை அடுத்து கோணமலையை நினைந்தவர் பதினோராந் திருமுறையில் அங்கம் வகிக்கும் பட்டினத்துப் பிள்ளையார். இவர் நம்பி யாண்டார் நம்பி காலத்துக்கு முந்தியவர். இவர், பிற்காலத்தில் பத்திரகிரி மன்னனுக்குக் குருவாக அமைந்தவரும் கோணகிரி என்னும் திருவண்ணா மலையில் தோன்றியவரும் திருவொற்றியூரில் முத்தி யடைந்தவருமாகிய பட்டினத்தடிகளின் வேறானவர். திருமுறைப் பட்டினத்துப் பிள்ளையார் பாடிய நூல்கள் ஐந்து. அவற்றுள் திரு ஏகம்பமுடையார் திருவந்தாதியும் ஒன்று. அதில்,

''ஆலையங் கார்கரு காவைகச்
சூர்திருக் காரிகரை
வேலையங் கேறு திருவான்மி
யூர்திரு ஊறல்மிக்க
சோலையங் கார்திருப் போந்தை
முக்கோணம் தொடர்கடுக்கை
மாலையன் வாழ்திரு வாலங்கா
டேகம்பம் வாழ்த்துமினே''

UNIVERSITY OF JAFFNA LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது 65ம் பாடல்: மூவரை ஒத்து பட்டினத்துப் பிள்ளையும் பலதலங்களில் ஏகம்பமுடையாரை வைத்துப் பாடுகின்றார். இப்பாட்டில் முக்கோணம் இடம் பெறுகிறது. முக்கோணம் என்பது திரிகோணந் தானே. எனவே திரிகோணமலை, பட்டினத்தடிகள் உள்ளத்திலும் பூத்துள்ளது. ஆனால் முக்கோணம் என்பது முக்கூடலாகிய திரிகூடமலையையும் நினைவு படுத்தலாம். கோணம் என்னும் சொல் கூடத்தைக் குறிப்பதன்று. எனவே அது பொருந்தாதென்க. அவ்வாறு பொருந்துவதாயினும் கோணேஸ்வரத்துக் குரிய பல பெயர்களுள் திரிகூடம் என்பதும் ஒரு பெயராகும். எனவே இங்குக் குறிக்கப்படும் முக்கோணம் திரிகோணமலையையும் உள்ளடக்கியதெனலாம்.

இவரையடுத்து, பன்னிரண்டாந் திருமுறையில் கோணமலையைப் பாடுகின்றார் சேக்கிழார்; இது சம்பந்தப்பிள்ளையார் கோணமலையை வணங்கித் தேவாரம் பாடியதைக் குறிப்பது. பிள்ளையார் கோணமலைப் பதிகத்தை இராமேசுவரத்தில் நின்று பாடினர் என்பது சேக்கிழார் கருத்து. அப்பகுதியை

''அந்நகரில் அமர்ந்தங்கண் இனிதுமேவி
ஆழிபுடை சூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில்
மன்னுதிருக் கோணமலை மகிழ்ந்தசெங்கண்
மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப்பாடி
சென்னிமதி புனைமாட மாதோட்டத்தில்
திருக்கேதீச் சரத்தண்ணல் செய்யபாதம்
உன்னிமிகப் பணிந்தேத்தி அன்பரோடும்
உலவாத கிழிபெற்றார் உவகையுற்றார்:

என்கிறார் சேக்கிழார் பெருமான்.

இதுவரை கோணமலையரசை அப்பர், சுந்தரர் திருமுறைப்பட்டினத்தப்பர் என்போர் வழுத்திய பகுதிகள் காட்டப்பட்டன. இப்பகுதிகள் திருமுறைப்பகுதி. ஆனால் திருமுறைச் சிறப்புகளுடன் திருப்புகழ்ச் சிறப்புமுடையது கோணமலை. இதுவரை கோணமலைக்குரிய திருப்புகழாக ''விலைக்கு மேனியில் அணிக்கோவை'' எனத் தொடங்கும் திருப்புகழ் உள்ளது. அப்பாடலில் நான்காம் கழிநெடில் அடியாக வருவது,

''நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்
திருக்கொணமலை தலத்தாருகோபுர
நிலைக்குள் வாயினில் கிளிப்பாடுபூதியில்
— வருவோனே''

என்னும் பகுதியாகும். இங்கு திருக்கோணமலை தலத்தாருகோபுர நிலைக்குள் வாயினில் கிளிப்பாடு பூதியில் வருவோனே என்னும் பகுதி சிந்தனைக் குரியது. இக்கருத்தை உற்று நோக்கும்போது அருணகிரியார் கிளி வடிவந்தாங்கி கந்தரனுபூதி பாடிய திருப்பதி திருக்கோணமலையாக அமைகிறது. இஃது ஆராய்ச்சிக்குரியது. இத்திருப்புகழ் அன்றி மேலும் இரண்டு திருப்புகழ்ப் பாடல்கள் திருக் கோணமலையரசைப் போற்றுகின்றன. அவற்றுள் ஒன்று தொடுத்தவாதெனத் தொடங்குவது இப் பாடல் முடிவில் ''அருக்கொணமலை தருக்குலாவிய பெருமாளே'' என்னும் பகுதி இடம்பெறுகின்றது. இங்கு குறிக்கப்படும் ''அருக்கொணமலை'' தலப் பெயர் ஆகும்.

திருப்புகழ்ப் பாடல்கள் முழுவதையும் முதற் கண் தேடிப் பதிப்பித்தவர் ''வித்தியாபானு'' என்னும் மாசிகை ஆசிரியர் திரு. மு.ரா. கந்தசாமிக் கவிராயர். அவர் சிறந்த சைவத் தமிழறிஞர்; அவர் குன்று தோருடல் திருப்புகழ்ப் பகுதியில் முருகனுக்குரிய பல குன்றங்களை வரிசைப்படுத்து கின்றார். அதில் ஈழத்துக் குன்றங்களும் பொலி கின்றன. அவற்றை அவ்வரிசைப்படுத்தும்போது கதிர்காமம், அருக்கொணமலை, திருக்கோணமலை என நிரலே தருகின்றார். இவற்றுள் அருக்கொணமலை, பாரதநாட்டுப் பதியாயின் அத்தலம் அது கதிர்காமத்துக்கும் திருக்கோணமலைக்கும் இடையில் புகுந்திருக்க முடியாது. அன்றியும் பாரதத்தில் அருக்கொணமலை என்னும் தலம் எவ்விடத்தும் இல்லை என்பது யாவரும் அறிந்த உண்மை. எனவே அஃது ஈழத்துத்தலம் என்பது தெளிவாகின்றது. ஈழத்திலும் அருக்கொணமலை என்னும் பதி வேறில்லை என்பதும் நாமறிந்ததே. எனவே இப்பதி திருக்கோணமலையே என்பது முடிவாகும். இங்கு அருமைகொணமலை என்பது அருக்கொணமலை என இணைந்தது. கோணமாமலையைக் கோணமலை என்றே அருணகிரியார் முதற்பாடலிலும் வழங்கியுள்ளார்.

அடுத்தபாடல் குதிரைக் குன்றத்தையும் கோண மலையையும் இணைத்துப் பாடியது அப்பாடல். ''பாரவித முத்தப்படீரபுளகம்'' எனத் தொடங்கு வது அதில்;

தேர் இரவி உட்கிப்பு காமுதுபு ரத்தில்
தெசாசிரனை மர்த்திற்ற - அரிமாயன்
சீர்மருக அத்யுக்ர யானைபடும் ரத்நத்ரி
கோணகயி லத்துக்ர - கதிர்காம
வீரபுன வெற்பிற்க லாபி யெயிணச்சிக்கு
மேகலையிடைக் கொத்தின் - இருதாளின்
வேகி மழையிற் பச்சை வேயிலருணக்கற்றை
வேல்களில் அகப்பட்ட - பெருமானே.

எனவரும் இப்பகுதி முருகன் அகப்பட்டுத் தப்பி ஓடமுடியாத இடங்களைத் தாங்கப் பொலிவது: அவை, கலாபியாகிய மயில் குறவள்ளியின் மேகலை யணிந்த இடை அவளது இரண்டு பாதங்கள், மழைக்கூந்தல், மூங்கில் போலும் தோள்கள் வேல் போலும் கண்கள், திருகோணமலை, கதிர்காமம் என்பன. இங்கு திரிகோணமலையை அதியுக்ர யானை படும் இரத்தினத் திரிகோண சயிலம் என்கிறார் அருணகிரியார். சயிலம் நமலை, இதுவரைகாட்டிய சான்றுகளால் கோணமலைக்குத் திருப்புகழ்ப்பாடல் ஒன்றுமட்டும் அன்று. பின்னை மூன்று பாடல்கள் உண்டு என்பதும் பெறப்பட்டது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலேயர் ஆட்சியில் திருக்கோணேஸ்வரம்

தொண்டர் இ. சண்முகராசா
செயலாளர், அருள்நெறி மன்றம்

செந்தமிழ்ச் சிவநெறி ஞானப் பனுவலாகிய திருமுறைப் பாடல்பெற்றருளிய, தென்கயிலையாம் திருக்கோணமலை உலகப் பெரும்புகழ்பெற்ற திருவூர். ஆத்மீகத்திலும்சரி, அரசியலிலும்சரி, கிழக்குநாடுகளில் தன்னிகரில்லாச் சிறப்புக்களுடன் விளங்குவது திருக்கோணமலை. ஐரோப்பிய நாடுகளில் இலங்கை (சிலோன்) என்று சொன்னால் ஐரோப்பியர்களுக்கு விளங்காது. ஆனால், திருக்கோணமலை (றிங்கமல) என்று சொன்னால்தான் விளங்குமாம். அதாவது திருக்கோணமலையில்தான் இலங்கையுள்ளது என்ற எண்ணமும் பரவலாக ஐரோப்பியர்களிடம் இருந்தது. இதிலிருந்து திருக்கோணமலை எவ்வளவு உலகளாவிய திருவூரென்பதை நாம் எண்ணாமலிருக்க முடியாது. அதேபோன்று, திருமுறைப் பாடல்கள் பாடிப்பரவும் இறைவன் கோணநாயகப் பெருமானும், பெருமான் எழுந்தருளியுள்ள திருக்கோயிலும் உலகப் பெரும்புகழ்கொண்டதே. இத்தனைக்கும் ஒரு அடிப்படைக் காரணம் இருக்கத்தான் செய்கின்றது. அவ்வடிப்படைக் காரணம் எந்தவகையிலமைந்தாலும் இறுதியில் உண்மையுணர்வுக்கு வந்துதான் ஆகவேண்டுமென்பதை நாம் நெஞ்சத்தில் எண்ணும் சந்தர்ப்பத்தில், சற்று நிகழ்கால நிலையினின்று விலகிச் சென்றகாலம் அதாவது ஆங்கிலேயப் பெருமக்கள் ஆண்ட காலத்திற்கு நாம் சென்றால் நன்கு விளங்கும். மாறுபாடுடைய மனத்தை மாற்றி மாண்புமிக்க ஒருமைப்பாடுடையவர்களாக - ஒருமைப்பாடுடைய மனத்தவர்களாக நாம் வாழ்வதற்கு இறைவன் திருவருள் வழிகாட்டியருளும் என்பது உண்மை. ஆனால் மாறுபாடுடைய மனத்தையும் செயல்களையும் அவற்றினால் ஏற்படும் உண்மை அனுபவங்களையும் நமக்குக் காட்டிப் பின்பு இறுதியில் உண்மை நிலையை நாம் விளங்கிக்கொள்ள திருவருட் பெருங்கருணை நற்றுணையாக மனித வாழ்வுக்கு அமைந்தருளும், இவ்வுண்மைக்கு சென்றகால நிகழ்ச்சிகளும் நிகழ்ச்சிகளின் முடிபுகளும் அனுபவங்களும் சான்று.

இறைவனை சமய ஆசாரங்களுடனும், விதிமுறைகளுடனும், சடங்குகள் சம்பிரதாயங்கள் ஆகியவற்றின் துணைகொண்டும் வழிபாடாற்றுவது ஒருவழி. இவ்வழியானது இறுதியில் மனிதன் பெறுகின்ற இறைவன் திருவருட் பேற்றுக்கு பெருந்துணையாக அமைகின்றது. இத்தனைக்கும் அன்பு - அன்புவழிப்பட்ட பாவனை – பாவனை வழிநின்று பரமன் அருளைப் பெறுவதற்குச் செய்யும் வழிபாடுதான் உண்மையில் மனிதவாழ்வுக்கு வேண்டியது எனலாம். இந்த நிலையில் நாம் எண்ணும்போது ஆங்கிலேயர்களும் கோணமாமலை இறைவனுக்குப் பணிசெய்துள்ளனர். ஆங்கிலேயக் கடற்படைத் தரைப்படை நிர்வாகங்கள் திருக்கோணமலையில் நடைமுறையில் இருந்தபோது, நிர்வாகத்திற்குப் பொறுப்பாளர்களாக இருந்தவர்கள் கோணமாமலை இறைவன்மீது அன்பு செலுத்தியுள்ளனரென்றால் அது வெறும் புனைந்துரையல்ல. அடியேன் அர்ச். சூசையப்பர் ஆங்கிலக் கல்லூரியில் கல்விகற்றுக் கல்லூரியில் தொடர்ந்து படிக்க வசதியின்மை காரணமாகப் பள்ளிக்கூடத்திலிருந்து விலகியபின்பு கடற்படைத் தளத்தின் அதாவது கிழக்கிந்தியப் பகுதிக்கே இரண்டாவது தளகர்த்தராக (அட்மிரல்)க் கடமையாற்றிய பிறேங் குவிக்பால் என்ற ஆங்கிலேயப் பெருமகனிடம் வீட்டு வேலைக்காரனாகக் கடமையாற்றி மூன்று ஆண்டுகள் அனுபவமும், அதன்பின் தரைப்படைத் தளத்தின் பொறுப்பாளர்களில் ஒருவராகிய லெப்டினன்ட் மக்டோளன் என்ற ஆங்கிலேயப் பெருமகனாரிடம் கடமையாற்றிய ஒரு ஆண்டு அனுபவமும் எனக்குண்டு. இவர்கள் தமது நிர்வாகக் காலத்தில் கோணமாமலை இறைவனிடம் பக்திகொண்டவர்களாக விளங்கினர். அத்துடன், கோணமாமலை இறைவனின் திருக்கோயில் அமைந்துள்ள கோட்டைக்குள் உள்ள இயற்கை வளங்களை அழிக்காது பாதுகாத்த பெருமையும் சிறப்பும் இவர்களுக்குண்டு. அதாவது ஆங்கிலேய நிர்வாகத்துக்குண்டு. அத்துடன் கோட்டை வனத்துக்குள் வாழும் மான்கள் பசியாலும், தாகத்தாலும் வருந்தாமல் வாழ்வதற்குரிய முறையில் உணவளித்தனர். தண்ணீர்த் தொட்டிகள் அமைத்துத் தாகத்திற்குத் தண்ணீரும்பருக வசதிசெய்தனர். அத்துடன் கடற்படைத் தளத்திலிருந்து காரில் முதலாவது அட்மிரல் (றிய அட்மிரல்) வூட்ஹவுஸ் துரை அவர்களும், இரண்டாவது அட்மிரல் (வைஸ் அட்மிரல்) பிறேங் குவிக்பால் துரை அவர்களும் கோட்டைக்குச் சென்றால் சிலவேளை அவர்களுடன் அடியேனும் செல்லும்போது கோட்டை வாயிலுக்குள் செல்லும்போது தாம் அணிந்திருக்கும் அதிகாரத்துக்குட்பட்ட தமது தொப்பிகளைக் கழற்றிவிடுவார்கள். அவர்கள் மீண்டும் திரும்பும்போது வாயிலுக்கு வெளியே வந்த பின்புதான் தமது தொப்பிகளை அணிந்துகொள்வார்கள். ஆலய வழிபாட்டுக்குச் செல்பவர்களுக்கு வேண்டிய வசதிகளெல்லாம் செய்துகொடுப்பதற்குத் தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகத்தினைப் பணித்திருந்தார்கள். நிர்வாகத்தின்மூலம் கோயில் வழிபாட்டுக்கு வேண்டிய உதவிகளைச் செயலாற்ற அவர்கள் பின்நிற்பதேயில்லை. தாம் வேற்றுச் சமயத்தவர்களாக இருப்பினும், சைவசமய வழிபாட்டுத்தலமாக விளங்கிய கோணேசப் பெருமானின் திருத்தலத்துக்கு வேண்டிய வசதிகளெல்லாம் செய்துகொடுத்தார்கள். அவர்கள் காலத்தில் கோட்டைவனத்துக்குள் வாழ்ந்த மானினங்கள் எக்காரணங்கொண்டும் வெளியேறியது கிடையாது. ஆனால் இப்போதய நிலை வேறு. அத்துடன், அரச அதிபரின் அலுவலகமாக இப்பொழுது விளங்கும் கச்சேரிக்கு அருகாமையில் ஒரு கிறிஸ்தவ தேவாலயமுண்டு. அதனை ஆங்கிலேயர்களின் நிர்வாக காலத்தில் புதுப்பித்துக் கட்டுவதற்கு ஆயத்தம் செய்யப்பட்டபோது, அதற்குரிய அனுமதியை தளகர்த்தராக விளங்கிய அட்மிரல் வூட்ஹவுஸ் அவர்கள் வழங்க மறுத்துவிட்டார்கள். காரணம், பண்டைப் புகழ்பெற்ற வழிபாட்டுத்தலமாகவிளங்கும் கோணேசர் மலை இருக்கும்போது வேறு ஒரு சமய வழிபாட்டுத்தலம் ஒன்று கோட்டைக்குள் வேண்டியதில்லை என்று சொல்லி மறுத்துவிடவேதான், அத்தேவாலயம் அப்படியே புதுப்பிக்கப்படாமல் விடப்பட்டது. இதற்குரிய அனுமதியை வழங்காமல் மறுத்து கோணேசப் பெருமானின் திருவருளுக்குப் பாத்திரமாக விளங்கிய முதலாவது தளகர்த்தர் றிய அட்மிரல், வூட்ஹவுஸ் அவர்களுக்கும், இரண்டாவது தளகர்த்தர் வைஸ் அட்மிரல் பிறேங் குவிக்போல் அவர்களுக்கும் சைவசமயத்தவர்கள் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டவர்கள். அத்துடன், ஆங்கிலேயர் காலத்தில் இத்தலம் புனிதமிகு தெய்வீகத் தலமாகக் கருதப்பட்டது. ஆங்கிலேயரால் இது ஒரு ''தெய்வீகம் நிறைந்த நகரம்'' (This is a Divinity City) என்று அழைக்கப்பட்டது - கருதப்பட்டது. ஆனால் ஆங்கிலேயர்கள் எந்தவிதமான ஆசாரங்கள், சம்பிரதாயங்கள் ஆகியனவற்றைக் கொண்டு கோணமாமலை இறைவனுக்கு அன்பு செலுத்தவில்லை. ஆனால், மாசற்ற உண்மை அன்பு செலுத்தியும், கனம்பண்ணி மரியாதை செலுத்தியும் மதிப்பளித்தும் அன்புள்ளத்துடன் வழிபட்டார்கள். அவர்கள் வழிபாடு சடங்குகளோடு அமையவில்லை. அவர்கள்தம்வழிபாடு உண்மையன்பு வழிப்பட்டதாக அமைந்தது என்ற உண்மையை யாரும் மறுக்க முடியாது. சமுதாய வாழ்வுக்கு வேண்டிய ஆக்கப் பணிகள் ஆற்றுவதனைத்தான் வழிபாடாகக்கொள்பவர்கள் ஆங்கிலேயர்கள். அந்தவகையில் சில ஆண்டுகள் அவர்கள்தம் இல்லத்தில் கடமையாற்றி வாழ்ந்ததன் காரணமாகத்தான் அவர்கள்தம் வாழ்க்கையின் குறிக்கோள்களை அடியேனால் இயன்றளவு அறிய முடிந்தது. ''இறைவனைத் தேடி நாம் செல்வதிலும் பார்க்க, இறைவன் நம்மைத்தேடி வருகைதந்தருளுதல்வேண்டும்'' என்றும், ''இறைவன் நம்மிடம் வருகைதந்தருளுகின்ற சந்தர்ப்பத்தை நாம் எதிர்நோக்கி வாழ்வதுடன், இறைவன் நம்மிடம் எழுந்தருளுவதற்குரிய வகையில் நம்மை நாம் புனிதர்களாக ஆக்கிக்கொண்டு வாழ்தல்வேண்டும்'' என்ற உயர்ந்த கோட்பாடுகளுக்கு உட்பட்டவர்களாக ஆங்கிலப் பெருமக்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதை நாம் நினைவில் கொள்ளுதல்வேண்டும். யாரோ, எப்பவோ, ஏதோ ஒரு காரணத்தால் - சூழ்நிலையால் தவறுகள் செய்திருக்கலாம். ஆனால், அத்தவறுகளை வைத்துக்கொண்டு தவறுசெய்தவர்களின் பரம்பரையையே குற்றங்கள் சொல்லி அவர்களைத் தாழ்த்துவது சரியல்லவென்பதை நாம் நினைவில் கொள்ளுதல் வேண்டும். கோணமாமலை இறைவனுக்கு சைவ சமயத்தவர்கள் மட்டும் வழிபாடாற்றிப் பணிகள் ஆற்றவில்லை. எங்களுடன் இணைந்தாற்போல், மற்றும் சமயத்தவர்களும், இனத்தவர்களும் வழிபாடாற்றியுள்ளனர் - வழிபாடாற்றி வருகின்றனர் - பணியாற்றியுள்ளனர் - பணியாற்றிக்கொண்டு வாழ்கின்றனர் என்பனபோன்ற உண்மைகளை நாம் மறைத்தல் கூடாது. ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில்தான், அதாவது 1942-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9-ஆம் திகதியன்று காலை 6-30 மணி தொடக்கம் திருக்கோணமலையில் நிகழ்ந்த ஜப்பானியரின் குண்டுவீச்சின்போது பாரிய எண்ணெய்த்தாங்கிகள் சீனக்குடாவில் ஐந்து தினங்களாக எரிந்து கொண்டமையும், துறைமுகத்தில் நிகழ்ந்த குண்டு மாரிபொழிவும், கோணேசப்பெருமானின் மலையில் நிகழ்ந்த குண்டுமாரி பொழிவும் நிகழ்ந்தவேளையிலும் தலைநிமிர்ந்துகொண்டிருந்த கோணமாமலையின் தெய்வீகச் சிறப்பினையும் அதன் மாண்பினையும் போற்றிய ஆங்கிலேயர்கள், ''உண்மையில் இது ஒரு தெய்வீகம்தான் – தெய்வீகம் நிறைந்த பூமிதான்'' என்று வாழ்த்தி மகிழ்ந்தமையை யாரும் மறக்கமுடியாது. காரணம் திருக்கோணேசர் ஆலயம் அமைந்துள்ள திருமலையில் ஜப்பானியர் பொழிந்த குண்டுகள் ஒன்றேனும் வீழ்ந்து வெடிக்கவில்லை. இறுதியாக ஆங்கிலேயர்கள் திருக்கோணமலையையும், கோணேசப்பெருமானையும் உள்ளத்தால் அன்புவழி நின்று மதித்தார்கள் - கொண்டாடினார்கள். எனவேதான், கடற்படை உதவித் தளபதியாகவிருந்த அடியேனின் அன்புக்குரிய துரைமகனார் பிறேங் குவிக்போல் அவர்களின் மனைவி இங்கு வாழ்ந்து பின் இங்கிலாந்து சென்றபின் தனக்குப் பிறந்த ஆண் குழந்தைக்கு திருக்கோணமலையில் வாழ்ந்த காலத்தில் கருவுற்றிருந்தபடியால் அதன் நினைவாக திருக்கோணமலை என்ற பெயரை ஆங்கிலத்தில் ''றிங்கோமலே'' எனச் சூட்டி மகிழ்ந்துள்ளமையே ஆங்கிலப் பெருமக்களின் நன்றியுடைமைக்கு ஒரு நற்பெருஞ் சான்று என்பதை நாம் என்றும் நினைவில் கொள்ளவேண்டியதொன்றாகும். எனவே, ஆங்கிலேயர்கள் இந்தப் புண்ணிய தலத்தில் வாழ்ந்ததோடு மட்டுமன்று பல துறைகளிலும் சமுதாய நலத்துக்கு அவர்கள் ஆற்றிய நற்பணிகளை நாம் நினைவில் கொள்ளுவதுடன், அவர்கள் கோணமாமலை இறைவன்பால் காட்டிய பணிவையும் அன்பையும் நாம் மறத்தலாகாது. சைவ சமயத்தின்பால் ஐரோப்பியர்கள் கொண்டுள்ள பெருமதிப்பும் பற்றும் குறித்து நாம் பெருமையும் மகிழ்ச்சியும் கொள்ளுவதுடன், சைவத்திருநெறியின்பால் ஆங்கிலேயர்கள் அதாவது இங்கிலாந்து தேசத்தவர் கொண்டுள்ள மதிப்புக்கும் அன்புக்கும் நாம் – நமது சமுதாயம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

சிவ சிவ

''இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோணேஸ்வரர் ஆலயம் பற்றிய சில வரலாற்றுக் குறிப்புகள்

பேராசிரியர் கா. இந்திரபாலா

**பல** நூற்றாண்டுகளின் பின்னர் மீண்டும் சுவாமி மலையில் கோணேசர் கோயில் கட்டியெழுப்பப்பட்டுள்ள இக்காலத்தில், இக்கோயிலின் வரலாறு பற்றிய சில பிரச்சினைகள் எழுப்பப்பட்டு, மீண்டும் இதற்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய முயற்சிகள் சில மேற்கொள்ளப்பட்டுள்ளமை மிகவும் கவலைக்குரிய விஷயமே. வழிபாட்டுச் சுதந்திரம் பற்றிய பரந்த கோட்பாடுகள் சர்வதேசரீதியாக அங்கீகாரம்பெற்று வரும் இக்காலகட்டத்தில் இந்நாட்டின் இந்துக்களுடைய உணர்வினைப் புண்படுத்தும் வகையில் இம் முயற்சிகள் அமைந்திருப்பது துரதிர்ஷ்டவசமான நிலைமையே. இத்தகைய ஒரு நிலையில் கோணேசர் கோயிலில் கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. இச் சம்பவத்தின் பின்னர் நிலைமை சீரடையுமென எதிர் பார்க்கிறோம்.

சுவாமி மலையில் இந்த நூற்றாண்டுக்கு முன்பு கோணேசர் கோயில் இருக்கவில்லையென்ற விஷமக் கருத்தொன்று கடந்த சில ஆண்டுகளாக ஒரு சிலரால் முன்வைக்கப்பட்டு வருகின்றது. இதுபோன்று நீண்டகாலமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்த சில வரலாற்று விஷயங்கள் அண்மைக்காலத்தில் அரசியல் நோக்கங்களுக்காக மறுக்கப்பட்டுப் புதிய கருத்துக்கள் சிலவற்றுக்கு அங்கீகாரம் வழங்கி, அவற்றை மக்கள் மத்தியில் பரப்பும் முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சி பெரிதும் பாதிக்கப்படுகின்றது.

இலங்கை ஆதிவரலாற்றை ஆராய்ந்தவர்கள் நீண்டகாலமாக மஹாவங்ஸ என்ற பௌத்த பாளி மொழி நூலை ஆதாரமாக வைத்தே ஆராய்ந்து வந்துள்ளனர். தொல்பொருளாராய்ச்சியினாலே பெறப்பட்ட பிற சான்றுகள் போன்றவை அத்துணை முக்கியத்துவத்தை இத்தகைய ஆராய்ச்சியிலே பெறவில்லை. இதனால், மஹாவங்ஸத்திற் கூறப்பட்டுள்ள செயற்கைத்தன்மை பொருந்திய ஒரு வரலாறு பொதுவாக எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்துள்ளது. இலங்கையில் விஜயன் என்பவன் வருமுன்னர், இங்கு மனிதர்கள் வாழவில்லை என்றும், விஜயனே இலங்கையின் முதல் மன்னன் என்றும், தேவநம்பிய திஸ்ஸ மன்னன் காலத்தில் பௌத்த மதம் நாடெங்கிலும் பரவியதென்றும், அதற்கு முன்னர் பிறமதங்கள் இங்கு இருக்கவில்லையென்றும், தேவநம்பிய திஸ்ஸ மன்னன் காலத்திலிருந்து பௌத்த நிறுவனங்களே இருந்து வந்துள்ளனவென்றும் மஹாவங்ஸத்தை ஆதாரங்காட்டிப் பொதுப்படப் பலகருத்துக்கள் நிலவிவந்துள்ளன. ஆனால், இன்று கூடுதலாக ஆதி காலம்பற்றிய தகவல்களை நாம் தொல்பொருளாராய்ச்சி மூலம் பெறத்தொடங்கியதும் மேற்கூறிய கருத்துக்களைக் கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், ஆரியர் என்ற ஒரு மக்கட் பிரிவினர் தான் முதலில் இலங்கையில் வந்து குடியேறினர் என்று கூறமுடியாதுபோகின்றது, அதற்கு எந்தவித தொல்பொருளியற் சான்றும் இல்லை. விஜயன் என்ற ஒருவன் வந்தானோ என்பதே நிரூபிக்கமுடியாத ஒன்றாகிவிடுகின்றது. பௌத்தம் வருவதற்கு முன்னரும், வந்த பின்னரும் வேறு மதங்கள் இருந்தமைபற்றி அறியக்கூடியதாய் உள்ளது. மேலும், தென்னிந்தியாவின் தமிழ்நாடு, கேரளம் போன்ற இடங்களில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலே நிலவிய ஒரு பண்பாடே இலங்கையிலும் பரவலாகக் காணப்பட்டது என்பது வெளிப்பட்டு வருகின்றது.

இத்தகைய ஒரு புதிய ஆராய்ச்சிக்குப் பின்னணியிலேதான் கோணேசர் கோயிலின் தொன்மையையும் வரலாற்றையும் நிறுவவேண்டும். இப்பின்னணியிலே ஆராயும்போது கோணேசர் கோயில் இலங்கையின் மிகப்பழைய வழிபாட்டுத் தலங்களுள் ஒன்றென்பதை மறுக்கமுடியாது.

இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்பு தென்னிந்தியாவில் கேரளம், தமிழ்நாடு போன்ற இடங்களில் பரவியிருந்த பண்பாடு தொல்பொருளியல் ஆராய்ச்சியாளராலே பெருங்கற் பண்பாடு எனப்படுகின்றது. இந்தப் பண்பாட்டு நிலையிலிருந்துதான் சில நூற்றாண்டுகளுள் இராச்சியங்களும் பிற நிறுவனங்களும் வளர்ந்து வரலாற்றுக்காலம் தொடங்கியது. தென்னிந்தியாவில் இடம்பெறும் பழைய வழிபாட்டுத் தலங்கள் இத்தகைய ஒரு பண்பாட்டுப் பின்னணியிலிருந்தே தோன்றின. சிறப்பாக, வர்த்தகம் முக்கியத்துவம் பெற்றிருந்த அக்காலத்தில், கரையோரங்களில் அமைந்திருந்த ஆலயங்கள் பிரபல வழிபாட்டுத் தலங்களாக வளர்ந்தன.

இலங்கையிலும் இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்னர் தென்னிந்தியாவிலே காணப்பட்ட பண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டு நிலையே இருந்தது என்பது இப்பொழுது தெளிவாகிவருகின்றது. அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஆனைக்கோட்டையில் நடைபெற்ற தொல்பொருளாராய்ச்சியும், அதற்குமுன் புத்தளம் மாவட்டம், அனுராதபுரம் மாவட்டம், திருக்கோணமலை மாவட்டம் போன்ற இடங்களில் கிடைத்த தொல்பொருளியற் சான்றுகளும் இந்நாட்டின் பலபாகங்களிலும் பெருங்கற்பண்பாடு 2500 ஆண்டுகளுக்கு முன் பரவியிருந்ததைக் காட்டுகின்றன. தென்னிந்தியாவின் பழைய வழிபாட்டுத் தலங்கள் எவ்வாறு இப்பண்பாட்டின் பின்னணியிலே தோன்றி வளர்ந்தனவோ, அவ்வாறே இங்கும் பழைய வழிபாட்டுத்தலங்கள் அதே பின்னணியில் தோன்றி வளர்ந்தன.

அவ்வாறு தோன்றிய பழைய வழிபாட்டுத் தலங்களுள் முக்கியமானவையாகக் கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் போன்ற ஈஸ்வரன் ஆலயங்களைக் கொள்ளவேண்டும். இவ்விடங்களிலே அகழ்வாராய்ச்சி நடத்தியபின் இவற்றின் ஆதிவரலாற்றைப்பற்றி பல தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். கிறிஸ்துவுக்கு முற்பட்ட கால நிலைபற்றியறிய அகழ்வாராய்ச்சி இன்றியமையாதது. இந்த அகழ்வாராய்ச்சி நடைபெறும்வரை கோணேசர் கோயிலின் ஆரம்பவரலாறுபற்றி விஞ்ஞான ரீதியாக எதுவும் தற்போது கூறமுடியாது.

இற்றைக்கு 2300 ஆண்டுகளுக்கு முன்னர், இலங்கையிலே முதன்முதலாக எழுத்தாதாரங்கள் இடம்பெறத் தொடங்கியபோது, சிவவழிபாடு இத்தீவில் இருந்தமைபற்றி அறிய முடிகின்றது. அப்பொழுதே, சுவாமிமலையில் சிவனுக்குரிய வழிபாட்டுத்தலம் ஒன்று இருந்திருந்தால், அது ஆச்சரிப்படவேண்டிய விஷயமாகாது. பின்னர், பௌத்தம் படிப்படியாகப் பரவத் தொடங்கச் சைவ ஆலயங்கள் பல அழிக்கப்பட்டு, அவ்விடங்களில் பௌத்த வழிபாட்டுத்தலங்கள் தோன்றியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

பௌத்தம் பரவிய பின்னரும் அழியாது தப்பியிருந்த சைவ ஆலயங்கள் மிகவும் பிரசித்திபெற்ற தலங்களாக இருந்திருக்கவேண்டும். அப்படியான ஆலயங்களுள் ஒன்றுகவே கோணேசர் கோயில் இருந்திருக்கவேண்டும். ஏனெனில், பௌத்தம் பரவத் தொடங்கி ஏறக்குறைய ஆறுநூற்றுண்டுகளின் பின்னரும் திருகோணமலையில் சைவ ஆலயம் ஒன்று அழியாதிருந்தமைபற்றிப் பாளிநூல்கள் வாயிலாக அறிய முடிகின்றது. அந்த ஆலயம் கோணேசர் கோயில் என்று கொள்ள இடமுண்டு.

இந்த ஆலயத்தை கி. பி. மூன்றும் நூற்றுண்டில் மகாயானத் தீவிரவாதியாகிய மகாசேன மன்னன் அழித்து, அதன் இடத்தில் விகாரை ஒன்றை அமைத்தான் என அறிகின்றேம். அப்பொழுதுதொட்டே பௌத்தர்களுக்கும் சைவர்களுக்குமிடையில் தகராற்றுக்குரிய இடமாகச் சுவாமிமலை மாறிற்று எனலாம். மகாசேனன் கட்டிய பௌத்த விகாரையின் எச்சங்களை இன்று அகழ்வாராய்ச்சிமூலம் கண்டுள்ளனர் என்றல், அது எதிர்பார்க்கவேண்டிய ஒன்றே. அதற்காக, சுவாமிமலையில் ஆரம்பத்தில் இந்துக்கோயில் இருக்கவில்லை என்ற முடிபுக்கு வருவது பிழையாகும்.

மீண்டும் விரைவிலே சைவர்கள் அவ்விடத்தில் தங்கள் ஆலயத்தை அமைத்தனர் என்று ஊகிப்பதற்குச் சூளவங்ஸ என்ற பாளி நூலிலே கிடைக்கும் சில தகவல்கள் உதவுகின்றன. அதுமட்டுமல்லாது அநுராதபுரத்திலிருந்து ஆட்சிநடத்திய சில பௌத்த மன்னர்களே இந்த ஆலயத்துடன் நெருங்கிய தொடர்புகொண்டவர்களாய் இருந்தனர் என்பதையும் அறியமுடிகின்றது.

இத்தகைய ஒரு நிலையிலேதான் கோணேசர் கோயிலின் சிறப்பு தமிழ்நாட்டிலும், பரவியிருந்தது. ஐந்தாம் ஆறும் நூற்றுண்டுகளிலே தமிழ்நாட்டு வர்த்தகர்கள் வங்காளக் கடலில் துரித வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கியதும் திருகோணமலை ஒரு புதிய முக்கியத்துவத்தைப் பெற்றது. வர்த்தகர்களது ஆதரவு இக்கோயிலின் வளர்ச்சிக்கு உதவியிருக்கவேண்டும். அத்துடன் ஏழாம் நூற்றுண்டில் தமிழ்நாட்டிலே சைவமறுமலர்ச்சி ஏற்பட்டு, பல்லவர் ஆதரவுடன் பழைய கோவில்கள் கருங்கற் கோயில்களாகக் கட்டியெழுப்பப்பட்டபோது, கோணேசர் கோயிலும் கருங்கல்லினல் அமைக்கப்பட்டிருக்கவேண்டும். ஞானசம்பந்தரும் அப்பரும் ஏழாம் நூற்றுண்டில் இதன் சிறப்பினைப் பாடியுள்ளமை இக்கோயில் பெற்றிருந்த முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது.

இதற்குப்பின் பதினேராம் நூற்றுண்டில் இலங்கையிலே சோழராட்சி நடைபெற்றபோது கோணேசர் கோயில் மேலும் பெரிதாக அமைக்கப்பட்டு ஆதரிக்கப்பட்டிருக்கவேண்டும். இந்த ஆதரவுக்குச் சான்றுகச் சோழர் கல்வெட்டுக்கள் நமக்குக் கிடைத்துள்ளன. அத்துடன் சோழர் காலத்தில் இக்கோயிலில் இருந்த விக்கிரகங்களுட் சிலவும் கிடைத்துள்ளன. சோழர்காலத்தின்பின் பொலன்நறுவையில் ஆண்ட சிங்கள மன்னர்களுடைய ஆதரவும் கோணேசர் கோயிலுக்குக் கிட்டியது. அம்மன்னர்களுள், பன்னிரண்டாம் நூற்றுண்டில் ஆட்சிநடத்திய இரண்டாம் கஜபாகு குறிப்பிடத்தக்கவன்.

பன்னிரண்டாம் நூற்றுண்டின் பின்பாக யாழ்ப்பாணத்துத் தமிழ் மன்னர்களும் வன்னியின் சிற்றரசர்களும் இக்கோயிலுக்குப் போதிய ஆதரவை வழங்கினர். இதனல் இது மேலும் சிறப்புற்ற ஓர் ஆலயமாக விளங்கியது. பதினும் நூற்றுண்டில் போத்துக்கீசர் வந்தபோது இந்திய யாத்திரீகர்களுக்கு ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கிய தலமாக விளங்கியதைப் போத்துக்கீசர் நூல்களால் அறியமுடிகின்றது. இந்தியத் தலங்களாகிய இராமேஸ்வரம், திருப்பதி, ஒரிஸ்ஸாவின் ஜகந்நாதர் கோயில் போன்றவற்றுக்குச் செல்லும் யாத்திரீகர்களைவிடக் கூடுதலான யாத்திரீகர்கள் கோணேசர் கோயிலுக்கு வந்துசென்றனர் எனப் போத்துக்கீசர் எழுதிவைத்துள்ளனர். இது ஒரு பெரிய கோயிலாக இருந்த காரணத்தினுல் இதனை ஒரு கோட்டையாகக் கூட ஒரு குறுகிய காலத்துக்கு டென்மார்க் தேசத்தவர் பயன்படுத்தினர். பின்னர் போத்துக்கீசத் தளபதி கொன்ஸ்ரன்ரைன் தசா த நொரொஞ்ஹா என்பான் அதனை 1624ல் இடித்து வீழ்த்தினுன். பழைய கோயிலின் எத்தனையோ பாகங்கள் இன்னும் கடலில் இருக்கின்றன. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் கடலடிக்குச் சென்ற இரு ஆராய்ச்சியாளர்களாகிய மைக் வில்சன், ஆதர் கிளாக் என்பவர்கள் இப்பாகங்களுட் சிலவற்றை படம்பிடித்துள்ளனர். இத்தனை சான்றுகளும் இருக்கும்போது, போத்துக்கீசர் இடித்த கட்டிடம் இந்துக்கோயிலல்ல, ஒரு பௌத்த விகாரையென்று சிலர் கூறுவது விஷமத்தனமாகும்.

கடலினுள் மறைந்துள்ள பொருட்களை முறையாக வெளிப்படுத்தி ஆராய்ச்சி நடத்தினுல் கோணேசர் கோயிலின் பழைய வரலாற்றுக்குரிய தகவல்கள் பலவற்றைப் பெற்று, பிரச்சினைகள் அனைத்தையும் தீர்த்துக்கொள்ளலாம் என்பதில் ஐயமில்லை.

## பட்டினத்துப் பிள்ளையார் பாடிய திருஏகம்பமுடையார் திருவந்தாதியில்

# திருக்கோணேஸ்வரம்

ஆலையங்கார்கரு காவைகச் சூர்திருக் காரிகரை
வேலையங்கேறு திருவான்மியூர் திருஊறல்மிக்க
சோலையங்கார் திருப்போந்தை முக்கோணம் தொடர்கடுக்கை
மாலையன்வாழ் திருவாலங்கா டேகம்பம் வாழ்த்துமினே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோணமாமலையும்

# கோணேசர் கோயிலும்

திருவள்ளுவர் கழகப் புலவர் பெ. பொ. சிவசேகரம்

தென்னிந்தியர்கள் மேற்குத்திசை நாடுகளோடும் தென்கிழக்காசிய நாடுகளோடும் நடத்திவந்த வர்த்தகம் இன்று நேற்று நடந்துவந்ததல்ல, மிகப் புராதன காலத்திலிருந்தே நடந்து வந்திருக்கிறது.

"முத்து, பொன், தந்தம், அரிசி, மிளகு முதலியவைகளும் மயில்களும் குரங்குகளும் கூட பபிலோன், எகிப்து, கிரீஸ் ஆகிய நாடுகளுக்கும் பிறகு ரோமாபுரிக்கும் அனுப்பப்பட்டன. இவைகளுக்கு முன்பே மலையாளக் கரையிலிருந்து தேக்குமரம் சால்டியாவுக்கும், பபிலோனுக்கும் அனுப்பப்பட்டு வந்தது. திராவிடர்களால் ஓட்டப்பட்ட இந்தியக் கப்பல்களிலே இப்பொருள்கள் அனைத்தும் அல்லது பெரும்பாலும் கொண்டுபோகப்பட்டன. புராதன உலகத்தில் தென்னிந்தியா எத்தகைய உன்னதஸ்தானம் வகித்து வந்ததென்று இதனுல் தெரிந்து கொள்ளலாம்."

"வட இந்தியாவை விடத் தென்னிந்தியா கடலோடு அதிக உறவு கொண்டாடியது. வெளிநாட்டு வியாபாரம் பெரும்பாலும் தென்னிந்தியாவுடன் தான் நடைபெற்று வந்தது. பழந்தமிழ்ப் பாடல்களிலே யவனர்களைப் பற்றிய குறிப்புக்கள் மிகுந்து காணப்படுகின்றன. யவன தேசத்து மதுவகைகள், பூந்தாழிகள், அணிவிளக்குகள் முதலியவற்றைப் பற்றித் தமிழ் நூல்கள் கூறுகின்றன. யவனர் என்ற சொல் முதலில் முக்கியமாகக் கிரேக்கர்களைக் குறித்து நின்றது. பிறகு அந்நிய நாட்டவர் அனைவருக்கும் அப்பெயர் பொதுவாக வழங்கலாயிற்று."

"கிழக்குத் தேசங்களில் இந்தியக் குடியேற்றங்கள் ஏற்படுவதற்குக் காரணமாயிருந்த பெரு முயற்சியில் தென்னிந்தியாவே வழிகாட்டியாக இருந்தது. வெளிநாடுகளில் குடியேறும் நோக்கத்துடன் பலர் புறப்பட்டுச் சென்றுர்கள். இது கி. பி. முதல் நூற்றுண்டில் ஆரம்பித்துப் பல நூற்றுண்டுகள் வரையில் தொடர்ச்சியாக நடைபெற்று வந்தது. மலாய் நாட்டுக்கும் கம்போடியாவுக்கும், யாவா, சுமத்திரா, போர்னியோ முதலான தீவுகளுக்கும் அவர்கள் சென்று குடியேறினுர்கள். அவர்கள் தங்களோடு கூடவே இந்தியக்கலை நாகரீகங்களையும் கொண்டு சென்றனர்."

"(இத்தகைய ஆற்றல் வாய்ந்த தென்னிந்தியக் கடலோடிகள்) மிகவும் குறுகலான கடலைக் கடந்து தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்குச் சென்றது பெரிய காரியமல்ல" என்று ஜவஹர்லால் நேரு தமது உலக சரித்திரத்தில் கூறியுள்ளார்.

தென்னிந்திய மக்களின் நீண்ட கடல் கடந்த பெரும் பிரயாணங்களை நோக்கும்போது மிக அண்மையிலுள்ள இலங்கையோடு கிறீஸ்துவுக்கு முற்பட்ட பல நூற்றுண்டுகளுக்கு முன்பே தென்னிந்தியர்கள் தொடர்பு கொண்டிருக்க வேண்டுமென்பது தெளிவாகின்றது.

இலங்கையின் வடபகுதியோடு சிறப்பாக வடகிழக்கு வடமேற்குப் பகுதிகளோடு முதன் முதல் தொடர்புகொண்டவர்கள் தென்னிந்தியர்கள் என்று கூறின் அதில் தவறிருக்க நியாயமில்லை.

தென்னிந்தியக் கடலோடிகளுக்கு இலங்கையின் வடகிழக்கில் உள்ள துறைமுகமும் வடமேற்கில் இருந்த துறைமுகமும் இலங்கையில் வந்து இறங்குவதற்கு மிக வாய்ப்பாக இருந்தன. அதன் காரணமாக வடகிழக்கிலுள்ள திருக்கோணமலைத் துறைமுகமும் வடமேற்கில் இருந்த மாதோட்டம் என்னுந் துறைமுகமும் அவற்றைச் சூழ்ந்துள்ள பின்னிலங்களும் மிகப் பழங்காலத்திலிருந்தே இன்று வரையும் இந்துசமயத்தைச் சார்ந்த தமிழர் வாழ்ந்து வரும் பிரதேசமாகக் காட்சியளிக்கின்றது. இன்று நடைபெறும் குடியேற்றத் திட்டங்கள் மூலம் மற்றைய இனத்தவர்கள் பெருந்தொகையாகக் குடியேற்றப்பட்டுக் கொண்டு வந்தாலும் புராதன காலந்தொட்டு இன்றுவரை திருகோணமலைப் பகுதியில் இந்து மதத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் தொடர்ச்சியாக இடையீடின்றி நிலையான குடிமக்களாக வாழ்ந்து வந்திருக்கிறுர்கள் என்பதில் ஐயமே இல்லை.

கோணமலையின் பின்நிலம் வளம் வாய்ந்த பூமியாக இருந்தமையும், மகாவலி கங்கையின் நீர் வளமுள்ள நிலப்பகுதிகள் அண்மையில் இருந்தமையும் தென்னிந்தியத் தமிழர்கள் இங்கே தங்கிக் குடியேற்றங்கள் அமைப்பதற்குச் சாதகமான காரணிகளாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தன. எனவே காடாகக்கிடந்த இப் பகுதிகளை அழித்து நாடாக்கினர். காடுகள் இருந்த இடங்களில் கழனிகள் தோற்றம் பெறலாயின. அத்தோடு இங்கிருக்கும் இயற்கைத் துறைமுகமும் அவர்களின் வர்த்தகத்துக்கும் தாய்நாட்டோடு தொடர்பு கொள்வதற்கும் உதவியாக இருந்த காரணத்தால் ஓர் நிலையான பழந்தமிழ்க் குடியேற்றம் ஒன்று இங்கு ஏற்படலாயிற்று. இதுமட்டுமன்றி இப்பகுதி உப்பு விளையும் பிரதேசமாகவும், முத்துக்குளிப்பதற்கேற்ற இடமாகவும் இருந்த காரணத்தால் தென்னிந்திய வர்த்தகர்களின் வர்த்தகத்துக்கு இத்துறைமுகப் பட்டினம் சாதகமாகவே இருந்திருக்கவேண்டும்.

ஆரம்பத்தில் இக்குடியேற்ற வாசிகள் வான் மழையையும் ஆற்று நீரையும் நம்பியே வேளாண்மையில் ஈடுபட்டிருந்தனர். தாம் வாழும் இத் திருக்கோணமலைப் பகுதியில் வழிபாடு செய்வதற்காகக் கோயிலொன்றையும் அமைத்தார்கள். கோயிலைச் சூழ்ந்திருந்த வேளாண்மை செய்யும் நிலங்களெல்லாம் கோயில் நிலங்களாகவே கருதப்பட்டு வந்தன; அவர்கள் அமைத்த கோயிலைச் சுற்றியே அவர்கள் வாழ்க்கை அமைந்தது.

இவ்வாறு கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே திருக்கோணமலையில் தோற்றம் பெற்ற கோயிலே கோணேசர் கோயிலாகும். இதுவே திருக்கோணமலையில் தோன்றிய முதற் கோயிலுமாகும்.

மரக்கலத்தில் செல்லும்போது கடலிலிருந்தே பார்த்து வணங்கக் கூடியதாக ஆழமான கடலுள் நீண்டு வளைந்து கிடக்கும் மலை உச்சியில் இக்கோயிலை அமைத்தார்கள்.

இலங்கையின் குணதிசையில் இம்மலை அமைந்திருந்த காரணத்தினால் இதனைக் குணமலை என்று பெயரிட்டழைத்தார்கள். குணமலை என்னும் பெயர் நாளடைவில் மக்கள் நாவில் பயின்று திரிபு பெற்றுக் கோணமலை என்னும் உருவத்தைப் பெற்றுவிட்டது. கிழக்குத் திசையைப் பழந்தமிழர் குணதிசை என்றே அழைத்து வந்தனர். மேற்குத் திசைக்குக் குடதிசை என்ற பழந்தமிழ்ப் பிரயோகம் இருப்பதையும் காணலாம். 'கிழக்கு, மேற்கு என்ற இரு சொற்களும் முறையே கீழ், மேல், என்ற இடப்பொருளில் வந்துள்ளனவே தவிர திசைப் பொருளில் வரவில்லை. அவ்விரு திசைகளும் முறையே குணக்கு, குடக்கு என்ற சொற்களால் குறிக்கப் பெற்றுள்ளன.' என்று டாக்டர் செ. வை. சண்முகம் அவர்கள் 'சங்க இலக்கிய மொழி அமைப்பு' என்னும் கட்டுரையில் எடுத்துக்காட்டியிருப்பதையும் கண்டு தெளிக. குணகடல், குணவாயில், குணதிசை முதலிய இலக்கிய வழக்காறுகளும் இதனை உறுதிப் படுத்துகின்றன.

இக்கோயில் மிகப் பழமையானது என்பதைக் 'குணமலை' என்னும் இவ்வூர்ப் பெயரே எடுத்துக்காட்டி நிற்கிறது. கோணேசர் கோயில் இலங்கையிலுள்ள கோயில்களுக்குள் மிகப் புராதனமான கோயில் என்னும் எண்ணமும் மக்கள் மத்தியில் உலாவுகின்றது. வடகைலையின் சிகரங்களுள் ஒன்ருகக் கூறப்படும் கதையும், இராவணனால் வணங்கப் பெற்ற கோயில் என்றும் சொல்லப்படும் இக்கோயிலின் பழமையைப் பற்றி மக்கள் கொண்டிருந்த எண்ணத்தைப் பிரதிபலிப்பனவாகவே இருக்கின்றன.

இக்கோணமலையை ஆரியர்கள் 'கோகர்ணம்' என்று அழைத்தார்கள் ஆழமான கடலுள் நீண்டு வளைந்துகிடந்த இம் மலை அவர்களுக்கு கோகர்ணம் போல் காட்சி அளித்தது போலும். (கோ - மாடு, கர்ணம் - செவி) இந்தக் கோகர்ணத்தில் பிராமண விகாரை ஒன்று இருந்தது. அந்தக் கோகர்ண பிராமண விகாரை புத்த சமயப் பரம்பலுக்கு தடையாக இருந்து வந்ததைக் கண்ட மகாசேன மன்னன் சீற்றங் கொண்டு அதனை அழித்ததாக அறிகிறோம். மகாசேன மன்னன் காலத்தில் இருந்த இந்தப் பிராமணக் கோயில் இந்துமதப் பண்பாட்டின் கோட்டையாக விளங்கி வந்திருப்பதை இச் செய்திகள் நமக்குப் புலனாக்குகின்றன. கி. பி. மூன்றும் நூற்றுண்டில் மகாசேன மன்னனுக்கு ஆத்திரமூட்டக்கூடிய அளவுக்கு மிகப் பிரபல்யம் வாய்ந்த இந்து மதப் பண்பாட்டு நிறுவனமாக விளங்கிய கோகர்ணப் பிராமண விகாரை கோணமலையில் தென்னிந்தியர்களால் கட்டியெழுப்பப்பட்ட கோணேசர் கோயில் அன்றி வேறு எக் கோயிலாய் இருக்கமுடியும்? இக்கோயில் இடிக்கப் பட்ட போது குறைந்தது ஐந்நூறு ஆண்டுக்கால வளர்ச்சியைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

கி. பி. ஏழாம் நூற்றுண்டில் திருக்கோணமலைக் கோணேசர் கோயில் மிகப் பிரபல்யத்தோடு விளங்கியிருந்ததைக் காண்கின்றோம். தமிழகத்தில் சமண, பௌத்த மதங்களின் செல்வாக்கை அழித்தொழிப்பதற்காகவும் தமிழ்மக்களை இந்துசமயப் பண்பாட்டில் நிலைத்து நிற்கும் ஒன்றுபட்ட ஓர் சமுதாயமாக ஆக்குவதற்காகவும் தென்னிந்தியாவில் பல்லவர் ஆட்சிக் காலத்தில் தோன்றிய பக்தியியக்கம் தென்னிந்தியாவோடு நின்றுவிடாமல் கடல் கடந்து புத்தசமயச் செல்வாக்குப் பெற்றிருந்த ஈழநாட்டிலும் பரவியது. இப்பக்தியியக்கத்தின் வைதிக சமயப் படையெழுச்சி திருஞானசம்பந்தப் பெருமானைத் தலைவராகக் கொண்டு இயங்கிவந்தது. அவ்வைதிகச் சமயப் படையெழுச்சிக் காலத்தில் தென்னிந்தியத் தமிழர்கள் பெருந் தொகையாக திருக்கோணமலையை நோக்கிவருவதற்கு இங்கிருந்த கோணேசர் கோயில் ஈழநாட்டில் பக்தியியக்கத்தைப் பரப்புவதற்கு ஏற்ற தலமாய் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்காரணமாகத் திருஞானசம்பந்தப் பெருமானின் பாடற்பதிகத்தையும் பெற்றது இக்கோயில். அக்காலத்தில் கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்துள்ள குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றும் கோணமாமலையாக விளங்கியது.

வைதிக சமயத் தலைவரும் அந்தணருமாகிய திருஞானசம்பந்தரால் கோணேசர் கோவில் பாடல் பெற்ற நிகழ்ச்சி தென்னிந்தியாவில் இருந்த வைதிகப் பிராமணர் இக்கோயிலை நோக்கி வருகை தருவதற்கு ஒரு தூண்டுகோலாய் இருந்திருக்கலாம். அதன் காரணமாக வைதிகப் பிராமணர்கள் பலர் திருக்கோணமலைப் பகுதியைநோக்கி வந்து, வைதிக மதப் பிரசாரத்திற்காகத் தங்கியிருந்து, பல்லவ மன்னர் ஆதரவுடன் அமைக்கப்பெற்ற பிராமணக் குடியிருப்புக்களாகிய சதுர்வேதி மங்கலத்தில் வாழ்ந்து வந்திருக்கவேண்டும். இந்நிகழ்ச்சி பல்லவகுலதிலகனாகிய முதலாவது நரசிம்மவர்மன் காலத்தில் நிகழ்ந்திருக்கலாம். இலங்கை மன்னனாகிய மானவர்மன் ஆட்சியிழந்து முதலாம் நரசிம்மவர்மனிடம் அடைக்கலம் புகுந்தபோது நரசிம்மவர்மன் இலங்கைமீது படையெடுத்துவந்து ஆட்சியைப் பகைவரிடமிருந்து மீட்டு மானவர்மனுக்கு அளித்தவனாகையால் அவன் இலங்கை மன்னன் உதவியுடன் கோணேசர் கோவில் வளர்ச்சிக்கு பெரிதும் உதவிவந்திருக்கவேண்டும். மலையின் உச்சியில் கற்கோவில் ஒன்றைக் கட்டியவனும் இந்த மாமல்லனே.

பல்லவ பாணியில் - திராவிட சிற்பமுறைப்படி கி. பி. ஏழாம் நூற்றாண்டில் இக்கற் கோயில் கட்டியெழுப்பப் பட்டிருக்கிறது என்பதை இங்கு எஞ்சிக் கிடக்கும் அழிபாடுகள் எடுத்துக்காட்டுகின்றன.

இலங்கையில் சோழராட்சி நடைபெற்ற காலமாகிய பத்தாம் நூற்றாண்டின் கடைசிவருடங்களிலும் பதினொராம் நூற்றாண்டு முழுவதிலும் சோழரின் படையெழுச்சி நிகழ்ந்தபோதெல்லாம் பல்வேறு சமூகக் கூட்டங்களைச் சேர்ந்தவர்கள் தென்னிந்தியாவிலிருந்து இலங்கையில் - சிறப்பாகத் திருக்கோணமலைப் பகுதியில் வந்து குடியேறினார்கள். கி. பி. 1070ம் ஆண்டு வரை சோழசாம்ராஜ்யத்தின் ஒரு மாகாணமாக இலங்கை இருந்து வந்தது. சோழராட்சிக்குட்பட்ட இலங்கை மும்முடிச் சோழ மண்டலம் என்னும் பெயரையும் பெற்றது. சோழருடைய ஆதிக்கத்தின் தாக்கம் மற்றெந்தப் பகுதியையும் விட திருக்கோணமலையில் கூடுதலாக இருந்திருக்கிறது. அந்தக் காலத்தில் திருக்கோணமலை கோணேசர் கோவில் சோழரின் பேராதரவைப் பெற்று விளங்கியது. திருக்கோணமலையில் வாழ்ந்து வந்த மக்களின் சமய, சமூக, கலாசார அபிவிருத்திக்கும் கோணேசர் கோயில் ஒரு மையஸ்தானமாய் விளங்கியது.

சோழர் ஆட்சிக்காலத்தில் திருக்கோணமலைக் கோணேஸ்வரக் கோயிலுக்கு அளிக்கப்பட்ட நில தானங்களைப் பற்றியும் முதலாம் இராஜராஜ சோழ மன்னனின் காலத்தில் தஞ்சைப்பெருங் கோயிலின் தாபரிப்புக்கு விடப்பட்டிருந்த ஐந்து கிராமங்களும் திருக்கோணமலைப் பகுதியிலிருந்தே விடப்பட்டிருந்ததென்ற அரிய செய்திகளைப் பற்றியும் பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்று விரிவுரையாளரும், சாசன ஆராய்ச்சியாளருமாகிய திரு. செல்வத்துரை குணசிங்கம் அவர்கள் எழுதிய 'கோணேஸ்வரம்' என்னும் தமிழ் நூலிலும், 'தமிழரும் திருக்கோணமலையும்' என்னும் அவரது ஆங்கில நூலிலும் விரிவாக அவர் எழுதியிருப்பதைக் கொண்டு அறியலாம்.

சோழ மன்னர் அளித்துள்ள நில தானங்களைப் பற்றிக் கவனிக்கும் போது திருக்கோணமலைக் கோணேசர் கோயிலே ஈழநாட்டில் இந்து சமயப் பண்பாட்டை வளர்க்கக் கூடிய மாபெரும் நிறுவனமாகவே அவன் அமைத்து வைத்தான் என்பது தெரியவருகிறது.

சோழராட்சியின் முடிவுக்கும் வடக்கில் தமிழ் இராஜ்யம் ஒன்று தோற்றம் பெறுவதற்கும் இடைப்பட்ட காலத்தில் சோழகங்கன் என்னும் புகழோடு தோற்றமளிக்கும் குளக்கோட்டனுக்கும் திருக்கோணேசர் கோயிலுக்கும் இருந்த தொடர்பும் அம்மன்னன் இக்கோயிலுக்கு ஆற்றிய திருப்பணியும் இன்று வரை மக்கள் உள்ளத்தில் நிலையான இடத்தைப் பெற்றுவிட்டதையும் காண்கின்றோம். அவன் செய்துவைத்த திருப்பணி அமைப்புக்களும், குளந் தொட்டு வளம் பெருக்கியமையும், அவற்றைச் செவ்வனே நடத்திவந்தமையும் தான் செய்து வைக்கும் திருப்பணிகள் நீடு நின்று நடைபெற வேண்டுமென்ற அவனது ஆசையும் தக்ஷிணகைலாச புராணத்திலும் கோணேசர் கல்வெட்டிலும் காணப்படுகின்றன.

இக்குளக்கோட்டு மன்னன் சோளகங்கன் என்று பேசப்படுவதேன்?

கங்கைகொண்டான் என்றும் கடாரங்கொண்டான் என்றும் பாராட்டப் பெறும் இராஜேந்திர சோழனின் தமிழ்ச்சேனை கங்கையாறளவுஞ் சென்று மாற்றாரை வென்றது. பொங்கு கங்கையைப் பொற்குடத்தில் எடுத்து வந்தது. கங்கையின் நீரைக் கொண்டுவந்த படைத் தலைவனைக் கோதாவரிக்கரையில் வைத்து வரவேற்றான் இராஜேந்திர சோழன். அக்கங்கை நீரை சோழ நாட்டில் தான் புதிதாகக் கட்டிய ஏரியில் உகுத்து அதற்குச் 'சோழகங்கம்' என்னும் பெயரையும் கொடுத்தான். அச்சோழகங்க ஏரியால் சோழநாட்டை வளம்பெறச் செய்தான் இராஜேந்திர சோழன். அதனால் அவன் சோழகங்கனும் ஆயினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலையில் குளந்தொட்டு வளம் பெருக்கிய குளக்கோட்டு மன்னனை ஈழநாட்டை வளம் பெறச்செய்த சோழகங்கன் என்று புகழலா மல்லவா?

பார்தாங்கு கோயிலும்பொன் மண்டபமும்
கோபுரமும்பரற்கு நாட்டி
ஏர்தாங்கு மாயனுக்கும் அலங்கார
ஆலயம்ஒன்றியற்றி முற்றும்
கார்தாங்கு திருக்குளமும் பாவநாசனச்
சுனையும்கண்ட, கண்டன்
சீர்தாங்கு குளக்கோட்டனெனும் சோழகங்
கனைநற் சிந்தைவைப்பாம்.

இவ்வாறு மக்கள் உள்ளத்திலும் நாவிலும் குளக்கோட்டு மகாராசா என்றும் புலவர் பாடலில் சோழகங்கன் என்றும் இடம்பெற்ற குளக்கோட்டு மன்னனை திருக்கோணமலை இன்றும் மறவாமல் போற்றி வருகிறது. குளக்கோட்டு மன்னனின் காலம் பதின்மூன்றும் நூற்றுண்டென்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றுர்.

திருஞானசம்பந்தப் பெருமானின் தேவாரப்பதிகத்தையும் அருணகிரிநாதரின் திருப்புகழையும் பெற்ற பல்லவ மன்னனுல் கட்டியெழுப்பப்பட்ட கற் கோயிலையும் சோழமன்னரால் புதுப்பிக்கப்பட்ட விமானம் கோபுரம் ஆகியவற்றையும் கொண்ட ஈழ நாட்டின் இந்துசமயப் பண்பாட்டின் அரணுக விளங்கிய இம்மாபெரும் கோயில் வன்னெஞ்சம் படைத்த கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்த போத்துக்கீசத் தளபதி டொன் கொன்ஸ்ரன்ரைன் டீசா நொறன்ஹா என்பவனுல் தகர்த்தெறியப்பட்டுத் தரைமட்டமாக்கப்பட்டதையும் அறிகிறேம்.

இக்கோயில் போத்துக்கீசரால் அழிக்கப்பட இருந்த நேரத்தில்தான் இங்கிருந்த தங்க விக்கிரகங்களிற் சில மக்களால் எடுத்துச் செல்லப்பட்டு மண்ணினுள்ளும், கிணற்றினுள்ளும், புதைத்தும் மறைத்தும் வைக்கப்பட்டது. அந்த விக்கிரகங்களிற் சில அண்மையில் கண்டெடுக்கப்பட்டு புதிதாகக்கட்டிய ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளன.

தகர்த்தெறியப்பட்ட கோயிலின் அங்கங்களுள் கடலுள் தாண்டவை போக எஞ்சியிருந்த தூண்கள் போத்துக்கீசர் கட்டிய பிரடெரிக் கோட்டைக்குப் பயன்படுத்தப்பட்டன. ஒன்றிரண்டு தூண்களே இன்று வெளியில் காணப்படுகின்றன.

இக்கோயில் 1624ம் ஆண்டு அழிக்கப்பட்டது. போத்துக்கீசர் கட்டிய கோட்டையை பிரித்தானியர் பாரமெடுத்த பின்பு பல ஆண்டுகள்வரை இப்புனித ஸ்தலத்துக்கு இந்துக்கள் போவது தடைசெய்யப்பட்டிருந்தது. மிகநீண்ட காலத்தின் பின்னரே ஆண்டுக்கு ஒருமுறை இப்புனித ஸ்தலத்துக்கு இந்துக்கள் யாத்திரை செய்யும் சலுகை அளிக்கப்பட்டது. அதன்பின்னர் வாரத்தில் இருநாட்கள் திங்களும் வெள்ளியும் சென்று வழிபாடாற்ற பிரித்தானியர் இடமளித்தனர். இன்று எந்தவிதமான தடையுமின்றி எந்நேரமும் இந்துக்கள் சென்று வழிபாடு செய்து வருகிருர்கள்.

உள்ளே சென்று வழிபாடு செய்யும் உரிமை வழங்கப்பட்டதும் ஆலயம் இருந்த மலைக்குச் சென்று கடலுள் புதையுண்டு கிடக்கும் கோணேசப் பெருமானை நினைந்து வழிபாடாற்றி வந்தனர் மக்கள். மலையோரத்திலிருந்த கற்பாறையிலேயே வைத்துத் தீபதூபம் காட்டுவதும் அர்ச்சனைகளும் நடைபெற்று வந்தன.

நீண்டகாலமாகப் போத்துக்கீசராலும், ஒல்லாந்தராலும், பிரித்தானியராலும் மலைக்குச்சென்று அந்தணர்கள் பூசை செய்யும் உரிமை மறுக்கப்பட்டிருந்தமையை நினைந்து மனம் நொந்து அந்த நீசமகிபாலர்களின் கொடுங் கட்டளைகள் அழிய அருள் செய்யவேண்டுமென்று இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த திருக்கோணமலையைச் சேர்ந்த அகிலேசபிள்ளை என்னும் புலவர் 'திருக்கோணநாயகர் பதிகம்' என்னும் நூலில் குறிப்பிட்டிருப்பது கூர்ந்து கவனிக்கத்தக்கது.

அம்புவியை அரசுசெய்யும் நீசமகி
பாலர்கள் அக்கிரமமாக
வம்பவிழ்நின் பதமலரை மறையவர்
பூசனைபுரியாவகை தடுத்தார்
எம்பரனே! இவர்கள் கொடுங் கட்டளைகள்
அழிய அருளீந்து உனது பாத
அம்புயக்காட்சியைத் தருவாய்
திரிகோணச் சிலம்புறையும் ஆதிமூர்த்தி

என்பதே அப்பாடல்

நீண்ட காலமாகப் பூசைகள் நடைபெருமல் இருந்து பின் ஒருவாறு மலையில் பூசை நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் கோணேசப் பெருமானுக்குப்புதிய கோயில் கட்டி பூசைகள் செய்யவேண்டுமென்ற எண்ணம் 1963ம் ஆண்டு ஏப்ரல் மாதம் மூன்றுந்தேதி புதன்கிழமை நடந்தேறிய ஆவர்த்தன மகா கும்பாபிஷேகத்தன்று நிறைவேறியது.

பதினுறு ஆண்டுகள் கழிந்து இப்பொழுது அவ்வாலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு பதினேமாம் ஆண்டு முடிவில் இரண்டாவது மகாகும்பாபிஷேகத்தை மக்கள் கண்குளிரக் கண்டு தம் இன்னல் எல்லாம் தீரவேண்டி நிற்கிருர்கள். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபக்த இராவணனும்

# திருக்கோணேஸ்வரமும்

நா. முத்தையா — ஆத்மஜோதி

ஞானத்திற் சிறந்தவர் ஞானசம்பந்தர். மூன்று வயதிலேயே இறைவனாலும், இறைவியாலும் ஆட் கொள்ளப்பெற்றவர். பதினறு ஆண்டுகள்தான் இவ்வுலகில் பூதஉடலோடு வாழ்ந்தார். ஞானசம் பந்தப்பெருமான் பதினுயிரம் திருப்பதிகங்கள் பாடி ஞரென்றும்,அவற்றுள் பல பதிகங்கள் கறையானுக்கு இரையாகிவிட்டன என்றும் கூறுவர். இப்போது 383 பதிகங்கள் மாத்திரமே உள்ளன.

ஞானசம்பந்தப் பெருமான் பாடிய தேவாரத் திருப்பதிகங்கள் ஒவ்வொன்றிலும் எட்டாவது பாடல் இராவணனைப் பற்றியதாகும். ஒன்பதாவது பாடல் பிரம்ம விஷ்ணுக்களைப் பற்றியதாகும். ஆயிரம் திருப்பதிகங்களிலும் ஆயிரம் இடங்களில் பிரம்ம விஷ்ணுக்கள் இடம்பெற்றதுபோலவே இரா வணனும் ஆயிரம் இடங்களிலும் இடம்பெற்றிருக் கின்றன்.

இராவணன் என்ற சொல்லைக் கேட்டதும் எமது மனத்தில் கொடியவன் ஒருவனுடைய படமே பதி கின்றது. உலகத்தில் நூற்றுக்கு நூறு நல்லவனும் இல்லை, நூற்றுக்கு நூறு கொடியவனும் இல்லை. நல்லவர்களென்று நாம் மதிக்கத்தக்கவர்களிடம் எத் தனையோ கொடூரமான குணங்களையும் பார்க்கின் ருேம். கொடியவர்களென்று நாம் தீர்மானித்தவர் களிடம் எத்தனையோ நல்ல குணங்களையும் பார்க்கின் ருேம். இராவணன் உண்மையிலேயே ஒரு கொடிய வன். ஆனல் சம்பந்தப் பெருமான் கொடியவனைப் பதிகந்தோறும் குறிப்பிடவேண்டியது அவசியமில் லையே. இரண்டொரு இடத்தில் மாத்திரம் குறிப் பிட்டுவிட்டு மற்றைய இடங்களைத் தவிர்த்திருக்கலா மல்லவா? இராவணன் ஒரு சிவபக்தன் என்பதனல் மாத்திரமன்று, அவனிடம் பல நல்ல பண்புகளும் நிரம்பி இருந்திருக்கவேண்டும். மாற்றன் மனை வியை விரும்பினன். அதனல் காமத்துக்கு இடம் கொடுத்தான் என்பதைத் தவிர அவனிடம் வேறு என்ன தீய குணங்கள் காணப்பட்டன.

நல்லது என்று சொல்லப்படும் அமிர்தத்தை முறைதவறிக் கையாண்டால் அது நஞ்சாகிவிடும். அளவுக்கு மிஞ்சினல் அமிர்தமும் நஞ்சல்லவா?விஷத் தைப் பக்குவமாகப் பயன்படுத்தினல் அது மருந் தாகிறதல்லவா? திருப்பாற்கடலை, அமிர்தத்தை விரும்பித்தானே கடைந்தார்கள். ஆனல் அது முத லில் கொடுத்தது விஷம்தானே. ஆகவே உலகில் நலம், தீது இரண்டும் கலந்தே இருக்கும். சாதாரண மாக மக்களுடைய உள்ளத்திலே கொடுமைக்கும் கீழ் மைக்கும் எடுத்துக்காட்டாகவே இராவணன் விளக் கம் பெறுகின்ருன். கருத்தில் வைப்பதற்கும் தகுதி யற்ற ஒருவனை சம்பந்தப்பெருமான் பதிகம் தோறும் நினைவூட்டிய பெருமையை நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். நடுநிலையில் நின்று ஆராயுமிடத்து இரா வணனிடம் எத்தனையோ பண்பாடுகளைக் காணலாம் இந்தோனேசியாவில் வருடம் 365 நாட்களும் எங்கேயாவது ஓரிடத்தில் இராமாயண நாடகமோ அன்றி இராமாயண நாட்டிய நாடகமோ அன்றிச் சினிமாவோ நடந்துகொண்டிருப்பதை நாம் இன்று காணலாம். இராவணன், சீதை, இராமன் மூவரும் மறைந்து ஐயாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகிவிட் டன. ஆனல் அவர்கள் குறிக்கும் தத்துவப் பொருள் இன்றும் நம்மிடையே உள்ளன. இராமன் பரமாத்மதத்துவம், சீதை ஜீவாத்மதத்துவம், இரா வணன் மனேதத்துவம்.

''குலத்தளவே ஆகும் குணம்'' என்று அடிக் கடி நம்மவர்கள் குறிப்பிடுவது வழக்கம். அப்படிப் பார்த்தாலும் இராவணன் வருணத்தில் பிராம ணன். பிரம்மாவுடைய கொள்ளுப் பேரன். அறிவு, ஒழுக்கம், தபோவலிமை ஆகியவற்றிற்கு நிலைக்கள மாய் இருப்பவர் பிரம்மா. பிரம்மாவுடைய உத் தம புத்திரர் புலஸ்தியர். புலஸ்தியருக்கு மகனுகப் பிறந்தவர் விச்சுவாவசு என்னும் பிரம்மரிஷி. இந் தப் பிரம்மரிஷியின் புத்திரனே இராவணன். ஆகவே இராவணனுடைய பிறப்பில் யாருங் குற்றங்காண முடியாது. வேத சாஸ்திரங்கள் யாவும் நன்கு கற் றுணர்ந்தவன். கலைஞானங்களுக்கு இருப்பிடமான வன்.

உடன் பிறந்தார் மூவரில், தமோ குணத்தோடு கூடிய மனேதத்துவமே கும்பகர்ணன். முற்றிலும் தத்துவ மயமானவன் விபீஷணன். இராவணனே ரஜோ குணத்தோடுகூடிய மனதின் அவதாரபுருஷன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மாவானது பிரகிருதியாகப் பரிணமிக்கும் பொழுது முதலில் அது ஆனந்த மயகோசம் ஆகிறது. அதனின்று விஞ்ஞான மயகோசம் வருகிறது. மனோ மயகோசம் விஞ்ஞான மயகோசத்தினின்று உரு எடுக்கிறது. ஆகவே மனமாவது ஆத்மாவுக்கு கொள்ளுப் பேரன் என்னும் முறையைப் பெறுகிறது. பிரமாவுக்கும் இராவணனுக்கும் எத்தகைய உறவோ அதே உறவு ஆத்மாவுக்கும் மனதுக்கும் அமைந்து இருப்பது கருதற்பாலதாகும்.

இராவணன் சிவபூஜை செய்பவன். திருக்கோணேஸ்வரம் திருக்கேதீஸ்வரம் இரு தலங்களையும் தரிசித்த பின்பே உண்ணும் வழக்கம் உடையவன். எம்மில் எத்தனைபேர் சிவபூஜை செய்யும் வழக்கம் உடையவர்கள். அந்தணர்களிலேயே எத்தனையோ பேர் சிவபூசையென்றால் என்ன என்று அறியாதவர்களாய் இருக்கிறார்கள். அதுமட்டுமா பூஜகர்களிலேயே பலர் சிவபூஜை செய்வதில்லை. தமக்கு அது தேவையில்லையென்று கருதுகிறார்கள். ஆத்மார்த்த பூஜைக்கும் பரார்த்த பூஜைக்கும் வித்தியாசம் அறியாதவர்கள் அவர்கள். ஆத்மார்த்த பூஜை எல்லோருக்கும் உண்டு. ஆத்மார்த்த பூஜையிலேதான் பரார்த்த பூஜையும் வலிவுடையதாகின்றது. கோயில்களுக்குப் பக்கத்தில் உள்ளவர்களில் எத்தனை பேர் தினமும் கோயில் வழிபாடு செய்யும் வழக்கம் உடையவர்கள்?

''தவம் செய்வார் தங்கருமம் செய்வார்'' என்பது வள்ளுவர் வாக்கு. தவத்தினால்தான் இராவணன் தனது எல்லாவித சக்தியையும் பெற்றான். ஒருமுகப்பட்ட மனமே, தவத்தின் சித்தி. இராவணன் குபேரனுக்குத் தம்பி. மாற்றாந் தாய்மார்களுக்கு இருவரும் புதல்வர்கள். இராவணனுக்குப் பயந்து குபேரன் கைலாசத்திற்கு ஓடிவிட்டான், அதனால் குபேரன் புட்பக விமானத்தையும் அழகிய இலங்கையையும் இழந்தான்.

இராவணனுடைய தாய் கைகசி. ஒருநாள் கைகசி நெல்குத்துவதை இராவணன் கண்டு காரணம் கேட்டான். ''மகனே தினமும் மாவினாலே ஆயிரம் லிங்கம் அமைத்து பூஜை செய்து அவற்றை மகாவலிகங்கையிலே விடுகிறேன்'' என்று கூறினாள். தாயினிடத்திலேயே சிவபக்தியைக் கற்றுக்கொண்டான். இராவணனுக்கு தனது வீரத்தில் நம்பிக்கை அதிகம். ''கைலாச பதியினிடமே சென்று ஒரு லிங்கம் வாங்கிவந்து தருகிறேன்'' என்று கூறி உடனே புறப்பட்டு கைலாசம் சேர்ந்தான் இராவணன். தவவலிமையினால் கைலாசபதியிடமிருந்து சிவலிங்கம் பெற்று வரும்பொழுது தேவர்களுடைய சூழ்ச்சியினால் சிவலிங்கத்தை இழந்துவிட்டான். இப்படி இருமுறைகள் முயற்சிசெய்தும் தேவர்களுடைய சூழ்ச்சியினாலேயே கைலாசபதியிடமிருந்து பெற்ற சிவலிங்கங்களை இழந்தான்.

ஆனால் இராவணன் தனது முயற்சியைக் கைவிடவில்லை. மறுமுறையும் கைலாசம் நோக்கிச் சென்றபோது, விஷ்ணுமூர்த்தி பிராமண வேடம் பூண்டு வந்து சக்தியுள்ள சிவலிங்கம் தட்சண கைலாசமாகிய கோணேஸ்வரத்தில் இருக்கிறது என்று சொல்ல இலங்கைக்கு வந்தான். இராவணன் கோணநாயகருடைய வாசலில் நின்று ஒரு சிவலிங்கத்தைத் தந்தருளவேண்டுமென்று மனமுருகிப் பிரார்த்தித்தான். சிவலிங்கம் கிடைக்காமையினாலேயே மலையைத் தாக்குவதற்கு மலையை வாளால் வெட்டினான். மலையில் பிளவு உண்டானதோடு வாளும் உடைந்தது. இராவணன்வெட்டு என்று சொல்லப்படும் பகுதியை இன்றும் அங்கு காணலாம். தேவர்களுடைய சூழ்ச்சியினால் தாயையும் இழந்தான். இராவணனுக்குத் தன் தாய்மேல் இருந்த அன்பு இராமனுக்குக்கூட அவனுடைய தாய்மார்களிடத்து இருந்ததில்லை என்று கூறலாம்.

அயோத்தி, கிஷ்கிந்தை, இலங்கை ஆகிய மூன்று தலைமைப் பட்டினங்களில் இருந்த அரசாங்கங்களை வால்மீகி மகரிஷி விளக்குகின்றார். தருமத்திற்கு இருப்பிடம் அயோத்தி, ஆனால் அங்கு அரும்பெரும் செயல்களின் வெளித்தோற்றம் மிகக்குறைவு. நெறியைத் திரிவுபடுத்தலும், ஆற்றலை நன்கு பயன்படுத்தாமையும் கிஷ்கிந்தையில் காணப்படுகின்றன. மக்கள் இம்மையில் இன்புற்று வாழ்வதற்கு அரசனுடைய ஆற்றல் எவ்வளவு தூரம் பயன்படும் என்பதை இராவணனுடைய ஆட்சி விளக்குகின்றது. அவனுடைய குடிகள் துன்பம் ஒன்றையும் அறிந்திலர். எல்லாவித இன்பங்களையும் வேண்டியவாறு துய்த்துத் திருப்தியடைந்திருந்தனர். உள்நாட்டுக் கலகத்திற்கும் ஆட்சிமுறையைப்பற்றிய அதிருப்திக்கும் அங்கு இடமில்லை.

இராஜதுவேஷத்தையும் இலங்கையில் காணமுடியாது. வேந்தனுக்காக என்று குடிமக்கள் எதையும் செய்ய ஆயத்தமாக இருந்தனர். நுழைதற்கரிய இலங்கையில் புகுந்துபார்த்த அனுமனுக்கு இத்தகைய காட்சி தென்பட்டது.

மந்திராலோசனை செய்யாது இராவணன் எக்காரியத்திலும் பிரவேசிப்பது இல்லை. அமைச்சருடைய எண்ணத்தை அனுசரித்தே அவன் ஒழுகுவானாயினன். இராஜ நீதியில் அவன் பண்டிதன். வேண்டுமானால் சர்வாதிகாரங்களையும் தானே குறைவின்றி நடத்தக்கூடும். அத்தகைய அறிவும் ஆற்றலும் இருந்தும்கூட அமைச்சர்களுடைய அபிப்பிராயத்தை தழுவியே ஆட்சி புரிந்தது அவன் அடைந்திருந்த பண்பை நன்கு விளக்குகின்றது. செயலற்று, ஒன்றுக்கும் உதவாது பெயரளவில் அரசனாய் இருக்கும் கீழ்மை ஒருபுறம் உண்டு. ஆணவத்தால் தன் போக்கிலேயே முயன்று மக்கள் இடையில் துயரத்தை வழங்கும் கொடுங்கோன்மை மற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றொரு புறம் உண்டு. இவ்விருதரக் கயமைகளையும் இராவணன் விலக்கினன். முடியரசும் குடியரசும் அவன்பால் ஒன்றிக்கலாயின.

எதிரியை வெல்வதற்காக என்று இலங்கையினுள் பிரவேசித்த ராமன் அவ்வூரின் அமைப்பைப் பார்த்து அதிசயிக்கிறான். அத்துறையில், தான் கற்றுக்கொள்ளுதற்கான பாடம் பகைவனிடத்து உண்டு என்பதையும் அவன் அறிகிறான். இலங்கையின் சீர் அழகை அயோத்தியிலும் செய்விக்கவேண்டும் என்று அவன் எண்ணுகிறான்.

பல விதங்களில் இராவணன் நமக்கு உதாரண புருஷன் ஆகின்றான். ஆண்மை, மனவலி, செயல் திறன், இடையறா முயற்சி முதலியன எல்லோருக்கும் எக்காலத்தும் பாடம் புகட்டுவனவாகின்றன. ஆண்மையில் பயிற்சி பெறுபவர்கள் இராவணனை போன்ற மனிதனாகத் தம்மை வைத்துக்கொள்வது தகும்.

பராக்கிரமங்கள் பல படைத்து இருந்தும் காமம் ஒன்று நெஞ்சினுள் நுழைந்து அவைகளையெல்லாம் தேய்த்து விட்டது. இந்த ஒரு குற்றம் அவனிடத்தில் இல்லாது இருந்தால் அவன் எவ்வளவு மேலானவனாக இருந்திருப்பான். பிறமேன்மைகள் பல இருந்தும் இந்த ஒரு குற்றம் வந்து அவனை எவ்வளவு சிறியவனாக்கிவிட்டது. நமது மனது ஆசையை வெல்லும் போது தேவனாகிறது. ஆசைக்கு உட்படும் போது அது அரக்கனாகிறது. இராவணனுடைய வாழ்க்கை இதற்கு எடுத்துக்காட்டாகும்.

இராமனுக்கு துணையாக இருந்தது தர்மம். தர்மதேவதை துணையாக இருக்கும் போது அற்ப பிராணிகளும் ஒப்பற்ற உபகரணங்கள் ஆகின்றன. இராவணனுக்கோ தர்மத்தின் சகாயமின்மையால் எல்லாப் பக்கபலங்கள் இருந்தும் பயனற்றவைகளாயின. தர்மத்தை வெல்லவல்லது எதுவும் இல்லை.

நம்முடைய வாழ்க்கையில் நாம் இராமனுடைய தர்மத்தையும் இராவணனுடைய இதரபலத்தையும் ஒன்று சேர்த்தால் எத்தகைய சீரும் சிறப்பும் வாய்க்கப் பெற்றவர்களாவோம். இராம இராவண நன்மைகளை இணைக்கத் தெரிந்துகொள்ளும் அளவுக்கு நாம் இராம இராவணர்களை வாழ்க்கையில் பயன்படுத்திக்கொள்ளலாம்.

இந்த இடத்திலேயே கோணநாயகரைப் பற்றித் திருஞானசம்பந்தப் பெருமான் பாடிய திருப்பதிகத்தில் எட்டாவது திருப்பாடலை நினைவுக்குகொண்டு வருவோமாக,

''எடுத்தவன் றருக்கை யிழித்தவர் விரலா
லேத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பு
மிறப்பறியாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வுங்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புக ழாளர்
கோணமாமலை யமர்ந்தாரே''

திருக்கைலாய மலையைப் பெயர்த்து எடுக்க முயன்ற இராவணனுடைய கர்வத்தை அடக்கியவர், பின்னர் அவ்விராவணன் வேண்டித் துதிக்க அருள் செய்தவர், பிறப்பு இறப்பு என்பன இல்லாதவர், தக்கன் செய்த பெருவேள்வியைத் தடுத்தவர், பின்னர் தமது கருணையால் தக்கனுக்கு வாழ்வையும் பெருமையையும் கொடுத்தருளியவர், மெய்யடியார்களால் போற்றப்படும் பெரும் புகழை உடையவர் சிவபெருமான்.

இராவணனுடைய இத்தகைய கீர்த்திகளுக்கு எல்லாம் மூலகாரணம் அவனது தவமும் சிவபக்தியுமே என்பது பெறப்படும். ஆகவே நாமும் இராவணனுடைய தவத்தையும் சிவபக்தியையும் மேற்கொண்டு தர்மத்தின் வழி நிற்போமாக!.

## குருநமச்சிவாய தேவர் அருளிய நமச்சிவாய மாலையில் திருக்கோணேஸ்வரம்

''கோணமாமலையில் வாழுங் கோதிலா வாதியே
நீ, ஆணில்லை பெண்ணுமில்லை அத்தனே நமச்சிவாய''.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தக்ஷிணகைலாச மகாத்மியத்தில்
# அகஸ்தியர் துதி

"சிவாசார்ய சிரோரத்னம்"
**பூரண - சண்முகரத்னக் குருக்கள்**
பிரதமகுரு, சிவன்கோவில், திருக்கோணமலை.

**யசுர்** வேதம், இறைவனின் நாமங்களைக் கூறும் புனித பகுதியான ஸ்ரீருத்ரத்தில் "கிரிசாயச" (கிரௌ + சேதே மலையில் உறைபவன்) "கிரிசராய" மலையில் உறையும் ஈசனுக்கு வணக்கம் என்று போற்றுகின்றது. எனவே மலையில் எழுந்தருளும் இறைவன் அருட்சக்தி மிக்கவர் என்பதால் தக்ஷிண கைலாசம் என்று கூறப்படும் திரிகோணமலையில் வீற்றிருந்து அருள்பொழியும் கோணேசப் பெருமானின் பெருமையினை அளவிடமுடியுமா?

கோணேசப் பெருமானுக்கு கும்பாபிஷேகம் நிகழும் இப்புனித தினத்திலே தக்ஷிண கைலாச மகாத்மியத்தில் கூறப்பட்டுள்ள சில பகுதிகளை எழுதினால் பயன்தருமென எண்ணிச் சிலவற்றைக் கருத்துடன் எழுதுகின்றேன். அடியார்கள் அவற்றைப் படித்துப் பயனடைவதுடன் கோணேசப் பெருமானின் அருளால் சகல செல்வங்களும் பெறுவார்களாக.

முன்னொருபோது பிரம்மதேவன் தக்ஷிணகைலாசமெனும் திரிகோண மலையினையடைந்து கோணேசப் பெருமானை விதிமுறை வழுவாது அபிஷேக ஆராதனை புரிந்து வணங்கிய வேளையில் கோணேஸ்வரப் பெருமான் அம்பிகையுடன் அங்கு தோன்றினார். அப்போது பிரம்மதேவன் பின்வருமாறு தோத்தரிக்கலானார்.

1. கைலாச சைல சிகரேத்ர மஹேச தேவ
கல்ப த்ருமூல கனகோஜ்வல ரத்னபீடே/
அம்பா சஹாய சுநிஷண்ண ஜகத் ப்ரதீப
ஸ்ருஷ்ட்யாதி காரண ததோ பகவன் நமஸ்தே//

தக்ஷிண கைலாச சிகரத்தினிலே கற்பக விருக்ஷத்தினடியிலே பொன்மயமான ரத்ன பீடத்தினில் அம்பிகையுடன் அமர்ந்துள்ளவரே! உலகின் ஒளியே! படைத்தல் ஆகியவற்றுக்குக் காரணமானவரே! பகவானே வணக்கம்.

2. **கோணேச** சாந்த கருணாகர சித்ஸ்வரூப
குந்தேந்து சங்க விமலாப விபூதி பூஷ/
விக்னேச ஷண்முகபிதஸ் சசிசேகரேச
வேதாந்த வேத்ய வ்ருஷவாஹன விபோ நமஸ்தே//

கோணேசப் பெருமானே! சாந்தமானவரே! கருணைக்கடலே! அறிவுருவானவரே! குந்தமலர் சந்திரன் சங்குபோல தூய ஒளியினரே! விபூதி தரித்தவரே! விக்னேஸ்வரர், ஷண்முகர் ஆகியோரின் தந்தையே! சந்திர சேகரா! வேதாந்த உட்பொருளே! இடபவாகனரே! வணக்கம்.

3. கோணாத்ரிபீட நிலயே த்ரிஜகஜ்ஜநித்ரி
கோணேசதேவி வரதே ஜகதேக மாத:/
கோணத்ரயே சிவரதந்த்ர ரஹஸ்ய மந்த்ரே
கோவிந்த சோதரி சிவே த்ரிபுரே நமஸ்தே//

திரிகோணமலை பீடத்தில் உறைபவளே! மூவுலகையும் புரப்பவளே! கோணேசரின் தேவியே! வரந்தருபவளே! உலகின் தாயே! முக்கோணத்தினில் சிவதந்திர ரஹஸ்ய மந்திரமானவளே! விஷ்ணுவின் சோதரியே! மங்களந் தருபவளே! வணக்கம்.

4. கோணாத்ரி பீட நிலயே ஜகதேக கோப்த்ரி
கோணேசி சந்த்ர வதனே ஜகதேக தீபே/
கோடீந்து பானுருசிரே சிவவாம சோபே
கோடீர சந்த்ர பரிதே த்ரிபுரே நமஸ்தே//

திரிகோணமலை என்னும் பீடத்தில் உறைபவளே! உலகினைக் காப்பவளே! கோணேஸ்வரியே! மதிமுகத்தவளே! உலகின் தனிப்பெரும் விளக்கே! கோடி சந்திர சூரியர்போல் மிளிர்பவளே! சிவனார் இடப்பாகத்தில் மிளிர்பவளே! திரிபுராம்பிகையே! வணக்கம்.

5. ஜயதேவ மஹாதேவ ஜயதேவீ மஹேஸ்வரீ/
ஜயசர்வ சுரஸ்ரேஷ்ட ஜயசர்வ சுரேஸ்வரீ//

தேவ! மகாதேவனே! வெல்க தேவியே! மஹேஸ்வரி வெல்க! எல்லாத் தேவர்களுக்குள்ளும் சிறந்தவரே! வெல்க. சர்வ தேவர்களுக்கும் தலைவியே வெல்க.

(தக்ஷிண கைலாச மகாத்மியம் 6ம் அத்தியாயம் 97—101ம் சுலோகங்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அகஸ்தியர் பின்வருமாறு தோத்தரிக்கலானார்:**

1. ஸ்ரீநாத வேதாந்த விசேஷ வர்தின்
க்ருஷ்ண திநா க்ஞாத விசுத்த வஸ்தோ/
த்ரிகூட கைலாச நிவாச தேவ
மாம் பாஹி **கோணேச** சதா சரண்ய//

நாதரூபியாய் மறையன் முடியிலுள்ளவரே! கிருஷ்ணர் முதலிய தேவர்களால் அறியப்பட்ட புனித பரம்பொருளே! திரிகூட கைலாசத்தில் வீற்றிருப்பவரே! எப்போதும் சரணடையத் தக்கவரே! என்னைக் காப்பாற்று கோணேஸ்வரா!

2. சலக்ன நாகேந்த்ர விபூஷ ஹஸ்த
ஸ்மராங்க ஹாரின் நிசி நாத சூட/
த்ரிகூட கைலாச நிவாச தேவ
மாம் பாஹி **கோணேச** சதா சரண்ய//

அரவத்தினால் அலங்கரிக்கப்படும் கைகளையுடையவரே! மன்மதனின் உடலை அழித்தவரே! சந்திரனைச் சூடியவரே! திரிகூட கைலாசத்தில் வீற்றிருக்கும் தேவனே! எப்போதும் சரண்புகத் தக்கவரே! கோணேஸ்வரா என்னைக் காப்பாற்று.

3. சைலா திராஜேஸ்ட சுதார்த்த தேக
ஸ்வ பக்த சித்தாலய நித்ய சம்ஸ்த/
த்ரிகூட கைலாச நிவாச தேவ
மாம் பாஹி **கோணேச** சதா சரண்ய//

மலையரசனின் அன்புக்குரிய புத்திரியான பார்வதியை அரைவாசி உடலில் உடையவரே! (அர்த்த நாரீஸ்வரர்) தன்மீது தூய பக்தி உடையவர்களின் மனதைக் கோவிலாகக் கொண்டு அதில் எப்போதும் வசிப்பவரே! திரிகூட கைலாசத்தில் ...... ...... கோணேஸ்வரப் பெருமானே என்னைக் காப்பாற்று.

4. புரத்ரய த்வம்ச பிநாக பாணே
ஹாலா ஹலாலங்க்ருத கந்தரேச/
த்ரிகூட கைலாச நிவாச தேவ
மாம் பாஹி **கோணேச** சதா சரண்ய//

முப்புரங்களை அழித்தவரே! வில்லினைக் கையிலேந்தியவரே! ஆலகாலவிடம் அலங்கரிக்கும் கழுத்தினையுடையவரே! ஈசதிரிகூட... .. காப்பாற்று

5. சதுர்முகஸ் யாதிபதே மஹாத்மன்
குடார சாரங்க லசத் கராட்ய/
த்ரிகூட கைலாச நிவாச தேவ
மாம் பாஹி **கோணேச** சதா சரண்ய//

நான்முகனுக்கும் தலைவா! மகாத்மாவே! கண்ட கோடரி, மான் ஆகியவை மிளிரும் கைகளையுடையவரே! திரிகூட ......

6. சத்ர க்ரதௌ தக்ஷசிர ; ப்ரஹந்த:
மமாப்த பந்தோ சிவ கந்த பூஷ/
த்ரிகூட கைலாச நிவாச தேவ
மாம் பாஹி **கோணேச** சதா சரண்ய//

வேள்வியில் தக்கனின் தலையினைக் கொய்வித்தவரே! எனது ஆன்மபந்துவே! சந்தனமணிந்தவரே! சிவனே! திரிகூட..................

7. ஞானைக தீபாங்குர தேசிகேச
ப்ரசித்ர லீலாத்புத வேஷதாரின்/
த்ரிகூட கைலாச நிவாச தேவ
மாம் பாஹி **கோணேச** சதா சரண்ய//

ஞானதீபத்தின் சுடரே! குருவுக்கும் குருவே! திருவிளையாடலாக பலவித அற்புத உருவினைத் தாங்குபவரே! திரிகூட..........

8. லோகைக மூர்த்தே மமஜீவவர்தின்
சுவர்ண கோதண்ட தரா ப்ரமேய/
த்ரிகூட கைலாச நிவாச தேவ
மாம் பாஹி **கோணேச** சதா சரண்ய//

உலகில் தனிப்பொருட்தலைவனே! என் உயிராயுள்ளவரே! தங்கமயமான வில்லினைத் தரித்தவரே! அளவிடற்கரியாய்! திரிகூடமெனும்..............

9. விபூதி திக்தாங்க விபோ பவாரே
ஹ்யநந்த மத்யாதி விரக்த மூர்த்தே/
த்ரிகூட கைலாச நிவாச தேவ
மாம் பாஹி **கோணேச** சதா சரண்ய//

திருநீறு தரித்த திருமேனியாய்! பவப்பிணியின் எதிரியே! முதல், இடை இறுதியற்ற உருவினரே! திரிகூட........

10. நமோஸ்து **கோணேஸ்வர** பாத யுக்மம்
சதாம்பிகா பத்ம பதம் நமாமி/
க்ஷமஸ்வ தேவேச மமாபராதம்
தேவி க்ஷமஸ்வ மயி சுப்ரசந்நா//

கோணேஸ்வரரின் இரு பாதங்களையும் எப்போதும் வணங்குகின்றேன். அம்பிகையின் பாதகமலங்களை வணங்குகின்றேன். தேவர்களின் தலைவ! என் பிழைகளைப் பொறுத்தருள்வாய்! அம்பிகையே! என்மீது அருள்பாலித்து என் பிழைகளைப் பொறுத்தருள்வாய்.

## முக்தி தருவன

1. மைநாகம் மந்தரம் மேரும்
கைலாசம் கந்தமாதனம்/
பஞ்சசைலான் ஸ்மரேன் நித்யம்
புனர்ஜன்ம ந வித்யதே//

மைநாகமலை, மந்தரமலை, மேருமலை, கைலாசமலை, கந்தமாதனமலை ஆகிய ஐந்து மலைகளையும் நாடோறும் நினைப்பவர்களுக்கு மறுபிறவி இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. **கோணேசப் அம்பிகாம்** விஷ்ணும்
ஸ்கந்தம் விக்னேசமேவ ச/
பஞ்சதேவான் ஸ்மரேன் நித்யம்
ஜீவன் முக்தோ ந சம்சய:/

கோணேசர், அம்பிகை, விஷ்ணு, ஸ்கந்தர், விக்னேசர் ஆகிய ஐந்து தேவர்களையும் தினந்தோறும் நினைப்பவர் சீவன் முக்தராவர். ஐயமில்லை.

3. மஹாபலிஞ்ச காவேரீம் கங்காம்
மாணிக்ய காஞ்ய தாம்/
கந்யா கங்காம் **பாபநாசதீர்த்தம்**
சுபகரம் ததா
பஞ்சதீர்த்தாந் ஸ்மரேன் நித்யம்
குலகோடிம் சமுத்தரேத்//

மஹாவலி, காவேரி, மாணிக்க கங்கை, கன்னியா கங்கை, பாபநாசதீர்த்தம் ஆகிய ஐந்து புண்ணிய தீர்த்தங்களையும் நாடோறும் நினைப்பவன் குல பரம்பரையையே கைதூக்கி விடுபவன் ஆவான்.

4. ஸ்ரீமத் தக்ஷிண கைலாசே
**பாபநாசாக்ய** தீர்த்தகே/
ஸ்நாத்வா ஜப்த்வாச தத்வாச
தனதான்ய கவானிச/
நத்வா, ஸ்துத்வா மகாதேவம்
சாயுஜ்ய பதமாப்னுயாத்//

ஸ்ரீ தக்ஷிண கைலாசமெனும் புண்ய ஸ்தலத்தில் பாபநாசமெனும் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து செபித்து தனம், தானியம் பசு ஆகியவற்றைத் தானம்செய்தும் கோணேசப் பெருமானை வணங்கி தோத்தரித்து வாழ்பவன் சாயுச்ய பதவியினைப் பெறுவான்.

(த. கை. மா. 4ம் அத். 23-26ம் சுலோகங்கள்)

5. கோபுரம் சிகரஞ் சைவ ப்ராகாரம்
மண்டபம் ததா/
ஆராம க்ஷேத்ர கர்த்தாச
சிவலோகே மஹீயதே//

கோபுரம், சிகரம், சுற்றுப்பிரகாரம், மண்டபம் நந்தவனம் என்பன செய்விப்போர் இவ்வுலகில் நற்பேறு பெற்று சிவலோகத்தில் அரசாள்வர்.

(5ம் அத்தியாயம் 82ம் சுலோகம்)

எனவே இத்தகைய நற்கருமங்களை இயன்றளவு செய்து கோணேசர் அருளால் நீடூழி வாழ்வோமாக.

சுபம்.

## சேக்கிழாரின் பெரியபுராணத்தில் திருக்கோணேஸ்வரம்

அந்நகரில் அமர்ந்தங்கண் இனிது மேவி
ஆழிபுடை சூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில்
மன்னுதிருக் கோணமலை மகிழ்ந்து செங்கண்
மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப்பாடிச்
சென்னிமதி புனைமாட மாதோட் டத்தில்
திருக்கேதீச் சரத்தண்ணல் செய்யபாதம்
உன்னிமிகப் பணிந்தேத்தி அன்பரோடும்
உலவாத கிழிபெற்றார் உவகை யுற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குருவே துணை

# திருக்கோணநாதருக்குப் புனராவர்த்தன கும்பாபிஷேகம்

-1963 -1981

இராஜாமணிக் குருக்கள் இராஜராஜேஸ்வரக் குருக்கள்

இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள திருத் தலங்களுள் முக்கியமானதும் தேவாரம் பெற்றது மான ஸ்ரீ மாதுமை சமேத கோணேநாதேஸ்வரப் பெருமானின் புனராவர்த்தன கும்பாபிஷேகமான இத்தினத்தில் சைவப் பெருமக்களது உள்ளங்கள் தோறும் அன்பும், அமைதியும் பெருக எம்பெரு மான் இன்னருள் புரிவாராக.

பிரதிஷ்டை என்பது அனுவர்த்தனம், ஆவர்த் தனம், புனராவர்த்தனம், அந்தரிதம் என்னும் நான்கு பிரிவுகளையுடையது. இதில் ஓர் தேவால யத்தில் நித்திய நைமித்தியங்கள் நடைபெற்று வரும் வேளை விமானம், பிரகாரம், மண்டபம், கோபுரம் அல்லது ஆலய விக்கிரகங்களில் எவையேனும் வெடித்தோ, பிளந்தோ சிதிலமடையில் பாலஸ்தா பனம் செய்து பழுதடைந்த கட்டிடங்களை முன் போல் அழகாகவும் பலம் வாய்ந்ததாகவும் திட மானதாகவும் அமைத்து பிரதிஷ்டை செய்வதனை புனராவர்த்தன பிரதிஷ்டை என நூல்கள் கூறும்.

கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணே மாமலை என்னும் தேவாரத்திற்கேற்ப பல்வளமும் செறிந்த திருக்கோணேஸ்வரம் சைவத் தலங்களுள் முக்கியமானது. இதன் சிறப்பையும் மகிமையையும் திருக்கோணாசல புராணத்தில் அழகாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

இத்துணைச் சிறப்புமிக்க இவ்வாலயம் அந்நி யரால் அழிக்கப்பட்டு பன்னெடுங்காலம் திருத்தப் படாமல் இருந்தபோது எதிர்பாராமல் கண்டெடுக் கப்பட்ட சோமாஸ்கந்த, மாதுமையம்பாள் விக் கிரகங்களைத் தொடர்ந்து புதிதாக கோயில் நிர் மாணிக்கப் பெற்று 1963ம் ஆண்டு மகா கும்பா பிஷேகம் நடைபெற்றது.

இக் கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து எனது தந்தையார் பிரம்மஸ்ரீ இராஜாமணிக் குருக்கள் பிர தம பூசகராக பொறுப்பேற்றதால் சிறியேனுக்கும் இவ்வாலயத்துடன் நெருங்கிய தொடர்பு ஏற்படச் சந்தர்ப்பம் கிட்டியது. 1963க்குப் பின் தற்போது கோயில் திருத்தவேலைகள் நடைபெற்று புனராவர்த் தன மகா கும்பாபிஷேகம் நடைபெறுவது சைவப் பெருமக்களின் பெரும் பாக்கியமேயாகும்.

இவ்வாலயத்திற்கு ஸ்திரமான வருமானம் எது வும் இல்லாமல் இருந்தும் இவ்வாலயத்தின் நித்திய நைமித்தியங்களை வழுவாது நடைபெற வழி செய் யும் ஆலய பரிபாலன சபையாரின் முயற்சி பாராட் டிற்குரியதாகும். அதுவன்றி இன்று பெரும் பணச் செலவில் திருத்த வேலைகளையும் செய்து புனரா வர்த்தன மஹா கும்பாபிஷேகமும் நடைபெற வழி வகுத்துள்ளனர். இவ்வாலயத்தில் விடாமுயற்சி யோடு பணிசெய்த பரிபாலன சபையார் சிரமதான மூலம் திருத்தொண்டுகள் செய்த சிவனடியார்கள் அனைவருக்கும் எம்பெருமான் திருவருள் செய்வ தோடு மேன்மை கொள் சைவநீதி உலகெலாம் விளங்கவும் மக்கள் சுபீட்சமாக வாழவும் எம்பெரு மானை வேண்டுகின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

"தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை அந்தாதி

— வ. சிவராஜசிங்கம் —

திருக்கோணமலை தக்கிணகைலாசம் என்று அழைக்கப்படும் பெருமை வாய்ந்தது. திரிகூடம், மச்சேசுவரம் என்னும் வேறு தலப்பெயர்களையும் தாங்கிப்பொழிவது திருக்கோணமலை. இதன் பண்டைப்பெயர் திருகோணமலையாகும். இக்கோயிலின் தோற்றம்பற்றிப் பல்வகைக் கருத்துக்கள் நிலவுகின்றன. ஆயினும் எப்போது தோன்றியது? யாரால் கட்டுவிக்கப்பட்டது? என்பதுபற்றி ஒன்றும் திட்டவட்டமாகத் தெரிந்திலது. புராணவரலாற்றின்படி இராவணன் வாழ்ந்த இராமாயணக் காலத்திற்கும் முந்தியது என்பது புலனாகிறது. எவ்வாறிருப்பினும் திருஞானசம்பந்தர், அருணகிரிநாதர் முதலானோர் பதிகமும், திருப்புகழ் என்பவற்றைப் பாடியதை அடுத்து இதன் புகழ் மேலோங்கியது. இப்பாடல்களன்றி, தக்கிண கைலாச புராணம் முதலாய பல நூல்கள் காலந்தோறும் இயற்றப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று திருக்கோணமலை அந்தாதி;

திருக்கோணமலை அந்தாதி என்னும் பிரபந்தத்தை இயற்றியவர் சிதம்பரநாதர் சுப்பிரமணியம் ஆறுமுகம் என்பவர். இவர் திருக்கோணமலையைத் தாயகமாகக் கொண்டவர் என்பது தெரிகிறது. ஆனால் இவர் மிக அண்மைக்காலத்தில் வாழ்ந்தவராயினும் அவர் வாழ்ந்த காலமும் தெளிவாகத் தெரிந்திலது. மேலும் இவரது குருகுலம், இவர் இயற்றிய வேறு நூல்கள் பற்றியும் விபரங்கள் ஒன்றும் தெரியவில்லை. ஆயினும் இவர் புராணம், இதிகாசம், சித்தாந்தம், திருமுறை என்பவற்றில் பரிச்சயம் உடையவர் என்பது மட்டுமன்றி, சங்க இலக்கியங்களிலும் ஆழ்ந்த பயிற்சி உடையவர் என்பதை அவர் நமக்குத் தந்த திருக்கோணமலை அந்தாதி வெளிப்படுத்துகின்றது.

திருக்கோணமலை அந்தாதிப் பாடல்கள் சில யமகமாகவும் பல திரிபாகவும் அமைந்தவை. ஆதலால் பொருள் காண்பதற்கரிதான அருஞ்சொற்றொடர்கள் பொருந்தியவை. ஆயினும் சிறந்த கருத்துக்கள் பொலிந்தவை. அவற்றுள் ஒரு சிலவற்றை இங்குச் சிந்தனைக்கு எடுத்துக்கொள்வோம்.

நூல் இனிது முடிதற்காக விநாயகப் பெருமான் காப்பாக விளங்கவேண்டுமென்னும் பொருளில் காப்புச் செய்யுள் வழங்குகின்றார் ஆசிரியர். அதில் இலக்குமியின் அருள் நிறைந்து விளங்கும் பதியாகிய திருக்கோணமலையில் தலைவராக வீற்றிருக்கும் பெருமான்மீது கலைமகளின் கடாட்சத்தினால் இயலும் அந்தாதி முட்டின்றி முடிய இமயமலைக் கொழுந்தாகிய உமையீன்ற தனிக்கோட்டுத் தந்திமுகத் தயாபரன் துணையாக நிற்பார் என்று பாடுகிறார். இச்செய்யுளில் விநாயகப் பெருமானது இலக்கணங்களுள் ஒற்றைக்கோடு, இருசெவி, முக்கண் ஆகியவை எண்ணலங்காரந் தோன்றக் கவிஞரால் விசேடமாகச் சுட்டப்பட்டுள்ளன. தம்மைச் சரணடைந்த தேவர்களைக் காத்தற்காக ஆணவமே உருவான கயமுகனைச் சங்காரம் செய்யத் தமது மருப்பினை ஒடித்தவர் வேழமுக வித்தகர். இச்செயல் அடியார் பொருட்டு மேற்கொள்ளும் அருட்செயலைக் குறிப்பதாகும். இதே பாங்கில் நூல்புனையும் போது ஏற்படும் இன்னல்களைக் களைய விநாயகர் துணையாவார் என்னும் குறிப்புத் தோன்றவே ஒரு கொம்புடைமை குறிக்கப்பட்டது. அஃதேயுமன்றி அந்த மருப்பினையே மாபாரதக் கதையை மலைமீது பொறிக்கவும் பயன்படுத்தியவர் விநாயகர் என்ற கதையும் உண்டு. இஃது அப்பெருமான் தமிழ்மீது வைத்துள்ள ஆர்வத்தைப் புலப்படுத்துவதாகும். தமிழ் நாட்டமுள்ள தந்திமுகத் தெந்தை தம் தந்தைமீது இயலும் அந்தாதி இனிது நடப்பத் துணையாவர் என்பதில் ஐயமில்லையெனச் சிந்திக்கின்றார் ஆசிரியர். மேலும் இருசெவிகளைச் சுட்டியது அடியார்தம் வேண்டுகோள் அனைத்தையும் செவிமடுத்தவாறே எழுந்தருளியுள்ளார் என்ற கருத்தில், தனது வேண்டுகோளையும் நிறைவேற்றத் துணை நிற்பார் என்ற குறிப்பும் தோன்ற நின்றது. முக்கண்களில் ஒன்றாகிய நெற்றிக்கண் இறைவனின் இரு கண்களையும் உமையம்மையார் பொத்திய ஆடலின் போது உலகம் அந்தகாரத்தில் மூழ்கியகாலை அதனைப்போக்க இறைவன் தோற்றுவித்தது. இத்தன்மையில் அஞ்ஞானத்தை ஒழிக்கும் குறிப்பில் அமைந்தது ஞானவிழி. பெருமானின் ஞானவிலோசனம் தன் அறியாமையையும் போக்கத் துணைநிற்கும் எனவும் முக்கண்ணன் என்று சுட்டிய குறிப்பால் உணர்த்துகின்றார். மேலும் "நாமாதருளிய அந்தாதி" எனக் குறித்தமையால் தன் திறமையாலன்றிக் கலைமகளின் அருளாலேதான் அந்தாதி இயல்கிறது என்று வெகு அடக்கமாகக் கூறும் உயர்பண்பும் தோன்ற,

"பூமா தருள்நிறை பொற்கோண
வெற்பிறை பூத்த புகழ்
நாமா தருளியல் அந்தாதி
கூற நகவிமயக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோமா தருளொரு கொம்பிரு
காதொளி கூருமுக்கண்
தேமா முகவைங் கரதரன்
பூங்குழல் சேர்துணையே''.

என்று இசைக்கின்றார் கவிஞர்

இப்பிரபந்தத்திலுள்ள பாடல்களில் இறைவனது தடத்த, சொரூப இலக்கணங்கள் அவர் அடியார்க்கருளும் பாங்குகள், இறைவனது அருள்பெற்று ஈடேறிய அடியவர்தம் வரலாறுகள், கோணமலைச் சிறப்புகள், என்றின்ன அம்சங்களை ஆசிரியர் பலவாற்றால் சுவைதோன்றக் கூறிச்செல்கின்றார். இன்னும் சில பாடல்களில் இறைவனது வடிவப் பாங்கினைக் கூறும்போது அப்பெருமான் கொண்டுள்ள பல்வகை மூர்த்தங்களில் காணப்படும் அம்சங்கள், அருள் நோக்கம் பொதிந்திருக்கும் தன்மையைப் புலப்படுத்தும் மாட்சியில் அமைந்திருப்பதைக் காணலாம்.

ஒரு பாடலில் உமாதேவியைப் பாகத்தில் கொண்டமை, சந்திரனைச் சடாபாரத்தில் சூடியமை, மணிவாசகர்பொருட்டு மதுரையில் வரகுணபாண்டியனுக்காகக் குதிரைகொண்டு பரிமேலழகராக வந்தமை, தக்கன் வேள்வியில் கலந்துகொண்ட சூரியனது கன்னத்தில் பைரவ மூர்த்தியாகத் தோன்றி அறைந்து தண்டித்தமையாகிய நிகழ்ச்சிகள் பேசப்படுகின்றன, உலகில் வாழும் உயிர்களுக்கும் போக நுகர்ச்சியை நெறிப்படுத்திக் காட்டும் திருக்குறிப்பாகவே பார்ப்பதியை வாம பாகத்தில் வைத்துள்ள செய்தியை மணிவாசகர் ''தென்பால் உகந்தாடும் தில்லைச்சிற்றம்பலவன் பெண்பால் உகந்தின்'' பெரும் பித்தன் காணேடி, பெண்பால் உகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர் விண்பால் யோகெய்தி வீழுவர்காண் சாழலோ'' எனக் குறிப்பிடுவது போல ஆசிரியரும் ஆங்காங்கே பல வடிவங்களில் தீட்டிச்செல்கின்றார். தக்கனுடைய சாபத்திலிருந்து சந்திரனைக் காப்பாற்றும் நோக்கில் அவனைச் சிரசில் அணிந்துகொண்டமையும் இறைவனது அருட்குறிப்பேயாகும். திருவாதவூரர்க்காக நரியைப் பரியாக்கியுய்த்த செயலும் அருளாடல் என்பது வெள்ளிடைமலை. சூரியனது கன்னத்தில் அறைந்ததும் அருளாடலாகுமோ எனின், அது மறக்கருணையின் பாற்படுவதாகும். சிவனை நிந்தித்துத் தக்கன் புரிந்தவேள்வியில் கலந்துகொண்டதாகிய அறிவீனச் செயலால் எதிர்காலத்து வரும் இன்னலிலிருந்து காப்பாற்றப்படுவதற்காகவே சூரியதேவன் தண்டிக்கப்பட்டான். இங்ஙனம் அருள்குறித்து கோணமலையீசரது ஆடற்பிரதாபங்களைக் கூறுகின்றது பின்வரும் பாடல்.

''கன்னங்கை பங்கி கலைசூடி
மாதவர் காணியதுங்
கன்னங் கடவுள் சுலைவலை
வீசிக் கடுங்கதிரோன்
கன்னங்கை சாத்தி, கதிப்பரி காட்டி
கடுவுணிசோ
கன்னங் கயிலை மலைவாசி
காசி கலைச்சங்கரே'':

இங்ஙனம் அருள்வள்ளலாகத் திகழும் இறைவன் கருணை நோக்கத்தோடு சூரியன் முதலாயினோரைத் தண்டித்தது ஒருபாலாக, அடியார்களுக்கு அருள் செய்யும் நோக்கில், தானே தண்டனைக்காளாகிய சந்தர்ப்பங்களுமுண்டு. இவற்றுள் பாண்டியன் கைப்பிரம்பால் அடிபட்டமையும் விஜயனது வில்லால் அடிபட்டமையும் பரம்பொருளின் கருணைத் திறத்தையும் அடியார்க்கெளியனாய் அளிபூத்த தன்மையினையும் காட்டும் சிறப்பான அருளாடல்களாகும். மதுரைமாநகரை வைகை உடைப்பெடுத்து அழிக்க முற்பட்டபோது அதன் கரையினை அடைக்குமாறு ஊர்மக்கள் எல்லாரும் பணிக்கப்பெற்று, அடைக்கவேண்டிய பங்குகள் அளந்துவிடப்பெற்ற காலை, தன்பங்கை அடைப்பாரின்றி தீயதென திலம்பாடு, என் சிந்தையில் வெந்துயர்தீர நீயருளாதொழியின் உயிர்நீப்பேன்'' என்று சத்தியாக்கிரகம் பூணத் துணிந்த மதுரைக் கிழவியின் பொருட்டு ஆடையுந் துணிந்த சீரையாகியே கூலியாளாய்க் கூடையுந் தலைமேற்கொண்டு, கொட்டுடைத் தோழராகி வந்து பங்கடைக்கும் பணியை நிறைவேற்றாது பாண்டியன் கைப்பிரம்பால் அடிபட்ட செய்தி உருக்கம் வாய்ந்தது. அவ்வாறே பாசுபதாஸ்திரம் பெறவேண்டி பஞ்ச புலனையுமடக்கித் தவம்புரிந்த பார்த்தனுக்கு இடர்விளைக்க எண்ணிய சுயோதனன் ஏவிய மூகன் என்னும் பன்றியைக் கொன்று, அருச்சுனனுக்குப் பாசுபதம் வழங்கத் திருவுளம் கொண்டார். வேடனாக வந்து அருச்சுனனோடு வல்லடி வழக்குப் பேசி அவனிடமே வில்லடிபட்ட வரலாறும் சுவாரஸ்யமானது. பார்த்தனைக் கொல்லவந்த பரமர், முன்பு பன்றியாகத் தம்மைத் தேடிவந்த பரந்தாமன் காணாதவாறு ஒளித்த திருப்பாதத்தினர், யான் எனது என்று கருதும் அகங்கார மமகாரங்களுடையவர்க்கு அரியவராதலினால் அரியன் அன்று தேடியபோது காணாது கரந்து நின்றார். இவரது அருளாடல்கள் அனைத்தையும் மனத்தகத்தே வைத்துக் கணித்தல் சாலாது என்றின்னோரன்ன கருத்துக்களை அடக்கி,

''அடியார் இறைஞ்சு பதப்பொருள்
தென்கயி லாயரன்பால்
அடியார் இறைஞ்சல ரால்நலம்
உய்ப்பவர் அன்றரிதே (டு)
அடியார் எனதென் பவர்க்கரி
யார்பிரம் பங்கை வில்லின்
அடியால் தழும்பு கொண்டார்
செயல் யாவ தகத்தனவே'':

எனப் புனைகின்றார் ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகங்குழைந்துருகி அன்புசெய் அடியார்களுக்கு அருளுருக்காட்டியும் மானிடச் சட்டை தாங்கிவந்து தடுத்தாட்கொண்டும், சிலகால் ஒறுத்தும் இவ்வாற்ருல் பலதிறத்தில் பதமருளும் இறைவன் தமக்கு ஈடேற்றம் அளிப்பது எப்போதென மிக ஆதங்கத்தோடு வினவும் முறையிலும் சில பாடல்கள் அமைந்துள்ளன. கனியினுங் கட்டிபட்ட கரும்பினும் செழுந்தேறலினும் மேலாகத் தித்திக்கும் திவ்விய அருளமுதம் கிட்டும் நாள் எந்நாளோ என்று கோணமலைப் பிரானைக் கேட்கும்வண்ணம் அமைந்த பாடலாக,

''கரும்பருந் தித்தியின் பாகொடு
தேன்பல் கனிகலந்தொன் (று)
அரும்பருந் தீஞ்சுவை மேலாம்
அமுதம் அருள்வதெப்போ (து)
இரும்பரும் பொன்னிடு வோனி
லுவந்தெமக் கின்னருள்பூஞ்
சுரும்பருந் தும்பொழில் சூழ்கோண
மாமலை தோய்மணியே

என்பது அமைகின்றது.

இவ்வாறு ஏக்கமுறும் ஆசிரியர் தனக்கும் அருள் கிட்டாமற் போகாது என்று சமாதானமும் அடைகின்ருர். இவ்வகைச் சமாதானத்திற்குத் தக்க ஆதாரமும் காட்டுகின்ருர். தமது சிவபூசைக்குப் பங்கம் விளைத்தவர் தாதை என்றும் பாராது தான் தடிந்த சண்டேசர், தாமே வேண்டிப் புலிக்கால் பெற்ற வியாக்கிரமபாதர் முதலாம் பரம அடியார்களுக்கேயன்றி, எரியும் விளக்குத் திரியினைத் தூண்டிய புண்ணியத்தால் முசுகுந்தச் சக்கரவர்த்தியாகப் பிறப்பெடுத்த எலிக்குங் கூடப் பதவியளித்தவர் இறைவன். ஆதலின் எனக்கும் ஈடேற்றம் அளித்தே தீருவார் என உறுதியும் உரிமையும் கலந்த குரல் ஒலியை மற்ருெரு பாடலில் காணமுடிகிறது.

''கலிக்குந் திரையொளிர் தென்கயி
லாயர் கருமன்பால்
நலிக்கும் தருதந்தை தாளடு
தண்டிக்கும் நாடுதவப்
புலிக்கும் ஒருபதப் போகிக்கும்
நீடருள் பூட்டினரோர்
எலிக்கும் திரிபதம் ஈந்தார்
எமக்கருள் ஈகுவரே''

என்பது அக்கருத்துக்கள் அமைந்த பாடல் வடிவம்......

இத்தகைய கருத்து வளங்களன்றி, பாடம் அமைப்புக்களில் முன்ஞேர் கையாண்ட யாப்பிசை, நிரல்நிறை, பூட்டுவில், அடிமறிமண்டிலம் என்னும் பொருள் கொள்வதையும் ஆங்காங்கே மாறச் செய்துள்ளார். அணிவகைகளுள் தன்மையணி, தற்குறிப்பேற்றம், சொற்பின்வருநிலையணி, உயர்வு நவிற்சி, உருவகம், உவமை என்றின்ஞேரன்ன அணிகளை அமைத்துள்ளார். இவையன்றி வரலாற்றுச் செய்திகளையும் நமக்கு வழங்கியுள்ளார். ஆசிரியர் தமது அந்தாதியில், அவற்றுள் குளக்கோட்டன் திருப்பணிசெய்தமை, கஜபாகு கண்ணொளியிழந்து அருள் பெற்றமை, சுந்தரபாண்டியன் திருப்பணி என்பன சிறப்பிடம் பெறுகின்றன. மகாவலி கங்கையைத் திருச்சடையில் தரித்தல் கரசைப் பதியின்றலைவரும் கோணமலை நாதர் ஆதல், பஞ்ச சபைகளுக்கு நிகரானது கோணமலை என்பது ஆசிரியர் தரும் புதிய கருத்துக்கள். அகத்துறைமலரும் கோவைத்தலைப்புக்களை இடமிடந்தோறும் செய்து முன்ஞேர் வழங்கிய அந்தாதிகளை ஒப்ப அழகுபடுத்தியுள்ளார் கவிஞர். இத்தகைய சிறப்புக்கள் பொதிந்த அந்தாதியைக் கோணேஸ்வரப் பெருமான் கழலிணைகளில் சமர்ப்பித்துப் பெருமை அடைகின்ற ஆசிரியர் பேறு மிகப்பெரியது.

திருக்கோணமலை அந்தாதி இதுவரை ஏட்டு வடிவத்தில் உயிரிழக்கும் தறுவாயில் இருந்தது. நல்லவேளையாக அதற்கு உயிர் கொடுத்தவர் பண்டிதர் திரு. இ. வடிவேலு ஆசிரியர். இப்பிரபந்தம் இன்னும் அச்சுவாகனம் ஏறவில்லை. ஏற்றுவதற்குரிய அருமுயற்சியில் ஆசிரியர் அவர்கள் ஈடுபட்டுள்ளார்கள். இதற்கு அரியதேவர் உரையினை ஆசிரியர் திரு. க. கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதியுள்ளார்கள். இஃது திருமலை வள்ளலின் பெருங்கருணையால் வெளிவரும் நன்னுளை எதிர்பார்ப்போமாக.

---

## கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார் அருளிச்செய்த சிவநாமக் கலிவெண்பாவில் 'திருக்கோணேஸ்வரம்'

''மன்னு திருக்கோண மாமலையின் மாதுமைசேர்
பொன்னே கோணேசப் புராதன''.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

“ நால்வர் பொற்றாள் எம்முயிர்த் துணையே ”

# திருநெறிய தமிழ் மறை

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் திருமுறைப்பணியாளர், தேவார இசைமணி தேவார இசைலய அரசு
திருப்பனந்தாள் எஸ். முத்துக்கந்தசாமி தேசிகர்

**சைவ** சமய உலகிற்கும், சைவ சமயத்தவர்கட்கும் உயிர் நிலையாக இருப்பது திருமுறைகளாகும். இது மிகை அல்ல, உண்மையே! இறைவன் அருள்வழிநால்வர் முதலிய சைவ சமய அருளாளர்கள், நமது சமய குரவர்கள் அருளியது திருமுறைகளாகும்.

இறைவன் அருள்வழி நால்வர் பெருமக்கள் அவதாரம் செய்து திருமுறைகளை அருளி அற்புதங்கள் பலவற்றை நிகழ்த்தி நமது சைவ சமயத்தை நிலைநாட்டியிராவிடில் இன்று திருநீறு இல்லை, வேதமில்லை, ஐந்தெழுத்து இல்லை. நாம் சைவர்களாக வாழ்ந்துகொண்டிருக்க முடியாது. அவர்களால் தான், அவர்கள் அருளிய திருமுறைகளால் தான் நாம் இப்போது திருக்கோயில் பலவற்றைக் கண்டு, தரிசித்து சிவனருள் பெறமுடிகிறது. சைவ எல்லப்ப நாவலர் என்ற பெரியார்

சொற்கோவும், தோணிபுரத் தோன்றலுமெம்
சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும் — முற்கோலி
வந்திலரேல்? நீறெங்கே? மாமறைநூல் தானெங்கே
எந்தை பிரான் ஐந்தெழுத்தெங்கே?

என்ற பாடல் மூலம் வினாத்தொடுக்கின்றார்.

வேதங்கள் மிகப்பெரும் கடல் போன்றது. கடலில் நீந்தலாமே தவிர அதன் ஆழத்தை நாம் காணமுடியுமோ? வேதங்களால் இறைவனை அடைவதற்கு உரிய ஒரு நிலையை அடையலாம். வேதங்கள் இறைவனை அடையும் வழியில் படிகளைப் போன்றது. அடுத்து சிவாகமம் இறைவனை அடைந்து இன்புறச்செய்யும். அதனால் சிவன், நால்வர்கள் மூலமாக வேதாகம சாரத்தை திருமுறைகளாக அருளச் செய்தார். இறைவன் அருட்தன்மைகளை பெருமைகளை, தத்துவங்களை திருமுறைகளால் தான் முற்றுணர்ந்து அவனருளைப் பெறமுடியும். “வேத சாரம் தேவாரம்” என்று அதனால்தான் நாம் திருமுறைகளைப் போற்றுகின்றோம்.

மூலமந்திரங்கள் பதினொன்று, இவற்றின் ஆதாரமந்திரம் ஒன்று, ஆக பன்னிரண்டு. மூலமந்திரங்கள் பதினொன்றின் உருவாக பதினொரு திருமுறைகளையும் ஆதாரமந்திர உருவாக பன்னிரெண்டாம் திருமுறையினையும் சைவ உலகம் போற்றுகின்றது. ஆகவே திருமுறைகள் மந்திரவடிவானது ஆகும்.

வேதங்களால் பூசித்து அடைக்கப்பட்ட திருமறைக்காட்டு (வேதாரண்யம்) திருக்கோயில் திருக்கதவுகளைத் திருமுறைகள் திறக்கச் செய்தன, எலும்பைப் பெண்ணுருவாக்கி அருளியது, விடந்தீண்டி இறந்த பாலகனையும், செட்டி மகனையும் உயிர்ப்பிக்கச் செய்தருளியது. முதலை உண்ட பாலகனை மீட்டுத்தந்தருளியது. இன்னும் பற்பல அற்புதங்களைச் செய்தருளியது திருமுறைகளேயாகும்.

முன்செய் தீவினை, பாபங்களை நீக்கியருள்வது. சகல பிணிகளையும், பிறவிப்பிணியையும் நீக்கியருள்வது, சகல செல்வங்களும் அளித்தருள்வது, பிரிந்த தம்பதியர்களைச் சேர அருள்வது மற்றும் இம்மைச் செல்வங்கள் அனைத்தும் வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளி இம்மையில் அவனடியிணைகளைத் தந்தருள்வது திருமுறைகளே! இறைவனே தாயாக வந்து மகப்பேறு பார்த்தருளினார். சுந்தரர் பெருமானின் “பொன்னும், மெய்ப்பொருளும், போகமும், திருவும் புணர்ப்பானை” என்ற அருள்வாக்கு இதனை நமக்கு உணர்த்தும்.

பொன்னும் (இம்மைக்கு வேண்டியது)
மெய்ப்பொருளும் (அவனது திருவருள் மற்றும் சிவசின்னங்கள் - சாதனம்)
போகமும் (இம்மைச் செல்வங்கள்)
திருவும் (அவன் திருவடிப்பேறு)

இவைகள் அனைத்தையும் அடைவதற்கு திருப்பதிகங்கள் உண்டு. அவைகளை ஒரு நெறிய மனத்தோடு, அத்திருநெறிய தமிழ் மறையினை ஓதினால் நாம் வேண்டுவதனை ஏற்று வேண்டும் வரம் கொடுத்தருள்வார் சிவன். இதனை இன்றும் என்றும் நாம் அனுபவித்துணரலாம். அனுபவத்திலே நடந்து வருகிறது. திருமுறைகள் தான் நாம் திருத்தலங்கள் பலவற்றைத் தரிசித்து வழிபட்டு அருள்பெறச் செய்கிறது என்று அறிகின்றோம்.

திருக்கோணேஸ்வரப் பெருமானையும், திருக்கேதீஸ்வரப்பெருமானையும் பல ஆண்டுகள் நாம் திருமுறைகளில் தரிசித்துப் போற்றிவந்தோம். ஸ்ரீலஸ்ரீ

183618

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் பெருமானால் நாம் திருக்கேதீஸ்வரத்தைக் கண்டோம். இன்று நாம் கண்டு மகிழ்ந்து தரிசித்து வழிபடுகின்றோம். திருமுறைகள் தாம் நமக்கு திருக் கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் முதலிய சிறப் புடைத் தலங்களை நாம் வழிபட்டுப் பேறுபெற அருளியுள்ளது.

திருமுறைத் திருப்பதிகங்கள் பெற்ற திருத்தலங் களே சிறப்புடைத் திருத்தலங்களாகும். திருக்கே தீஸ்வரமும் திருக்கோணேஸ்வரமும் ஈழத்தின் இரு கண்களாக, திருமுறைப்பதிகங்கள் பெற்ற திருத் தலங்களாக விளங்குகின்றமை நாம்பெற்ற பய னாகும்.

இறைவன் திருமுறைகளை, தமிழிசையைக் கேட் பதில் பெருவிருப்பம் உடையவன். அதனால்தான் சுந்தரர் பெருமானை தூமறை பாடுகின்ற இறைவர் தமக்கு ''அருச்சனை பாட்டேயாகும்''

ஆதலால் மண்மேல் நம்மை சொற்றமிழ் பாடுகளனப் பணித்தருளினர்.

இறைவன் அருள்வழி திருநீலகண்ட யாழ்ப் பாணர் பரம்பரையில் வந்த மதங்கசூடாமணி அம் மையார் திருமுறைகளுக்கு பண்முறை வகுத்தார். மந்திரப்பொருளான திருமுறைகளை பண்முறை வழுவாது ஓதுதல்வேண்டும். அதுதான் தெய்வீ கம். சைவ உலகம் திருமுறைகளின் பண்முறைகளை போற்றிப் பாதுகாக்க வேண்டும். அத்துடன் திரு முறை ஓதும் திருமுறைவாணர்களை போற்றிப் பாதுகாத்தல் வேண்டும்.

இலங்கைவாழ் சைவப் பெருமக்களும், திருமுறை அன்பர்களும் திருமுறைகளை பண்ணோன்ற இசைபாடும் அடியவர்களைப் போற்றி மதித்துப் பாதுகாத்து வருகின்றார்கள். இது மிகையாகக் கூறுவதல்ல உண்மை. பண்முறையோடு திருமுறை ஓதுதற்கு பண்முறைகளை நன்கு தெரிந்து தெளிந்த திருமுறை ஓதுபவரிடம் முறையான பயிற்சிபெற்று ஓதுதல் வேண்டும். பண்முறைகளிலும் சில மாறு பாடுகள் வினா எழுப்பக்கூடிய வகையில் உள்ளன. அந்நிலை முன் இருந்திருக்க முடியாதென எண்ணு கின்றேன். அது காலத்தால் கையாண்ட முறை யால் ஏற்பட்டிருக்கவேண்டும். அதனை இக்கட்டுரை யில் ஆராயவேண்டாம். இது ஆராய்ச்சிக்கட்டுரை அல்ல. தமிழ் மறையாகிய திருமுறைகளுக்கு விழாக் காலங்களில் மகா கும்பாபிஷேக நிகழ்ச்சிகளில், சில இடங்களில் உரிய இடத்தினை அளித்து ஓதச் செய்வ தில்லை.

இறைவனுக்கு தீபாராதனை முடிந்தபின் நான்கு வேதம், சிவாகமம் ஒதியவுடன் இறைவனால் அரு ளப்பெற்ற வேதசாரமான, மந்திரப்பொருளான திருமுறைகளை ஓதச் செய்து பின்னர்தான் ஆசீர் வாதம் முதலியன நடைபெறச் செய்ய வேண்டும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவதரித்த ஆதிசைவ குலத்தவர்களாகிய சிவாச்சாரியப் பெருமக்களும், சைவத்திருமுறை அன்பர்களும் திருநெறிய தமிழ் மறையினைப் போற்றி உரியமுறையான இடமளித்து ஓதச்செய்து போற்றுதல் வேண்டும். அது அவர்கள் கடமையும் ஆகும். மேலும் மற்ற மதத்தவர்கள் அவர்களது இல்லத்தில் நடைபெறும் திருமணங்க ளில் அவர்களது சமய வேதங்களை ஓதச் செய்யா மல் திருமணங்கள் செய்வதில்லை. ஆனால் நாம் நமது வீட்டுத் திருமணங்களில் திருமுறைகளை ஓதச் செய்கிறோமா? நாம் நம் இல்லத்தில் நடைபெறும் திருமண விழாக்களில் திருமுறைகளை ஓதச் செய்தே திருமணம் செய்ய வேண்டும். அதுதான் முறை. நமது கடமை.

சைவர்களாகிய நம் ஒவ்வொருவர் இல்லங்களி லும் நமது சமய குரவர்கள் திருவுருவப்படங்களும் திருமுறைகளும் வைத்து பூசித்து வழிபடவேண்டி யது அவசியம், கடமை.

திருநெறிய தமிழ் இசை திக்கெட்டும்
பரவிட தமிழே வடிவாய் ஏழிசையாய்
இசைப்பயனும் சிவன் அவன் திருத்தாழினை
களைப் போற்றித் துதிப்போம்.
வாழி திருமன்றம் கண்ட மலர்க்கண்கள்
வாழி பெருமான்புகழ் கேட்ட வார்செவிகள்
வாழி அவனை வணங்கும் முடிச்சென்னி
வாழி அவன்சீர் பாடும் வாய்.

ஸ்ரீ குமரகுருபரர்.

திருச்சிற்றம்பலம்.

★

## பழம் பாடல் ஒன்றில்
## திருக்கோணேஸ்வரம்

சிவகோடியடைய முனஞ் செம்மல் தசக்கிரீவனால்
அவகோடியகற்றி இயற்றறு கோடி ஆலயமுற்
தவகோடி வீடணனால் தருமுக் கோடியுமாக
நவகோடி சிவாலயங்கள் நண்ணியது இலங்கா நகரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த மண்

கலாநிதி சி. சத்தியமூர்த்தி
புலவர், பி. ஓ. எல்., எம். ஏ., பிஎச். டி.
தமிழ்ப் பேராசிரியர், கோயம்புத்தூர்.

ஓங்கில் மீன்களும் வலம்வந்து வணங்கும்
கோணமா மலையில் நின்றுநான் காண
அலைகடல் நடுவண் செல்கலம் ஒக்கும்
அழகிய நகரே! அழகிய நகரே!
பண்டைநாட் பாண்டியன் பாங்குடன் பொறித்த
கெண்டை இரண்டும் கண்களாய்க் கொண்டனை!
பற்பல நாட்டின் கப்பல்கள் நிற்கும்
பொற்புடை இயற்கைத் துறைமுகம் பெற்றனை!
மாபெருந் தவத்தின் சம்பந்தன் தொடுத்த
தேவாரத் தீந்தமிழ் மாலை பூண்டனை!
அருண கிரியார் உருகிப் பாடும்
திருப்புகழ் கேட்டுப் பெருமகிழ் வுற்றனை!
சாலையில் கிடந்தும் ஏணையில் துயின்றும்
தவழ்ந்தும் நடந்தும் தாயுன் மடியில்
செந்தமிழ் மழலை சிறப்புறப் பேசிய
அந்தநாட் குழந்தைப் பருவ நினைவெலாம்
இன்றும் சிந்தையுள் நின்றின் புறுத்தும்
எழுவகை வெந்நீர் கன்னியாய் ஊற்றில்
பழுதற மூழ்கி உடல்மா சொழிந்து
மாவலி கங்கை வந்துடன் கலக்கத்
தானெலி குறையாத் தண்கடல் மோதும்
உமையொரு பாகன் உவந்துறை குன்றில்
மாந்தர் எறிந்த தேங்காய்ச் சொட்டு
மாந்தித் தாவும் மந்திதன் குறும்பால்
சிந்துறும் இலந்தைச் செந்நிறக் கனிகள்
அக்கனி தாக்கச் சிதைந்து சொட்டும்
கொம்புத் தேனைக் கொம்புமான் சுவைக்கும்
குன்று வனப்பின் கோவில்கும் பிட்டு
நன்றென் மனமாகும் நான்தீர்த் ததனல்
தாயகம் வந்து தங்கி வாழினும்
ஓயாது நினையே நாடுமென் நினைவே.

UNIVERSITY OF JAFFNA LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை

திரு. சி. தில்லையம்பல மாப்பாண முதலியார்

ஈழ மண்டலம் முன் யுகங்களில் பெரும் விஸ்தாரமான நிலத்தை தன்னுள்கொண்டு வடக்கே இந்தியா வரையும், கிழக்கே அங்கம் (அந்தமான் தீவுகள்) வங்கம் (வங்காளம்), சியங்கம் (சீயம்...... தற்போதய தைலாந்து), கடாரம் (மலேசியா), பண்டாரம் (இந்தோனேசியா - சுவர்ணபுரம், யாவா, பாலி தீவுகள்), பத்மபுரம் (ஆஸ்திரேலியா), தெற்கே வீரமகேந்திரபுரம், கபாடபுரம், இமயம், மேற்கே அவுணபுரம் (Eriteria - Addis Abbaba) முதலிய தேசங்களைத் தன் எல்லைகளாகக் கொண்டது.

கால வாய்ப்பாட்டின்படி கிருதயுகம், திரேதா யுகம், துவாபரயுகம், கலியுகங்கள், சதுர்யுகமாகி, மனுவந்தரமாகி, கற்பகாலமாகும். இக்காலங்களின் முடிவில் பிரளயம் ஏற்படும். சென்ற பிரளய காலங்களில் ஈழ மண்டலத்தைச் சுற்றியுள்ள பல தேசங்கள் அழிந்துவிட்டன. இன்று எஞ்சியுள்ள ஈழமண்டலத்தைச் சுற்றியுள்ள பல தேசங்கள் அழிந்துவிட்டன. இன்று எஞ்சியுள்ள ஈழ மண்டலத்தின் ஓர் பாகமே சிலோன் (Ceylon) என்றும், தற்காலம் ஸ்ரீலங்கா (Sri Lanka) என்றும் வழங்கப்படுகின்றது. லங்கா துவீபம் முழுவதும் ஈழ மண்டலத்தின் ஓர் பாகம் என்பதற்குச் சான்றாக வடக்கே வல்லிபுரக் கோவிலும், தெற்கே தேவந்திர முனை (Dondra Head) விஷ்ணு கோவிலும், கிழக்கே திருக்கோணேஸ்வரமும், மேற்கே திருக்கேதீச்சரமும், முன்னேச்சரமும், மத்தியில் முதலாவது மகா சிவாலயமும், (Dalada Maligawa) கண்டிக் கதிர்காமமும், பொலநறுவையில் இரண்டாவது மகா சிவாலயமும், மற்றும் சிவாலயங்களும், காளி கோவில்களும், விஷ்ணு கோவில்களும் (இப்போ அழிந்துவிட்டன) இன்னும் பல கோவில்களும் சான்று பகர்கின்றன.

இந்நிலையில் ஒரு தேசத்தின் இந்திர திசையில் ஒரு க்ஷேத்திரம் அமையுமானால் அது மிகவும் பிரசித்தி பெற்றதாகும். ஆகவே, திருக்கோணேஸ்வரம் என்னும் திவ்விய ஸ்தலம், மகாவலிகங்கை வங்காள விரிகுடாவில் சங்கமமாகும் பகுதியில் அமைந்தது. ஈழ மண்டல வாசிகள் அனைவரும் ஒருங்கிணைந்தது முன்செய்த தவமேயாகும். இதைச் சூழ்ந்து இன்னும் பல சைவ ஆலயங்கள் நன்கு அமைந்துள்ளன. இத்திவ்விய க்ஷேத்திரம் பல வெளிநாட்டு உள்நாட்டு இராச்சியங்களுடன் சம்பந்தப்பட்டுள்ளது. பல சரித்திரங்களிலும் தொடர்புகொண்டுள்ளது. நாட்டு வளப்பம் நன்றாயுள்ளது.

பூர்வீக ஈழமண்டலம் (ஸ்ரீலங்காவையும் தன்னுள் அடக்கி) முழுவதும் சைவ (Hindu) சமயத்தையே மக்கள் கைக்கொண்டு ஒழுகி வந்தார்கள். தேவநம்பியதிசா அரசன் காலத்துக்கு முன்பு ஆண்ட அரசர்கள் அனைவரும் சைவர்களே. (Hindus) இவர் காலத்திலும் அதன் பின்பும் அந்நிய சமயங்கள் நாட்டினுள் புகுந்தன. எந்த அரசன் இந்நாட்டை அரசாட்சி செய்தாலும், அரசாங்க சமயம் சைவ சமயம். அரசாங்க பாஷை தமிழும், சிங்களமும் ஆக அக்காலம் நிலவியுள்ளது.

பூகோள ரீதியில் திருக்கோணமலைத் துறைமுகம் முக்கோண வடிவில் உள்நாட்டு வெளிநாட்டுக் கப்பல் வாணிபத்துக்கு அழகாய் அமைந்துள்ளது. யுத்த காலமும் இந்து மகா சமுத்திர பிராந்தியத்தில் உள்ள எவ்வகை யுத்தக் கப்பல்களும் வந்து அடைக்கலம் என்று தங்குவதற்கு மிகவும் வசதியான துறைமுகம். முதலாவது ஐரோப்பிய மகாயுத்தத்தில் ஆங்கிலேய யுத்தக்கப்பல்கள், ஜேர்மன் நீர்மூழ்கி எம்டன் (Emden) என்னும் கப்பலுக்கு அகப்படா வண்ணம் திருக்கோணமலை வந்து தங்கி இருந்தன. திருக்கோணமலைக்கும் ஈழ மண்டலத்துக்கும் இன்னும் ஓர் தனிச் சிறப்பு, சர்வதேச அமைப்பில் சரித்திரபூர்வமாக இடம்பெற்றிருப்பது.

இந்திய சித்தர்களுள் முதன்மை வகிக்கும் போகர் மகரிஷி தமக்குத் தகுந்த குருவைத்தேடி யாத்திரைபோகும் மார்க்கம் சீன தேசம் சென்று அங்கு மகாபுருஷராய்த் திகழ்ந்த காலாங்கிநாதர் என்பவரை நாடி குரு உபதேசம் பெற்று அவருடன் பல்லாண்டு வாழ்ந்து பல அரிய பெரிய உபதேசங்களைப் பெற்றார். அதன் பயனாக போகர் மகரிஷி ஆகாயவிமானம் கட்டி, சீனவின் தலைநகராம் பீக்கிங் (Peking) ல் இருந்து, திருக்கோணமலை வழியாக ரோமாபுரி (Rome) சென்றார் எனும் சரித்திரம், "போகர் 7000" எனும் அரிய நூலில் உள்ள பாடல்கள் மூலம் பழைய பதிப்புக்களில் விரிவாகக் காணலாம். அதில் பீக்கிங், திருக்கோணமலை, ரோமாபுரி இம் மூன்றும்தான் விமானநிலையங்கள் என்றும், திருக்கோணமலை விமான நிலையம் விமானங்களைப் பழுதுபார்க்கும் நிலையமாக அமைந்துள்ளது என்றும் பாடல் பெற்றுள்ளது. ஆகவே, இக்காலம் அரசாங்கம் ஊக்கம் எடுத்தால் திருக்கோணமலை, உலகில் சர்வதேச விமானநிலையமாகப் புகழ்பெற (International Airport) வசதிகளும், வாய்ப்புகளும் உண்டு. நீராவிக்கப்பல் சேவையும் ஆகாய விமானச் சேவையும் ஒரே பட்டணத்தில் அமையுமானால் முன்னேற்றம் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருக்கோணேசர் திருவூஞ்சற் பதிகம்

ஆக்கியோன்:
சைவப்புலவர், பண்டிதர் இ. வடிவேலு அவர்கள், திருக்கோணமலை.

காப்பு

வேழ முகத்தவனே விநாயகனே நின்னடியில்
ஏழையேன் வீழ்ந்து இறைஞ்சுகின்றேன் — ஆளுடைய
பிள்ளைக் கவியமுதைப் பெற்றதிருக் கோணேச
வள்ளல்தனக் கூஞ்சல் வழங்கு.

நூல்

1. சீர்மேவு மாமறைகள் கால்களாகச்
செய்யதிரு ஆகமங்கள் விட்டமாக
கார்மேவு பைந்தமிழ்சேர் பண்களோடு
பகரரிய திருமுறைகள் வடமதாக
ஏர்மேவும் ஓங்காரப் பீடமீதில்
ஏழிசையின் மலர்தூவி இனிதுபோற்றக்
கார்மேவு தென்கைலைக் கோணை தன்னில்
மாதுமைசேர் கோணேசா ஆடீரூஞ்சல்.

2. தண்மதியின் ஒளிதவழும் கோணைக் குன்றில்
தவயோக முனிவர்களின் தேசுதங்க
விண்ணவர்கள் சூழ்ந்திருந்து வேத மோத
விஞ்சையர்கள் வேதமொடு கீதம்பாட
இன்னிசைநா ரதர்வீணை தன்னிற் கூட்ட
எழிலுடனே நந்திமத் தளமும்கொட்ட
மண்ணிலுயர் மாகோணந் தன்னில் மேவும்
மாதுமைசேர் கோணேசா ஆடீரூஞ்சல்.

3. திருமகளும் கலைமகளும் வடந்தொட் டாட்ட
செய்யபுவி மகள்கவரி வீசிநிற்க
கருமேக வண்ணனொடு வருணன் வாயு
கணநாதர் இந்திரன்கை கூப்பிநிற்க
அருள்மேவும் அரமகளிர் பரத மாட
ஆதிசே டனுமருகே அமர்ந்துநோக்க
திருமேவும் தெக்காரும் மாகோ ணத்தில்
திகழ்கோணை நாதரே ஆடீரூஞ்சல்

4. அருக்கனொளி ஆழ்கடலின் மீதெழுந்து
அருட்கோணை நாதரடி தழுவியோங்கச்
செருக்குடைய இராவணன்தென் கைலை தன்னைச்
சினங்கொண்டு வாளோச்சி எடுக்கும்போது
வெருக்கொளுமை தனைக்கரத்தா லணைத்துக் காலின்
விரலதனால் அடர்த்தவனுக் கருள்புரிந்த
மறக்கருணைத் திருக்கோணை நாதரே நீர்
மாதுமையோ டினிதிருந்து ஆடீரூஞ்சல்

5. சினகரமும் கோபுரமும் தேரூர் வீதி
செய்யதிரு மண்டபமும் மதிலும் கட்டி
கணபதிக்கும் கந்தனுக்கும் கோயில் கொண்டு
கருவாய வல்வினைகள் அறுக்க வல்ல
பவநாசம் செய்யுமுயர் பாவநாசத்
தீர்த்தமுடன் திருப்பணிகள் பலவும்செய்த
சிவநேயக் குளக்கோட்டன் கோயில் மேவும்
செய்யதிருக் கோணேசா ஆடீரூஞ்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. அகத்தியரும் அருணகிரி நாதர் ஞான
சம்பந்தர் துதித்தஅருட் கோணைநாதா
இகத்திலுனை இதயத்தில் இருத்து வோர்க்கு
இகபரபோ கம்மருளும் ஈசா அன்பர்
பவத்தொடக்கை அறமாற்றும் பாவ நாசா
பரஞ்சுடரே பதமுத்தி தன்னை யீந்து
சிவத்துவத்தில் சேர்த்தெம்மை ஆளுங் கோணைத்
தேவாதி தேவரேநீர் ஆடீரூஞ்சல்.

7. ஆழிபுடை சூழ்ந்தொலிக்கும் ஈழந் தன்னில்
அரியதிருக் கோணமலை நாதர்தன்னைக்
காழிவளர் பிள்ளைமனம் கசிந்து பாடக்
கஜபாகு மன்னனகங் கரித்துவந்து
ஊழ்வினையால் இருகண்ணும் இழந்து மீண்டும்
உயர்திருவெண் ணீறணிந்து உய்திபெற்றுன்
சோழனொடு பாண்டியபல் லவரும் போற்றும்
கோணைநகர்க் கரசேநீர் ஆடீரூஞ்சல்.

8. சைவநெறி தழைத்தோங்கத் தமிழு மோங்கத்
தவமுனிவ ருளமோங்கத் தர்மமோங்கத்
தெய்வமணம் திகழ்ந்தோங்கத் திருவு மோங்கத்
தேவார இசையோங்க வேதமோங்க
உய்யுநெறி கொண்டுகுளக் கோட்டு மன்னன்
உளமோங்க எடுத்ததிருக் கோயில்தன்னைக்
பொய்மாயப் போத்துக்கீ சர்செய் தீதைப்
புன்னகையால் ஏற்றவரே ஆடீரூஞ்சல்

9. மன்றில் வளர் மாமணியே ஆடீரூஞ்சல்
மந்திரமும் தந்திரமும் மருந்துமாகிக்
குன்றில் வளர் குருமணியே ஆடீரூஞ்சல்
குகனையருள் குலமணியே ஆடீரூஞ்சல்
துன்றுபிடி யன்ன நடை மாதுமையாம்
அம்சகம லாம்பிகையோ டாடீரூஞ்சல்
இன்றெமக்கும் இருள்கடிந்து அருள்செய் கின்ற
இறையவரே கோணேசா ஆடீரூஞ்சல்

10. திங்களொடு கங்கைவளர் சடையு மாடத்
திகழ்ந்தோங்கு சர்ப்போப வீதமாட
நங்கைமா துமையாட நயன மாட
நவமணிக்குண் டலமாடக் குழையுமாட
அங்கமெலாங் குழைந் தபய வரதமாட
அடியிணையிற் சிலம்பாடக் கழலுமாட
எங்கள்மனம் களித்தாட இரங்கும் கோணை
இறையவரே கோணேசா ஆடீரூஞ்சல்

வாழி

அஞ்செழுத்து மந்திரமும் நீறும் வாழி
அரனடியார் அந்தணர்கள் ஆவும்வாழி
பிஞ்செழுத்தாம் சிவப்பழமாம் பொருளே வாழி
பிரபஞ்ச மனைத்துமருள் பெற்றுவாழி
மஞ்சுதவழ் மாமலையில் மழையும் வாழி
மன்னரொடு மக்கள்நலம் பெற்றுவாழி
எஞ்சலிலாத் தமிழ்வாழி சைவம் வாழி
இறைவனடி யாரெல்லாம் வாழிவாழி.

சுபம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

''நன்றி மறப்பது நன்றன்று'' தெட்சணகைலாசம் எனப்படும் திருக்கோணேஸ்வரத்தில் மாதுமையம்பாள் சமேதராக அமர்ந்திருந்து எந்நாளும் குறைவுபடாமல் அடியார்களுக்கு அருளைப் பொழிந்துகொண்டிருக்கும் கோணேசப் பெருமானுடைய திருவடிகளில் கும்பாபிஷேக மலரைத் திரிகரண சுத்தியோடு சூட்டியிருக்கின்றோம்.

இம்மலரானது ஞானத்தபோதனர்கள், அருட்குருமணிகள், பேராசிரியர்கள், சிவத்தொண்டர்களின் இதயப்பூங்காவில் மலர்ந்த மலர்கள். இறைவனுடைய பாதாரவிந்தங்களை நினைந்து நினைந்துருகி அர்ச்சிக்கப்பட்ட இம்மலரில், அவனுடைய கிருபாகடாட்சமும் செறிந்திருப்பதால் இம்மலர்கள் கோணேசப் பெருமானுடைய திவ்வியப் பிரசாதம். இந்தப்பிரசாதத்தைப் படைப்பதற்கு ஞானதானம் செய்த சான்றோர்கள் அனைவரையும் நெஞ்சார நினைந்து பணிவன்புடன் நன்றியைச் சமர்ப்பிக்கின்றோம்.

புனருத்தாரணத் திருப்பணிகளை மிகச்சிறப்பாகச் செய்து நிறைவேற்ற நிதியுதவி செய்த தர்மஸ்தர்களையும், ஓய்வொளிவின்றி ஆலயத் திருப்பணிகளை நிறைவேற்ற உதவிய தியாகச் செம்மல்களையும் நெஞ்சுநெகிழ்வோடு நினைவுகூர்ந்து நன்றியைச் சமர்ப்பிக்கின்றோம்.

வேதாகம, சாஸ்திர வித்தகர்களாகிய சிவாச்சாரியப் பெருமக்கள் மந்திர, யந்திர தந்திரங்களால் தெய்வ சாந்நித்தியத்தை மேலும் மேலும் செலுத்தி, பிம்பஸ்தானமும் கும்பாபிஷேகமும் செய்து அடியார்களின் ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி ஒப்பற்ற தவப்பணியைச் செய்திருக்கின்றார்கள். பூசுரர்களாகிய அவர்கள் அனைவரையும் கோணேசப் பெருமான் அருட்கண்ணால் நோக்கி ரட்சிப்பாராக.

பிரதம குருவாகிய பிரதிஷ்டா பூஷணம் சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்களவர்களும் சர்வசாதகர் சிவாகம ஞானசாகரம் சௌமிய சாதகரத்ன திருக்கோலக்கா சிவஸ்ரீ என். இராமநாத சிவாச்சாரியாரவர்களும், சர்வபோதகர் டாக்டர் சிவஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள் அவர்களும், கும்பாபிஷேக மகாயாகங்களில் மும்மூர்த்திகளாயமர்ந்து கும்பாபிஷேகத்தை இனிது நிறைவேற்றி வைத்த புனித கைங்கரியத்தை நினைந்து பணிவன்புடன் அவர்கள் திருவடிகளில் நன்றியைச் சமர்ப்பிக்கின்றோம்.

தமிழ்வேதமாகிய பன்னிரு திருமுறைகளையும் பாமாலையாக்கி கோணேசப் பெருமானுக்குச் சூட்டிய தேவார இசைலய அரசு திருப்பனந்தாள் ஆதீன ஓதுவார் ஸ்ரீ எஸ். முத்துக்கந்தசாமி தேசிகர் அவர்களுக்கு எங்கள் பணிவான நன்றியைச் சமர்ப்பிக்கின்றோம்.

கும்பாபிஷேகத்திற்கு விசேஷ திரவியங்களைத் தந்துதவிய திருப்பனந்தாள், தருமபுரம் ஆதீனக் குருமணிகளின் பொன்னார் திருவடிகளில் பணிவன்புடன் நன்றியைச் சமர்ப்பிக்கின்றோம்.

கொழும்பு கோபா மில் ஏஜன்சி லிமிட்டட், சிலோன் றேட்சேவிஸ், ஹொட்டல் எம்பிறஸ் ஆகிய ஸ்தாபனங்களின் தலைவராகிய கரவெட்டி டாக்டர் வேலுப்பிள்ளை மகன் பாலசுப்பிரமணியம் அவர்கள் கோணேசப் பெருமானுடைய ஆலயத்தில் செய்த நேர்த்திக்கடனாக நவக்கிரக கோயிலைக் கட்டி அன்பளிப்புச் செய்துள்ளார். அன்னாருக்கும் எம்நன்றி உரித்தாகுக.

சாஸ்திர விதிப்படி ஆலயம் அமைப்பதில் அனுபவமும் தேர்ச்சியும் பெற்று, மக்களின் நன்மதிப்பைப்பெற்ற சிற்பாசாரியார் அராலி திரு. எஸ். எஸ். மகேஸ்வரன் குழுவினரும், காவியத்தை ஓவியமாக்கி ஓவியத்தைச் சிற்பமாக்கும் சித்திர குரு ஆசாரியராகிய தமிழகத்தைத் தாயகமாகக் தெண்ட சுதைச் சிற்ப விற்பன்னர் திரு. எம். கே. குருசாமி குழுவினரும் சிரமங்களைப் பொறுமையோடு சகித்துக்கொண்டு புனருத்தாரணத் திருப்பணிகளைச் செய்துதந்த நன்றிக்கடனை நினைந்து என்றுமின்பம் பெருகி வாழவேண்டுமென்று கோணேசப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

சிரமதானப் பணிகளையும் கும்பாபிஷேக கைங்கரியங்களையும் செய்த சபைகள், சங்கங்கள், தனிப்பட்ட தொண்டர்கள், சேவையாளர்கள் அனைவருக்கும் இதயசுத்தியோடும் பணிவன்போடும் நன்றியைச் சமர்ப்பிக்கின்றோம்.

குறுகிய காலத்திற்குள் மலரை அச்சிட்டுதவிய சாந்தி அச்சக உரிமையாளர் அவர்களுக்கும் அவர்களுடைய உதவியாளர்களுக்கும் மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

கோணேசப் பெருமானுடைய கும்பாபிஷேக கைங்கரியங்களில் திரிகரண சுத்தியோடு உழைத்த அனைவரும் கோணேசப் பெருமானுடைய திருவருளுக்கு ஆளாகி நீடூழி வாழவேண்டுமென்று அவனுடைய பொன்னார் திருவடிக்கு விண்ணப்பம் செய்து அமைகின்றோம்.

திருக்கோணமலை.
*25 - 1 - 1981*

University of Jaffna
183618
Library

இங்ஙனம்,
**புனருத்தாரண மகாகும்பாபிஷேக சபையினர்,**
திருக்கோணேஸ்வரம்.

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF [illegible] LANKA
RECEIVED
10-7-1967
PERIODICALS DIVISION
LIBRARY

*******************************

## மஹா கும்பாபிஷேகம் கண்டார் வாழி

ஆயிரத்துத் தொளாயிரத்தோ டெண்பத் தொன்றும்
ஆண்டுமுதன் மாதமிரு பத்தைந்தாம்நாள்
ஞாயிறுவார முத்தரமாம் நட்சத் திரத்தில்
நலஞ்சேரும் உதயாதி நாளிகையில்
தூயமீன லக்கினசுப வேளை தன்னில்
தொல்கோணே யீசருமை வைகுங்கோயில்
நேயமுடன் புனருத்தா ரணஞ்செய் தின்று
நிகழ் மஹாகும் பாபிஷேகம் கண்டார்வாழி.

புலவர் சிவசேகரனுர்

*******************************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலயத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org